# திருக்குறள் அதிகார விளக்கம்

திருக்குறளார் வீ. முனிசாமி

வானதி
பதிப்பகம்

# திருக்குறள்
# அதிகார விளக்கம்

கலைமாமணி

திருக்குறளார் வீ. முனிசாமி

வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு

தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : செப்டம்பர், 1988

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 15-00

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
இராயப்பேட்டை
சென்னை-600 014

# திருக்குறள்
# அதிகார விளக்கம்



புதுவை தந்த
புரட்சிக் கவிஞர்
பாவேந்தர் பாரதிதாசன்

## புரட்சிக் கவிஞர்—பாவேந்தர்

# பாரதிதாசன்

### பாடுகிறார் :

திராவிட நாட்டுளீர் உங்கள் செயற்கெலாம்
அறமே அடிப்படை ஆதல் வேண்டும்
அறம் எனல் வள்ளுவர் அருளிய **திருக்குறள்**
செல்லும் வழிக்குத் திருக்குறள் விளக்கு!
மணமா சறுக்கும் இனிய மருந்து
கசடறக் கற்க! கற்றிலார் அறிஞர்பால்
கேட்க! கேட்க! திராவிடம் மீட்க
ஔவையார் அருளிய ஆத்திச் சூடியில்
ஒரு தொடர் தன்னை—ஒன்றுக்கான
உரையை—எப்படி ஒருவர் இலேசாய்
நினைவில் நிறுத்தி இனிதுரைப்பாரோ
அப்படித் **திருக்குறள் முனிசாமி அறிஞர்**
முப்பால் ஆயிரத்து முன்னூற்று முப்பது
குறளையும் அவற்றிற்குக் கொடுத்த பொருளையும்
நினைவில் நிறுத்தி இனிது விளக்கும் ஓர்
ஆற்றல் உடையவர்; அவர் திருக்குறள் மலர்
வழங்கும் நகைச்சுவை மறச்சுவை பிறசுவை
ஆர்ந்தசொல் அனைத்தும் பெரும்பயன் அளிப்பவை
அரிசிமா இட்டலி அளிப்பதாய்ச் சொல்லிப்
பாசிப்பயற்றுமி படைப்பார் அல்லர்;
அறிஞரின் பேச்சும் எழுத்தும் அருங்குறள்
தேன்ஆற்றி னின்று செம்பில்மொண் டளிப்பவை
**குறட்பயன் கொள்ள நம்திருக்**
**குறள்முனி சாமிசொல் கொள்வது போதுமே!**

# பதிப்புரை

மேல்நாட்டு அறிஞர் டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் திருக்குறளையும், நாலடியாரையும், தேவாரத்தையும் தமிழில் படிப்பதற்காக, தமிழ்மொழி பயின்றார்.

தாம் படித்ததோடு நில்லாமல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, உலகமெங்கும் திருக்குறள் பரவச் செய்தார்.

திருக்குறளை — அதனுள் பொதிந்து கிடக்கும் உலகமளாவிய நல்ல நோக்கத்தை—பரப்பியதோடு நிற்காமல், தன்னுடைய சமாதியின்மீது, 'தாழ்மையான தமிழ் மாணவன்' என்றும் எழுத வேண்டுமென்று சொல்லி, இன்றும் இலண்டன் மாநகரில்—போப்பின் சமாதியில் பொலிவுற்று விளங்குகிறது தமிழின் பெருமை.

உலகோர் போற்றும் திருக்குறளை—ஐம்பது ஆண்டு காலமாக அய்யா திருக்குறளார் அவர்கள் மக்கள் மத்தியில் பரப்பிய பெருமையை நாடறியும்; நாட்டோர் அறிவர்.


'திருக்குறளார்' என்று எல்லோராலும் பெருமையோடு அழைக்கப்படும் அய்யா அவர்கள், திருக்குறளுக்குப் பல விளக்கவுரைகள், கட்டுரைகள், கதைகள் எழுதியிருந்தாலும், இப்போது 133 அதிகாரங்களுக்கும் விளக்கவுரையாக இந்நூலை எழுதியுள்ளார்கள்.

இந்நூலை அவரது (26-9-88) 76-வது பிறந்த நாளில் வெளியிட்டுப் பெருமை கொள்கிறோம்.

திருக்குறளுக்கே பெருமைப்படுத்தி, திருக்குறள் நெறியோடு வாழும் அய்யா அவர்களுக்கும், தமிழ்ப்பெருமக்களுக்கும் எங்கள் நன்றி.

அன்புடன்,

**வானதி திருநாவுக்கரசு**



அகராதி அறிஞர்

டாக்டர் ந. கைலாசம் அவர்களின்

# அணிந்துரை

அய்ம்பது ஆண்டுகளுக்கும் மேலாக உலகத் திருமறை திருக்குறள் அமுதத்தை அள்ளித் தந்தவர் ஐயா திருக்குறளார் அவர்கள்.

தமிழக முழுவதிலும் அல்லாமல் பாரத தலைநகராம் புதுதில்லியேயும் ஐயா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஐந்து ஆண்டு காலமும் திருக்குறள் நெறியைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சுவைபட பலமொழிகள் பேசும் மக்களிடையே எடுத்துக் கூறினார்கள்.

'திருக்குறள் கேசரி' என்ற பட்டத்தினை அப்போது ஐயா அவர்களுக்கு வழங்கி மக்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

இரண்டு தலைமுறையினருக்கு திருக்குறள் அறிவை எடுத்துச் சொல்லிய ஆசான் ஐயா திருக்குறளார் அவர்கள்.

சொல்லில் சுவை, பேச்சில் நயம், இவைகளோடு தம் அனுபவ அறிவை நகைச்சுவையாக வழங்குவதில் மாமன்னர்.

படித்தவரானாலும், பாமரனானாலும் ஐயா அவர்கள் சொல்லும் வகையில் ஈர்க்கப்பட்டு திருக்குறளைத் தொடர்ந்து படித்துப் படித்து அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.

ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் தக்க உதாரணங்களுடன் திருக்குறளின் நுண்ணிய கருத்தினை மிக எளிதாக விளங்க வைக்கும் வித்தகர்.

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த திருக்குறள் நெறி பரப்பும் செம்மல். தமிழ்நாடு செய்த தவப்பலத்தினால் அய்யா இங்கு அவதரித்து அனைவரையும் ஆட்கொண்டு விட்டார்கள்.

அய்யாவின் ஒவ்வொரு சொல்லும் அனுபவ அறிவைச் சிதறும். அய்யாவின் கருத்துகள் காலமெல்லாம் நிலைத்து நிற்கும். உலகின் பொதுமறை திருக்குறள் என்பதைஅய்யாவின் ஒரு சொற்பொழிவைக் கேட்டால் நன்றாக விளங்கி விடும். அய்யா ஓர் அறிவுச் சுரங்கம். வருங்கால இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் அவர் சொற்பொழிவுகள். பல லட்சக்கணக்கான மக்கள் அய்யாவின் சொற்பொழிவைக் கேட்டுப் பண்பட்ட மனிதர்களானார்கள்.

தமிழ் மொழிக்குப் பல சிறப்புகள் உண்டு. தமிழ் நாட்டிற்கென்று பல சிறப்புகள் உண்டு. தமிழர்களுக்கு என்று பல சிறப்புகள் உண்டு. திருக்குறள்—மொழிக்கும், நாட்டிற்கும் தமிழருக்கும் என்று அனைத்துச் சிறப்பையும் கொடுத்துவிட்டது. திருக்குறள் அனைத்து இந்திய மொழி களிலும் மட்டும் அல்லாமல் உலகில் உள்ள பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் படித்தவர்கள் அனைவரையும் வியக்க வைக்கிறது—ஒன்றே முக்கால் சீரடியில் இவ்வளவு பெரிய தத்துவங்களா என்று!

அத்தகைய சிறப்புகள் பொருந்திய குறள் அமுதத்தை, நெறியினை, அறிவினை அய்ம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கி வரும் ஐயா அவர்களின் 'திருக்குறள் அதிகார விளக்கம்' நம் நாட்டுக் கோடானுகோடி மக்களுக் கும் பயன் படும் என்பது உறுதி. குறிப்பாக இளஞ்சிறார் களுக்கும், மாணவர்களுக்கும் இந்நூல் மிகமிகப் பயனுள்ள தாக அமைந்துள்ளது. ஆசிரியர்களுக்கும் தங்கள் கடமையை மேலும் சிறப்பாகச் செய்ய உதவும் நூல் இது. இப்புத்தகத்தினை நமக்குத் தந்த ஐயா அவர்களின் பொற் கரங்களுக்கு நன்றி. நல்வாழ்த்துக்கள்.

திருக்குறளார் ஐயா அவர்கள் எங்கள் ஊருக்கு வர மாட்டாரா? அவர் பேச்சை நாங்கள் கேட்க மாட்டோமா? என்று ஏங்குபவர்கள் பலருண்டு. அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது இன்னும் கொஞ்ச நேரம் பேச மாட்டாரா? அவர் பேச்சின் நகைச்சுவையை இன்னும் கொஞ்சநேரம் கேட்கமாட்டோமா? என்று ஏங்குபவர் களும் உண்டு.

இன்று 'திருக்குறள் அதிகார விளக்கம்' என்ற இந்த நூலினைப் படித்துவிட்டு இன்னும் பல புத்தகங்களை ஐயா அவர்கள் எழுதமாட்டாரா? அப்புத்தகங்களையெல்லாம் நாம் படிக்க மாட்டோமா?

ஐயாவின் புத்தகங்கள் இனி எப்போது வரும் என்று ஏங்கும் பல லட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் நானும் ஒருவனாக இருந்து ஐயா அவர்களின் இனி வரும் புத்தகங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஐயாவின் திருக்குறள் தொண்டிற்குத் தமிழகமே நன்றி கூறுகிறது.

ஐயா அவர்கள் வாழ்க வளமுடன்!

அன்பன்

**ந. கைலாசம்**

## முன்னுரையாக சில சொற்கள்

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதிலும் அரிது" என்ற பொன்னுரைகளை மகான் தாயுமானசுவாமிகள் அருளினார்.

உயர்ந்த மானிடப் பிறவி பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் நன்னெறிக்கண் வாழ்ந்து, புகழுடனும், சிறப்புடனும் கடமையாற்றிச் செயல் புரிவதைத்தான் இன்றியமையாக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

உலகப் பொதுமறையான திருக்குறள் வாழ்க்கைக்கு வழி வகுத்து வாழ வேண்டிய முறையில் வாழ்வதற்குப் பெரும் துணையாக இருப்பதாகும். திருக்குறளில் காணப்படுகின்ற 133 அதிகாரங்களுக்கும் சுருக்கமாகப் பொழிப்புரை போன்று எழுதியுள்ளேன்.

இந்தச் சிறிய நூலினை 30 ஆண்டுகளுக்கு முன்னதாக எழுதி வைத்திருந்தேன்.

தமிழறிஞர் உயர்திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கள் 'வானதி' பதிப்பகத்தின் மூலம் தமிழ் இலக்கியத்திற்குச் செய்துவரும் தொண்டினை எளிதில் எடுத்துச் சொல்லிவிட முடியாது. அவ்வளவு பெரிய சேவை அவர் செய்து வருகிறார். சிறியேனுடைய இந்த நூலினையும் அவர் வெளியிடுவதுதான் எனக்குப் பெருமை.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களிடையே திருக்குறள் பரவவேண்டும் என்பதற்காக அல்லும்பகலும் அயராது எழுத்தாலும், பேச்சாலும் இயன்றவரை தொண்டு செய்து வருகிறேன் என்பதனைப் பணிவுடனும், பெருமையுடனும் சொல்லிக்கொள்ளுவதற்கு நான் தயங்கவில்லை.

உரைநடை மூலம் திருக்குறள் முழுவதும் தெரிந்து கொள்ளுவதற்கு இந்த நூல் ஓரளவு நல்ல முறையில் துணையாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த நூலினைப் படித்து முடித்த பிறகு, குறட்பாக்களைப் படித்தால் எளிமையாக விளங்கும் என்பது ஒருதலை.

இந்த நூலினை அருமையாக அச்சிட்டுக் கொடுத்த சென்னை 'மூவேந்தர் அச்சகத்தாருக்கு' என்னுடைய நன்றி உரியதாகும்.

அன்புள்ள

**நூலாசிரியன்**

# திருக்குறள் அமைப்பு முறை

திருவள்ளுவர் அருளிய உலகப் பொதுமறை என்னும் திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது

அறத்துப்பாலில் 'பாயிர இயல்', 'இல்லற இயல்', 'துறவற இயல்' என்ற மூன்று சிறு பிரிவுகள் அடங்கியுள்ளன.

பொருட்பாலில் 'அரசியல்', 'அங்க இயல்,' 'ஒழிபு இயல்' என்ற மூன்று பிரிவுகள் அடங்கியுள்ளன.

காமத்துப்பாலில், 'களவு இயல்', 'கற்பு இயல்' என்ற இரண்டு இயல்கள் உள்ளன.

அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் ஆக மொத்தம் 133 அதிகாரங்கள் திருக்குறளில் அடங்கியுள்ளன. அதிகாரம் ஒன்றுக்குப் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. ஆக மொத்தம் குறட்பாக்கள் 1330 ஆகும்.

## அதிகாரங்களின் பெயர்கள்

### 'அறத்துப்பால்' — பாயிர இயல் :

1. கடவுள் வாழ்த்து
2. வான் சிறப்பு
3. நீத்தார் பெருமை
4. அறன் வலியுறுத்தல்

### 'அறத்துப்பால்' — இல்லற இயல் :

5. இல்வாழ்க்கை
6. வாழ்க்கைத் துணை நலம்
7. புதல்வரைப் பெறுதல்
8. அன்புடைமை
9. விருந்து ஓம்பல்
10. இனியவை கூறல்
11. செய்ந்நன்றி அறிதல்
12. நடுவு நிலைமை
13. அடக்கம் உடைமை
14. ஒழுக்கம் உடைமை
15. பிறன் இல் விழையாமை
16. பொறை உடைமை
17. அழுக்காறாமை
18. வெஃகாமை
19. புறங்கூறாமை
20. பயன் இல சொல்லாமை
21. தீவினை அச்சம்
22. ஒப்புரவு அறிதல்
23. ஈகை
24. புகழ்

### 'அறத்துப்பால்" — துறவற இயல் :

25. அருள் உடைமை
26. புலால் மறுத்தல்
27. தவம்
28. கூடா ஒழுக்கம்
29. கள்ளாமை
30. வாய்மை
31. வெகுளாமை
32. இன்னா செய்யாமை
33. கொல்லாமை
34. நிலையாமை
35. துறவு
36. மெய் உணர்தல்
37. அவா அறுத்தல்
38. ஊழ்

## 'பொருட்பால்' — அரசியல்:

39. இறைமாட்சி
40. கல்வி
41. கல்லாமை
42. கேள்வி
43. அறிவு உடைமை
44. குற்றம் கடிதல்
45. பெரியாரைத் துணைக் கோடல்
46. சிற்றினம் சேராமை
47. தெரிந்து செயல்வகை
48. வலி அறிதல்
49. காலம் அறிதல்
50. இடம் அறிதல்
51. தெரிந்து தெளிதல்
52. தெரிந்து வினையாடல்
53. சுற்றம் தழால்
54. பொச்சாவாமை
55. செங்கோன்மை
56. கொடுங்கோன்மை
57. வெருவந்த செய்யாமை
58. கண்ணோட்டம்
59. ஒற்றாடல்
60. ஊக்கம் உடைமை
61. மடியின்மை
62. ஆள் வினையுடைமை
63. இடுக்கண் அழியாமை

## 'பொருட்பால்'—அங்க இயல்:

64. அமைச்சு
65. சொல்வன்மை
66. வினைத்தூய்மை
67. வினைத்திட்பம்
68. வினை செயல்வகை
69. தூது
70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்
71. குறிப்பு அறிதல்
72. அவை அறிதல்
73. அவை அஞ்சாமை
74. நாடு
75. அரண்
76. பொருள் செயல்வகை
77. படைமாட்சி
78. படைச் செருக்கு
79. நட்பு
80. நட்பு ஆராய்தல்
81. பழைமை
82. தீ நட்பு
83. கூடா நட்பு
84. பேதைமை
85. புல்லறிவாண்மை
86. இகல்
87. பகைமாட்சி
88. பகைத்திறம் தெரிதல்
89. உட்பகை
90. பெரியாரைப் பிழையாமை
91. பெண்வழிச் சேறல்
92. வரைவின் மகளிர்
93. கள் உண்ணாமை
94. சூது
95. மருந்து

## 'பொருட்பால்'—ஒழிபு இயல் :

96. குடிமை
97. மானம்
98. பெருமை
99. சான்றாண்மை
100. பண்பு உடைமை
101. நன்றியில் செல்வம்
102. நாண் உடைமை
103. குடி செயல் வகை
104. உழவு
105. நல்குரவு
106. இரவு
107. இரவு அச்சம்
108. கயமை

## 'காமத்துப்பால்' — களவு இயல் :

109. தகை அணங்கு உறுத்தல்
110. குறிப்பு அறிதல்
111. புணர்ச்சி மகிழ்தல்
112. நலம்புனைந்து உரைத்தல்
113. காதற் சிறப்பு உரைத்தல்
114. நாணுத்துறவு உரைத்தல்
115. அலர் அறிவுறுத்தல்

## 'காமத்துப்பால்'—கற்பு இயல் :

116. பிரிவு ஆற்றாமை
117. படர் மெலிந்து இரங்கல்
118. கண் விதுப்பு அழிதல்
119. பசப்புறு பருவரல்
120. தனிப் படர் மிகுதி
121. நினைந்தவர் புலம்பல்
122. கனவு நிலை உரைத்தல்
123. பொழுது கண்டு இரங்கல்
124. உறுப்பு நலன் அழிதல்
125. நெஞ்சொடு கிளத்தல்
126. நிறை அழிதல்
127. அவர்வயின் விதும்பல்
128. குறிப்பு அறிவுறுத்தல்
129. புணர்ச்சி விதும்பல்
130. நெஞ்சொடு புலத்தல்
131. புலவி
132. புலவி நுணுக்கம்
133. ஊடல் உவகை

# அதிகாரங்களின் விளக்கம்

## அறத்துப்பால்—பாயிரம்

### 1. கடவுள் வாழ்த்து

முழுமுதற் பொருளானவன் கடவுள் (இறைவன்) என்றும் அவனுடைய தன்மைகள் இவையென்றும் கூறுவது. இந்த உலகம் ஆதி பகவனை முதலாக உடையது. அவன் வாலறிவன். அவன்தாள் வணங்குதல் வேண்டும். உள்ளத்தில் இருப்பவன்; அவா அற்றவன்; இறைவன், மெய்யான ஒழுக்க நெறியாளன், உவமை இல்லாதவன், அறமே கடலாகிய அந்தணன், அறிதற்கு எளிய குணாளன்.

ஆக அத்தகையனை உள்ளத்தில் எண்ணி வழிபடுவதே வழிபாடாகும். எழுத்து, கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய சொற்கள் இவ்வதிகாரத்தில் சிறப்பு வாய்ந்தனவாகும். அதுவே போன்று அறம், அந்தணன், மனம் முதலியனவுமாகும். மனக்கவலை மாற்றும் நெறி உணர்த்தப்பட்டது.

அற ஆழி, பெருங்கடல் என்பவை கூறப்படுகின்றன. ஆசையற்ற தன்மையும் ஒழுக்க நெறியுமே இறைவனுக்கு முழுத்தன்மையாகக் கூறப்பட்டன வென்று சுருங்கக் கூறலாம்.

ஒழுக்கமுடைமை, நீத்தார் பெருமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் முதலிய அதிகாரங்கள் ஒப்பிடுதற்குரியன. முதலிரண்டு குறட்பாக்களும் வாலறிவனை வணங்குவதே கற்றலின் பயன் என்று கூறுகின்றன. மூன்று முதல் ஆறு வரையுள்ள பாக்கள், இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்வார், பேரின்பம் பெறுவர் என்பதைக் கூறுகின்றன.

ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய பாக்கள் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாதிருத்தலால் வரும் குற்றத்தினைக் கூறுகின்றன. பத்தாம் பாடல் இறைவனை நினைப்பவர் பிறவியை அறுப்பர் என்றும், நினையாதார் பிறவி அறாமல் ஆவர் என்றும் கூறுகின்றது.

திருக்குறளில் அதிகாரத் தலைப்புகளில் காணப்படும் சொற்கள் அந்தந்த அதிகாரத்திலுள்ள குறட் பாக்களில் காணப்படுகின்றன. ஆனால், இந்த அதிகாரத்தில் காணப்படும் 'கடவுள் வாழ்த்து' என்ற சொற்கள் குறட்பாக்களில் காணப்படவில்லை.

காமத்துப் பாலில், 'வழுத்தினாள்' என்றும், மற்றும் வாழி, வாழிய பிறவும் நூலில் காணப்படுகின்றன. ஒன்பதாவது குறளில் 'வணங்குதல்' காணப்படுகிறது. வாழ்த்து என்பதற்கு ஒப்பக் கொள்ளலாம். 'கடவுள்' என்ற சொல் நூல் முழுதுமே எங்கும் இல்லை. இது கடந்து நின்ற முழுமுதற் பொருள் என்ற உண்மைப் பொருள் நிறைந்த சொல்லாகும்.

'இறைமாட்சி' என்று அரசனைக் குறிக்கும் அதிகாரம் இருப்பதாலும், இறை, இறைவன் என்ற சொற்கள் மன்னனைக் குறித்துப் பல குறட்பாக்களில் கூறப் படுவதாலும், முழுமுதற் பொருளைக் குறிக்கும் இறைவனைப் பற்றி விளக்கம் கூறும் இந்த அதிகாரத்திற்குக் 'கடவுள் வாழ்த்து' என்று பெயரிடப்பட்டது.

'கடவுள்' என்று இங்குக் கூறப்பட்டதால் முதல் அதிகாரத்தில் காணப்படும் 'இறைவன்' என்ற சொல்லுக்கும் அரசியல் பகுதிகளில் காணப்படும் 'இறைவன்' என்ற சொல்லுக்குமுள்ள வேறுபாடு விளங்குவதாயிற்று.

## 2. வான்சிறப்பு

மழையின் பெருமையினைக் கூறுவதாகும். மழை என்பது நீரைமட்டும் குறித்து நிற்பதன்று. அது ஒரு செயலினை—நிகழ்ச்சியினை, உணர்த்துவதாகும். மழை பெய்தல் என்பது வழக்கு, முழுமுதற் பொருளான இறைவனைக் கூறிய பிறகு இந்த உலகத்தின், ஒருமித்த செயலொன்றினைக் கூறுகின்றார்.

இவ்வுலகம், நிலம், நீர், தீ, காற்று, விண் என்ற ஐந்து இயற்கைப் பிரிவுகளை உடையது. இந்த அதிகாரம் நீரின் சிறப்பு என்று கூறப்படவில்லை. நீர்-தண்ணீர் இன்றியமையாத தென்றால் காற்றும் அவ்வாறே கொள்ளப்படுதல் வேண்டும் என்பாரையும் மறுத்தல் கூடாது.

இந்த ஐந்தினையும் ஐம்பூதங்கள் என்று கூறுவர். ஒவ்வொருவர் உடம்பிலும் இந்த ஐந்தும் இருக்கின்றன. உலகிலுள்ள இந்த ஐந்து பூதங்களும் ஒன்று சேர்ந்து நடைபெறுகின்ற நிகழ்ச்சி மழை ஒன்றுதானாகும்.

இறைவன் ஆணையால் நிகழும் செயல் என்றும் கூறப்படும். நிலத்தைச் சார்ந்தே நீர் நிற்க, தீ அதனை ஆவியாக்க, மேலே காற்று கொண்டு செல்ல, வான் துணையாக இருக்க மழை பெய்கின்றது. சிந்தனைக்குரியதாயும். ஐம்பூதங்களும் சேர்ந்து நடந்த செயலாகும்.

முதல் ஏழு பாக்களும் உலகம் நடைபெறுவதற்குக் காரணமாகவுள்ளது மழையேயென்று கூறுகின்றன. கடைசி மூன்று பாக்களும் அறம், பொருள், இன்பம் என இவை நடைபெறுவதற்கும் மழையே அடிப்படைக் காரணம் என்று

விளக்குகின்றன. மழையே அமிழ்தம் என்று கூறப்படுகின்றது.

இரண்டாவது பாடல் அணியழகு சிறந்ததாயுள்ளது. அமிழ்தம், துப்பு, பசி, உழவர், புயல், பசும்புல், எழிலி, பூசனை, தானம், தவம், ஒழுக்கம் முதலிய சிறந்த சொற்கள் இந்த அதிகாரத்தில் காணப்படுகின்றன. 'வானோர்களுக்குப் பூசனை' நடக்காது என்று கூறி, மழையின் பெருஞ்சிறப்பினைக் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. இல்லறத்தார் செய்யும் தானத்திற்கும் துறவோர் செய்யும் அறத்திற்கும் முதற் காரணம் மழையே என்று சிறப்பிக்கப் பட்டது. காதற் சிறப்பு உரைத்தல்—என்ற அதிகாரத்தில், சிறப்பு என்ற சொல் அமைக்கப்பட்டுள்ளது.

## 3. நீத்தார் பெருமை

முற்றத் துறந்த முனிவர்களின் பெருமையினைக் கூறுதலாகும். அவர்களே உலகிற்கு அறநெறியினைக் கூறும் அந்தணர்களாகும். ஒழுக்கத்தின் முழுமையும் நிறையப் பெற்றவர்கள். இவ்வதிகாரத்தில், முதன் மூன்று பாக்களும் எல்லாப் பெருமையிலும் நீத்தார் பெருமையே சிறந்ததென்று கூறுகின்றன.

நான்கு முதல் ஏழாம் பாடல்வரை, நீத்தார் பெருமைக்குக் காரணம் ஐந்து அவித்தலும், தவப்பயிற்சியும் மெய்யுணர்தலுமே யாகும் என்பதைக் கூறுகின்றன. அம்முனிவர்களது ஆணை எட்டு, ஒன்பது பாக்களில் விளக்கப்படுகின்றன. பத்தாம் பாடல் உயிர்களிடம் அவர்கள் கொண்டுள்ள அருளுடைமையினைக்கூறும்.

அருளுடைமை, தவம், மெய்யுணர்தல், நிலையாமை, துறவு, அவாவறுத்தல் முதலிய அதிகாரங்கள், ஒப்பிட்டுப் பார்த்தற்குரியன. உலக வழக்கில் வைத்து, நீத்தாரின்

சிறப்பினை ஐந்தாம் பாடல் குறிப்பிடுவது சிந்தனைக் குரியதாகும்.

பனுவல், துணிபு, இறந்தாரை எண்ணல் இருமை, வகை தெரிதல், உரன் என்னும் தோட்டியான், வரன் என்னும் வைப்பு, செயற்கரிய செய்வார், ஐந்தின் வகை, நிறைமொழி, மறைமொழி, கணமேயும் காத்தல் அந்தணர் என்போர் அறவோர்,—என்பன ஆழ்ந்த உண்மைகளைக் கூறுவனவாகும். பெருமை—என்ற பெயரில் தனி, அதிகாரம் உண்டு.

## 4. அறன் வலியுறுத்தல்

அறம் இன்னதென்பதனையும் அதன் இன்றியமையாத் தன்மையினையும் கூறுவதாகும். மனத்தில் மாசின்றி இருத்தலே அறமெனப்படும். அறத்தினைவிட மிக்க உறுதி வாய்ந்தது வேறெதுவுமில்லையென்பதனை முதல் குறட்பா விளக்குகின்றது. அந்த அறத்தின் வழி நில்லாதிருப்பின் வரும் கேட்டினை இரண்டாவது குறட்பா கூறுகின்றது. அறம் செய்யும் வழியினை மூன்றாவது பாடல் விளக்குகின்றது.

நான்காவது ஐந்தாவது பாடல்கள் அறத்தின் இயல்பினை — தன்மையினை—விளக்குகின்றன. ஆறாவது பாடல், இத்தகைய சிறப்பு வாய்ந்த அறத்தினை, நிலையாத உடம்பு நிலைத்திருக்கும் போதே செய்தல் வேண்டும் என்பதனை வற்புறுத்துகின்றது.

பல்லக்கு ஏழாம் பாடலில் கூறப்படுகிறது. இப்பாடலில் 'இது என வேண்டா' என்று கூறப்படுகின்றது. பல்லக்கில் உட்கார்ந்திருப்பவனையும், சுமப்பவனையும் காட்டி 'இந்தக் காட்சிதான் அறத்திற்கு அடையாளம்' என்பது உணர்த்தப்படுகிறது. எட்டாம் பாடல், அறமே வீடு என்றும் பேரின்பம் தரும் என்று கூறுகிறது.

ஒன்பதாம் பாடல் அறம் செய்பவர்களே இம்மை இன்பமும் பெற்றுப் புகழும் அடைவர் என்று உறுதியளிக்கிறது. பத்தாம் பாடல் செய்யத்தக்கதையும் ஒழியத் தக்கதையும் குறிப்பிடுகிறது.

ஆக்கம் எவனோ, ஆக்கமும் இல்லை, செல்லும் வாய் எல்லாம், நான்கும் இழுக்கா இயன்றது, இது என வேண்டா, வழி அடைக்கும் கல், ஆகுல நீரபிற, பொன்றாத் துணை, புறத்த புகழும் இல, செயற்பாலது, உயற்பாலது—என்பவை நினைவில் நிறுத்தற்குரியன. தகையணங் குறுத்தல், அலரறிவுறுத்தல், குறிப்பறிவுறுத்தல் என்ற அதிகாரங்கள், 'உறுத்தல்' என்று முடிகின்றன.

## அறத்துப்பால்—இல்லற இயல்

### 5. இல்வாழ்க்கை

மனைவியுடன் கூடி வாழ்கின்ற வாழ்க்கையின் சிறப்பு. அறம் செய்தற்குரிய இருவகை நிலையுள்-இல்லறம், துறவறம்—முதலாவதாகும். வாழ வேண்டிய முறையில் அறவாழ்வை நடத்துவானேயானால் துறவறம் தேவையில்லை என்பதனை இந்த அதிகாரம் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

முதல் இரண்டு பாடல்களும், இல்வாழ்க்கை எல்லாருக்கும் துணையாக இருப்பதாகும் என்பதனையும், மூன்று நான்கு ஐந்து ஆகிய மூன்று பாடல்களும் இல்லறத்தில் நின்றவள் எவ்வாறு அறம் செய்ய வேண்டும் என்பதனையும் ஆறுமுதல் ஒன்பது வரையுள்ள பாக்கள் துறவறத்தினை விட இல்லற நிலையே மேம்பட்டது என்பதனையும் கூறுகின்றன. பத்தாம் பாடல் இவ்வுலகில் வாழ்கின்ற முறையில் வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படுவான் என்பதைக் கூறுகின்றது.

நல்லாற்றின் நின்ற துணை, ஓம்பல்தலை, பழியஞ்சிப் பாத்தூண், பண்பும் பயனும் அது, போய்ப் பெறுவது எவன் எல்லாம் தலை, நோன்மை உடைத்து, அறன் எனப் பட்டதே, தெய்வத்துள் வைக்கப்படும் என்பன நினைவில் நிறுத்தற்குரியன.

இந்த அதிகாரத்தில், நான்கு பாக்களில் துறவறத்தினைச் சுட்டிக் காட்டி இல்லறத்தின் பெருமையினை வற்புறுத்துகின்றார். துறந்தார்க்கும் இல்லறத்தானே துணையென்றும் கூறுகின்றார். அதிகாரங்களில் 'வாழ்க்கை' என்ற சொல் ஐந்து ஆறு ஆகிய இரண்டு அதிகாரங்களில் மட்டும் காணப்படுகின்றது.

## 6. வாழ்க்கைத் துணைநலம்

இல்வாழ்க்கைத் துணையாகிய மனைவியின் நற்குண நற்செயல்களைக் கூறுவது. 'நலம்' என்பது நன்மையினைக் கூறுதலாகும். 'வாழ்க்கைத் துணை' என்பதுடன் 'நலம்' என்றது நன்மைக்காகவே, வாழ்க்கைத் துணைவி என்பதனைக் குறித்தது.

முதற் குறட்பா இரண்டு சிறந்த நன்மைகளைக் கூறுகின்றது. இரண்டாவது, மூன்றாவது குறட்பாக்கள், இல்வாழ்க்கைக்குத் தேவையானது இல்லாளது மாட்சியேயல்லாமல் மற்றவையல்ல என்பதனைக் கூறுகின்றன.

ஐந்தாவது குறட்பா தெய்வங்களைத் தொழாமல் கற்புடை மகளாக இருப்பவள் எத்தகைய சிறப்பிற்கு உரியவள் என்பதைக் காட்டுகிறது. அவளுடைய ஆற்றல் விளக்கப் பட்டது. கற்புடைய பெண்ணின் நான்கு கடமைகளும் ஆறாவது குறட்பாவில் விளக்கப்படுகின்றன.

ஏழாவது குறட்பா தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டும் என்பதனையும், எட்டாவது குறட்பா கற்புடை மகளிரை தேவலோகத்தாரும் பாராட்டுவர் என்பதனையும்

ஒன்பதாவது குறட்பா, தகை சான்ற சொல்லினைக் காப்பாற்றாவிட்டால் வரும் குற்றத்தினையும், பத்தாவது குறட்பா வாழ்க்கைத் துணைக்கு ஆவதோர் அணிகலம் நன்மக்கட்பேறு என்பதனையும் கூறுகின்றன.

இந்த அதிகாரத்தில், மனைத்தக்க மாண்புடையாள், வளத்தக்காள், எனை மாட்சித்தாயினும் இல், இல்லதென், உள்ளதென், பெருந்தக்கயாவுள, பெய் எனப் பெய்யும், சோர்விலாள், எவன் செய்யும், பெருஞ்சிறப்பு, ஏறு போல் பீடு நடை, மங்கலம், நன்கலம் என்பன நினைவில் வைக்கப் படவேண்டியன. துணை என்ற சொல் 'பெரியாரைத் துணைக் கோடல்' என்ற அதிகாரத்தில் மட்டும் காணப் படுகிறது.

## 7. மக்கட்பேறு

நன்மக்களால் அடைகின்ற நன்மையினையும், இன்பத் தினையும் கூறுவதாகும். நன்மக்களைச் செல்வமாகவே கூறுவதால் 'பேறு' என்றார்; 'நன்மக்கட்பேறு' என்பது முந்திய அதிகாரத்தில் பத்தாவது குறட்பாவில் குறிக்கப் பட்டது.

மக்கட் பேற்றின் சிறப்பினை முதல் குறட்பா விளக்கு கின்றது. இரண்டாவது, மூன்றாவது குறட்பாக்கள் நன் மக்களைப் பெற்றவர்கள் மறுமைப் பயனைப் பெற்று இன்புறுவர் என்று கூறுகின்றன. நான்கு, ஐந்து, ஆறு குறட் பாக்கள் இப்பிறவியில் பெற்றோர் அடையும் இன்பத் தினைக் குறிக்கின்றன. ஏழாவது குறட்பா தந்தையின் கடமையினையும், எட்டாவது குறட்பா தந்தையினை விட உலகத்தார் மகிழ்வர் என்பதனையும் விளக்குகின்றன.

தாய் அடைகின்ற மகிழ்ச்சிக்கு அளவு இல்லாததால் அதனை தனியாக ஒன்பதாவது குறட்பா கூறுகின்றது. பத்தாவது குறட்பா மகனின் கடமையினைச் சுட்டிக் காட்டிற்று.

அறிவறிந்த மக்கள், எழு பிறப்பும் தீயவை தீண்டா, தம்தம் வினையான் வரும், சிறுகைஅளாவிய கூழ் மக்கள் மெய்தீண்டல், மழலைச் சொல், முந்தி இருப்பச் செயல், மன்னுயிர்க்கு, கேட்டதாய், என் நோற்றான், என்பன நினைவில் வைத்துக் கொள்ளப்படவேண்டியவைகளாகும்.

ஆறாவது குறட்பா குழலினையும் யாழினையும் குறிக்கின்றது. இசைக் கருவிகள் அனைத்தையும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு வகை வாயினால் வாசிப்பது; மற்றொரு வகை கையினால் வாசிப்பது. வாயினால் வாசிக்கப்படும் இசைக்கருவிகளை, குழலும், கையினால் வாசிக்கும் இசைக்கருவிகளை யாழும் குறித்து நிற்பதால், இரண்டும் உலகில் வழங்கும் இசைக் கருவிகள் அனைத்தையுமே குறித்தன என்று கொள்ளுதல் வேண்டும்.

தந்தை மகற்குச் செய்வதை நன்றி என்றும் மகன் தந்தைக்குச் செய்வதை உதவி என்றும் கூறியது சிந்தனைக்குரியது.

## 8. அன்புடைமை

மனைவி, மக்கள் முதலிய தொடர்புடையார்களிடம் அன்பு கொண்டு நடத்தல். இல்லறம் நடைபெறுவதற்கு அன்பே அடிப்படைக் காரணம் ஆகும். அருள் பிறத்தற்கும் அன்பே காரணமாகும். வாழ்க்கைத் துணைவியிடம் அன்பு இல்லையேல் இல்லறம் நடவாது. "உடைமை" என்ற அடைமொழியில் பத்து அதிகாரங்கள் காணப்படுகின்றன. இல்லறத்தில் "அன்பு" கூறியதுபோல் துறவறத்தில் "அருள்" கூறப்பட்டது.

முதற் குறட்பா அனைவரிடத்தும் அன்பு உண்டு என்பதைக் கூறுகின்றது. இக்குறட்பாவில் வினா எழுப்பப்பட்டு விடை கூறப்படுகிறது. அன்பினது பெருஞ் சிறப்பினை இரண்டு முதல் ஆறுவரையுள்ள குறட்பாக்கள்

கூறுகின்றன. அன்பு இல்லாவிட்டால் உண்டாகும் குற்றங்களைக் கடைசி நான்கு குறட்பாக்கள் குறிக்கின்றன. என்பில்லாத புழுக்களை வெயில் காய்வது, வற்றல் மரம் தளிர்ப்பது ஆகிய அணிகள் அழகுற அமைந்துள்ளன.

அடைக்கும் தாழ், புன்கணீர், என்பும் உரியர், என்போடு இயைந்த தொடர்பு, அன்பு ஈனும், வழக்கென்ப மறத்திற்கும் அஃதே துணை, அன்பிலதனை அறம், வற்றல் மரம், அகத் துறுப்பு, என்பு தோல் போர்த்த உடம்பு, முதலியன நினைவுக்குரியன.

ஏழாவது குறட்பாவில் ''அறம்'' தண்டிக்கும் என்று கூறியது சிந்தனைக்குரியது. உலக மக்கள் வெறுப்பார்கள் என்றும், உலகம் தண்டிக்கும் என்பதும் மனச்சாட்சியே கண்டிக்கும் என்பதுமாம்.

## 9. விருந்து ஓம்பல்

தம்மிடம் வந்த விருந்தினரைப் போற்றிக் காத்தல் என்பதாகும். 'ஓம்பல்' என்று அடைமொழியுடன் இந்த ஒரு அதிகாரம்தான் காணப்படுகிறது. 'விருந்து' என்பது புதிது என்று பொருள்படும். கணவன் மனைவி இருவராலும் சேர்ந்து செய்யப்படுவதாகும். இல்லறத்தார்க்கே உரியதாகும்.

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று போற்றப்பட வேண்டிய ஐவருள், முதலிரண்டும் கண்ணுக்குப் புலனாகாதவரையும், பிந்திய இரண்டும் புலனாவோரையும் கூறி, ஈகை செய்து போற்றப்பட வேண்டிய விருந்தினரை இடையில் வைத்து சிறப்பித்தார்.

முதலிரண்டு குறட்பாக்களும் விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறுகின்றன. மூன்று, நான்கு ஐந்து ஆகிய பாக்கள் விருந்தினரை ஓம்புபவர்கள், இம்மையில் அடைகின்ற

பெரும் பயனை விளக்குகின்றன. வானத்தவர்கள, விருந்தின் சிறப்பினையறிந்த இல்லறத்தானைப் போற்றுவர் என்பதனை ஆறாவது குறட்பா கூறுகின்றது.

விருந்தினர்களைப் போற்றுவதுதான் வேள்வியாகும் என்பதனைக் குறித்து உணர்த்துவது ஏழாவது குறட்பாவாகும். பல தகுதிகள் உடையவர்களாக வகைப்படுவர் என்பதனையும் இக்குறட்பா சுட்டிக் காட்டுகிறது. வேள்வியின் பயன் கூறப்பட்டது.

விருந்தோம்பல் செய்யாவிட்டால் வருகின்ற குற்றத்தினை எட்டு, ஒன்பது குறட்பாக்கள் காட்டுகின்றன. விருந்தினரின் மனப் பண்பினையும், விருந்தோம்புவார்க்கு இன்முகம் வேண்டும் என்பதனையும் பத்தாவது குறட்பா விளக்கிற்று.

வேளாண்மை, சாவாமருந்து, பாழ்படுதல்இன்று, செய்யாள் உறையும், வித்தும் இடல் வேண்டும் கொல்லோ, நல்விருந்து, வேள்விப்பயன், பற்றற்றேம் என்பர், மடைமை முகம் திரிந்து என்பன நினைவில் இருக்கத் தக்கனவாகும்.

சாவா மருந்தாக இருந்தாலும் விருந்தினர்க்கு அளித்தல் வேண்டும் என்பது சிறப்பாக அமைக்கப்பட்டதாகும். விதைக்கு வைத்திருப்பதையும் சமைத்து அளிப்பான் என்பது சிந்திக்க வேண்டியது. கடைசிக் குறட்பாவில் அனிச்ச மலரைக் காட்டியது அருமையான இடமாகும். குறட்பாக்களில் 'அனிச்சம்' பல இடங்களிலும் சொல்லப்படுகிறது.

## 10. இனியவை கூறல்

மகிழ்ச்சியினைப் புலப்படுத்துவதாய இனிய சொற்களைக் கூறல். சொற்கள் மிகவும் வன்மை படைத்தவைகளாகும். சொற்களை வகைப்படுத்தி, புறங் கூறாமை, பயனில சொல்லாமை, சொல் வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை என்கின்ற அதிகாரங்கள் கூறு

சொல்லும், நான்காவது குறட்பாவில் கூறப்படும் 'துவ்வாமை' என்பதும், ஒன்பதாவது குறட்பாவில் இருக்கும் 'ஈன்றல்' என்ற சொல்லும் சிந்தனைக்குரியவைகளில் சில எனப்படும்.

## 11. செய்ந்நன்றி அறிதல்

தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாதிருத்த லாகும். செய்ந்நன்றி மறத்தல் கொடிய செயலாகும். தனக்கு முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறருக்குச் செய்த உதவி அளவிடற்கரியதென்றே கூறப் படும். நன்றி என்பது நன்மை என்று பொருள் படும். செய்ந்நன்றி என்பது செய்த நன்மை என்பதாகும். நன்றி என்பது அறம் என்ற பொருளிலும் கூறப்படுவதாகும்.

இந்த அதிகாரத்தில், காரணம் இல்லாமல் செய்த உதவி, காலத்தினால் செய்த உதவி, பயன் கருதாமல் செய்த உதவி ஆகிய மூன்றும் அளவிட்டுக் கூற முடியாத சிறப்பு வாய்ந்தவை என்பதனை முதன் மூன்று குறட்பாக் களும் தெளிவுபடுத்துகின்றன. இந்த மூன்று வகையிலும் அல்லாத உதவியினை அறிந்துணர்பவர்களுக்குச் செய்தால் மிகவும் பெரிதாக எண்ணப்படும் என்பதனை நான்கு, ஐந்து ஆகிய இரு குறட்பாக்களும் கூறுகின்றன.

ஆறு, ஏழு பாக்கள் நன்றி செய்தவரது நட்பினை விடலாகாது என்று குறிக்கின்றன. ஒருவன் செய்த நன்மை யினை மறக்கவே கூடாதென்றும் அவன் செய்த தீமையினை மறக்க வேண்டும் என்றும் எட்டாவது பாடல் கூறுகின்றது. நன்மையல்லாததை ஒருவன் செய்தால் அதனை எவ்வாறு மறக்க வேண்டும் என்னும் வழியினை ஒன்பதாவது பாடலும், செய்ந் நன்றி கொல்லுதல் மிகவும் கொடுமை யானது என்பதனைப் பத்தாவது பாடலும் கூறுகின்றன.

வையகம், வானகம், ஞாலம், கடல், தினை, பனை, எழுமை எழுபிறப்பு, என்பவைகள் குறித்துக் காட்டும்

உண்மைகள் தலையானவைகளாக அமைந்துள்ளன. ஆற்றல் அரிது, மாணப் பெரிது, கடலின் பெரிது, பயன் தெரிவார், செயப்பட்டார் சால்பு, துப்பு ஆயர், துடைத்தவர் நட்பு, அன்றே மறப்பது, கொன்றன்ன இன்னா, உய்வில்லை, என்பன நினைவுக் கருவிகளாக அமைந்து கருத்துரைகளைக் கூற வல்லனவாகும்.

தான் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமைகளை ஒருவன் செய்யாதிருப்பினும்—மக்கள் பிறவி யெடுத்தவன் செய்து முடிக்கவேண்டிய நன்றியினைச் செய்யாவிட்டாலும் தப்பிக்கலாம். ஆனால் பிறன் தனக்குச் செய்த நன்மையினை மறப்பானேயானால் தப்பிக்கவே முடியாதென்பதனைக் கூறும் கடைசிப் பாடல் சிந்தனைக்குரியதாகும்.

'அறிதல்' என்று முடிகின்ற இவ்வதிகாரத்தினைப் போலவே, வலி அறிதல், காலமறிதல், இடனறிதல், குறிப்பறிதல், அவையறிதல், என்ற அதிகாரங்களும் முடிகின்றன. குறிப்பறிதல் என்பது இரண்டு அதிகாரங்களுக்குப் பெயராக அமைந்துள்ளது.

பிறவிகள் அனைத்தும் ஏழில் அடங்கும். ஆதலால் ஏழு பிறவிகள் என்று கூறப்படும் எழுமையினையுடையது என்பதைக் குறிக்க 'எழுமை' என்று ஏழாவது குறட்பா கூறுகின்றது. வினைப்பயனால் பிறவிகள் உண்டாவதாகும். இக் குறட்பா, அன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்து வரும் என்று குறித்துக் காட்டிற்று. தினை, பனை என்பன அளவினைக் காட்டுவனவாகும். அவை அளவைகள். நான்காம் குறள் கூறுவது. தினை, பனை என்பன தினை அரிசி பனைமரம் என்பதல்ல.

## 12. நடுவு நிலைமை

நண்பர், பகைவர் இரண்டுமல்லாதார் ஆகிய மூன்று வகையினரிடத்திலும் அறத்தின் வழுவாமல் நடந்து கொள்ளுவதைக் கூறுவதாகும். நன்றி செய்தவரிடத்தும்,

அந்நன்றியினை நினைந்து நடுவு நிலைமையிலிருந்து பிறழக் கூடாது என்பதும் கருத்தாகும்.

முதற் குறட்பா நடுவு நிலைமையின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றது. இரண்டாம்—மூன்றாம் குறட்பாக்கள் முறையே நடுவு நிலைமையான் வந்த செல்வம் நன்மை பயக்கும் என்பதனையும், மற்றைய வழியில் வந்த செல்வம் தீமையினைப் பயக்கும் என்பதனையும் குறிக்கின்றன. நடுவு நிலைமை உள்ளவர், இல்லாதவர் என்பதனை அறியும் வழியினை நான்காம் குறட்பா எடுத்துக் காட்டுகின்றது.

ஐந்து முதல் ஏழாவது பாடல்வரை, நெஞ்சத்தில் நடுவு நிலைமை குன்றாதிருத்தலே சான்றோர்க்கு அழகு என்றும், குன்றுதல்—கோணுதல்—கேட்டிற்குக் காரணம் என்றும், நடுவு நிலைமையான் வாழ்வில் தாழ்வுற்றாலும் உலகம் அவனுடைய தாழ்ந்த வறுமையினைக் கெடுதியாக நினைக்காது என்றும் கூறுகின்றன.

எட்டு ஒன்பது பாடல்கள் தீர்ப்புக் கூறுவார் நடுவு நிலைமையில் சிறந்திருக்க வேண்டும் என்பதனையும் பத்தாம் பாடல் வாணிகம் செய்பவர்கள் நடந்து கொள்ள வேண்டியதையும் விளக்குகின்றன.

செல்வப் பெருக்கமும், கேடும் ஒருவற்கு இயற்கை அமைப்பால் அமைந்துவிட்டதாகும். அதனையே பழவினையென்றும், ஊழ் என்றும் கூறுவர். ஆதலால் செல்வப் பெருக்கம், கேடு என்பதனைக் காரணமாகக் கொண்டு நடுவு நிலைமையிலிருந்து வழுவுதல் கூடாது என்பதனை ஐந்தாம் குறட்பா விளக்குகிறது. 'ஊழ்' என்ற அதிகாரத்தில், 'இயற்கை' என்று கூறி தெளிவுபடுத்தும் முறை சிந்திக்கத் தக்கது.

நான்காவது குறட்பாவில் கூறப்படும் 'எச்சம்' என்பது எஞ்சி நிற்கும் நிலைமை என்பதனைக் குறிக்கும். 'மக்கள்'

என்பதனை மட்டும் குறித்ததாகாது. எட்டாம் குறட்பா, துலாக் கோலினைக் காட்டிக் கருத்தினை அழகாக வற்புறுத்துகின்றது. தகுதி, செப்பம், ஆக்கம், தக்கார், எச்சம், கோடாமை, தாழ்வு, சீர்தூக்கும் கோல், உட் கோட்டம், வாணிகம் முதலியன கருத்துக்களை நினைவு படுத்த உதவுவனவாகும்.

பகுதியான் பாற்பட்டு ஒழுகல்—எச்சத்திற்கு ஏமாப்பு—அன்றே ஒழியவிடல்—அவரவர் எச்சத்தால்—நெஞ்சத்துக் கோடாமை — கெடுவல்யான் என்பது அறிக—கெடுவாக வையாது உலகம்—ஒருபால் கோடாமை—உட்கோட்டம் இன்மை—பிறவும் தமபோல் செயின்—என்ற தொடர்கள் நன்கு சிந்திக்கத்தக்கனவாகும். 'நிலைமை' என்று வேறு எந்த அதிகாரமும் முடியவில்லை. 'நிலையாமை' என்ற வொரு அதிகாரம் துறவறவியலில் கூறப்பட்டுள்ளது.

## 13. அடக்கம் உடைமை

மெய், மொழி, மனம் ஆகியவை தியவழியில் செல்லாமல் அடங்குதல் என்பதைக் கூறுதலாகும். அடக்கம் மிகவும் சிறந்த பயனை அளிக்கும் என்பதனை முதற்குறட்பா குறிக் கின்றது. அடக்கம் உடைமை, அது இன்மை என்பதைக் காட்ட தேவருலகத்தில் சேர்ப்பிக்கும், துன்ப நரகத்தில் சேர்ப்பிக்கும் என்று கூறினார். துன்பமான இடத்தினை 'ஆர் இருள்' என்றார்.

இரண்டாம் குறட்பா, காப்பாற்றவேண்டியதென்பதனை யும், மூன்றாம் குறட்பா நல்லோரால் மதிக்கப்படச் செய்வது அடக்கம் என்பதனையும் கூறுகின்றன. மலையினைக் காட்டி அடக்கத்தின் பெருமையினை நான்காம் குறட்பா விளக்கு கிறது.

செல்வர்க்கு அடக்கம் இருக்காதென்பது உலகியல். பாகச் சொல்லப்படுவதால் அவர்களிடத்தில் காணப்படும்

அடக்கம் மேன்மையான தென்பதனை ஐந்தாவது பாடல் கூறும். ஆக, முதல் ஐந்து குறட்பாக்களும் பொதுவகையால் அடக்கத்தின் சிறப்பினை விளக்கிக் காட்டின.

ஆறாவது குறட்பா மெய்யடக்கத்தினைக் கூறுகிறது. ஆமையினைக் காட்டி அறம் கூறிய முறை சிந்திக்கத் தக்க தாகும். பேசும் வாய்ச் சொற்களின் அடக்கம், அதாவது மொழி அடக்கத்தினை ஏழு, எட்டு, ஒன்பது குறட்பாக்களில் அறிகின்றோம். பத்தாம் குறட்பா மன அடக்கத்தினைக் கூறுவதாகும்.

பத்தாவது குறட்பா, அறம், அடக்கமுடையவனிடத்தில் தானே சென்றடையும், என்பதனைக் கூறி மிகுதியாகச் சிறப்பிக்கின்றது. உலகம் அவனைப்பாராட்டும்என்பதாகும். ஒன்பதாவது குறட்பாவில், தீயினால் சுட்டதைப் புண் ணென்றும், நாவினால் சுட்டதை வடு என்றும் கூறிய வேறு பாடு சிந்தனைக் குரியதாகும்.

அமரருள் உய்க்கும், அதனின் ஊங்கு இல்லை, சீர்மை பயக்கும், மலையினும் மாணப்பெரிது, செல்வம் தகைத்து, ஏமாப்பு உடைத்து, என்பனவெல்லாம் அடக்கத்தின் மேன் மையினையும்அதனால் எய்தும் பயனையும் கூறுவனவாகும்.

சோகாப்பர், நன்றாகாதாகிவிடும், ஆறாதே, என்பன அடக்கமிலாதார் துன்பமடைவர் என்பதைக் குறித்தன வாகும். 'அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்பது அடக்கத்தின் நன்மைக்குச் சிகரம் வைத்தது போன்றதாகும். திருக்குறள் நூலில், பத்து அதிகாரங்கள் 'உடைமை' என்று முடிகின்றன. சொல்-நா-இவைகளின் நன்மை தீமைகளை, சொல்வன்மை, இனியவை கூறல், பயனில சொல்லாமை, புறங்கூறாமை, அவையறிதல், அவை அஞ்சாமை, கேள்வி முதலிய அதிகாரங்களிலும் கண்டறிதல் சிறப்புடையதாகும். 'கற்று அடங்கல்' மிகவும் மேன்மையுடைய தென்பதனைப் பத்தாவது பாடல் குறித்து நின்றது.

## 14. ஒழுக்கம் உடைமை

மனிதப் பிறவிக்கேற்ப மனிதத் தன்மையுடன் கடமையுணர்ந்து நடந்து கொள்ளுதலாகும். ஒழுக்க நெறியே உயிரினை விடவும் மேம்பட்டதாகப் பாதுகாக்கப்பட வேண்டும். முதற் குறட்பாவிலேயே, ஒழுக்கம் எல்லோர்க்கும் சிறப்பினைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரினைவிட மேலானதாகப் பாதுகாக்கப்படும் என்று கூறப்பட்டது. இரண்டாவது பாடலும் ஒழுக்கத்தின் சிறப்பினையே கூறுகின்றது.

மூன்று முதல் ஏழு பாடல்கள் ஒழுக்கமுடைமையால் ஒருவன் அடையும் மேம்பாட்டினையும் அது இல்லாவிட்டால் உண்டாகும் இழிநிலையினையும் விளக்குகின்றன. ஒழுக்கத்தின் வரும் பின் விளைவினை எட்டாவது பாடல் எடுத்துக் காட்டுகிறது. சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்கள் எல்லாவற்றையும் தொகுத்துக் கடைசி இரண்டு பாடல்களும் குறிப்பிடுகின்றன.

'கூடாவொழுக்கம்' என்றொரு அதிகாரம் துறவற இயலில் கூறப்படுகிறது. மக்களை வஞ்சிக்கும் போலி வேடதாரிகளைத் தெளிவுபடுத்தும் அதிகாரமாகும்.

கடைட்சியாக வைக்கப்பட்டுள்ள 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்ற குறட்பாவுடன், 'எவ்வது உறைவது உலகம்' என்ற குறட்பாவினையும், 'செயற்கை அறிந்தக் கடைத்தும்' என்ற குறட்பாவினையும், ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

உயர்ந்த மறை நூலினை 'ஒத்து' என்று கூறினார். அதனை ஓதிக் கொண்டிருப்பதே மனித ஒழுக்கம் என்று கருதியிருந்தால் தவறு என்றும், அதனை மறந்தாலும் திரும்பப் படித்துக் கொள்ளலாம் ஆனபடியால் பிறப்பு ஒழுக்கம் குன்றாதிருத்தலே இன்றியமையாததாகும்

என்பதனை வற்புறுத்தி நான்காம் குறட்பா தெளிவுபடுத்துகிறது.

உயிரினும் ஓம்பப்படும் - அஃதே துணை - உடைமை குடிமை - ஒழுக்கத்தின் ஒல்கார் - எய்துவர் மேன்மை - நன்றிக்கு வித்தாகும் - என்று குறிப்பிட்டு ஒழுக்கத்தினால் அடையும் சிறப்பினையும் அதன் உயர்ச்சியினையும் கூறினார். "இழிந்த பிறப்பாய் விடும் - குன்றக் கெடும் - இல்லை - இழுக்கத்தின் ஏதம் - எய்தாப் பழி - இடும்பை தரும் - அறிவிலாதார் - என்பனவற்றால் ஒழுக்கம் இழந்தவர்களின் தாழ்வும் அதனால் அடையும் கேடும் கூறப்பட்டன.

ஐந்தாவது குறட்பாவில் 'அழுக்காறு' என்ற தீய குணம் ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. 'அழுக்காறாமை' என்றொரு அதிகாரம் உள்ளது. இறைவனைப்பற்றிக் கூறுகின்ற முதல் அதிகாரத்தில் 'பொய்தீர் ஒழுக்கம்' என்று காணப்படுவது சிந்திக்கத்தக்கதாகும். பல நூல்களைக் கற்றிருந்தாலும் உலகத்தோடு ஒட்டிப் பழகத் தெரியாதவர்களும் உண்டு என்று காட்டி அவர்களை அறிவில்லாதார் என்று பத்தாம் குறட்பா கூறும்.

## 15. பிறன்இல் விழையாமை

காமமயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமையாகும். தலைசிறந்த அறம் எனப்படுவதாகும். அறத்தில் நீங்கிப் பிறன் மனையாளை விரும்புபவர்களைப் பேதையார்கள் என்று முதலிரண்டு பாடல்கள் கூறுகின்றன. இல்லத்திற்கு உரியவள் அவளே ஆனபடியால், இல்லாளை 'இல்' என்று கூறினார்.

இல்லாளைக் குறிப்பிடும்போது, பிறன் பொருளாள் - பிறன் கடை- தெளிந்தார் இல்- பிறன் இல்- இல் இறப்பான்- பிறன் இயலாள் - பிறன் மனை - பிறர்க்கு உரியாள் - பிறன்

வரையாள் - என்றெல்லாம் குறித்துப் பெண்ணைச் சிறப்பித்துக் கூறினார். முதல் ஆறு பாக்களும் பிறன் இல் விழைவானின் குற்றத்தினையும் கடைசி நான்கு பாக்களும் பிறன் இல் விழையாதவனுடைய குணங்களையும் விளக்கம் செய்கின்றன. கொடிய குற்றங்கள் நான்கும் பிறன் இல் விழைபவனை விட்டு நீங்கவே நீங்காதென்று ஆறாம் குறட்பா குறிக்கின்றது. பிறனில்விழைபவன் இறந்தவர்க்குச் சமம் என்று மூன்றாம் குறட்பா கூறும்.

எட்டாம் குறட்பாவில் 'பேராண்மை' என்று கூறிய சிறப்பு மிகுதியும் சிந்திக்கத்தக்கதாகும். புறத்தே காணப் படும் பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகவுள்ள காமம் அடக்குவதற்கு அரிதானதாகை யால், 'பேராண்மை' என்று கூறினார்.

கடலினை 'நாமநீர்' என்று ஒன்பதாம் குறட்பா கூறுகின்றது. அகலம், ஆழம், பொருளுடைமை அனைத்தும் பெற்று அளவிடப்படாததால் 'நாமநீர்' என்று கூறப்பட்டது. 'நலத்திற்கு' என்பது 'நலக்கு' என்று குறைந்து நின்றது. இக்குறட்பாவில், பிறற்கு, உரியாள், தோள், தோயாதார் என்று கூறியதால் நன்மையடைவார்களின் நல்லுள்ளம் பெறப்பட்டது.

அறம், பேதைமை, ஒழுகும், பகை, பெண்மை, இல்வாழ்வாள், சான்றோர்க்கு, முதலியன திருக்குறளில் காணப்படும் பிற அதிகாரங்களையும் நினைவு படுத்துவன வாகும். பெட்டு ஒழுகும் - நின்றார் - மன்ற தெளிந்தார் - தினைத் துணையும் தேரான் - எளிதென - பெண்மை நயவாதவன் - நோக்காத - உரியாள் - பிறன் வரையாள் - என்பன கருத்துக்களை நினைவிற்குக் கொண்டு வர உதவி செய்வனவாகும்.

# 16. பொறை உடைமை

பிறன் தனக்குத் தீமை செய்தபோதும் தான் அதனை அவன்கண் செய்யாது பொறுத்திருத்தலாகும். நெறியில் நீங்கியவர்களையும் பொறுத்தல் சிறந்த பொறையுடைமையாகும். முதல் நான்கு குறட்பாக்களிலும் பொறையுடைமையின் சிறப்புக் கூறப்பட்டது. பிறர் செய்த தீமையினையும் பொறுத்தல் சிறப்பினைத் தரும் என்ற உண்மையினை ஐந்து முதல் எட்டாம் குறட்பா வரை விளக்குகின்றன. கடைசியில் கூறப்பட்டுள்ள இரண்டு குறட்பாக்களும் பொறையுடைமை என்னும் சிறப்பினைப் பெற்றவர்கள் முற்றத் துறந்த முனிவர்களை விடவும் சிறந்தவர்கள் என்று குறிக்கின்றன.

பொறுத்தல் தலை - அதனினும் நன்று - வன்மையுள் வன்மை - போற்றி ஒழுகப்படும் - பொன்போல் பொதிந்து - பொன்றும் துணையும் புகழ் - தகுதியால் வென்று விடல் - தூய்மை உடையர் - நோற்பாரின் பின் - என்று கூறப்பட்டவைகள் எல்லாம் பொறையுடைமை கொண்டவர்களின் மேம்பாட்டினைச் சுட்டிக் காட்டுவனவாகும். ஆறாம் பாடல் 'ஒரு நாளை இன்பம்' என்று கூறிப் பேருண்மையினை உணர்த்திவிட்டது.

நிலம், நன்று, விருந்து, நிறைஉடைமை, ஒழுகப்படும், புகழ், துறந்தார், இன்னாச்சொல் என்பன நூலில் காணப்படும் பிற அதிகாரங்களையும் நினைவு படுத்துவனவாகும். நான்காம் குறட்பாவில் காணப்படும் 'நிறை உடைமை" என்பதனைச் சிந்திக்கும்போது, காமத்துப் பாலில் கூறப்பட்டுள்ள 'நிறையழிதல்' என்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளவைகளையும் சிந்தித்தல் நல்லது.

முதற் குறட்பாவில் அழகான உவமை எடுத்துக் காட்டப்பட்டது. பொறுமைக்கு உலகில் போற்றப்படுவது

நிலமாகும். நிலத்தினை அகழ்வாரும், பிறரை இகழ்வாரும் ஒப்பிடப் படுகின்றனர். நிலத்தினை அகழ்வதற்கு தோண்டுவதற்குக் கடுமையான கருவி இருப்பது போலப் பிறரை இகழ்வார்க்கு உள்ளம் இருக்கின்றதென்பது குறிப்பு

ஆறாம் குறட்பாவில் கூறப்பட்டுள்ள 'ஒரு நாளை இன்பம்' பொய்யின்பம் என்பதாகும். செருக்கினையே உணர்த்திற்று. ஐந்தாம் குறட்பா "பொன் போல்" என்று கூறுவது அரிய சிந்தனைக்குரியதாகும். 'சுடச்சுடரும்' 'அரம் பொருத' 'வேண்டற்க' என்று தொடங்கப் பெறும் குறட்பாக்களை ஒப்பிட்டுப் பார்த்துப் 'பொன்' தரும் விளக்கங்களை அறியலாம்.

## 17. அழுக்காறாமை

'அழுக்காறு' என்பது ஒரு சொல். பிறர் ஆக்கம் செல்வாக்கு - முதலியன கண்டு பொறாமை கொள்ளுத லாகும். அழுக்காறு கொள்ளாதிருக்க வேண்டும் என்பதனை 'அழுக்காறாமை' என்னும் சொல் குறித்து நின்றது. 'அழுக்காறு' இல்லாதிருப்பது எவ்வளவு மேன்மையான தென்பனை முதலிரண்டு பாடல்கள் கூறுகின்றன. மூன்றாம் பாடல் முதல் எட்டாம் பாடல் வரை பொறாமையுடைமை யினது பெருங்குற்றம் முறையாகக் கூறப்படுகிறது. ஒன்பது பத்து, பாடல் கெடுதியும், ஆக்கமும் வருவதற்குக் காரண மானவற்றைக் குறிக்கின்றன.

ஒழுக்க நெறிகளாகக் கூறப்பட்டவைகளில் அழுக்காறு இல்லாதிருத்தல் சிறந்ததென்பதை முதற் குறட்பா, 'ஒழுக்காறாக் கொள்க' என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது. பகைவரிடத்தில்கூட அழுக்காறு இல்லாதிருத்தல் வேண்டும் என்ற உயர்ந்த பண்பினைக் குறிக்கவே இரண்டாம் பாட லில் 'யார் மாட்டும்' என்றார்.

அழுக்காறு என்பது அதனைக் கொண்டவனை அதுவே அழித்துவிடும். பிறர் அவனுக்குக் கெடுதி செய்யவேண்டியதும் இல்லை. அவ்வளவு கொடியது பொறாமைக் குணம் என்பதாகும். 'அதுசாலும்' என்பது இக் கருத்தினைக் கூறும். ஐந்தாம் குறட்பாவில் காண்க. தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் சுற்றத்தாராகும். அவனுக்கு நேர்ந்த தீமை சுற்றத்தினரையும் கெடுத்துவிடும். சுற்றமும் கெடும் என்பதால் அவன் கெடுவது சொல்லாமலே விளங்கும் என்பதனை ஆறாம் குறட்பா உணர்த்திற்று.

உலகில் இயல்பான வழக்கு, சீதேவி, மூதேவி, என்று கூறப்படுவதாகும். மூதேவி சீதேவிக்கு மூத்தவள் என்பது வழக்கில் பேசப்படுவது. பொறாமையுடையவனுக்குச் செய்யவள் தனது மூத்தவளைக் காட்டிவிடும் என்று ஏழாம் குறட்பா கூறும். தவ்வை என்பது மூத்தவள்; திருமகள் இருக்க மாட்டாள். வறுமை அவனைப் பிடித்துக் கொள்ளும். 'அழுக்காறு' என்பது எவ்வளவு கொடியது என்பதை உணர்த்தவே எட்டாம் குறளில் 'பாவி' என்றார்.

ஒன்பதாவது குறட்பா ஆழ்ந்த சிந்தனைக்குரியதாக அமைந்துள்ளது. உலகில் காணும்போது, பொறாமை உள்ளவன் ஆக்கம் பெற்றும் தூய உள்ளம் படைத்தவன் கேடடைந்து இருப்பதும் காணப்படுகிறது என்று பேசப்படுவதுண்டு. அவ்வாறு காணுவது உண்மையுமாகும். இதனைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். ஆக்கம் என்பது அளவில் பெரியதைக் குறிக்கின்றது. இவ்வுலக வாழ்க்கை பழவினையின் அமைப்பிலும் அமைந்துள்ளதாகும். அதனையே இயற்கையென்று கூறுவோம். செயற்கை என்னும் முயற்சியினைவிடப் பன்மடங்கு பெரிதானது என்று கூறவேண்டும், "இருவேறு உலகத்து இயற்கை" என்று காணப்படும் குறட்பாவினை 'ஊழ்' என்ற அதிகாரத்தில் கண்டு தெளிதல் வேண்டும்.

பொறாமை கொண்ட நெஞ்சத்தான் ஆக்கமுடையவனாகவும், செம்மையுடையவன் கெடுதியுடையவனாகவும் இருப்பதற்குக் காரணம் பழவினை என்னும் இயற்கையேயாகும். ஒன்பதாவது குறட்பா இதனைக் கூறுகின்றது.

## 18. வெஃகாமை

பிறருடைய பொருளை வஞ்சித்து அபகரிக்க நினையாதிருத்தலாகும். பொறாமையுண்டானால் பிறர் பொருளை வெளவக் கருதும் நினைப்பும் உண்டாகும். இதுவும் கொடிய குற்றமாகும். நடுவு நிலைமை என்பது அறவே இல்லாதிருத்தல் இக்குற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும். இதனை முதற் பாடல் வற்புறுத்துகின்றது. வெஃகுதல் செய்பவனுடைய குடி அழியும் என்பது எடுத்துக் காட்டப்பட்டது. நடுவு நிலைமை இல்லாதிருத்தல் பெருந்தீமை என்பவர்கள் வெஃகுதலை மிகவும் அஞ்சுவர் என்பதனை இரண்டாம் குறள் கூறுகின்றது. இக்குறளில் 'நடுவு' என்ற சொல் சிந்திக்கத் தக்கது. அதாவது ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியவன் அல்லன் என்பது 'நடுவு' என்பதாகும்.

பாவச் செய்கையினால் வரும் இன்பத்தினைச் சிற்றின்பம் என்று மூன்றாம் குறள் குறிக்கின்றது. ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார்களை நான்காம் குறள் விளக்குகின்றது. அறிவின் மேம்பாட்டினை ஐந்தாம் குறள் சிறப்பித்தது. முதல் ஏழு பாடல்களும் வெஃகுதலின் குற்றத்தினைத் தொகுத்துக் கூறின.

எட்டு ஒன்பது பாடல்கள் வெஃகாமையின் குணத்தினைக் குறிப்பிடுகின்றன. வெஃகாமையின் நன்மை தீமைகளை ஒருங்கு சேர்த்துக் கடைசிக் குறட்பா குறித்தது. "குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்''—''விளைவயின்

மாண்டற்கு அரிதாம் பயன்"—"இறல் ஈனும் எண்ணாது வெஃகின்'' என்பன வெஃகுதலால் வருகின்ற கொடிய தீமையினை விளக்குகின்றன. சிந்தித்தறிதற்கு உரியன வாகும்.

'வெஃகாமை' என்பதனை செய்ய நினையாதவர்கள் யார் யார் என்பதனையும் அதனால்—வெஃகுதல் செய் யாமையால் வரும் நன்மையினையும், "நடுவு அன்மை நாணுபவர்'' — "மற்றின்பம் வேண்டுபவர்" — "புலம் வென்ற புன்மையில் காட்சியவர்'' — "விறல் ஈனும் வேண்டாமை என்னும் செருக்கு'' என்பவைகள் முறையே குறிக்கின்றன.

நடுவு, குடி, பொருள், நாணுபவர், மற்றின்பம், அறிவு, அருள், அறிவுடையார், வேண்டாமை முதலியன நூலில் காணப்படும் பிற அதிகாரங்களை நினைவுபடுத்துவனவாக அமைந்துள்ளன.

## 19. புறங்கூறாமை

காணாதபோது பிறரை இகழ்ந்து பேசாதிருத்தல். இது மொழிக் குற்றமாகும். முதற் குறள் 'புறங் கூறாமை' என்ற அறத்தின் நன்மையினைக் கூறுகின்றது. இரண்டாம் குறள் பொய்ச் சிரிப்புச் செய்து புறங் கூறுபவர்களைக் கூறுகின்றது. மூன்றாம் குறள் எதிரில் இருந்து கடுமையான சொற்களைச் சொல்லினும் சொல்லுக என்று குறிக்கின்றது. ஆக முதல் மூன்று குறட்பாக்களும் புறங்கூறுதல் என்ற கொடுமையின் குற்றங்களைக் கூறுகின்றன.

நான்கு முதல் ஒன்பது வரையுள்ள குறட்பாக்கள் புறங் கூறுவார்க்கு வரும் குற்றங்களையும் தீமைகளையும் விரித் துரைக்கின்றன. பத்தாம் குறட்பா புறங்கூறுதலை எவ்வாறு

ஒழிப்பது-நீக்குவது என்பதற்கு வழிவகுத்துச் சொல்லுகின்றது.

மூன்றாவது குறட்பாவில் பொதிந்துள்ள கருத்து சிந்தனையை மிகுதியும் தூண்டுவதாக உள்ளது. புறங் கூறி வாழ்வதைவிட சாவதே மேல் என்றும் அது அறத்தினைத் தரும் என்று குறிப்பிட்டுக் கூறுவது பன்முறையும் கருதற்பாலது. புறம் கூறி வாழ்பவனை இந்தப் பூமியும் தாங்குவது கூடாது என்ற எண்ணம் ஒன்பதாவது குறட்பாவில் காணப்படுகிறது. அறத்தினைக் கருதி இப்பூமி தாங்குகின்றதோ என்ற கருத்து சிந்தனைக்குரியதாகும்.

அறம், பொய்த்து நகை, சொல், நட்பு, பொறை, குற்றம், முதலியன திருக்குறளில் காணப்படும் பிற அதிகாரங்களை நினைவுபடுத்துவனவாகும். 'புறங் கூறான் என்றல் இனிது'—'அறம் ஆக்கம் தரும்' — 'தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'—என்பன புறங்கூறாதிருத்தலின் நன்மையினையும் சிறப்பினையும் காட்டுகின்றன.

பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, பயனில சொல்லாமை, கள்ளாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, கல்லாமை, சிற்றினஞ் சேராமை, பொச்சாவாமை, வெருவந்த செய்யாமை, இடுக்கண் அழியாமை, அவை அஞ்சாமை, பெரியாரைப் பிழையாமை, கள்ளுண்ணாமை, பிரிவாற்றாமை முதலிய அதிகாரங்களின் பெயர்களும்—அவைகளின் அமைப்பும், 'புறங்கூறாமை' என்பதுபோல் கருதற்பாலன.

'புறனழீஇப்' பொய்த்துநகை—பொய்த்துயிர் வாழ்தல்-முன் இன்று பின் நோக்காச் சொல்—புன்மையால் காணப்படும்-திறன் தெரிந்து கூறப்படும்-நட்பாடல் தேற்றாதவர்-ஏதிலார் மாட்டு-புன் சொல் உரைப்பான்-தம் குற்றம் காண்கில்-என்பன புறங் கூறி வாழ்பவர்களின் இழி தன்மையினையும், தீமையினையும், சுட்டிக் காட்டுகின்றன.

புறங்கூறி வாழ்பவரை, 'தூற்றும் மரபினார்' என்று எட்டாம் குறள் கூறுகின்றது. இப்படிப் பேசுவதையே இயல்பாகக் கொண்டவர்களை 'மரபினார்' என்றார்.

## 20. பயன்இல சொல்லாமை

தமக்கும் பிறருக்கும் அறம் பொருள் இன்பம் ஆகிய பயன்கள் ஒன்றுமே தராத சொற்களைச் சொல்லாதிருத்தலாகும். பயன் உள்ளவைகளைத்தான் சொல்ல வேண்டும் என்பது குறிப்பு. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் ஆக வாக்கின்கண் நிகழும் குற்றங்கள் நான்கு என்று வகுத்துக் கூறப்படும்.

கடுஞ்சொல், இனியவை கூறலான் விலக்கப்படும். குறளை, புறங்கூறாமையால் விலக்கப்படும்.

எல்லோராலும் இகழப்படுவான் என்பதனை முதற் குறட்பா கூறுகின்றது. பலர் முன்னிலையில் பயனில்லாததைப் பேசுபவன் இழிநிலையினை இரண்டாம் குறள் எடுத்துக் காட்டுகின்றது. பயனில்லாத சொற்களை சிலர் மிகமிக விளக்கமாக விரிவுபடுத்திப் பேசுவதை மூன்றாம் குறள் குறிக்கின்றது. நான்காம், ஐந்தாம் குறட்பாக்கள் அவனை விட்டு, நன்மை நீங்கும், சீர்மை சிறப்பொடு நீங்கும் என்று கூறுகின்றன.

'பதர்' என்பது நெல்லின் உள்ளீடு இல்லாத 'உமி' என்பதேயாகும். பயனில்லாத சொற்களைப் பேசுபவனை மக்களிடையே பதர் என்று ஆறாம்குறட்பா விளக்குகின்றது. ஆக, முதல் ஆறு பாக்களும், பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றத்தினைக் கூறுகின்றன.

ஏழு, எட்டு, ஒன்பது குறட்பாக்கள் பயனில்லாத சொற்களைச் சொல்லாதவர்களின் குணத்தின் சிறப்பினைக் கூறும். பத்தாம் பாடல் சொல்லப்பட வேண்டியனவற்றையும், சொல்லத் தகாதவைகளையும் கூறுகிறது.

நட்டார், சொல், பண்பில் சொல், சான்றோர், அறிவினார், பொச்சாந்தும், என்பன பிற அதிகாரங்களை நினைவு படுத்துவனவாக அமைந்துள்ளன.

'எல்லோரும் எள்ளப்படும்'—'நயன் இலன் என்பது சொல்லும்'—நயன் சாரா நன்மையின் நீக்கும் — 'சீர்மை சிறப்பொடு நீங்கும்'—'மக்கட் பதடி எனல்' - என்பன பயனில சொல்லுவான் அடைகின்ற தீமையினையும் அவனுக்கு வரும் இழிபெயரினையும் காட்டுவனமாகும்.

பயன் சாராப் பண்பில் சொல், பெரும் பயன் இல்லாத சொல், பொருள் தீர்ந்த—என்பனவற்றால் பயனில்லாத சொற்கள் விளக்கப்படுகின்றன. பத்துக் குறட்பாக்களில் 'பயன் இல' என்று ஆறு குறட்பாக்களில் கூறியது வற்புறுத்தலின் காரணமேயாகும்.

## 21. தீவினை அச்சம்

பாவச் செயல்களைச் செய்தற்கு அஞ்சுதல். துன்பம் தரும் செயல்களைச் செய்யாதே என்பதாகும். இதனால் உடம்பால் நிகழ்த்தப் பெறும் தீச்செயல்கள் கூறப்பட்டன. 'அச்சம்' என்ற அடைமொழியுடன் 'இரவு அச்சம்' என்றொரு அதிகாரம் உண்டு.

தீச்செயல் புரியும் இயல்பினர் தீமையான செயல்களைச் செய்வதற்கு அஞ்சமாட்டார்கள் என்று முதற் குறட்பா கூறுகின்றது. நெருப்பினைவிட தீச்செயல் கொடிது என்பதற்குக் காரணம் காட்டுகிறது இரண்டாவது குறட்பா. மூன்றாம் குறட்பா அறிவின் சிறப்பிற்குரிய காரணத்தினை விளக்குகிறது.

ஆக முதன் மூன்று குறட்பாக்களும் தீவினைக்கு மிகுதியும் அஞ்சவேண்டும் என்பதனைக் காட்டுகின்றன. பிறருக்குக் கேடு செய்பவனை அறம் தண்டித்தே தீரும் என்பதனை

நான்காம் குறட்பாவும் வறியவன் என்று எண்ணி தீமை செய்யாதே என்பதனை ஐந்தாம் குறட்பாவும் கூறுகின்றன. பிறருக்குத் தீமை செய்வது தனக்குத் திரும்ப வந்தே தீரும் என்ற உண்மையினை ஆறு, ஏழு குறட்பாக்கள் குறிக்கின்றன.

நிழலினை உவமை காட்டி எட்டாம் குறட்பா கூறுவது மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாகும். ஒன்பதாம் குறட்பா, ஒருவன் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய வழியினைக் கூறும். ஆக நான்கு முதல் ஒன்பதாம் குறட்பா வரை, பிறர்க்குத் தீமை செய்பவன்தான் கெடுவது உறுதி என்பதனைக் கூறுகின்றன. கடைசி குறட்பா, தீவினை செய்யாதவன் கெடுதல் இல்லையென்ற மெய் யுரையினை விளக்குகின்றது.

அறிவு, அறம், பகை, வினை, முதலிய சொற்கள் பிற அதிகாரங்களை நினைவுபடுத்துவனவாகக் கொள்ளுதல் நன்று. தீவினையார், தீயினும் அஞ்சப்படும், இலன் ஆகும், பின் சென்றிடும், கெடுதல், துன்னற்க என்பன தீவினை எவ்வளவு கொடிது என்றும் அதனைச் செய்வார் துன்பம் உறுதல் உறுதி என்றும் குறிப்பிட்டன.

## 22. ஒப்புரவு அறிதல்

அதாவது உலக நடையினை அறிந்து செய்தல் என்பதாகும். அறநூல்களுள் கூறப்படுவது மட்டுமல்லாமல் தானே அறிந்து செய்யும் தன்மையுடையது ஆனபடியால், ஒப்புரவு அறிதல் என்றார். செய்யவேண்டிய நற்செயல்களுள் ஒப்புரவு அறிதலும் ஒன்றாகும்.

முதற் குறட்பா மேகங்களை ஒப்பிட்டுக் கூறுகின்றது. நீர் உதவும் மேகங்கள் உயிர்களிடத்தில் கைம்மாறு என்பதனை எதிர்பார்ப்பதில்லை. அதுவே போல மேகங்கள் போன்றவர்கள் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்கு

வனவல்ல என்பதாகும். தவிர்க்காமல் நன்மை செய்வது உறுதியானபடியால் ‘கடப்பாடு’ என்று கூறப்பட்டது. அழகுற அமைந்தது முதற் குறட்பாவாகும். தேடிய பொருட் செல்வம் ஒப்புரவு செய்தற்கே பயன்படவேண்டும் என்னும் கருத்து இரண்டாம் குறட்பாவில் காணப்படுகிறது. பொருளினை முயற்சி செய்து ஈட்டவேண்டுமென்றும், தக்கார்க்கு அளிக்கவேண்டுமென்றும் கூறினார்.

தேவருலகத்தினையும் இவ்வுலகத்தினையும் ஒப்பிட்டுக் காட்டி ஒப்புரவின் மேம்பாட்டினை மூன்றாம் குறட்பா விளக்குகின்றது. ஆக முதன் மூன்று குறட்பாக்களும் ஒப்புரவினது பெருஞ்சிறப்பினை விளக்குகின்றன. நான்காம் குறட்பாவில், மற்றையான் ‘செத்தாருள் வைக்கப்படும்” என்று கூறியது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதாகும்.

‘ஊருணி’ - ‘பயன் மரம்’ - ‘மருந்து மரம்’ - ஆகிய வற்றை உவமையாகக் கூறி ஒப்புரவு அறிதலின் உயர்வான சிறப்பினை முறையே, ஐந்து ஆறு ஏழு குறட்பாக்கள் தெளிவு படுத்துகின்றன. இந்த மூன்றும், கடமையறிந்த ஒப்புரவறி பவனுடைய செல்வம் எவ்வாறு பிறருக்குப் பயன்படும். என்பதைக் கூறுகின்றன. செல்வம் சுருங்கிய போதும் ஒப்புரவு அறிபவர்கள் தளரமாட்டார்கள் என்பதனை எட்டாம் பாடலும், வறுமையாலும் ஒப்புரவு நீக்கற்பாலது அன்று என்பதனை ஒன்பதாம் பாடலும் கூறுகின்றன. பத்தாம் பாடல், ஒப்புரவினால் கெடுதிவந்ததாகச் சொன்னாலும், அது கேடு ஆகாது என்று கூறுகின்றது. இந்த அதிகாரத்தில் மிக அருமையான உவமைகள் காணப்படுகின்றன.

மாரி (மேகம்), ஊருணி, பயன் மரம், மருந்து மரம் முதலியனவற்றைக் காட்டிய சிறப்பு பன்முறையும் சிந்திக்கத்தக்கதாகும். உயிர் வாழ்வான், பேரறிவாளன், நயன் உடையான், பெருந்தகையாளன், கடன் அறி காட்சியவர், என்பன ஒப்புரவு செய்யும் மேன்மையாளனின்

அரிய பெருமையினைக் குறித்து நின்றன. "என் ஆற்றுங் கொல்லோ'' - "தக்கார்க்கு வேளாண்மை'' 'பெறல் அரிதே' "மற்றையான்'' - நீர் நிறைந்தற்றே - பழுத்தற்றால் - தப்பா மருந்தற்றால் - ஒப்புரவிற்கு ஒல்கார் நல்கூர்ந்தான் ஆதல் - விற்றுக் கோள் தக்கது - என்பவை யெல்லாம் நினைவில் நிறுத்தி கருத்தறிய உதவுகின்றனவாகும்.

மாரி, பொருள், தாள், அறிவான், மருந்து, நல்கூர்ந்தான் என்பன பிற அதிகாரங்களைக் குறித்து நின்று விளக்கம் செய்வனவாகும். தேவருலகத்திலும் ஒப்புரவுபோல நல்லன வற்றைக் காணுதல் அரிது என்று மூன்றாம் குறட்பா சுட்டிக் காட்டுகிறது. ஒப்புரவு அறியாதவர்கள் உலகில் வாழ்பவர் களாகவே கருதமாட்டார்கள் என்று சுட்டிக் காட்டிற்று, நான்காம் குறட்பா. தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருள் இல்லையென்றாலும், புகழ் பயத்தல் நோக்கி அதுவும் செய்யப்படும் என்று பத்தாம் குறட்பா உயர்த்திக் கூறிற்று. 'உளவரை தூக்காத ஒப்புரவாண்மை' என்பது போன்ற குறட்பாக்கள் சிந்தனைக்குரியன.

இந்த அதிகாரம், 'அறிதல்' என்று முடிவதுபோல, செய்ந் நன்றியறிதல், வலியறிதல், காலம் அறிதல், இடனறிதல், குறிப்பறிதல் (இரண்டு அதிகாரங்கள்) அவையறிதல் முதலிய அதிகாரங்களும் முடிகின்றன.

## 23. ஈகை

வறியவர்களாக வந்துகேட்போர்க்குக் கொடுத்தலாகும். வறுமையாளர்க்கு அல்லாமல் மற்றவர்களுக்குக் கொடுப்பது ஈகையாகாது. 'உடைமை' 'அச்சம்' 'அறிதல்' போன்ற அடைமொழிகள் இல்லாமல் சொல்லப்பட்டுள்ள அதிகாரங் களில் இதுவும் ஒன்றாகும். இல்லறத்தார்களே ஈகை செய்தற்கு உரியவர்களாவர்.

ஈகை என்பதன் விளக்கத்தினை முதற்குறட்பா தெளிவு படுத்துகிறது. அதாவது ஈகையின் இலக்கணம் கூறப்பட்டதாகும். மேல் உலகத்தினைக் காட்டி ஈகையின் பெருஞ் சிறப்பினை இரண்டாவது குறட்பா குறிக்கின்றது. ஈகை செய்யவேண்டிய முறையினை மூன்றாம் குறட்பா விளக்குகின்றது. ஈதலின் இனிமையினை நான்காம் குறட்பா கூறும். தவசிகளை எடுத்துக்காட்டி ஈதலின் பெருமை விளக்கப் பட்டுள்ள தன்மை, ஐந்தாம் குறட்பாவில் காணப்படுகிறது.

பொருள் வைக்கும் இடம், தீப்பிணி தீண்டாததற்கு வழி ஆகியவற்றை முறையே ஆறு, ஏழு குறட்பாக்கள் சுட்டிக் காட்டுகின்றன. எனவே இரண்டு முதல் ஏழு குறட்பாக்கள் ஈதலின் சிறப்பினை மிகவும் தெளிவாகக் கூறுகின்றன. எட்டு, ஒன்பது, பத்து, ஆகிய மூன்று பாடல்களும் ஈயாமையின் குற்றத்தினைக் குறிப்பிடுகின்றன.

'மேல் உலகம் இல் எனினும்' - குலம் உடையான் இன்னாது இரக்கப்படுதல் - மாற்றுவார் ஆற்றிலின் பின் - பொருள் வைப்புழி - தீண்டல் அரிது - ஈத்துவக்கும் இன்பம் - என்று கூறியவைகள் ஈகையினால் பெறுகின்ற நற்பயனையும் அதன் சிறப்பினையும் நன்மையினையும் கூறுகின்றன.

வறியார், குலன் உடையான், இரந்தவர், ஆற்றுவார், பொருள், அறியார், என்பன குறித்துணர்த்தும் அதிகாரங் களைக் கண்டு தெளிதல் பயனுடையதாகும். வந்தவர்களுக் கெல்லாம் கொடுப்பது ஈகையாகாது என்பதனைத் தெளிவு படுத்துவது முதற்குறட்பாவாகும். வறியவர்களுக்கே கொடுத்தல் வேண்டும். ஈகை என்பதற்கு, உலகவழக்கில் கூறப்படும் 'தருமம்' என்ற சொல்லினைக் கூறலாம். ஆனால் திருக்குறளில் அச்சொல் இல்லை. 'அறம்' என்பது வேறு.

நன்மை, தீமை இரண்டினையும் கூறிய இரண்டாவது குறட்பா, இவ்வுலக வாழ்க்கையின் கடமையினையே அறிவுறுத்தி நின்றது. 'பசி ஆற்றல்' எத்தகைய மேன்மை

யுடையது என்று கூறும் ஐந்தாம் குறட்பா மிகுதியும் சிந்திக்கத்தக்கதாகும். 'வைப்புழி' என்ற சொல் நயம்பட அமைந்திருப்பது ஆறாம் குறட்பாவில் காணப்படுகிறது.

'பசி ஆற்றல்' - பசி என்னும் தீப்பிணி - என்பன ஈகை செய்தல் வேண்டும் என்பதனை மிகுதியும் வற்புறுத்துவன வாகும். நிறைய நிரப்பிக்கொண்டு தாமே உண்ணவேண்டும் என்று எண்ணுகின்ற இழிமனம் படைத்தோரை ஒன்பதாம் குறட்பா இடித்துக் காட்டுகின்றது. சாதல் துன்பம்கூட ஈதல் செய்ய முடியாதபோது உண்டாகும் துன்பத்தினைவிட இனிமையானதாகும் என்று குறிப்பிடுகின்ற பத்தாம் குறட்பா, பிறர்க்குப் பயன்படாதபோது வாழ்தலே வேண்டாம் என்னும் உண்மையினைக் கூறுகின்றது. பகுத் துண்ணும் ஈகையாளனைத் தீப்பிணி தீண்டவே தீண்டாது என்ற அறிவுண்மை ஏழாம் குறட்பாவில் கூறப்பட்டுள்ளது. இத்துடன் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பன போன்ற குறட்பாக்கள் கருதற்பாலனவாகும். 'ஆற்றின் அளவறிந்து ஈக' என்ற குறட்பா சிந்தனைக்குரியது.

## 24. புகழ்

இவ்வுலகில் செய்யவேண்டிய கடமையறிந்து செய்வன வற்றைச் செய்து இம்மைப் பயன் பெற்று உலகின்கண் மறையாமல் நிற்கும் புகழினைக் கூறுவதாகும். புகழுக்கு மிகுதியும் அடிப்படைக் காரணமாகவுள்ளது ஈகை என்பது குறிப்பிடத்தக்கது. உயிர்க்கு ஊதியம் என்பது இசைபட வாழ்தலேயாகும் என்பதனை முதற்குறட்பா எடுத்துக் காட்டுகிறது. புகழுக்குக் காரணமாக அமைந்துள்ளதென்பது ஈதலேயாகும் என்பதனை இரண்டாம் குறட்பா விளக்கு கிறது. உலகத்தில் அழியாது நிற்பது எது என்பதனை மூன்றாம் குறட்பா கூறுகிறது. ஆக முதல் மூன்று குறட்பாக் களும் புகழது சிறப்பினைக் கூறியனவாகும்.

தேவருலகம் என்று கூறப்படுவது போற்றிப் பாராட்டு வதென்பது புகழுள்ளவர்களையேயாகும் என்று நான்காம் குறட்பா கூறி இவ்வுலகப் புகழே மேன்மையானதென்று உணர்த்திற்று. அழியக் கூடிய உடம்பை வைத்துக் கொண்டு அழியாத புகழுடம்பினைச் செய்பவர்களே 'வித்தகர்கள்' என்ற பேருண்மையினை ஐந்தாம் குறட்பா தெளிவுபடுத்து கிறது. நான்கு, ஐந்து குறட்பாக்கள் புகழ் உடையார் எய்தும் மேன்மையினை உணர்த்தின.

மக்களாய்ப்பிறந்து வாழ்பவர்கள் புகழில்லாமல் உலகில் வாழ்தலும் பிறர் காண இருத்தலும் தேவையில்லை என்பதனை ஆறாம் குறட்பா வலியுறுத்தும். 'தோன்றுதல்' என்பதற்கு பலர் காண தோன்றுதல் என்று கொள்ளுவதும் சிறப்புடையதேயாகும். ஆறுமுதல் ஒன்பதாம் பாடல் வரை புகழில்லாதவர்களது தாழ்வு கூறப்பட்டது.

வாழ்வார் என்பவர்களையும் வாழாதார் என்பவர் களையும் பிரித்துக் காட்டிப் பத்தாம் குறட்பா விளக்கம் செய்கின்றது. 'வசை ஒழிய' 'இசை ஒழிய' என்பன சிந்தனைக்குரியனவாகும். 'அதுவே போன்று 'வாழ்வார்' 'வாழாதார்' என்பவைகளுமாகும். 'இசை' என்பது புகழி னைக் குறிக்கும். முதல் இரண்டு பாக்களிலும் 'ஈதல்' என்பதன் கருத்து குறிக்கப்பட்டு அதுவே புகழுக்கு இன்றி யமையாக் காரணம் எனப்பட்டது. புலவர் என்று கூறப் பட்டதால், புத்தேள் உலகம் என்பதும் யாரை விரும்பும் யாரை விரும்பாது என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது. அறிஞர்களைவிட ஈகையாளர்களே போற்றப்படுவர் என்று ஒப்பிட்டுக் காட்டிய உண்மை சிந்தனைக்குரியது.

'இசைபட வாழ்தல்' —ஈவார்மேல் நிற்கும் புகழ்— பொன்றாது நிற்பதொன்று இல்—புலவரைப் போற்றாது வித்தகர்க்கல்லால் அரிது-புகழொடு தோன்றுக வாழ்வாரே வாழ்வார்-என்று குறித்தவையெல்லாம் புகழேந்தி வாழ்ப வர்களின் மேம்பாட்டினையும், புகழின் சிறப்பினையும்

எடுத்துக் காட்டின. அடைமொழி கொடுக்கப்படாமல் கூறப்பட்டுள்ள அதிகாரங்களில், இதுவும் ஒன்றாகும்.

இந்த அதிகாரம் இல்லற இயலின் கடைசி அதிகாரமாகும். 'எச்சம்' பெறுதலின் சிறப்பினை எட்டாம் குறட்பா கூறும் 'செப்பம் உடையவன் ஆக்கம்' - தக்கார் தகவிலர் என்பது' - வினைபகை என்றிரண்டின் - 'எச்சம் என்று என்' - ஊண் உடை - அச்சமே கீழ்களது . என்று தொடங்கப் பெறும் குறட்பாக்களில் வரும் 'எச்சம்' என்பது சிந்தனைக் குரியதேயாகும்.

ஒன்பதாம் குறட்பா, புகழில்லாதவர்களைத் தாங்கிய நிலமும் பயனற்றதாகி விடும் என்று கூறி 'வளப்பம்குன்றும்" என்று குறிப்பிட்டது மிகுதியும் கருதற்குரியது. ஊதியம், புலவர், நத்தம், சாக்காடு, வித்தகர், யாக்கை முதலிய சொற்கள் அரிய உண்மையினை நினைவில் நிறுத்த உதவுவனவாகும்.

## துறவறவியல்

### 25. அருள் உடைமை

தொடர்பான பற்றுதல் இல்லாமல் எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணையாகும். இல்லறத்திற்கு அன்புடைமை போல துறவறத்திற்கு சிறந்ததாதலால் முதற்கண் வைத்துக் கூறப்பட்டதாகும்.

அருட் செல்வத்தின் சிறப்பினையும் அதனை நோக்குங்கால் பொருட்செல்வத்தின் இயல்பினையும் முதலாவது பாடல் கூறுகின்றது. பொருட் செல்வம் எல்லோரிடத்திலும், நல்லவர் தியவர், பண்பாளர் பண்பில்லார் என்ற பாகுபாடின்றி இருத்தல் கூடும். அருளுடைமை அவ்வாறு எல்லோரிடத்திலும் காணப்படுவதன்று. இரண்டாவது குறட்பாவில்அரிய பெரிய பல உண்மைகள் பொதிந்துள்ளன. நல் ஆற்றான் என்பது அருளாளர்கள் அறியும் பல மெய்

யுணர்வு உண்மைகளைக் கூறுகின்றன' என்று இரண்டாம் குறட்பா மெய்ப்பிக்கும். அருளல்லாமல் வேறு துணை துற வற நெறிக்கு இல்லையென்பதாகும். முதலிரண்டு பாக்களும் அருளினது சிறப்பினைக் கூறும்.

'அருளுடைமை' அதிகாரத்தில் காணப்படும் குறட்பாக் கள் ஒவ்வொன்றும் ஆழ்ந்த பேரின்ப உண்மைகளைக் கூறு வதால் மெய்ந்நிலையுணர்த்தும் நூல்கள்பலவற்றிலும் கூறப் படும் உண்மைகளை அறிந்து புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

மூன்றாம் குறட்பா துன்ப உலகத்தில் அருளாளர்கள் புகமாட்டார்கள் என்று கூறுகிறது. பேரின்பமாகிய வீட்டுல கம்அவர்களுக்கு உரியதாகும்.'இன்னா உலகம்' என்பதனை 'நரகம்' என்பது உலக வழக்கு. துன்பமே அருளாளர்களுக்கு இல்லை என்பதனை நான்காம் - குறட்பா விளக்கு கின்றது. எனவே, மூன்று, நான்கு, ஐந்து ஆகிய பாடல்கள் அருளாளர்களுக்கு இருமையினும் துன்பம் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஆறுமுதல் ஒன்பதாம் பாடல்வரை அருளாட்சி அற்றவர்களுக்கு வரும் குற்றம் கூறப்பட்டது. பத்தாம் பாடல் அருள் பிறப்பதற்கான வழியினைக் கூறு கின்றது.

அருள் ஆள்வார்களுக்கு துன்பம் உண்டாவதை எக் காலத்திலும் எந்த இடத்திலும் யாரும் கண்டறிய முடியாது என்பதை உணர்த்தவே, ஐந்தாம் பாடல் 'வளிவழங்கு மல்லல் மாஞாலம் கரி' என்று குறிப்பிட்டது. உலக மக்கள் கண்டறிந்ததில்லை என்பதாகும். அருள் நெஞ்சத்தில் பிறந் திருப்பதென்பது மூன்றாம் பாடலால் விளங்குகிறது. உறுதிப் பொருள்களான அறம் முதலியனவற்றையே ஆறாம் குறள் 'பொருள்' என்று குறிப்பிட்டது.

வீடு என்பது முற்றத் துறந்த அருளாளர்கள் அடையும் பேரின்பத்தினைக் குறிப்பதாகும். அது ஒரு நிலை என்று

கூறப்படும். அதனை 'அவ்வுலகம்' என்று ஏழாம் குறட்பா கூறுகின்றது. பொருள் -செல்வம் - கொண்டு ஆசைவைத்து வாழ்கின்றதன்மையுடையதை 'இவ்வுலகம்' என்று அதேகுறட்பா கூறும். அருள் வழியில் செல்லுபவர்கள் உறுதியாக இருக்க வேண்டியதை எட்டாம் குறட்பா வலியுறுத்தும்.

மெய்நூல் களாகக் கூறப்படும் பற்பல நூல்களின் விளக்கங்களைக்கண்டுவிரிவாக அறிந்துணர்தல்வேண்டும். ஞானம் இல்லாதவன் மெய்ப்பொருளினை உணர முடியாது. அவன் மெய்ப் பொருளினை உணர்ந்தான் என்று கூறுவது தவறாகும்; அறியாமையாகும். ஆதலால்தான், ஒன்பதாம் குறட்பா 'கண்டாற்றால்' என்று கூறுகிறது. அருள் இல்லாதவன் அறம் செய்தல் இயலாது.

அறத்திற்கு அடிப்படை அருள். மனத்தில் அன்பு, அருள், இரக்கம், கருணை என்றெல்லாம் பற்பலவாக விளக்கிக் கூறப்படுவது இருத்தல் வேண்டும். உள்ளத்தில் அருள் இல்லாதவன் 'அறம்' செய்வதாகத் தோன்றினாலும் அது பயனற்றது. "மனத்துக் கண் மாசிலன்" என்ற குறட்பா சிந்தனைக்குரியது. 'புலால் மறுத்தல்" என்பது சிறந்த அறம். அது ஒரு நோன்பு. அதனையும் மனதில் கருணை, அருள் நிரம்பியவனே செய்தல் வேண்டும். அவ்வருள் இல்லாதவன் அந்த அறத்தினைச் செய்கின்றான் என்பது பயனற்றது என்பதை எடுத்துக் காட்டாகக் கொள்ளுதல் வேண்டும்.

அருள் நெறியில் நிற்கும் பேரின்ப பெரியோர்களின் பண்பு பத்தாம் குறட்பாவில் கூறப்படுகிறது. துறவற நிலை அத்தகைய மேன்மையுடையதாகும். "வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக" என்ற குறட்பாவினை ஒப்பிட்டால் வேறுபாடு தெளிவுறத் தோன்றும். பத்தாம் குறட்பாவில், "தன்னை நினைக்க" என்பது சிந்தனைக் குரியது.

## 26. புலால் மறுத்தல்

ஊன் உண்ணுவதை ஒழித்தலாகும். கொலைப் பாவத்திற்குக் காரணம் ஆதல் அதுவேயாகும். அருளுடையார்க்கு இது பொருந்துவதன்று. இதனை விலக்குதல் வேண்டும். துறவற நெறியில் நின்றார் கொள்ள வேண்டிய சிறந்த நோன்புகளில் ஒன்றாகும். 'அருளுடைமையினைக் கூறி இதனைக் கூறுதல் அறிந்துணரத் தக்கது. 'மறுத்தல்' என்று முடிவது இவ்வொரு அதிகாரமேயாகும்.

தனது ஊனைப் பெருக்க பிறிதொன்றின் ஊனைத் தின்றல் அருள் இருப்பதற்குச் சிறிதும் பொருந்தாதென்பதனை முதற் குறட்பா கூறும். 'பொருளாட்சி' 'அருளாட்சி' என்பதனைப் பிரித்துக் காட்டிவிளக்கம் தருவது இரண்டாம் குறட்பாவாகும். ஊன் தின்றாராயினும், உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருள் ஆளுவது குற்றமில்லை என்போரை மறுத்து, குற்றம் உண்டு என்பதனை முதலிரண்டு குறட்பாக்களும் கூறுகின்றன. ஊன் தின்பார்க்கு அருள்வாராது-இருக்காது-என்பது குறிப்பாகக் கொள்ளுதல் வேண்டும் என்ற கருத்து உணர்த்தப்பட்டது.

மூன்றாம் குறட்பா, ஊன் தின்பவர்களையும் படை கொண்டவர்கலளயும் ஒப்பிட்டுக் காட்டி உண்மையினை விளக்குகின்றது.

நான்காம், ஐந்தாம், பாடல்கள், கொலைப்பாவம் கொன்றார்மேல் நிற்பதால் ஊன் உண்பார்க்கு பாவம் இல்லை என்பாரை மறுத்து, அவர்களுக்கும் பாவம் உண்டென்பதனை உணர்த்துகின்றன. கொலை செய்யப்படுவதன் காரணத்தினை ஆறாம் குறட்பா விளக்குகின்றது. ஏழாம் பாடல் புலால் உண்பதன் இழிதன்மையினைக் கூறுகிறது. பிணத்தினை உண்பதாகும். இதனை

அஞ்ஞானம் நீங்கியவர்கள் செய்யார் - என்று எட்டாம் குறட்பா குறிக்கின்றது.

வேள்வி செய்பவர்களைக் கண்டித்து, கொலை செய்து உண்ணாதிருக்க வேண்டும் என்பதனை ஒன்பதாம் குறட்பா வலியுறுத்தும். 'ஆயிரம் வேட்டல்' என்று குறிப்பிட்டதால் இத்தகைய வேள்வி மிகவும் கொடுமையானது என்பது பெறப்பட்டது. 'அவி' என்பது யாகத்தில் தேவர்களுக்கு இடப்படும் உணவு. எல்லா உயிர்களும் தொழும் என்று பத்தாம் குறட்பா கூறுகின்றது. கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என்பதால் கொலைப்பாவம் எத்தகைய கொடுமை என்பது உணர்த்தப்பட்டது.

'விருந்தோம்பல்' என்ற அதிகாரத்தில் கூறப்படும் 'வேள்வி' என்பதனைச் சிந்தித்தறிதல் வேண்டும். 'பொருள் செயல் வகை' 'கொல்லாமை' முதலிய அதிகாரங்களும் 'படை' பற்றிக் கூறும் அதிகாரங்களும் நினைவு கொள்ளுதற்குரியன.

எங்ஙனம் ஆளும் அருள்- அருளாட்சி ஆங்கில்லை- நன்று ஊக்காது - அவ்வூன்தினல் - உள்ளது உயிர்நிலை - புண் அது உணர்வார் - உண்ணாமை நன்று - கைகூப்பி - என்று குறிக்கப்பட்டவைகளை நினைவில் நிறுத்தி இவ்வதிகாரத்தின் நுண் பொருளினை அறிந்து கொள்க.

## 27. தவம்

மனம் பொறி வழிகளில் செல்லாதிருக்கும் பொருட்டு நோன்புகளால், உண்டி சுருங்குதல், வெயில், மழை, பனி இவைகளைப் பொருட்படுத்தாதிருத்தல் முதலியன செய்தல். துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் ஆகும். பிற உயிர்களைக் காத்தலாகும். அருள் மிகுந்து செய்தலாகும்.

தவத்தினது இலக்கணம் முதற் குறட்பாவில் தெளிவாகக் கூறப்பட்டது. தவத்திற்கு உருவம் இன்னதென்று விளக்கப்பட்டது. இரண்டுமுதல் ஐந்து குறட்பாக்கள் தவத்தின் மேலான சிறப்பினைக் கூறுகின்றன. ஆறு முதல் ஒன்பது வரை உள்ள குறட்பாக்கள் தவம் செய்வாரது உயர்ச்சியினைக் கூறுகின்றன. தவத்தார்களாகப் பலர் இல்லாதிருப்பதற்குக் காரணம் கடுமையான நோன்புகளை நோற்பவர்கள் சிலரே இருப்பதாகும் என்பது குறித்துணர்த்தப்பட்டது.

தவம் செய்வார்க்கு மிகுதியும் துன்பம் வரச்செய்யும் என்றும் அதனைப் பொறுத்தல் வேண்டும் என்பதனையும் முதற்குறட்பா விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது. எல்லோருமே தவம் செய்துவிட முடியாதென்றும் அதற்கென்றே பிறவி உண்டு என்பதனையும் இரண்டாம் குறட்பா கூறுகின்றது. இரண்டாம் குறட்பாவும் பத்தாம் குறட்பாவும் ஒரு சேர எண்ணிப் பார்ப்பதற்குரியனவாகும். இல்லறத்தார் துறவிகட்கு ஆதரவாக இருத்தல் வேண்டுமென்பது மூன்றாம் குறட்பாவின் கருத்தாகும். இல்லறத்தார்க்குத் தானமும், தவசிகட்குத் தவமும் ஏற்றதென்பதாகும்.

தவத்தின் ஆற்றல் நான்காம் குறட்பாவில் கூறப்பட்டது. பகைவரை அழித்தல் என்பது தவத்தார்க்கு இயல்பான பண்பல்ல என்பதால், இக்குறட்பாவில் 'எண்ணின்' என்பது கூறப்பட்டது. ஐந்தாம் குறட்பாவும் தவத்தின் சிறப்பினை உணர்த்திற்று.

தவம் என்பது பிறப்பு, பிணி முதலியவற்றால் துன்பம் எய்திநின்ற உயிர் ஞானம் பெற்று வீடு பேறடைவதால் 'தம் கருமம் செய்வார்' என்று ஆறாவது குறட்பா குறிப்பிடுகிறது. இதன் விளக்கங்களை மெய்நூல்கள் பலவற்றுள்ளும் கண்டு தெளிதல் வேண்டும்.

அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் பிறக்கும் என்பதனை ஏழாம் குறட்பா விளக்குகின்றது. இத்தகைய உண்மைகள் அனுபவத்தால் தெரிந்து கொள்ளப்பட வேண்டியவைகளாகும். உடம்பும் பொன்னிறமாகும் என்பதும் கருத்தாகும். உலகோர் வணங்கிப் போற்றுவதும் தவத்தாரையேயாகும் என்பதனை எட்டாம் பாடல் குறிக்கின்றது. நோன்பு நோற்பதே தவம் என்று விளக்க வேண்டி, ஒன்பதாம் குறட்பா 'நோற்றலின்' என்று கூறுகின்றது.

கூற்றுவனைக் கடத்தல் முடியாது என்பது தோன்ற "குதித்தலும்' என்று ஒன்பதாவது குறட்பா குறிக்கின்றது. கை கூடும் சிறப்பான ஆற்றல்கள் பலவுண்டு என்பது குறிப்பாகும். தவத்திற்கு உரு—தவம் உடையார்க்கு ஆகும் - மறந்தார் கொல் - தவத்தான் வரும் - எய்தலான் - தம் கருமம் செய்வார் - ஒளிவிடும் - எல்லாம் தொழும் - கை கூடும் - நோற்பார் சிலர் - என்பன, தவத்தின் சிறப்பினையும், தவத்தின் பயனையும், தவம் செய்வார்களை உலகமே வணங்கும் என்பதனையும் பிற உண்மைகளையும் உணர்த்துவனவாகும்.

## 28. கூடா ஒழுக்கம்

தாம் விட்ட காம இன்பத்தினை மனவலி இன்மையால் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே எண்ணி தவத்திற்குப் பொருத்தமில்லாத தீய ஒழுக்கத்தில் நடந்து கொள்ளுதலாகும். இது விலக்குதற்கு உரியதாகும். இல்லறத்தாருக்குப் பிறனில் விழையாமை, கூறியதை ஒப்பிட்டுப் பார்த்தல் பொருந்துவதாகும். 'கூடா ஒழுக்கம்' என்பது போல, 'கூடாநட்பு' என்றவொரு அதிகாரமும் இருக்கின்றது. 'ஒழுக்க முடைமை' என்ற அதிகாரம் ஒழுக்கத்தின் சிறப்பினைக் கூறுவது போல

ஒழுக்கமின்மையினை, இந்த அதிகாரம் எடுத்துரைக்கின்றது.

வஞ்சனையால் தீய ஒழுக்கம் செய்பவனைப் பார்த்து அவனுள் இருக்கும் ஐந்து பூதங்களும் சிரிக்கும் என்று முதற் குறட்பா கூறுகின்றது. நிலம், நீர், தீ, காற்று, விண் ஐந்தும் உலக இயற்கையின் பாகுபாடுகளாகும். இந்த ஐந்தும் உடம்பினுள்ளும் இருக்கின்றன. ஆதலால் அவைகள் இவனைப் பார்த்து சிரிக்கும் என்றார். 'மறைவாகச் செய்வதென்று நினைக்காதே' என்று இடித்துரைத்து உண்மை உணர்த்தப்பட்டது.

இரண்டாம் குறட்பாவும் தன்னுடைய நெஞ்சம் அறிகின்ற குற்றம் செய்வதினைக் கண்டித்துக் கூறுகின்றது. உயர்ந்த தவவேடத்தினால் பயனில்லை என்பதனை இக் குறட்பா எடுத்துக் காட்டுகிறது. தோற்றத்தினால் மக்கள் ஏமாற்றப்படுவர் என்பதனைக் காட்டவே, 'தோற்றம்' என்று கூறப்பட்டது. மூன்றாம் குறட்பா வெளிப்படையான நல்ல உவமையால் கூடாவொழுக்கத்தினரைக் காட்டுகிறது. புலியின் தோல் போர்த்து அயலான் தோட்டத்தில் மேய்கின்ற பசுவினைத் தவவேடம் போட்டு வஞ்சிப்பவர்களுக்கு உதாரணமாக இக்குறட்பா விளக்குகிறது.

நான்காம் குறட்பா, தவவேடம் தாங்கி மகளிரை ஏமாற்றும் வஞ்சகர்களைப் புதரில் மறைந்து பறவைகளைக் கொல்லும் வேடனுக்கு உவமையாகக் காட்டுகிறது. கொடுமையிலும் கொடுமை என்று இச்செயல் உணர்த்துகின்றது. வேடன் புதரில் மறைந்திருக்கின்றான். கூடா ஒழுக்கத்தான் தவவேடத்தில் மறைந்திருக்கின்றான். புதர் வேடனை மறைக்கின்றது. வேடம் வஞ்சகனை-அவன் தீய உள்ளத்தினை மறைக்கின்றது. மனத்தால் ஆசைகளைத் துறந்தவர்களுக்கு வேடமே தேவையில்லை என்பது குறிப்பாகும். இத்தகைய வஞ்சகச் செயல் அவர்கட்குப் பற்பல

கொடிய துன்பங்களைத் தந்தே தீரும் என்பதனை ஐந்தாம் குறட்பா கூறுகின்றது. ஆக முதல் ஐந்து பாடல்களும் கூடா வொழுக்கத்தின் குற்றங்களைக் கூறுவதாக அமைந்துள்ளன.

ஆறு, ஏழு, எட்டு ஆகிய மூன்று பாக்களும் கூடா வொழுக்கத்தினரது குற்றங்களையும் அவர்களை அறிந்து நீக்க வேண்டும் என்பதனையும் கூறுகின்றன. ஒன்பதாம் குறட்பா அவர்களை அறிந்து கொள்ளும் வழியினைக் குறிக்கின்றது. பத்தாம் குறட்பா, கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டாம் என்று அவரது சிறப்பினை விளக்குகின்றது.

வஞ்ச மனத்தான் - படிற்று ஒழுக்கம் - நெஞ்சம்தான் அறிகுற்றம் - வலிஇல் நிலைமையான் - மேய்ந்தற்று - அல்லவை செய்தல் : புள்சிமிழ்த்தற்று - ஏதம்பலவும் தரும் - வாழ்வார் - வன்கணார் - மனத்ததுமாசு ஆக - மறைந்தொழுகும் மாந்தர் - என்று கூறப்பட்டுள்ளவைகள், கூடாவொழுக்கத்தின் தீமைகளையும், தீயவொழுக்கத்தினரின் கொடுமைகளையும் இழி தன்மைகளையும் நினைவு படுத்துவனவாகும்.

பசுவும் புலியும் - வேட்டுவனும் பறவையும் - குன்றிமணியின் செம்மை கருமை நிறங்கள் - யாழும் அம்பும் - என்று கூறப்பட்ட உவமைகள் மிகமிகத் தெளிவாக உண்மையினை உணர்த்து வனவாகும். மனத்தில் நிறைய வஞ்சக அழுக்கினை வைத்துக் கொண்டு நீரில் மூழ்கிக் காட்டி வெளிவேடத்தால் ஏமாற்றுபவர்களை எட்டாம் குறட்பா தெளிவு படுத்துகின்றது.

பத்தாம் குறட்பாவின் விளக்கம் நன்கு உண்மையினை உணர்த்திவிடுகிறது. தவம் செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலும், சடையாக்கலும் வேண்டியதில்லை. ஒழுக்கம் தவஒழுக்கம் மேற்கொண்டிருத்தலே போதுமானதாகும்.

தவத்திற்கென்று இல்லாமல், மழித்தல் நீட்டல் செய்துகொள்ள விரும்புவதில் தடையொன்றுமில்லை, வெளிவேடதாரிகளை நம்புதல் கூடாது என்பதே அடிப்படைக் கருத்தாகும். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்று தொடங்கப் பெறும் குறட்பாவினை இந்த அதிகாரத்தின் எட்டாம் குறட்பாவுடன் ஒப்பிட்டுக் காண்க.

## 29. கள்ளாமை

பிறர்க்கு உடைமையாக இருக்கும் யாதொரு பொருளையும் அவரை ஏமாற்றித்தான் எடுத்துக்கொள்ள நினையாதிருத்தலாகும். கருதுதலும் செய்தலோடு ஒக்கும் ஆதலால், 'கள்ளாமை' என்று கூறினார். இல்வாழ்வார்க்குத் தம்முடன் உறவுகொண்டாரிடமோ அல்லது தொடர்புடையவரிடமோ விளையாட்டு வகையாலும் பொருளை வஞ்சித்துக் கொள்ளுதல் கூடும். அங்ஙனம் கொள்ளினும் அமையும். துறந்தார்க்கு அதனைக் கருதிய வழியும் குற்றமாம். ஒரு மனமேகொண்டு நிற்பார்க்கு இச்செயல் பெருங்குற்றமாகும். காலத்தின் சூழ்நிலையால் இல்லறத்தான் செய்தலும் கூடும். ஆசையுண்டான வழி நடப்பதாகும். இவ்வாறு, வாய்மை முதல் கொல்லாமை ஆகிய நான்கு அதிகாரங்கட்கும் ஒக்கும். இது பொருள் பற்றி நிகழும் குற்றம் எனப்படும்.

முதல் இரண்டு பாக்களும் களவாவது இன்னதென்பதை விளக்கி அது கடியப்படவேண்டியதென்பதனைக்கூறுகின்றன. மூன்று, நான்கு பாடல்கள், கடியப்படவேண்டிய தன் காரணத்தை விளக்கம் செய்கின்றன ஐந்து முதல் ஏழுவரை உள்ள பாடல்கள், களவும் துறவும், இருளும் ஒளியும் போலத் தம்முள் மாறுபட்டவைகள். ஆனபடியால் ஒருங்கு நிற்க மாட்டாதவைகளாகும் என்பதனைக் குறித்துக் காட்டின. களவினைக் கொண்டார் மனத்தில் எப்போதும் வஞ்சனை இருக்கும் என்பதனை எட்டாம் பாடல் கூறுகின்றது.

கள்வர் கெடுவது உறுதி என்பதனை ஒன்பதாம் பாடலும் கள்வாரும் கள்ளாரும் அடையும் பயன்களைப் பத்தாம் பாடலும் கூறுகின்றன. முதற்குறளில் 'எள்ளாமை வேண்டுவான்' என்பதற்குப் பேரின்ப வீட்டினை இகழ்வான் என்று கொண்டு அதற்கு மாறான தீய எண்ணங்களை பேரின்ப நிலைக்கு - பொருந்தாத நினைவுகளைக் கொள்ளுபவன் என்பதாகும். துறவிகள் ஆனபடியால் 'உள்ளலும்' நினைத்தலும், தீது என்று இரண்டாம் குறட்பா கூறுகின்றது. 'ஆவது போலக் கெடும்' என்று மூன்றாம் குறட்பா குறிப்பது சிந்தனைக்குரியது. 'வீயா விழுமம் தரும்' என்று கள்வார் அடையும் பெருந் துன்பத்தினை நான்காம் குறட்பா கூறுகிறது.

அருளாளர்களுக்கு இச்செயல் ஒவ்வாது என்பது ஐந்தாம் பாடலின் கருத்தாகும். 'அளவின் கண் நின்று ஒழுகுபவர்' துறவிகள் என்று ஆறாம் பாடல் கூறும். களவென்பதனைக் 'காரறிவு' என்று ஏழாம் பாடல் சுட்டிக் காட்டுகிறது. கள்வார்க்கு, 'கரவு' இயல்பானதென்று எட்டாம் பாடல் குறிக்கின்றது, அத்தீய நினைவு நினைத்தபோதே கெடுக்கும் என்று ஒன்பதாம் பாடல் சுட்டுகிறது. கள்ளார்க்குப் புத்தேள் உலகும் கிடைக்கும் என்று பத்தாம் பாடல் விளக்கம் தருகிறது.

பொருள், காதல், அருள், அன்புடையர், பொச்சாப்பு, பார்ப்பார், ஒழுகல், அறிவு, ஆண்மை, அறம், முதலியன பிற அதிகாரங்களை நினைவு படுத்த உதவுவதாகக் காணப்படுகின்றன.

## 30. வாய்மை

உண்மை, மெய்மையென்பதன் தன்மையாகும். முதலிரண்டு பாக்களும் வாய்மையின் இலக்கணம் இன்ன தென்றுகூறுகின்றன. இவை இரண்டும், தீமை உண்டாக்காத தாக இருந்தால் நடந்ததைக் கூறுவதும், நன்மை தருவதாக இருந்தால் நடக்காததைக் கூறுதலும் மெய்மை என்று விளக்குகின்றன. அதுவே போன்று, நன்மையினைத் தராத, நடக்காததைக் கூறலும் தீமையினைத் தரும் நடந்ததைக் கூறலும் பொய்மை என்றும் விளக்கம் தருகின்றன.

பொய் மறைக்க முடியாதது ஆனபடியால் அது கூறலாகாது என்று மூன்றாம் பாடல் கூறுகின்றது. இம்மைப் பயன் பெறுவது உறுதி என்பதனை நான்காம் பாடல் அறிவுறுத்துகின்றது. ஐந்து, ஆறு, ஏழு பாடல்கள் பிற அறங்களெல்லாம் தரும் பயனைத் தரும் ஆற்றல் உடையது வாய்மை என்று கூறுகின்றன. கடைசி மூன்று குறட்பாக் களும் வாய்மை தலைமையான தென்பதைத் தெளிவுபடுத்து கின்றன. ஆறாவது பாடலில் காணப்படும், 'எல்லா அறமும் தரும்' என்பதும், நான்காம் பாடலில் காணப்படும் ''உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்பதும் வாய்மையின் சிறப்பினை மிகவும் தெளிவுற எடுத்துக் காட்டு கின்றன.

பொய்ச் சொற்களும் வாய்மையெனப்படும் என்று இரண்டாவது குறட்பா கூறுகின்றது. அதாவது குற்றமற்ற நன்மையினைச் செய்யுமானால் பொய்மையும் வாய்மை யாகும் என்ற கருத்து குறிக்கப்பட்டது. இதனால் பொய் வாய்மையாகிவிடும் என்பது அல்ல; ''வாய்மை இடத்த'' என்று கூறியது சிந்தனைக் குரியதாகும். நன்மையினை அந்த நேரத்தில் கொடுப்பதால் வாய்மையின் தன்மையினுக்கு ஒப்பாகக் கருதப் படும் என்பதேயாகும்.

தானத்தினையும் தவத்தினையும் ஒன்று சேர செய் வாரினும் சிறப்புடையவன் என்று ஐந்தாம் பாடல் குறித்துக்

காட்டுவது இத்தகைய பெருமைதான் வாய்மைக்கு உண்டு என்றுஅளந்தறியமுடியாத எல்லைக்கு கருத்தினைக்கொண்டு செலுத்துவதாகும். மனத்தினைத் தூய்மைப்படுத்தும் செயல் வாய்மையொன்றினால்தான் முடியும் என்பதனை எட்டாம் பாடல் எடுத்துக்காட்டுகிறது. தன்னையே முன்நிறுத்தி ஆசிரியர் பத்தாம் குறட்பாவில் பேருண்மையினைப் புலப்பட வைத்தார்.

சொல்ல, அறிவது, ஒழுக்கின், தவம், தானம், புகழ், அறம், சான்றோர் என்பனவாகக் காணப்படும் சொற்கள் பிற அதிகாரங்களின் கருத்துக்களை நினைவுபடுத்துவனவாக உள்ளன. தீமை இலாத சொலல் - உள்ளத்துள் எல்லாம் உளன் - தவத்தொடு தானம் செய்வாரின் தலை எல்லா அறமும் தரும் - செய்யாமை- செய்யாமை நன்று - பொய்யா விளக்கே விளக்கு - வாய்மையின் நல்லபிற, என்று குறிக்கப் பட்டுள்ளவைகளை நினைவில் நிறுத்தி ஆழ்ந்த உண்மைகளை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வாய்மை என்பது கடுமை யான நோன்புகளில் ஒன்று ஆனபடியால் சிறப்பாகப் பற்றற்ற துறவிகளுக்குக் கூறப்பட்டது. பொதுத் தன்மையில் அனைவர்க்கும் ஏற்றதேயாகும்.

## 31. வெகுளாமை

சினம் கொள்ளாதிருத்தலாகும். கோபம் கொள்ளுவ தற்குக் காரணம் உள்ள போதும் அதனைச் செய்யாமை யினைக் கூறுவதாகும். முதற்குறட்பா வெகுளாமைக்கு இடம் எதுவென்பதனைக் கூறுகின்றது. இரண்டு, மூன்று, நான்கு ஆகிய மூன்று பாடல்களும் கோபத்தினுடைய தீங்கினைக் கூறுகின்றன. ஐந்து, ஆறு, ஏழு ஆகிய பாடல்கள் வெகுண் டார்க்கு வரும் தீங்கினை எடுத்துரைக்கின்றன. கோபம் கொள்ளாதிருப்பதால் வருகின்ற நன்மையினை எட்டாம் குறட்பா விளக்குகின்றது. கோபம் கொள்ளாதவர்கள் அடையும் நன்மையினை ஒன்பதாம் பாடல் குறிக்கின்றது.

சினத்தில் மிக்கவர்களைப் பற்றியும், சினத்தை விட்டவர் களைப் பற்றியும் ஒன்றுசேர பத்தாம் பாடல் சுட்டிக்காட்டு கிறது. முகத்தில் தோன்றும் நகையினையும், அகத்தில் தோன்றும் உவகையினையும் கொல்லுவது கோபமேயாகும் என்று நான்காம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

ஆறாம் பாடல், சினத்திற்கு, "சேர்ந்தாரைக் கொல்லி" என்று பெயரிட்டுக் காட்டுகிறது. "நிலத்தறைந்தான் கை பிழையாதற்று" என்று ஏழாம் பாடல் கூறி, கோபம் கொண்டவன் கெடுவது உறுதி என்று தெளிவு படுத்துகிறது.

சீனம் தீது - இல் அதனின் தீய பிற - தீய பிறத்தல் அதனால் வரும் - பகையும் உளவோ பிற - தன்னையே கொல்லும் - சேர்ந்தாரைக் கொல்லி - கொண்டவன் கேடு - இறந்தார் இறந்தார் அனையர், என்று காணப்படுபவை கோபத்தின் கொடுமையினையும் அதனால் வரும் தீமை யினையும் கூறுகின்றன.

சினம் என்னும் நெருப்பு அதனைக் கொண்டவனை மட்டும் அழித்து நின்றுவிடும் என்பதல்ல; அவனைச் சார்ந்து துணையாக இருப்பவரையும் கெடுக்கும் என்று ஆறாம் பாடல் குறிப்பிடுவது பெரிதும் சிந்திக்கத்தக்கதாகும். 'செத்தவரோடு ஒப்பர்' என்று பத்தாம் பாடல் சினத்தைக் கொண்டவர்களுக்கு வரும் முடிவினைக் குறிப்பால் உணர்த்திற்று.

## 32. இன்னா செய்யாமை

தனக்கு ஏதேனும் ஒருபயன் கருதியோ, கோபத்தினாலோ அல்லது சோர்வினாலோ, ஓர் உயிர்க்கு துன்பமானவற்றைச் செய்யாதிருத்தலாகும். இல்லறத்தார்க்குத் 'தீவினை அச்சம்' என்று கூறப்பட்ட அதிகாரம் சிந்திக்கத்தக்கதாகும். அருளாளர்கள் தவத்தின் வலிமையால் நினைத்ததைச்

செய்யும் ஆற்றல் பெற்றிருப்பார்களானபடியால் அவர்கள் இன்னா செய்வதை மனத்தினாலும் நினைத்தலே கூடாது என்கின்ற கருத்தினை இவ்வதிகாரம் விளக்குகின்றது. தவத்தினால் பல செல்வங்களைப் பெறுதல் கூடும். தவ வலிமையால், பிறர்க்குத் துன்பம் செய்து செல்வம் பெறுதலும் உண்டு என்பதனைக் குறிப்பாக, முதற்குறட்பா உணர்த்துகின்றது.

தமக்கொரு பயன் கருதிசெய்தல் கூடாது என்பதனை முதல் பாடல் குறித்தது. இரண்டு, மூன்று, நான்கு ஆகிய பாடல்கள் சினம் பற்றிச் செய்தல் விலக்கவேண்டும் என்பதனை விளக்கம் செய்கின்றன. ஐந்தாம் பாடல் அறிவுச் சோர்வினால் இன்னாதவற்றைச் செய்தல் கூடாது என்று குறிப்பிடுகிறது. ஆறு, ஏழு, எட்டு ஆகிய மூன்று பாடல்களும் பொது வகையான் இன்னாதவற்றைச் செய்தல் கூடாது என்று கூறுகின்றன. கடைசி இரண்டு பாடல்களும் இன்னாதனவற்றைச் செய்பவர்களுக்கு வரும் தீமையினைப் புலப்படுத்துகின்றன.

முதலிரண்டு பாடல்களும், "மாசற்றார் கோள்" என்று முடிந்து அருளாளர்களின் உயர்ந்த பண்பினைச் சுட்டிக் காட்டின. பிறர் தமக்குத் தீமையினைச் செய்தாலும் அவர் கட்கு நன்மை புரிவதே அருளாளர்களாகிய துறவிகளுக்கு ஏற்றதென்று மூன்றாம் - நான்காம் பாடல்கள் கூறும். தவ வலிமையினால் பிறருக்குத் துன்பம் செய்யும் மனத்தின் தன்மையினை அடக்குதல் வேண்டும் என்பதே இவ்வதி காரத்தின் அடிப்படைக் கருத்தாகும். தன் உயிர்க்குத் துன்பம் வாராமல் காத்தலே தவத்தார்க்குச் சிறப்பு என்று கூறி எட்டாம் பாடல் உண்மையினைப் புலப்படுத்தும்.

# 33. கொல்லாமை

எவ்வுயிரையும் கொல்லாதிருத்தலாகும். ஐயறிவு உடையன முதல் ஓர் அறிவு உடையன வரை எவ்வுயிரையும் கொல்லாத அறத்தினைக் கூறுகின்றது. துறவற இயலில், நோன்பு என்று கூறப்படும் ஒன்பது அதிகாரங்களில் இது கடைசி அதிகாரமாகும். இதற்குப் பிறகு கூறப்படும் நான்கு அதிகாரங்களும், துறவறப் பகுதியில், 'ஞானம்' என்ற தலைப்பில் அடங்கும்.

முதல் மூன்று பாடல்களும் கொல்லாமை என்ற அறத்தின் சிறப்பினைக் கூறுகின்றன. நான்காம் பாடல் தவ நெறி இன்னதென்பதனைக் குறித்துக் காட்டுகிறது. ஐந்தாம் பாடல், கொல்லாமை என்ற அறத்தினை மறவாதவனுடைய உயர்ச்சியினைப் புலப்படுத்துகிறது. ஆறாம் பாடல் அவர்க்கு வரும் நன்மையினை எடுத்துக் காட்டுகிறது. ஏழு, எட்டு பாடல்கள் கொலையினது குற்றத்தினை எடுத்துக் காட்டு கின்றன.

ஒன்பதாம் பத்தாம் பாடல்கள் கொல்வார்க்கு வரும் தீங்கினைக் குறிப்பிடுகின்றன. கொலைத் தொழில் புரிந்த வர்கள் தொழுநோய் அடைவார்களாவார்கள் என்று பத்தாம் பாடல் சுட்டிக் காட்டுகிறது.

அறவினை என்பது கொல்லாமையேயாகும் என்ற குறிப்பு முதற்பாடலில் கூறப்படுகிறது. பல்லுயிரினையும் ஓம்புதல் வேண்டும் என்று இரண்டாம் பாடல் கூறுகிறது. மூன்றாம் குறட்பா கொல்லாமையினையும், பொய்யாமையினையும் இணைத்துப் பேசுகின்றது. 'யாது ஒன்றும் கொல்லாமை' என்று நான்காம் பாடல் கூறி, அருளாளர்களின் உயர்ந்த நிலையினைக் குறிப்பிடுகிறது. துறந்தார்களுக்கு இருக்க வேண்டிய மனோநிலை ஏழாம் பாடலால் அறிவிக்கப் படுகிறது. வேள்வியின் பொருட்டுப்பிற உயிர்களைக்

கொல்லுதலும் கூடாது என்பதனைக் குறிப்பால் உணர்த்துகிறது, எட்டாம் குறட்பா. ஆதலால்தான் 'ஆக்கம் பெரிதெனினும்' என்று எட்டாம் பாடலில் கூறப்பட்டது.

## 34. நிலையாமை

தோற்றம் உடையன யாவும் நிலையாத தன்மை உடையனவாகும். நிலையானவற்றையும் நிலையில்லாதவற்றையும் முதலில் அறிந்துணர வேண்டிய கடமையுடையவர்களே துறவிகளாவர். அவர்களே பேரின்பநிலை யெனப்படும் வீடு பேற்றினை எய்துவர். நிலையாத் தன்மையினை உணர்ந்த பின்னரே பொருள்களின் பற்று நீங்கும். இந்த அதிகாரத்தில் கூறப்படும் குறட்பாக்களின் ஆழ்ந்த உண்மைகள் பேரின்ப நிலையினை விரித்துக் கூறும். நூல்களைக் கொண்டு விளக்கமாகத் தெரிந்து தெளிதல் வேண்டும்.

தோற்றம் உடையனவற்றைக் கேடில்லாதவைகள் என்னும் புல்லறிவால் அவைகளின் மீது பற்று உண்டாகும். பற்றுச் செய்தல் பிறவித்துன்பத்திற்குக் காரணமாகும். அது பேரின்பம்-நிலையான இன்பம்-என்னும் வீடு எய்துவார்க்குக் குற்றமாகும் என்கின்ற உண்மையினை முதற்குறட்பா எடுத்துரைக்கின்றது.

இரண்டாம் மூன்றாம் பாடல்கள் செல்வம் நிலையாமையினைக் கூறுகின்றன. நான்கு முதல் பத்தாம் பாடல் வரை, முறையே உடம்புக்கு விதிக்கப்பட்ட நாள் குறைகின்ற முறையினையும், நாட்கள் கழிந்தபின் உளதாகிய நிலையாமையினையும், அவை ஒரோவழிப்பிறந்த அளவிலே, இறத்தலும், ஒரு கணமாயினும் நிற்கும் என்பது தெளியப்படாமையும், உயிர் நீங்கியபின் கிடக்கும் நிலைமையும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வரும் தன்மையும், உயிர்க்கு நிலையான இடம் இல்லையென்பதும் கூறப்பட்டன.

கூத்தாட்டம் நடைபெறுகின்ற இடம் அவை என்னும் காட்சி இரண்டாம் குறட்பாவில் அழகுற அமைந்து செல்வத்தின்செயல் எடுத்துக்காட்டப்பட்டது. நாள் என்பது உயிரினை அறுக்கும் வாள் என்ற எடுத்துக்காட்டு நான்காம் குறளில் காணப்படுகின்றது. முட்டையும் பறவையும் உவமையாகக் காட்டப்பட்டு உயிர் உடம்பு தன்மைகளை எட்டாம் குறட்பா விளக்குகின்றது.

உறக்கமும் விழிப்பும் இறப்பும் பிறப்பும் போல்வன என்ற ஆழ்ந்த உண்மையினை ஒன்பதாம் குறட்பா கூறும். நிலையாமை என்ற அதிகாரத்தில் காணப்படும் குறட்பாக்கள் அனைத்தும், உயிர், உடம்பு, பிறப்பு, இறப்பு என்னும் இவை போன்றவைகளின் கருத்துரைகளைக் கூறுவதால், ஆழ்ந்த பல உண்மைகளை தம்முள் அடக்கிக்கொண் டுள்ளன. ஆதலால் விரிவான விளக்கங்களை மெய்ந் நூல்களாகக் கூறப்படும் பிறவற்றிலும் கண்டு தெளிக.

## 35. துறவு

அதாவது புறமாகிய செல்வத்தினிடத்தும் அகமாகிய யாக்கையினிடத்தும் கொண்டுள்ள பற்றினை விடுதலாகும். 'நிலையாமை' என்ற அதிகாரத்தில் உள்ள குறட்பாக்கள் போலவே, இவ்வதிகாரத்தின் குறட்பாக்கள் ஒவ்வொன்றும் பேருண்மைகள் பலவற்றையும் குறிப்பாக உணர்த்துவதால் விளக்கங்களையும் தெளிவினையும் மெய்ந்நூல்கள் பலவற்றி லும் கண்டு உணர்ந்து அறிதல் நலமாகும்.

யான் என்பது அகப்பற்று எனவும் எனது என்பது புறப் பற்று எனவும் கூறப்படும். அவைகளில் முதல் நான்கு பாடல் களும் 'எனது' என்னும் புறப்பற்று விடுதலை பற்றிக் கூறுகிறது. ஐந்தாம் குறட்பா அகப்பற்று விடுதலை பற்றி கூறுகிறது. இவ்விருவகைப் பற்றினையும் விட்டவர்களுக்கே வீடு - பேரின்பம் - உண்டென்று குறிக்கின்றது ஆறாம் குறட்பா. இவைகளை விடாதவர்களுக்கு வீடு இல்லை என்று

ஏழாம் குறட்பா விளக்கம் தருகின்றது. நிலையாமை துறவு ஆகிய இரு தன்மைகளும், பற்று அறுதல் அறாதிருத்தல் ஆகியவைகளும் எட்டு ஒன்பது பாக்களில் கூறப்படுகின்றன. பற்றினை எவ்வாறு விடுதல் வேண்டும் என்னும் வழியினை பத்தாம் பாடல் கூறுகின்றது.

ஆறாவது குறட்பா 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' என்று குறிப்பிடுகிறது. சிந்தனைக்குரியது. பேரின்பம் என்கின்ற வீட்டுலகத்தினைக் குறிப்பதாகும். அது முற்றுந் துறந்த முனிவர்களே அடையக்கூடிய இன்பமாகும். இடமாகும். தேவருலகம், வானுலகம் என்றெல்லாம் பல திறப்பட்ட பெயர்களால் அழைக்கப்படும் விண்ணுலகம் என்று கூறப்படுவதற்கும் அதற்கும் தொடர்பில்லை என்பது தெளிவாக்கப்பட்டது.

அதுவேயன்றி, வானோர்கள் என்று பேசப்படுபவர்களுக்கும் பற்றற்ற துறவிகளுக்கும் தொடர்பில்லை என்பதும் குறிக்கப்பட்டது. இம்மையில்—இவ்வுலகில்—வாழ்ந்து கொண்டு இன்பம் நுகர்ந்து இருப்பவர்களைவிட அதிக இன்பத்தில் வாழ்பவர்கள் தேவர்கள் என்பது மக்களிடையே கூறப்பட்டுள்ள கருத்தெனத் தெளிக. பற்றினை வைத்துக் கொண்டிருப்பதால் பிறவித்துன்பம் நீங்காது என்பதனைக் கடைசி நான்கு குறட்பாக்களும் மிகவும் தெளிவாக விளக்குகின்றன. இந்த அதிகாரத்தின் மூன்றாம் குறட்பா, முதல் அதிகாரத்தின் ஆறாம் குறட்பாவுடன் ஒப்பிடத்தக்கது.

## 36. மெய்யுணர்தல்

பிறப்பு, வீடு என்பனவற்றையும் அதன் காரணங்களையும் யாதொரு ஐயமும் இல்லாமல் உண்மையாக உணர்தலைக் கூறுவதாகும். முதற்குறட்பா பிறப்பு, துன்பம் என்பவைகளைப் பற்றியும் அதற்கு முதற்காரணம் அஞ்ஞானம் என்பதையும் கூறுகின்றது. இரண்டாவது

குறட்பா வீடு என்பது முத்தியென்று கூறப்படும் நிலைத்த பேரின்பம் என்பதனை விளக்குகின்றது. எல்லா விதமான ஐயப்பாடுகளையும நீக்கிய நிலை என்பதனையும் உணர்த்து கிறது. மூன்றாம் - நான்காம் பாடல்கள் மெய்யுணர்வு உடையவர்களுக்கே வீடடையும் பேறு உண்டென்று புலப் படுத்துகிறது. மெய்யுணர்வின் இலக்கணத்தினை ஐந்தாம் குறட்பா விளக்குகிறது.

பேரின்ப வீட்டிற்குக் காரணமான - அதாவது முதற் பொருளை உணர்தற்கு வழிகளான, கேள்வி, விமர்சனம், பாவனை என்பவைகளை ஆறு, ஏழு, எட்டு என்னும் மூன்று பாடல்களும் கூறும். இவைகளை விளக்கம் செய்தால் மிகவும் பெரிதாகும் ஆனபடியால் இவைகளை விளக்கம் செய்கின்ற மெய்ந்நூல்கள் பலவற்றுள்ளும் கண்டு தெளிக.

மேலே கூறப்பட்ட மூன்று வழிகளினாலும் பரம்பொருளை உணரப் பிறப்பு அற்றுவிடும் என்றும், அவ்வாறு அற்றபிறகு, துன்பங்கள் எல்லாம் என்ன செய்யும் என்ற கேள்வியினை எழுப்பி, அவை ஞான யோகங்களின் முதிர்ச்சியுடைய உயிரைச் சாரமாட்டாததால், வேறு சார்பு இன்றி அழியும் என்ற உண்மையினை ஒன்பதாம் பாடல் விளக்குகிறது.

குற்றங்களைக் கெடுத்த ஞானிகள் இருவினைகளையும் செய்யாமையால் அவர்க்கு வரக்கடவதொரு துன்பமும் இல்லை என்பதனைப் பத்தாம் பாடல் கூறுகின்றது. 'மெய் யுணர்தல்' என்ற இந்த அதிகாரத்தின் உட்பொருள் பெரிதும் அனுபவத்தாலேயே அறிந்துணர வேண்டியதாகும். நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற அதிகாரங்களுடன், கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, தவம் முதலிய அதிகாரங்களையும் சிந்தித்தறிதல் வேண்டும்.

முதற்குறட்பா, "பொருள் சேர் புகழ் புகழ் புரிந்து" என்று காணப்படும், கடவுள் வாழ்த்து - ஐந்தாம் குறட்பா

வினை நினைவுறுத்துவதாகும். இரண்டாம் குறட்பா 'தவம்' என்ற அதிகாரத்தின் ஏழாம் குறட்பாவினை விளக்கம் செய்வதாகும். இவ்வாறே பற்பல குறட்பாக்களும் ஒன்றினையொன்று தொடர்பு கொண்டிருப்பனவாகும்.

## 37. அவா அறுத்தல்

முன்னும் பின்னும் வினைத் தொடர்பினை மெய்யுணர்வினால் துறவிகள் அறுத்து விடுவார்கள். இருந்தாலும்; உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றதால் பழைய பயிற்சியால் புலன்கள் மீது மீண்டும் நினைவு செல்லுதல் கூடும். அப்படிச் செல்லுதல் அஞ்ஞானத்திற்கும் பிறவிக்கும் காரணமாகும். ஆதலால் அதனையும் இடைவிடாத மெய்யுணர்வால் அறுத்தல் வேண்டும் என்பதனை 'அவா அறுத்தல்' என்ற இவ்வதிகாரம் கூறும். 'அறுத்தல்' என்று முடிகின்ற அதிகாரம் இது வொன்றேயாகும்.

பிறப்பிற்குக் காரணமான விதையாக இருப்பது 'அவா' தான் என்பதனை முதற் குறட்பா கூறுகின்றது. மூன்று, நான்கு பாடல்கள், 'வேண்டாமை' என்பதன் சிறப்பினைக் கூறி அதுவே விழுச் செல்வம் என்றும், பிறவாமைக்கு வழியென்றும் கூறுகின்றன. "வேண்டுதல் வேண்டாமை இலான்"—"ஒழுக்கத்து நீத்தார்"—"துறந்தார் பெருமை" என்பனபோன்ற குறட்பாக்கள் சிந்தனைக்குரியன.

நான்காம் குறட்பா, அவா அறுத்தல் என்பது வீட்டின் பத்திற்கு பரம்பரையான் அன்றி நேரே காரணம் என்றும் அதுவரும்வழி இதுவென்றும் கூறுகின்றது. 'வாய்மை' என்ற அதிகாரம் சிந்திக்க வேண்டியதாயிற்று. ஐந்தாம் குறட்பா, அவா அறுத்தவரது சிறப்பினை விதி முகத்தானும், எதிர் மறைமுகத்தானும் கூறுகின்றது. அவாவினால் வரும் குற்றமும் அதனைக் காப்பதே அறம் என்றும் ஆறாம்

குறட்பா குறிப்பிட்டுக் காட்டுகிறது. அவா அறுத்தலின் சிறப்பினை ஏழாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது.

அவாவே துன்பத்திற்கெல்லாம் காரணம் என்பதனை எட்டாம் குறட்பாவும், அவா அறுத்தவர்கள் வீட்டின்பத்தினை உடம்பொடு எய்துவர் என்பதனை ஒன்பதாம் குறட்பாவும், வீடு என்பது இதுதான் என்பதனையும் அது அவா அறுத்தார்க்கு அப்போதே உண்டாகும் என்பதனைப் பத்தாம் குறட்பாவும் விளக்கம் செய்கின்றன. குறிப்பாக உணர்த்தப்பட்ட குறட்பாக்களின் ஆழ்ந்த விளக்கங்களையெல்லாம், அதற்கென்றே கூறப்பட்ட மெய்ந்நூல்கள் பலவற்றிலும் கண்டு தெளிதல்வேண்டும்.

## 38. ஊழ்

உண்மை, இயற்கை என்பன போன்ற சொற்களால் விளக்கப்படுவது ஊழ் என்பதாகும். இதனையே பழவினை என்றும் கூறுவர். செயற்கை என்பது முயற்சி என்று கூறப்படுவதுபோல், இயற்கையால் நடைபெறுவனவற்றை ஊழ் என்று கூறினார். நியதி, ஊழ், பாழ், முறை, உண்மை, தெய்வம், விதி என்பவை ஒரே பொருளினைத் தரும் சொற்களாகும்.

இந்த அதிகாரத்தின் முதல் ஆறு குறட்பாக்களும் பொருளுக்குக் காரணமான ஊழின் வலிமையினைக் கூறுகின்றன. ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய மூன்று குறட்பாக்களும் இன்பதுன்பங்களுக்குக் காரணமான ஊழின் வன்மையினைக் கூறுகின்றன.

கடைசியாகக் கூறப்பட்டுள்ளகுறட்பா, இருவகை ஊழின் வலிமையினையும் பொதுவாகக் குறிப்பிடுகிறது. ஊழினை விட மிகவும் பெரிய வலிமையுடையது பிறிதொன்றும் இல்லை என்பதனையே பத்தாம் குறட்பா வற்புறுத்திக் கூறுகிறது. இயற்கை, செயற்கையென்னும் முயற்சியினை

விட வன்மை படைத்தது என்பது உலகறிந்த உண்மையாகும். உலகின் இயற்கை அமைப்புகளாகக் காணப்படும் பாகுபாடுகள் அறிந்துணர வேண்டியவைகளாகும். இயற்கையென்னும் ஊழ் செயற்கையென்னும் முயற்சியினையும் கெடுப்பதாகும்.

பொருளின் ஆக்கம் உண்டாதற்கான ஊழ் வந்துவிடுமேயானால் முயற்சியும் ஒளிவிட்டுத் தோன்றும். பொருள் அழிவதற்கான ஊழ் வந்துவிடுமேயானால் மடியென்னும் சோம்பல் குடிகொண்டுவிடும் என்பதாகும். இதனை முதற் குறட்பா விளக்குகின்றது.

அறிவினையும் ஊழ் வன்மையுடையதாக ஆனவிடத்து கெடுத்துவிடும் என்பதனை இரண்டாம் குறட்பா குறிக்கின்றது. அறிவினையும், ஊழினையும் ஒப்பிட்டு மூன்றாம் குறட்பா விளக்கம் தருகின்றது. உலகத்தின் இயற்கை இவ்வாறு அமைந்துள்ளதென்பதனை நான்காம் குறட்பா எடுத்துக் காட்டும். இவ்வாறே பிறவற்றையும் காணுதல் வேண்டும்.

ஏழாம் குறட்பாவில், வகுத்தான் என்பது இயற்கையின் அமைப்பினைக் குறிப்பதாகும். நுகர்வதற்கு அதாவது—அனுபவிப்பதற்கு ஊழ் துணை இருந்தே ஆகவேண்டும். அந்த ஊழின் துணை இல்லையென்றால், பொருள் தேடி வைத்துப் போவதை மட்டும் செய்வர் பலர். நுகர முடியாது.

'துறத்தல்' என்னும் துறவற நிலைக்கும் ஊழ் இருந்தேயாகவேண்டும். 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்ற குறட்பா சிந்தனைக்குரியது. இயற்கையினால் இன்ப துன்பங்கள் வருவதுண்டு என்பதனை ஒன்பதாம் குறட்பா கூறுகிறது. 'இருவேறு உலகத்து இயற்கை' என்ற குறட்பாவுடன் 'ஆரா இயற்கை' என்ற குறட்பாவினையும், 'செயற்கை அறிந்தக் கடைத்தும்' என்ற குறட்பாவினையும் ஒப்பிட்டுப் பார்த்தல் சிறப்புடையதாகும். ஊழ் என்பது

முன்வினையென்றும் பழவினையென்றும் கூறப்படும். பிறவிகளின் தொடர்ச்சியென்பதாகும்.

இதனையே இயற்கையின் செயல் என்றும் அறியப்பட வேண்டும். இயற்கையென்பதே 'தெய்வம்' என்றும் குறிக்கப்படும். இயற்கையின் உதவி இல்லையென்றாலும் முயற்சி செய்வார் பயனை எய்துவர் என்பதனை 'தெய்வத் தான் ஆகாது எனினும்' என்றகுறட்பா கூறுகின்றது.

ஊழையும் புறம் காண்பர் என்று, "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்ற குறட்பா கூறுகின்றது. இக்குறட்பாவினை, 'நல் ஆறு எனினும் கொளல் தீது" என்றும், 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' என்றும், 'ஞாலம் கருதினும் கைகூடும்' என்பன போன்ற குறட்பாக்களுடன் வைத்துப் பார்த்தறிதல் வேண்டும். முயற்சி யென்னும் செயற்கைஅதற்குரிய பயனைத் தந்தே தீரும். முயற்சியினை விடாது செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

காலத்தின் இயல்பால் இயற்கையின் செயல் முயற்சியினைவிடக் குன்றி இருக்குமேயானால், செயற்கை யென்னும் முயற்சி வென்றுவிடும். இயற்கையின் வலிமை வன்மையுடையதானால் செயற்கையான முயற்சியினை வென்றுவிடும். எனவே முயன்றுகொண்டே இருக்கவேண்டும். சிறு காற்று அடிக்கின்றபோது அதனைக் கடந்து மனிதன் சென்றுவிடமுடியும். இதுவே முயற்சி; ஊழ் என்னும் இயற்கையினை வென்றதென்பதாகும். புயல் காற்று அடிக்கின்றபோது மனிதன் கடந்து செல்ல முடியவில்லை: இயற்கை முயற்சியினை அடக்கியது என்றே கூறவேண்டும்.

உலக இயற்கை நிலம், நீர், காற்று, தீ, விண் என்ற ஐந்தின் கூறுபாடுகளை உடையதாகும். இவைஐந்தும் மனித உடம்பினுள்ளும் இருப்பதாகும். எனவே உலக இயற்கைக்கும் மனித வாழ்விற்கும் என்றும் இணைப்பு உண்டு. உலகியல் தத்துவ நூல்கள் பற்பல பெயர்களிலும், முறைகளிலும் இக்கருத்துக்களைக் கூறுவனவாக உள்ளன.

வலிமை மேம்பட்ட ஊழினை - செயற்கை யென்னும் முயற்சி வெல்லுதல் கூடாதென்பதாகும்.

உலகில் காணப்படும் அனைத்தும் இயற்கையால் அமைக்கப்பட்டனவாகும். 'அனைத்தும்' என்பது இயற்கையால் மட்டும் அமைந்துள்ளனவாகும். மனித செயற்கையால் அமைந்தனவும் இவ்வுலகில் எண்ணிறந்தனவுண்டு. நடப்பவை அனைத்தும் இயற்கையினாலேயேயாகும் என்று கூறுவதும், செயற்கை என்னும் முயற்சியால் அனைத்தும் கூடும் என்பதும், இயற்கையின் விதிகட்குப் புறம்பானதாகும்.

இரண்டிற்கும் உள்ளஅளவுத்தன்மையினைப் புரிந்தறிதல் வேண்டும். ஊழ்வினை இருந்தால்தான் சிலவற்றைச் செய்தல் கூடும், அடைதல்கூடும் என்பது இயற்கை விதிக்குப் புறம்பானதல்ல. செயற்கை யென்னும் மனித முயற்சி முயன்ற அளவு கூலி தரும் என்பது மனித அமைப்பிற்குரிய உண்மையுமாகும்.

---

# பொருட்பால்—அரசியல்

## 39. இறை மாட்சி

நாட்டிற்குத் தலைவனான மன்னனைக் கூறுவதாகும். அரசனுடைய நற்குண நற்செயல்கள் விளக்கப்படுவதாகும். மக்களைக் காப்பாற்றும் பொறுப்புள்ளவனானபடியால் 'இறை' என்று கூறினார். மன்னனை இறைவன் என்றும் பல குறட்பாக்கள் கூறுகின்றன. 'மாட்சி' என்பது சிறப்பு என்று பொருள்படும். 'மாட்சி' என்ற அடைமொழியுடன், 'படைமாட்சி' 'பகைமாட்சி' என்ற அதிகாரங்கள் காணப் படுகின்றன.

முதற்குறட்பா, அரசனுக்குரிய ஆறு உறுப்புக்களையும் கூறுகின்றது. இவையனைத்தும் பெற்றிருப்பதே அவன் வெற்றிக்குக் காரணம் என்பது கூறப்பட்டது. இரண்டு முதல் ஐந்து பாடல்கள் அரசனுடைய நற்பண்புகளையும் கடமைகளையும் விளக்குகின்றன. கடைசி ஐந்து குறட்பாக் களும் அரசனுடைய மாட்சியினையும் அதனால் உண்டாகும் பயனையும் குறிக்கின்றனவாகும். முதற் குறட்பாவில் காணப்படும் உறுப்புக்களுக்கெல்லாம் தனித்தனி அதிகாரங் கள் இருக்கின்றன. அவைகள் தெளிவான விளக்கம் தருகின்றன.

இரண்டாம் குறட்பாவின்விளக்கத்தினையும் தனித்தனி அதிகாரங்கள் கூறும். இவ்வாறே பிற குறட்பாக்களின் விளக்கங்களையும் கண்டு தெளிக, மன்னனையே 'இறை' என்று கூறும் எட்டாம் குறட்பா சிந்தனைக்குரியதாகும். ஆட்சி முறையினைக் கூறும் பற்பல நூல்களைக் கொண்டு விரிவான விளக்கங்களை உணர்ந்தறிதல் வேண்டும். அனைத்தையும் உள்ளடக்கி இந்த அதிகாரத்தில் காணப் படும் குறட்பாக்கள் தெளிவுபடுத்துகின்றன.

அரசருள் ஏறு - வேந்தற்கு இயல்பு - மானம் உடையது அரசு - வல்லது அரசு - மீக்கூறும் மன்னன் நிலம் - தான் கண்டனைத்து இவ்வுலகு - இறையென்று வைக்கப்படும் கவிகைக் கீழ்த் தங்கும் உலகு - வேந்தர்க்கு ஒளி - நீங்கா நிலன் ஆள்பவர்க்கு-என்று கூறப்பட்ட பத்தும், மன்னனின் பெருஞ்சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றன.

## 40. கல்வி

கற்றற்குரிய நூல்களைக் கற்றலாகும். சிறப்பினைக் கருதி அரசியலில் அமைக்கப்பட்டது. அனைவர்க்கும் பொதுவாகக் கூறப்படுவதாகும், அரசன் தனக்கேயன்றி

மக்களுக்கும் உரியவனானபடியால் கல்வி அரசியலில் கூறப்பட்டது என்றும் கூறுதல் வேண்டும். கற்றல் வேண்டும் என்பதும் கற்கப்படும் நூல்களையே கற்றல் வேண்டும் என்பதும் அவற்றைக் கற்கும் நெறியும் கற்றதினால் பயனும் முதற் குறட்பாவில் தெளிவாக்கப்பட்டன.

கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாக அமைந்தவற்றையும் அவைகளின் இன்றியமையாத் தன்மையும் இரண்டாம் குறட்பாவில் கூறப்பட்டன. விரிவான விளக்கங்களையெல்லாம் கல்விக்கென்று மட்டும் கூறும் பிற நூல்களில் கண்டறிதல் வேண்டும்.

மூன்றாவது குறட்பா, பொருள் நூல்களையும் கருவி நூல்களையும் கற்றாரது உயர்ச்சியினையும் கல்லாதாரது இழிநிலையினையும் தொகுத்துக் கூறுகின்றன. கற்றாரது உள்ளப் பாங்கினை நான்காம் குறட்பா எடுத்துரைக்கின்றது. முறையாகக் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் ஐந்தாம் பாடலில் காணப்படுகிறது.

கடைசி ஐந்து பாடல்களும் கல்வியினது உயர்வையும் சிறப்பினையும் விளக்கம் செய்கின்றன. கற்றற்கு அளவு இல்லை. கல்விக் கூடத்தில் பயில்வது மட்டும் போதாதென்பதனைக் குறிப்பால் உணர்த்திப் பல நூல்களையும் பலகாலும் - சாகும்வரை - கற்க வேண்டும் என்று ஏழாம் பாடல் சிறப்பாகக் காட்டுகிறது.

'மணற்கேணி' யைக் காட்டி ஆறாம் பாடல் அறிவின் வளர்ச்சியினைத் தெளிவுபடுத்துகிறது. வினைகள் போல உயிரின்கண்கிடந்து அது புகும்போது தானும் புகும் என்பதனை விளக்கவே, எட்டாம் பாடல் 'எழுமையும் ஏமாப்பு உடைத்து' என்று கூறி நின்றது. மற்றவை அழியும் தன்மையுடையன என்பதைப் பத்தாம் குறள் எடுத்துக் காட்டிற்று.

'கற்றதனால் ஆய பயன் என்'—'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'—'பல நல்ல கற்ற கடைத்தும்'—'ஓதி உணர்ந்தும்' என்று வருவன போன்ற குறட்பாக்களையும் உடன் வைத்து அறிந்துணர வேண்டும்.

## 41. கல்லாமை

கற்றலைச் செய்யாதிருத்தலாகும். கல்லாமை இழிவெனக் கருதப்படும். முந்திய அதிகாரத்தில் கூறப்பட்ட கல்வியின் சிறப்பு மேலும் தொடர்ந்து இந்த அதிகாரத்தில் கூறப்படுகின்றது. முதல் மூன்று குறட்பாக்களும் கல்லாதவர்கள் அவையின் கண் சொல்லுதற்கு உரியவர்களல்லர் என்பதனைக் காட்டுகின்றன. நான்காம் ஐந்தாம் பாடல்கள் கல்லாதாரது இயற்கையறிவின் குற்றத்தினைக் கூறுகின்றன. ஆறாம் பாடல் கல்லாதாரது பயன்படாத் தன்மையினைக் குறித்துக் காட்டுகின்றது.

கல்லாதாரது வடிவழகு பயனற்றது என்பதனை ஏழாம் குறட்பா காட்டுகிறது. கல்லாதவனிடத்தில் இருக்கும் செல்வத்தின் குற்றத்தினை எட்டாம் பாடல் குறிக்கின்றது. ஒன்பதாம் பாடல் கல்லாதான் உயர்ந்தோர் குலத்தில் பிறந்திருந்தாலும் மதிக்கப்படமாட்டான் என்று கூறுகின்றது. பத்தாம் பாடல், கல்லாதான் மக்களிடையே பிறந்திருந்தாலும், மக்கட் பிறவியால் பயன் எய்த மாட்டான் என்பதைச் சுட்டிக் காட்டிற்று.

முதற் குறட்பாவில் உருண்டை உருட்டியாடும் அரங்கினைக் காட்டியும்,இரண்டாம் பாடலில் பக்குவம் அடையாத இளமையான சிறுமியின் உறுப்பினைக் காட்டியும், ஆறாம் பாடலில் களர் நிலத்தினைக் குறித்தும், ஏழாம் பாடலில் மண்பாவையினைக் காட்டியும், பத்தாம் பாடலில் விலங்கினைக் காட்டியும் கூறிய அனைத்தும் கல்லாதாரது மிகமிக இழிவான வாழ்வினை விளக்கம் செய்வனவாக அமைந்

துள்ளன. இரண்டாம் பாடல் பக்குவம் அடையாத சிறுமிக்கு உறுப்புகள் இல்லாதபடியால் கல்லாதவனுக்கு சொற்கள் கூறுவதற்கான எண்ணம் உதிக்காது என்பதாகும். அப்படி எண்ணம் வந்தாலும் பயனற்றதாகிவிடும்.

அரங்கு, கோட்டி, பெண், நல்லார், ஒட்பம், தகைமை, மாத்திரை, களர், எழில், மண், பாவை, திரு, பாடு, விலங்கு, நூல் என்ற சொற்கள் நினைவில் நிறுத்தப்பட்டு அரிய உண்மைகளை உணர உதவுவனவாக அமைந்துள்ளன.

## 42. கேள்வி

கேட்கப்படும் நூற் பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல் வேண்டும் என்பதாகும். கற்றறிந்தார் கேட்க அறிவு வளர்ச்சியில் மேம்படுவர். கல்லாதார் கேட்டவழி அதனைக் கற்ற நன்மையினை அடைவர். முதலிரண்டு பாடல்களும் கேள்வியது சிறப்பினைக் கூறுகின்றன. மூன்றாடம் பாடல் கேள்வியறிவு உடையாரது சிறப்பினைக் கூறுகின்றது.

நான்கு முதல் ஏழாம் பாடல் வரை கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. கடைசி மூன்று பாடல்கள் கேள்விஞானம் இல்லாதாரது குற்றத்தினைக் குறிக்கின்றன. கேள்வியுணர்வு இல்லாதார் சாவினும், வாழினும் உலகிற்கு வருவது என்ன என்று பத்தாம் பாடல் கூறியது சிந்தனைக்குரியது.

செவிச் செல்வம் - செவிக்கு உணவு - ஆன்றாரோடு ஒப்பர் - ஊற்றாம் துணை - ஊற்றுக் கோல் - பெருமைதரும் என்று குறித்துக் காட்டுவனவெல்லாம் கேள்விச் செல்வம் மிகவும் நன்மை பயக்கக் கூடியது என்பதனை வலியுறுத்து கின்றன.

கேள்விச் செல்வம் உடையர் இப்பூமியில் வாழ்ந்தா ராயினும் வானுலகத் தேவரோடு ஒப்பர் என்று கூறி,

மூன்றாம் பாடல் அவர்களின் பெருமையினைக் காட்டிற்று. உலகம் வழுக்கி விழச் செய்யும் சேற்று நிலம் போன்ற தென்பதனை ஐந்தாம் பாடல் குறிப்பால் உணர்த்தி விடுகின்றது.

கேட்பினும் கேளாத்தகையவே - நுணங்கிய கேள்வியர் அல்லார் - செவியிற் சுவையுணரா - என்ற தொடர்கள் கேள்விச் செல்வம் பெறாமையினால் வரும் குற்றத்தினையும் இழிநிலையினையும் விளக்கிக் காட்டுகின்றன.

## 43. அறிவு உடைமை

கல்வி கேள்விகளால் ஆன அறிவோடு உண்மையறிவு உடையவனாக இருத்தலாகும். அறிவு நல்லறிவு என்பதனையே குறிப்பதாகும். 'புல்லறிவு' என்பதும் உண்டு. 'புல்லறிவாண்மை' என்றொரு அதிகாரமும் இருக்கின்றது. மனிதனுக்கு அறிவு கோட்டை போன்றதாகும். முதற் குறட்பா 'அரண்' என்று கூறுகின்றது.

அதனையே சிறந்த கருவி என்றும் குறிப்பிடுகிறது. இரண்டு முதல் ஆறாம் பாடல் வரை அறிவின் இலக்கணம் கூறப்படுகிறது. ஏழு எட்டு பாடல்கள் அறிவுடையவர்களின் இலக்கணத்தினைக் கூறுகின்றது. ஒன்பதாவது குறள் அறிவுடையார்க்குத் துன்பமில்லை என்று குறிப்பிடுகிறது. பத்தாம் குறள் அறிவுடையாரது உடைமையையும் மற்றையாரது இன்மையினையும் விளக்கிச் சொல்லுகிறது.

அறிவுஅற்றம் காக்கும் கருவி நன்றின்பால் உய்ப்பது - மெய்ப்பொருள் காண்பது - நுண்பொருள் காண்பது - மலர்தலும் கூம்பலும் இல்லது - உலகத்தோடு அவ்வது உறைவது - ஆவது அறிவார் - அறிவார் தொழில் - எதிரதாக் காக்கும் எல்லாம் உடையார் என்று கூறியனவெல்லாம் அறிவின் பெருஞ்சிறப்பினையும் அதனை உடையாரது பெருமையினையும் எடுத்துக் காட்டுகின்றன.

'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்' என்ற குறட்பாவுடன் மூன்றாம் குறட்பா ஒப்பிட்டுக் கருதற்பாலது. ஐந்தாம் பாடலில், மலர்தல் - கூம்பல் என்பவை நுண்ணிய கருத்தினைப் புலப்படுத்துகின்றன. பின்னால் நடப்பதை முன்னால் அறிதல் அறிவுடையார்க்கேயாகும் என்பதனை ஏழாம் குறட்பா சிறப்பாக உணர்த்துகிறது. என்றுமே அதிர்ச்சிக் தரக் கூடிய துன்பம் அறிவுடையவர்களுக்கு வரவே வராது. பத்தாம் குறட்பாவில் 'எல்லாம்' என்று கூறி பொருள் பொதிந்த உண்மை விளக்கம் செய்யப் பட்டு விட்டது.

## 44. குற்றம் கடிதல்

காமம், வெகுளி, கஞ்சத்தனம், மானம், உவகை, மதம் என்று குற்றங்கள் பலவகைகளாகக் கூறப்படும். இவைகள் வாராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சிறப்பாக அரசனுக்கு இவைகள் கூறப்படுவதால், குறட்பாக்களில், ஏதம்இறைக்கு, என் குற்றம் ஆகும் இறைக்கு, என்பன காணப்படுகின்றன. பொதுவாக அனைவர்க்கும் இருக்க வேண்டிய நன்னெறிகளில் இதுவும் ஒன்றாகும். 'கடிதல்' என்று இந்த ஒரு அதிகாரம்தான் முடிகின்றது.

முதலிரண்டு குறட்பாக்களும் குற்றங்களாவன இவை யென்று கூறுகின்றன. மூன்று முதல் ஆறுவரையுள்ள பாடல்கள் குற்றங்களைக் கடிந்து நீக்க வேண்டியதைப் பொது வகையால் கூறுகின்றன. ஏழாம் பாடலும், எட்டாம் பாடலும் 'உலோபம்' என்று கூறப்படுகின்ற கஞ்சத்தனத்தின் தீமையினைக் குறிக்கின்றன. ஒன்பதாம் பாடல் மதங் கொண்ட குற்றத்தினைக் கூறும். தான் விரும்புகின்ற பொருளினைப் பிறரறியாமல் இருப்பவர்களைப் பகைவர்கள் வெல்ல முடியாதென்று பத்தாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

இவருக்கு இப்பொருளின் மீது மிக்க விருப்பம் என்று பகைவர்கள் தெரிந்து கொண்டால் அதன் வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பர் என்னும் கருத்தினைப் பத்தாம் பாடல் நுட்பமாகக் கூறிற்று.

இந்த அதிகாரத்தில்வரும் சொற்களில் சில வெகுளாமை, மானம், நாணுடைமை, நன்றியில் செல்வம் முதலிய அதிகாரங்களை நினைவு படுபடுத்துவனவாக உள்ளன. பத்தாம் பாடலில் நூல் என்பது வஞ்சித்தற்கு என்னும் எண்ணத்தினைக் குறித்தது. ஐந்தாம் பாடல் 'வைத்தூறு' என்று (வைக்கோல்) என்று குறித்துக் காட்டி உண்மையினைப் புலப்படுத்துகிறது. மூன்றாம் பாடலில் தினை, பனை, என்பன சிறியது, பெரியது என்பதைக் காட்டும் அளவைகளாகும். செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பு இறந்த மானம், மாணா உவகை, பற்றுள்ளம், தன்னை, வியத்தல் முதலியனவெல்லாம் கொடிய - தீய குற்றங்களாகக் கருதப்படல் வேண்டும்.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரை அரசன் தனக்குத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். பேரறிவுடைய அமைச்சர்களும், நீதிநூல் கற்ற சான்றோர்களும் பெரியார்கள் என்ற கருத்தில் வைக்கப்படுவர். சிறப்பாக அரசனுக்குக் கூறப்படுவதால் இந்த அதிகாரத்தின் குறட்பாக்களில் மன்னன் என்ற சொல் காணப்படுகிறது. பொதுத்தன்மையில் பலருக்கும் உரியதாகும். ''பெரியாரைப் பிழையாமை'' என்றொரு அதிகாரம் உண்டு. அது பல்லாற்றானும் ஆற்றலும், வன்மையும் கொண்டவர்களைக் கூறும். 'துணை' என்ற சொல், 'வாழ்க்கைத் துணைநலம்' என்பதிலும் காணப்படுகிறது.

முதலிரண்டு பாடல்களில் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும் என்பதும், கொள்ளும் வழியும் கூறப்பட்டன. மூன்று, நான்கு, ஐந்து பாடல்கள் பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் சிறப்பினைக் கூறுகின்றன. பெரியார்களைத் துணைக்கொள்ளுவதால் வரும் பயனை ஆறு, ஏழு பாடல்கள் கூறும். கடைசி மூன்று குறட்பாக்களும் பெரியாரைத் துணைக்கொள்ளாத வழி உண்டாகும் குற்றத்தினைக் குறிக்கின்றன.

அறனறிந்து மூத்த அறிவுடையார், முற்காக்கும் பெற்றியார், பெரியார், தம்மிற் பெரியார், ஆழ்வார், தக்கார், இடிக்கும் துணையார், இடிப்பார், மதலையாம் சார்பு, நல்லார்—என்று குறிக்கப்பட்டனவெல்லாம் அறிவு நிறைந்த பெரியார்களைப் பற்றிச் சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவுவனவாகும். 'தக்கார் இனம்' இன்றியமையாதது என்பதனை ஆறாம் குறட்பா எடுத்துரைக்கின்றது.

ஐந்தாம் குறட்பாவும் எட்டாம் குறட்பாவும் மன்னனைச் சுட்டிக்காட்டி விளக்கம் தருகின்றன. 'குறிப்பறிதல்' 'சுற்றம் தழால்' என்ற அதிகாரங்களும் ஒப்பிட்டுப் பார்த்தற்குரியனவாகும். காமத்துப் பாலிலும், 'குறிப்பறிதல்' என்றவொரு அதிகாரம் உண்டு.

## 46. சிற்றினம் சேராமை

சிறிய இனத்தாரைச் சார்ந்திருக்காமையாகும். சிறிய இனம் என்பது தீய குணமும் செயலும் கொண்டவர்கள் என்பதாகும். சிறிய இனம் அறிவைத் திரித்து இருமையினையும் கெடுக்கும். சிற்றினத்திற்கு மிகவும் அஞ்சுதல் வேண்டும்.

சிறிய இனம் பெரியோர்களுக்கு ஆகாது என்பதனை முதற் குறட்பா கூறுகிறது. இரண்டாம் குறட்பா நீர்,

நிலத்தினியல்பால் கெட்டுவிடுவதுபோல, சிறிய இனம் நல்லவர்களைக் கெடுத்துவிடும் என்று எடுத்துக் காட்டுகிறது.

மனம் மக்களின் பொது உணர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருப்பதாகும். அதுவேபோல, 'இவன் இத்தன்மையன்' என்று சொல்லப்படும் சொல் இனம் காரணமாகத்தான் அமையும் என்பதனை மூன்றாம் குறட்பா கூறுகின்றது. 'மனத்து உளது போலக் காட்டி' என்று நான்காம் பாடலில் கூறப்பட்டிருப்பது மிகவும் சிந்தனைக்குரியதாகும். ஐந்து முதல் ஒன்பதாவது பாடல்வரை சிற்றினம் சேராமையின் சிறப்பு கூறப்பட்டது.

சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்துவிடும் - இனத்தியல்பது ஆகும் அறிவு - இனத்து உளது ஆகும் அறிவு - தீயினத்தின் அல்லல் - என்பனவெல்லாம் இனம் ஒருவனுக்கு எத்தகைய அறிவினை உண்டாக்கி விடும் என்ற உண்மையினைக் குறிக்கின்றன. 'எல்லாப் புகழும் தரும்" என்று 'ஏழாம் பாடல் விளக்கம் செய்கின்றது. நல்ல மனம் படைத்த சான்றோர்களுக்கும் நல்லினம் சிறந்த பாதுகாப்பாக இருக்கும் என்று எட்டாம்பாடல் தெளிவாக்குகின்றது.

பெருமை, அறிவு, சொல், எச்சம், ஆக்கம், புகழ், சான்றோர், ஏமாப்பு, துணை, அல்லல் முதலிய சொற்கள் குறட்பாக்களின் கருத்துக்களை நினைவுபடுத்த உதவுவனவாகும்.

## 47. தெரிந்து செயல்வகை

அரசன் தான் செய்யும் தொழில்களை ஆராய்ந்து செய்யும் திறத்தினைக் கூறுவதாகும். தக்கவர்களை துணைக்கொண்டு செய்யப்படவேண்டும் என்பதாகும். அரசியலில் கூறப்பட்டு அரசனுக்கென்று சிறப்பாக கூறப்பட்டாலும், பொதுவகையான் அனைவருக்கும் அறிவுறுத்துவனவும் உண்டு.

செயல் செய்பவன் தானே நேரில் நின்று பொறுப்பேற்று நடத்துவதை இவ்வதிகாரம் கூறுகின்றது. 'தெரிந்து வினையாடல்' என்றொரு அதிகாரம் உண்டு. அந்த அதிகாரம், தொழிலினைப் பொறுப்புள்ளவர்களிடம் ஒப்படைத்து அத்தொழிலின் பொறுப்பினை ஏற்றவர்களை எவ்வாறு நடத்துதல் வேண்டும் என்று கூறுவதாகும். வினை மேற்கொண்டவர்களை நடத்தும் முறையினை அவ்வதிகாரம் கூறும்.

'தெரிந்து தெளிதல்' என்றொரு அதிகாரம் உண்டு. சிறந்தவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதனை கூறுவதாகும். 'பகைத்திறம் தெரிதல்' என்றொரு அதிகாரம் உண்டு.

இவ்வதிகாரம், 'செயல்வகை' என்று முடிவதைப் போலவே, வினை செயல்வகை, பொருள் செயல்வகை, குடி செயல்வகை என்ற அதிகாரங்களும் முடிகின்றன. விளக்கங்கள் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன.

தெரிந்து செயல்வகை என்ற இந்த அதிகாரத்தின் முதலிரண்டு குறட்பாக்களும், செய்யத்தகும் வினைகளையும் அவைகளைச் செய்யும் வகைகளையும் விளக்குகின்றன. மூன்று, நான்கு, ஐந்து ஆகிய மூன்று பாடல்களும் விலக்கப்பட வேண்டிய வினைகளையும் அவைகளை விலக்காவிட்டால் வரும் குற்றங்களையும் குறிக்கின்றன. ஆறாம் பாடல் செய்வன செய்து, ஒழிவன ஒழிக என்று இருவகையினையும் கூறும். ஏழு முதல் பத்தாம் பாடல்வரை வினைகள் செய்வதற்குரிய வழியினையும் அதனது உரிமையினையும் தெளிவுபடுத்துகின்றன.

'அவரவர் பண்பு அறிந்து' என்று கூறுகின்ற ஒன்பதாம் குறட்பா சிறந்தவொரு பேருண்மையினைப் புலப்படுத்துகிறது. ஐந்தாம் குறட்பா, வளரும் நிலத்திலே பகைவர்களை

நிலைபெறச் செய்தல் - என்ற கருத்தினைக் காட்டி ஆழ்ந்த பொருளினை மெய்ப்பிக்கின்றது. 'எண்ணித் துணிக' என்று தொடங்கப்பெறும் ஏழாம் குறட்பா அரியதொன்றே யாகும்.

சூழ்ந்து செயல் - எண்ணிச் செய்வார் - ஊக்கார் அறிவுடையார் - தொடங்கார் - சூழாது எழுதல் - துணிக - எள்ளாத - என்று கூறப்பட்டனவெல்லாம் வினைசெய்வதற்கான வழிமுறைகளைக் குறிப்பால் உணர்த்துவனவாகும்.

## 48. வலி அறிதல்

வினை மேற்செல்லும் அரசன் நால்வகை வலிமையினையும் அளந்தறிந்து தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அரசனுக்கென்று சிறப்புற அமைக்கப்பட்டாலும், உலக வாழ்க்கையில் இருக்கும் பலருக்கும் உரிய உண்மைகள் கூறப்பட்டுள்ளனவாகும். 'வலி' என்றது வலிமை, வன்மை என்பதை குறிப்பதாகும். ஒப்புரவு அறிதல், காலம் அறிதல். இடன் அறிதல், குறிப்பு அறிதல் (பொருட்பால்) குறிப்பு அறிதல், (காமத்துபால்) என்ற அதிகாரங்களும் 'அறிதல்' என்று முடிகின்றன. 'குறிப்பு அறிவுறுத்தல்' என்றொரு அதிகாரமும் காமத்துப் பாலில் உண்டு.

முதலிரண்டு குறட்பாக்கள் வலிமையின் வகைகளையும் அதனை அறிந்து மேற்செல்வார் அடையும் பயனையும் கூறுகின்றன. மூன்றாம் நான்காம் குறட்பாக்கள், தன்னுடைய வலிமையினை அறிந்து கொள்ளாமல் வினை மேற்செல்வதனால் உண்டாகும் குற்றத்தினை கூறுகின்றன. மாற்றான் வலிமையினையும் அவனுடைய துணையின் வலிமையினையும் அறியாதிருந்தால் உண்டாகும் குற்றத்தினை ஐந்தாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது. ஆறாம் குறட்பா மேற்கொண்ட வினையின் வலிமையினை அறியா

திருந்தால் வரும் குற்றத்தினைக் கூறுகின்றது. ஏழாம்பாடல் முதல் பத்தாம் பாடல்வரை, மூவகை ஆற்றலுள்ளும் பொருள்—செல்வத்தின் வலிமையினையறிந்து செயல்பட வேண்டிய சிறப்பினை வகுத்துக் கூறுகின்றன.

மயிலிறகினை ஏற்றிச் செல்லும் காட்சியினை ஐந்தாம் பாடலும், நுனிக்கொம்பர் ஏறினார் என்று ஆறாம் பாடலும் சுட்டிக்காட்டுவது மிகவும் நுட்பமான கருத்தினை விளக்கம் செய்கின்றன.

அளவறிந்து ஈக—போகுஆறு அகலாக்கடை—வாழாதான் வாழ்க்கை உளவரை தூக்காத—என்று குறித்துக் காட்டப் பட்டுள்ளவை பொருளினை எவ்வாறு போற்றுதல்வேண்டும் என்பதனை அறிவுறுத்துகிறன. அறிவுடைமை, ஊக்க முடைமை, பொருள்செயல்வகை, ஈகை, ஒப்புரவு அறிதன் முதலிய அதிகாரங்களைச் சிந்தித்தல் வேண்டும்.

## 49. காலம் அறிதல்

அரசனுக்குப் போர் செய்தல் இன்றியமையாச் செயலாக இருத்தல் கூடும். மக்களைக் காப்பாற்றும் தலைவன் அவனே யாவான். எனவே முதன்மையான கருத்தாக போர் செய்யும் பற்பல ஆற்றல்களையும் அவன் பெற்றிருத்தலும் அறிந்திருத்தலும் வேண்டும். பொருட்பாலில் பெரும்பகுதி இக்கருத்தினையே உணர்த்துகிறது என்பது மிகையாகாது. வலி அறிதல், காலம் அறிதல், இடம் அறிதல் என்பன வெல்லாம் அக்கருத்தினைத் தலையாகக் கொண்டவைகளே யாகும். சிறப்புப் பகுதியாக அரசனுக்குக் கூறப்பட்டாலும் வாழும் மக்களுக்கும் வழியுணர்த்தும் உண்மைகளும் கூறப் பட்டுள்ளனவாகும் என்று அறிதல் வேண்டும்.

முதற்குறட்பா காலத்தினால் வரும் பெரும் வெற்றி யினைக் கூறுகிறது. காலத்தின் சிறப்பு உணர்த்தப்பட்டது. வேந்தர்க்குக் காலம் மிகவும் இன்றியமையாததாகும். பலம் வாய்ந்த கூகையினைக் காலத்தின் உதவியினால் காக்கை

வெல்லும். கூகை என்பது 'கோட்டான்' என்று கூறப்படுவதாகும். இரண்டு முதல் நான்கு குறட்பா வரை காலத்தின் அருமையினை அறிந்து கொள்ளுவதால் வரும் பயன் கூறப்பட்டது.

காலம் தக்கபடி வாராவிட்டால் பொறுத்திருத்தல் வேண்டும் என்பதினை ஐந்தாம் குறட்பா எடுத்துக்காட்டுகிறது. பொறுத்திருப்பதால் வரும் சிறப்பினை ஆறாவது குறட்பா கூறும். இக்குறட்பா ஆட்டுக்கடாவின் சண்டையினைக் குறிப்பிட்டுக் காட்டுவது மிகச்சிறந்த உண்மையினை வெளிப்படுத்துவதாகும்.

பொறுத்திருக்கும் காலத்தில் பகைமை வெளிப்படாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும் என்று ஏழு எட்டு குறட்பாக்கள் தெரிவிக்கின்றன. காலம் வந்துவிட்டால் விரைவாக செய்தல் வேண்டும் என்று ஒன்பதாம் பாடல் குறித்துக் காட்டுகிறது. பொறுத்திருப்பதும் செயல்படுவதும் ஆகிய இரண்டினையும் கொக்கினைக் காட்டிப் பத்தாம் பாடல் விளக்குகிறது.

இப்பாடல், கொக்கு ஒக்க — குத்துஒக்க - என்று கூறி சிறப்பிக்கின்றது. வேந்தர்க்கு வேண்டும் பொழுது, திருவினைத்தீராமை ஆர்க்கும் கயிறுஅருவினை என்ப உளவோ. —ஞாலம் கருதினும் கைகூடும் - காலம் கருதி இருப்பர் - ஊக்கம் உடையான் ஒடுக்கம் - புறம் வேரார் - செறுநரைக் காணின் சுமக்க - செய்தற்கு அரிய செயல் - குத்து ஒக்க - ஆகிய பத்தும் என்றென்றும் நினைவில் நிறுத்தப்பட்டுக் காலத்தின் அருமையினை அறிதற்கு உதவுவனவாகும்.

## 50. இடன் அறிதல்

காலமும் இடமும் அறிந்து பகைமேற் செல்லும் அரசன் வெல்லுவதற்கேற்ற நிலத்தினையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்! சிறப்புற அரசனுக்கும் பொதுப்பட அனைவர்க்

கும் கொள்ளுதல் வேண்டும். பகைவன்மேல் போருக்கு செல்லும் அரசனுக்குக் கூறுகின்ற முறைகளை வலி அறிதல், காலம் அறிதல், இடனறிதல், முதலிய அதிகாரங்கள் கூறுவனவாகக் கொள்ளுதல் வேண்டும். தன்மீது வந்த பகைவனை எதிர்க்கும் முறையினைச் சிறப்பாக 'அரண்' முதலிய அதிகாரங்கள் கூறும் 'படைச்செருக்கு முதலிய அதிகாரங்கள் போர் செய்யும் திறத்தினையும் மறவர்களின் இலக்கணத்தையும் கூறும்.

அரணின் புறத்திருக்கும் பகைவரின் இடத்தினை அறிதல் வேண்டும் என்பதனை முதல் நான்கு பாக்களும் கூறுகின்றன. ஐந்து ஆறு ஏழு பாடல்கள் வினை செய்தற்கு ஆன இடத்தினை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது என்று கூறின. கடைசி மூன்று குறட்பாக்களும் பகைவரைச் சந்திக்க கூடாத இடமும் அவ்வாறு சந்தித்தால் வரக்கூடியக் குற்றத்தினையும் கூறுகின்றன. பகைவர்களை சிறியர் என்று ஏளனமாக கருதுதல் மிகவும் குற்றமானதுஎன்பதனை முதற் குறட்பா எடுத்துக் காட்டுகின்றது. அரணிலிருந்து போர் செய்தல் எப்போதும் வலிமையுடையதாகும் என்று இரண்டாம் குறள் எடுத்துக்காட்டுகிறது.

நீரில் வெல்லும் முதலை அதிலிருந்து நீங்கி விட்டால் எளிதில் கொல்லப்பட்டு விடும் என்று ஐந்தாம் பாடல் குறித்துக்காட்டி இருக்கும் இடத்தினால் உண்டாகும் வலிமையினைச் சுட்டிக் காட்டிற்று. அதுவே போல, ஆறாம் குறட்பா நிலத்தில் ஓடும் தேரினையும், கடலில் ஓடும் ஓடங்களையும் குறித்துக் காட்டி இடமறிந்து செய்தலின் பெருஞ்சிறப்பினை விளக்குகிறது. பத்தாம் குறட்பா, சேற்று நிலத்தினையும், யானையினையும், நரியினையும் ஆக இம்மூன்றினையும் அமைத்து இடத்தினால் எளியவனும் வலியவனை வெல்ல முடியும் என்று மெய்ப்பிக்கின்றது.

இடங்கண்டபின், அரண் சேர்ந்தாம் ஆக்கம், இடனறிந்து போற்றார், இடன் அறிந்து, நெடும் புனலுள்

வெல்லும், கடல் ஓடும் எண்ணி இடத்தாற் செயின், செல் இடம் சேரின், உறை நிலத்தோடு ஒட்டல், நரி அடும்—என்று காட்டப்பட்டவைகள் எல்லாம் தக்க இடத்தினால் வெற்றி தோல்விகள் அமையும் என்பதனை உணர்த்துகின்றன. முதலை, நெடுந்தேர், நாவாய், களர், நரி, களிறு முதலியன வும் பிறவும் குறிப்புணர்த்தும் அரிய குறட்பாக்களைக் காட்டுவனவாகும்.

## 51. தெரிந்து தெளிதல்

அமைச்சர் முதலாயினோரைத் தேர்ந்தெடுக்கும் முறை களைக் கூறுவதாகும். உயர்ந்த பொறுப்பான பணிகளில் அமைக்கப்பட வேண்டியவர்களுடைய குணம், பரம்பரையின் இயல்பு, கல்வி, அறிவு முதலியவற்றை அறிந்து தெரிந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாகும். தெரிந்து வினை யாடல், தெரிந்து செயல்வகை, பகைத்திறம் தெரிதல் முதலிய அதிகாரங்களிலும் 'தெரிதல்' என்ற சொல் காணப்படுகின்றது.

அரிய வேண்டிய அளவைகளைக் கொண்டு குணமும், குற்றமும் தெரிந்து குணமுடையாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று முதல் மூன்று பாடல்களும் கூறுகின்றன. நான்காம் ஐந்தாம் பாடல்கள் குணம், குற்றங்களை நாடி யறியும் வழிமுறைகளை தெளிவு படுத்துகின்றன. ஆறுமுதல் பத்தாம் பாடல்வரை யாரைத் தெளிந்து தேர்ந்தெடுக்க கூடாதென்றும், அப்படி தேர்ந்தெடுத்தால் வரும் குற்றங் களும் கூறப்பட்டன.

அறம், பொருள், இன்பம், கல்வி, குடி, குற்றம், நாணம், இனம், பெருமை, சிறுமை, அறிவு, பேதைமை, இடும்பை முதலியனவாக இவ்வதிகாரத்தில் காணப்படும் சொற்கள் பிற அதிகாரங்களையும் நினைவுபடுத்துவனவாக அமைந் துள்ளன. தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவனுடைய மன

இயல்பினை அறிந்தறிய பலவகையான முறைகளையும் முதற் குறட்பா தெளிவு படுத்துகின்றது.

அறத்தினின்று மன்னன் வழுவினான் என்றும், பொருள் வழியில் மன்னன் ஈகையற்றவன் என்றும் இன்பத்தில் - சிற்றின் பத்தில்-மயங்கியவன் என்றும், பிறரைக் கொல்ல அரசன் முயற்சி செய்பவன் என்றும் - இவ்வாறான செய்திகளைக் கூறிஅதற்கு உடன்பட்டு மனம் இசைந்து அரசனை விலக்கு வதற்கு எண்ணம் கொள்பவனாக இருக்கின்றானா என்றெல்லாம் அறிந்து, பிறகே தேர்ந் தெடுக்க வேண்டும் என்று முதல் குறட்பா விளக்கம் தருகின்றது. நற்குடியிற் பிறந்தவர்கள் குடிப் பெருமைக்கு அஞ்சிந டப்பார்கள் என்று இரண்டாம் குறட்பா கூறு கின்றது.

வினையினது - தொழிலினது மிகப் பெரிய நூல் களைக் கற்று மனம் மாசற்றவர்களாக இருப்பவர்களிடத் திலும் ஆராய்ந்து பார்க்கும்போது அறியாமை இருக்கத் தான் செய்யும் என்று மூன்றாம் குறட்பா தெளிவு படுத்து கிறது. நல்ல குணங்களே ஒருவனிடத்தில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தல் கூடாது. ஆதலால், குணமும் குற்ற மும் நாடி பிறகு தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நான்காம் பாடல் குறிக்கின்றது. செயலினைக் கொண்டே ஒருவன் - நல்லவன் - கெட்டவன் என்று அமைத்தல் வேண்டும் என்று ஐந்தாம் பாடல் குறிக்கும்.

உலகத்தோடு தொடர்பு இல்லாதவர்களையும் சுற்றம், உறவு ஒன்றும் இல்லாதவர்களையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. அவர்கள் பழி பாவத்திற்கு நாண மாட்டார்கள். இதனை ஆறாம் பாடல் கூறும். அன்பு காரணமாக தேர்ந் தெடுக்காமல் அறிவின் ஆற்றலின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏழாம் பாடல் உணர்த்து கின்றது.

தேர்ந்தெடுத்த பின் அவர் மீது ஐயங்கொள்ளக் கூடாதென்று பத்தாம் பாடல் கூறும். தலைமையாக

இருப்பவர் தேர்ந்தெடுக்கும் பொறுப்புள்ளவர்கள் ஆனபடி யால் அவர்களுக்குக் கூறப்பட்ட கருத்துக்களேயானாலும் பொது வாழ்க்கையறிவுக்குப் பலரும் அறிய இயல்பினைக் கூறுகின்றது.

## 52. தெரிந்து வினையாடல்

பொறுப்பான வினைகளை தேர்ந்தெடுக்கப்பட்டவர் களிடம் ஒப்படைத்து, தான் அவர்களை ஆளுதல் என்பது எவ்வாறு என்பதனை இந்த அதிகாரம் கூறுகின்றது. குறிப்பாக அரசனுக்கும் சிறப்பாகத் தலைமை தாங்கும் அனைவர்க்கும் கூறப்பட்டதென்றாலும் பலருக்கும் அறிவுறுத்தும் உண்மைகள் காணப்படுகின்றன என்றே கொள்ளுதல் வேண்டும். 'தெரிந்து வினையாடல்' என்ற இந்த அதிகாரத்துடன், தெரிந்துசெயல்வகை, வினைத் தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை முதலிய அதிகாரங்களும் ஒப்பு நோக்குதற்குரியன.

முதன் மூன்று குறட்பாக்களும் ஆளப்படுவானது- அதாவது - தலைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பு ஏற்றவனுடைய - இலக்கணத்தினைக் கூறுகின்றன.

நான்காம் குறட்பா, ஒரு வகையால் ஒழிக்கப் பட வேண்டியவர்கள் யாவர் என்பதனைக் குறிக்கின்றது. ஆறுமுதல் ஒன்பது பாடல்வரை, ஆளப்படுபவனை ஆளு கின்றதலைவன் எவ்வாறு ஆளுதல் வேண்டும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. வினை செய்பவர்களை நாள் தோறும் கண்டு வருக என்றும் அவ்வினை செய்வான் மனம் கோணாதிருந்தால் உலகம் கோணாமல் நடந்து வரும் என்றும், பத்தாம் பாடல் தெளிவுபடுத்தும். தொழிலாளர் களின் வன்மையினை பத்தாம் பாடல் நன்கு உணர்த்தி விட்டது.

தொழிலில் வைத்த பிறகு முற்றிலும் மாறாகி விடுபவர் களை நான்காம் பாடல் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. வினை

யினை ஆற்றல் நிறைந்தவனிடத்தில் தான் ஒப்படைக்க வேண்டுமேயல்லாமல், 'இவன் எனக்கு மிகவும் வேண்டியவன்' என்று யாரிடமும் ஒப்படைக்க கூடாதென்பதனை ஐந்தாம் பாடல் கூறும்.

ஒரு வேலையினை ஒருவனிடத்தில் - தக்கவனிடத்தில் ஒப்படைத்த பிறகு - இடையே அவனுக்குத் தொல்லை தருவதும், ஐயப்படுவதும் கூடாதென்பதனை எட்டாம் பாடல் எடுத்துக் கூறுகின்றது. நலம் புரிந்த தன்மையான், ஆராய்வான், நன்குடையான், என்பனவெல்லாம் வினையினைச் செய்பவன்பால் காணப்படவேண்டிய நற்குணங்களைக் கூறுகின்றன. 'நாள்தோறும் நாடுக' என்று கூறும் பத்தாம் பாடல் பன்முறை சிந்திக்கத் தக்கதாகும்.

## 53. சுற்றம் தழால்

அரசன் தன்னைச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தார்களை நீங்காமல் அணைத்துக் கொண்டு நடத்தல் வேண்டும் என்பதாகும். சுற்றத்தார் என்பது உறவினர்களை மட்டும் என்று கொள்ளுதலாகாது. தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் என்பது தான் சிறப்பான பொருளாகும். இவ்வதிகாரக் குறட்பாக்களில், வேந்தன் என்று குறிக்கப்பட்டு, மன்னனுக்கே பெரிதும் கூறப்பட்டாலும் உலகோர் அனைவருக்குமே உரித்தான கருத்துரைகள் காணப்படுகின்றன என்று அறிதல் வேண்டும்

'தழால்' என்பது தழுவுதல் என்பதாகும். சுற்றத்தார். களுடைய சிறப்பினை முதற் குறட்பா விளக்குகின்றது. சுற்றம் தழுவுதல் செல்வத்திற்குக் காரணமாகவும் பாதுகாப்பாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என்று இரண்டு முதல் நான்கு பாடல்கள் கூறுகின்றன. ஐந்து முதல் எட்டு பாடல்கள் வரை, சுற்றம் தழுவும்வழிமுறைகள் கூறப்பட்டன.

பிரிந்துபோன சுற்றத்தார்களில், தீமை செய்யப்போய் அதனை நீக்கி வருவானும் அது செய்யாமற் போய்ப் பின் நன்மை செய்ய வருவானும், தழுவப்பட வேண்டியவர்கள் ஆனபடியால், தழுவுகின்ற முறைகளைக் கடைசி இரண்டு குறட்பாக்களும் தெளிவாக்குகின்றன. "காரணத்தின் வந்தார்'" என்பது சிந்திக்கத்தக்கது.

கரையின்றி நீர் நிறைந்த குளத்தினைக் காட்டி சுற்றத் தாரின் பெருஞ்சிறப்பினைக் காட்டும் மூன்றாவது குறட்பா ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். ஏழாம்பாடல் காக்கை யினைக் குறித்துக்காட்டி உண்மையினைப் புலப்படுத்து கிறது. "அன்ன நீரார்" என்பது சிறப்பாக அமைந்துள்ளது. பழமை, பாராட்டுதல், விருப்பு அறாச்சுற்றம் சுற்றப்பட ஒழுகல், சுற்றத்தால் சுற்றப்படும், அன்ன நீரார்க்கே உள, என்று காணப்படுவனவெல்லாம் சுற்றத்தார்களின் பெருஞ் சிறப்பினையும் பயனையும் குறிக்கின்றன.

செல்வம் பெற்றதன் பயனைக் குறித்துக் காட்டி பெற்றதால் பெற்றபயன், கொடுத்தலும் இன்சொலும், பெருங் கொடையான், என்ற அரிய உண்மைகளையெல்லாம் நான்கு, ஐந்து ஆறுபாடல்கள் வலியுறுத்திச் சொல்கின்றன, தகுதிக்கு ஏற்ப நோக்கவேண்டும் என்று அறிவுறுத்துவது எட்டாம் பாடலாகும். எல்லோரையும் ஒரே தன்மையில் நோக்குதல் செய்யாமல் தகுதிக்கேற்ப நோக்குதல் சுற்றம் தன்னைவிடாமல் தழுவுவதற்கு சிறப்பாக அமையும் என்பதே எட்டாம் பாடல் உணர்த்தும் உண்மையாகும்.

## 54. பொச்சாவாமை

உருவும், திருவும் ஆற்றலும் முதலியவற்றால் மகிழ்ந்து தற்காத்தலிலும் பகை அழித்தல் முதலிய காரியங்களிலும் சோர்தலைச் செய்யாமையாகும். சோர்ந்திருத்தல் கூடாது. அதாவது மறதி என்பது கூடாதென்பதாம். "மடியின்மை" என்ற அதிகாரத்துடன் ஒப்பிட்டு நோக்குதல் நல்லது.

முதல் இரண்டு பாடல்களும் பொச்சாப்பினது குற்றத்தினைக் கூறுகின்றன. மூன்று நான்கு, ஐந்து பாடல்கள் பொச்சாப்பு உடையார்க்கு வரும் தீமையினைத் தெளிவு படுத்துகின்றன. பொச்சாப்பு இல்லாமையினது சிறப்பினை ஆறு ஏழு பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. எட்டாம் பாடல் பொச்சாப்புக் கொள்ளாமல் செய்ய வேண்டுவன வற்றைக் கூறும். ஒன்பது பத்துப்பாடல்கள் பொச்சாப்பு இல்லாமல் இருப்பதற்கு வழிமுறைகளைத் தெளிவுபடுத்து கின்றன.

வெகுளாமை, புகழ், அறிவுடைமை, அரண் முதலிய அதிகாரங்களை முதல் நான்கு குறட்பாக்களும் நினைவு படுத்துகின்றன. வெகுளி ஒருவழியில் பகைவர்களைக் கொல்லுதலும் உண்டு. ஆனால் பொச்சாப்பு என்பது தன்னையே கொல்லும். இவ்வுண்மையினை முதற்குறட்பா காட்டுகிறது. அறிவினைக் கெடுப்பது எது என்பதை இரண்டாம் பாடல் கூறும். 'அரண்' என்பது அச்சமென்பது சிறிதும் இல்லாதவர்களுக்கே பயன்படும் என்பது நான்காம் பாடலின் கருத்தாகும். எல்லோரையும் எக்காலத்திலும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பதே பெரும் நன்மை யினைப் பயக்கும் என்ற உண்மை ஆறாம் பாடலால் அறியப்படுகின்றது.

உவகை மகிழ்ச்சியில் சோர்வு - பொச்சாப்புக் கொல்லும் புகழை - பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை ஆங்கு இல்லை பொச்சாப்புடையார்க்கு நன்கு - காவாது இழுக்கியான் - இழுக்காமை யார்மாட்டும் - அரியவென்று ஆகாததில்லை - புகழ்ந்தவை போற்றிச் செயல் - இகழ்ச் சியின் கெட்டாரை உள்ளுக - உள்ளியது எய்தல் எளிது - என்பனவெல்லாம் பொச்சாப்பு என்பதனை நீக்கவேண்டும் என்பதனையும் பொச்சாப்பு இல்லாதார் எய்தும் சிறப் பினையும் தெளிவுபடுத்துவனவாகும்.

# 55. செங்கோன்மை

அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை, ஆட்சித் தலைமையில் இருப்பவர்களுக்கு உரியது என்பதாம். எப்பக்கமும் சாயாமல் செவ்வியகோல் போல் இருப்பதால் செங்கோல் எனப்பட்டது. முதற் குறட்பா செங்கோலின் இலக்கணம் இன்னதென்று கூறுகின்றது. இரண்டாம் குறட்பாவும் மூன்றும் செங்கோலினுடைய சிறப்பினைக் கூறுகின்றன. நான்கு முதல் ஏழாம்பாடல் வரை, செங்கோலினைச் செலுத்துகிறவன் அடையும் பயன் கூறப்பட்டது. எட்டாம் பாடல் முறை செலுத்ாதவனுடைய கேட்டினைக் கூறும். ஒன்பதாம் பத்தாம் பாடல்கள் செங்கோல் செலுத்தும் வேந்தன் தீயவர்களைத் தண்டித்து ஆட்சி செய்யவேண்டுமென்பதை தெளிவுடுத்துகின்றன.

மிகச் சிறந்த நுண்பொருள்களை இந்த அதிகாரம் கூறுகின்றது. முதற் குறட்பாவில் ''கண்ணோட்டம்'' என்ற அதிகாரத்தின் குறிப்பு அறிவிக்கப்படுகிறது. நான்கு முறைகளைத் தெளிவுபடுத்துவது முதலாவது குறட்பாவாகும். இரண்டாம் குறட்பா மழையின் இன்றியமையாத் தன்மையினைச் சுட்டிக் காட்டி செங்கோலின் அரும் பெரும் கருத்தினை மெய்ப்பிக்கின்றது. அறவழிநிற்கும் அந்தணர் கூறும் மறைநூலுக்கும் அறத்திற்கும் ஆதிமூலமாக இருப்பது மன்னவன் கோல் என்பதனை மூன்றாம் குறட்பா கூறுவதாகும். ஆதியாய் என்பது காரணமாய் என்று பொருள் படுவதாகும் ''ஆதி'' என்ற சொல் 'ஆதிபகவன்' என்ற இடத்திலும் இந்தக் குறட்பாவிலுமே காணப்படுகிறது. நூலில் வேறு எங்கும் இச்சொல் காணப்படவில்லை.

குடிமக்களைத் தழுவிய ஆட்சியினை நான்காம்குறட்பா விளக்கம் செய்கின்றது. மன்னன் விருப்பப்படி மக்கள் நடத்தல் வேண்டும் என்பது கருத்தாகக் கூறப்படவில்லை.

மக்கள் வாழ்க்கையும் இயற்கையின் செயல்களும் மாறுபட்டவையல்ல - தொடர்புள்ளவைகள்தான் என்பதனை ஐந்தாம் பாடல் குறிக்கின்றது. இயற்கையின் நன்மையால் சிறந்த ஆட்சி நடக்கும் நிலத்திற்கு - நாட்டிற்கு - நன்மை கிடைக்கும் என்பது தெளிவாக்கப்பட்டது வேலினையும், கோலினையும் காட்டும் ஆறாவது குறட்பா பத்தாம் பாடல் தண்டிக்கும் முறையினை அருமையாகக் கூறுகின்றது. மன்னனை இறைவன் என்றே கூறிச் சிறப்பிக்கின்றார். அவனைக் காப்பது 'முறை' என்பதாகும். அதுவே செங்கோன்மை எனப்படும். மக்களைத் தழுவி ஆட்சி செய்யும் மன்னன், 'மாநில மன்னன்' என்று குறிக்கப்பட்டான்.

## 56. கொடுங்கோன்மை

முறை கெட்டு நடத்தும் தன்மை என்பதாகும். இது செங்கோன்மைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். முதலிரண்டு பாக்களும் கொடுங்கோன்மையினது குற்றத்தினைக் கூறுகின்றன. மூன்று முதல் ஆறுவரையுள்ள பாடல்கள் கொடுங்கோலன் அடையும் தீமையினையும் குற்றத்தினையும் கூறுகின்றன. ஏழு, எட்டுப் பாடல்கள் கொடுங்கோலன் நாட்டில் வாழும் மக்களுக்கு உண்டாகும் குற்றத்தினை எடுத்துரைக்கின்றன. கடைசி இரண்டு பாடல்களும் அவன் நாட்டில் நிகழும் குற்றத்தினைக் குறித்துக் காட்டுகின்றன.

கொலை மேற்கொண்டோரின் கொடிதே - கோலொடு நின்றான் இரவு - கூழும் குடியும் ஒருங்கிழக்கும் - செல்வத்தைத் தேய்க்கும் படை - மன்னாவாம் மன்னர்க்கு ஒளி - அளியின்மை வாழும் உயிர்க்கு - ஒல்லாது வானம் பெயல் - ஆபயன் குன்றும் - அறுதொழிலோர் நூல் மறப்பர் - என்று

கூறப்பட்டன வெல்லாம் குறிப்பால் உணர்ந்தறியத் தக்கன வாகும். கொடுங்கோன்மையின் கொடுமையினையும், அவன் நாடும், மக்களும் அடையும் துன்பத்தினையும் அவனுக்குண்டாகும் கேட்டினையும் எடுத்துக் காட்டின.

முதற் குறட்பா கொலை செய்பவனை விடக் கொடியவன் என்று கூறுகிறது. இரண்டாம் குறள், கொடுங்கோலன் வழியில் நின்று மக்களைக் கொள்ளையடிப்பவன் போன்றவன் என்று கூறுகிறது. செல்வத்தினைத் தேய்க்கும் படை எது என்பதனை ஐந்தாம் குறட்பா எடுத்துரைக்கின்றது. மழை இல்லாமை இப்பூமிக்கு எவ்வளவு கொடுமை தருமோ அதுபோல, கொடுங்கோலன் ஆட்சி மக்களுக்குத் தீமை தரும் என்பதாகும். ஒன்பதாம் குறட்பா இயற்கையும் தனது தொழிலினைச் செய்து, கொடுங்கோலன் நாட்டிற்கு நன்மை பயக்காது என்று தெளிவு படுத்துகிறது.

பூமியின் செழிப்பு பசுக்களின் செழுமையினைக் கொண்டு அறியப்படுதலாகும் என்று பத்தாம் குறட்பா உணர்த்துகிறது. நாட்டில் அறுதியிட்டுக் கூறப்படுகிற தொழிலனைத்தையும் 'அறுதொழில்' என்று பத்தாம் குறட்பா குறிக்கின்றது. உலகில் நடைபெறும் தொழில்கள் அனைத்தையும் ஆறு வகைகள் என்று கூறப்படினும் பொருந்தும். தொழிற்கலை நாட்டில் கெட்டு வருமேயானால் அந்த நாடு அழிந்து விட்டதென்றே பொருளாகும். 'ஆபயன்' என்றதால் இயற்கைவளமும், 'தொழிலோர்' என்பதால் செயற்கையான முயற்யும் குறிக்கப்பட்டன.

## 57. வெருவந்த செய்யாமை

குடிகள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும், பணிபுரிவோர் அஞ்சுவதுமான தொழில்களைச் செய்யாதிருத்தலாகும். அவ்வாறு செய்தலும் கொடுங்கோன்மை போன்று கொடிதேயாகும். 'வெருவந்த' என்றது கடுமையான அஞ்சத்தக்க செயல்களேயாகும். குடிமக்கள் அஞ்சி நடுங்கக் கூடியவை

களைச் செய்தல் கூடாது என்பதனை முதலிரண்டு பாடல்கள் கூறுகின்றன.

மூன்று முதல் ஏழாம் பாடல் வரை, மக்கள் காணுவதற்கு முடியாதபடி இருப்பதும், கடுமையான முகத்தையுடையவனாக இருப்பதும், கண்ணோட்டம் இல்லாதிருப்பதும், கடுமையான சொற்கள் சொல்லுவதும், அளவுக்கு மீறிய தண்டனை கொடுப்பதும் என்று குடிமக்கள் அஞ்சும் வினைகளைச் செய்தல் கூடாது என்பதும், செய்தால் அவன் ஆயுளும், வீரமும் செல்வமும் இழப்பான் என்பதனையும் கூறுகின்றன. எட்டாம் குறட்பா பகுதி என்று கூறப்படும் அமைச்சர் முதலாயினோர் அஞ்சும் செயல்களைச் செய்தல் கூடாதென்றும் செய்தால் வரும் குற்றத்தினையும் சுட்டிக் காட்டுகிறது. ஒன்பதாம் பாடல்தான் அஞ்சும் வினையினையும் அது செய்தால் அடையும் பயனையும் கூறும். பத்தாம் பாடல் வெருவந்த செய்தலின் குற்றத்தினைக் குறித்துக் காட்டியதாகும்.

முதற்குறட்பா, 'தகுதி என ஒன்று நன்றே' என்று 'நடுவு நிலைமை' அதிகாரத்தில் கூறப்படும் குறட்பாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தற்குரியதாகும். குற்றம் செய்வார் குற்றத்தினைக் கண்டு அஞ்சுதற் பொருட்டும், யாவரும் அஞ்சி நடுங்காதிருக்கும் பொருட்டும், 'கடிது ஓச்சி' என்று இரண்டாம் பாடல் கூறுகின்றது. வெருவந்த செய்து நடந்துகொள்ளுபவனுடைய செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாது என்பதைக் குறிக்க வேண்டி 'பேய் கண்டன்ன துடைத்து' என்று ஐந்தாம் பாடல் கூறும். உலக வழக்கில் அமைத்துக் கூறவேண்டி, 'பேய்' என்றார்.

ஏழாம் பாடல் அவனுடைய சேனையும் கெடும் என்று குறிப்பால் உணர்த்திற்று. 'அடுமுரண்' என்பது பகையினை வெல்லுவதாகிய சேனை. எனவே பலம் வாய்ந்ததனால் 'இரும்பினைத் தேய்க்கும் அரம்' என்றார். சிந்திக்க வேண்டியதாகும், மக்கள் மனம் நொந்து சொல்லுகின்ற

சொற்கள்—அரசன் கொடியன் என்று கூறும் சொற்கள், அரசனுடைய ஆயுளையே குறைத்துவிடும் என்று நான்காம் பாடல் குறிக்கின்றது. மக்கள் நெஞ்சு நொந்து சொல்லும் சொற்கள் 'இன்னாச் சொல்' என்று கூறப்பட்டது.

வெங்கோலன், இறைகடியன், இன்னாமுகத்தனன், கடுஞ் சொல்லன், எண்ணாத வேந்தன், கடுங்கோல், என்பவைகளெல்லாம் வெருவந்த செய்தொழுகும் வேந்தனின் கொடிய ஆட்சியினைக் குறிப்பனவாகும்.

## 58. கண்ணோட்டம்

தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமையாகும். இரக்கம், கருணை கொண்டிருப்பதையும் கொண்டதாகும். 'தாட்சண்யம்' என்று நடைமுறையில் கூறப்படுவதும் உண்டு. உலகியல் நடைபெறுவதற்குக் கண்ணோட்டம் இன்றியமையாததாகும். முதலிரண்டு குறட்பாக்களும் கண்ணோட்டம் என்பதன் சிறப்பினைக் கூறுகின்றன. மூன்று, நான்கு, ஐந்து பாடல்கள் கண்ணோட்டமில்லாத கண்ணின் குற்றத்தைக் கூறுகின்றன. ஆறு, ஏழு பாடல்கள் கண்ணோட்டம் இல்லாதாரது இழிவினைக் கூறுகின்றன.

எட்டாம் பாடல் கண்ணோட்டம் இருத்தல் வேண்டும் என்றும் அதனைச் செய்யுமாறும் கூறுகின்றது. தமக்குக் குற்றம் செய்தவரிடத்தும் கண்ணோட்டம் செய்தல் கண்ணோட்டமுள்ளவரிடத்தில் காணப்படவேண்டும் என்பதனை ஒன்பது, பத்தாம் பாடல்கள் தெரிவிக்கின்றன. கண்ணோட்டத்தினை சிறப்புடைய அழகு என்று முதற் குறட்பா கூறும். அரசர்க்கு இது மிகவும் இன்றியமையாததாகும். உலகநடை என்பது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் முதலியனவாகும். இதனை இரண்டாம் குறட்பா விளக்கம் செய்கிறது. மூன்றாம்

பாடல், பாடும் பாடலினையும் கண்ணோட்டத்தினையும், ஒப்பிட்டுக் காட்டிச் சிறப்புடன் அமைந்துள்ளது.

கண்ணிற்கு அணிகலம், இதுதான் என்பதனை ஐந்தாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. கண்ணோட்டமில்லாத வர்கள், மரத்திற்கு ஒப்பர் என்று கூறி இழிவுபடுத்திக் கூறுகிறது ஆறாம் குறட்பாவாகும். கண்ணோட்டம் இல்லாதவர்கள் கண்ணுடையவர்கள் அல்லர் என்றே கூறி குறிப்பாக உணர்த்துகிறது. ஏழாவது குறட்பா எட்டாவது குறட்பா 'உரிமை உடைத்து இவ்வுலகு' என்று கூறி கண்ணோட்டம் செய்பவரது உயர்ச்சியினைத் தெளிவு படுத்தி விடுகிறது.

பத்தாம் குறட்பா மிகவும் ஆழ்ந்த உண்மையினை நயம் பட உணர்த்துகிறது. கண்ணோட்டம் என்பதனை 'நாகரிகம்' என்ற சொல் குறிக்கின்றது. திருக்குறளில் இந்த ஒரு குறட்பாவில்தான் 'நாகரிகம்' என்ற சொல் காணப் படுகிறது. 'நஞ்சு உண்டு அமைவர்' என்று கூறினார். நஞ்சு என்பது உயிரைப் போக்குவது என்ற பொருளில் கூறப் பட்டது அல்ல; மிகவும் கொடிய துன்பத்தினை உண்டாக்கு வது என்பதே பொருளாகும்.

காரிகை, பண், அணிகலம், மண், மரம், உரிமை, நஞ்சு, நாகரிகம் முதலிய சொற்கள் சிறந்த கருத்துக்களை நினைவு படுத்துவனவாக உள்ளன.

## 59. ஒற்றாடல்

அதாவது, நண்பர், பகைவர், இருவகையிலும் அல்லா தார் என்னும் முத்திறத்தாரிடமும் நிகழ்வனவற்றை அறிதற்கு ஒற்றரை ஆளுதல் என்பதாகும். ஆட்சி செலுத்து வோர்க்கு மிகவும் இன்றியமையாத பகுதி ஒற்றர்களாகும்.

"தெரிந்து வினையாடல்" என்பது போல் இந்த அதிகாரமும் முடிகிறது. முதற்குறட்பா ஒற்றினது இலக்கணத்தைக் கூறுகின்றது. ஒற்றினது சிறப்பினையும் விளக்குகின்றது. இரண்டாம் குறட்பா ஒற்றினாலாய பயனைக் கூறுகின்றது. மூன்றாம் குறட்பா ஒற்றினாலாய தொழில் செய்யா விட்டால் வரும் குற்றத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

நான்கு, ஐந்து, ஆறு, ஏழு குறட்பாக்கள் ஒற்றினது விரிவான இலக்கணத்தையும் முறைகளையும் தெளிவு படுத்துகிறது. கடைசி மூன்று குறட்பாக்கள் ஒற்றரை ஆளும் திறத்தினையும், அவரால் நிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தால் சிறப்புச் செய்யுமாறும் கூறுகின்றன. ஒற்றினையும், நீதி நூல்களையும், ஊனக்கண்ணும் ஞானக் கண்ணுமாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது முதற் குறட்பாவின் குறிப்பாகும். புகழமைந்த நீதிநூல்களை 'உரைசான்ற நூல்' என்று கூறினார்.

வேந்தனுடைய தொழிலுக்கு ஒற்றர்கள் இன்றியமையாதவர்கள் என்பதனை இரண்டாம் குறட்பா தெளிவு படுத்துகிறது. ஒற்றர்கள் இல்லாதவன், இல்லாத மன்னன் வெற்றியடைதல் கிடையாதென்று மூன்றாம் குறட்பா கூறும். தொழில் செய்பவர்களை முன்னதாக வைத்து நான்காம் குறட்பா கூறுவது மிகுதியும் சிந்திக்கத் தக்கதாகும். ஒற்றர், தொழில் செய்பவன் தோற்றம், மிகவும் கவனிக்கத்தக்கதாகும். பிறர் பார்த்துச் சிறிதும் ஐயுறாத வடிவத்தில் அவன் இருக்கவேண்டும். இதனை ஐந்தாம் குறட்பா கூறும். எப்படிப்பட்ட உருவத்தில் செல்லுதல் நல்லது என்பதனை ஆறாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது.

மன்னவன்கண்— வல் அறிதல்— ஆராய்வது— வல்லதே ஒற்று— சோர்விலது ஒற்று— ஐயப்பாடு இல்லதே— என்று வருவனவும் பிறவும் ஒற்றினது சிறப்பினையும் பயனையும் நன்கு விளக்குவனவாகும். பொதுமக்களுக்குத் தெரிந்து

கொள்ளாதபடி ஒற்றர்கள் வைக்கப்பட வேண்டியவர்கள் ஆனபடியால், மன்னன் பலரும் அறியும்படி அவர்கட்குச் சிறப்பு செய்தல் கூடாது என்று பத்தாம் குறட்பா குறிப்பாக உணர்த்துகிறது.

## 60. ஊக்கம் உடைமை

மனம் மெலிதல் அடையாமல் தொழில் செய்யுங்கால் கிளர்ச்சி உடையவர்களாக இருத்தலாகும். 'உடைமை' என்ற அடைமொழியுடன் இருக்கும் பத்து அதிகாரங்களில் இதுவும் ஒன்றாகும். வினை செய்பவனுக்கு இவ்வியல்பு மிகவும் இன்றியமையாததாகும். முதல் நான்கு குறட்பாக்களிலும், ஒருவன் பெற்றிருக்கும் செல்வத்தினைவிட அதனைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த ஊக்கம் சிறப்புடையதாகும் என்று கூறுகின்றன. ஐந்து, ஆறு, ஏழு பாடல்கள் ஊக்கம் உடையவர்களது உயர்ச்சியினைக் கூறு கின்றன. கடைசி மூன்று குறட்பாக்களும் ஊக்கம் இல்லா தாரது இழிவினை விளக்குவனவாகும்.

ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய மூன்று குறட்பாக்களும் சிறந்த உவமைகளைக் காட்டி ஊக்கமுடைமையின் அரிய பெருமையினைத் தெளிவுபடுத்துகின்றன. உடையர் எனப்படுவது ஊக்கம்—உள்ளம் உடைமை—அல்லாவார்—உள்ளத்தனையது உயர்வு—உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்— சிதைவிடத்து ஒல்கார்— உள்ளம் இலாதவர் எய்தார்—உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை, என்று கூறப்பட்டன யாவும் என்றென்றும் மனதில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியனவாகும். இவைகள் மிகச் சிறந்த எண்ணங்களை உண்டாக்குவனவாகும்.

பத்தாம் பாடல் ஊக்கம் இல்லாதவர்களை மரம் என்று கூறியது சிந்திக்கத் தக்கதாகும். வடிவத்தால் மக்கள்

போலக் காணப்பட்டாலும் ஊக்கமில்லாததால் மக்களாகக் கருதப்படார் என்று கூறினார். "உறுப் பொத்தன் மக்கள் ஒப்பு அன்றால்" இல்லாதிருத்தலாகும். ஊக்கமுடையவர் களுக்கும் ஒரோவழி குணவயத்தான் மடிவருதலும் உண்டு, அதனை வராதபடி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். முதல் நான்கு பாடல்களும் மடியின் தீமையினைக் கூறுகின்றன. ஐந்து முதல் எட்டாம் பாடல் வரை மடியினால் வரும் குற்றங்கள் கூறப்பட்டன. கடைசி இரண்டு பாடல்களும் மடிமை இல்லாதவன் அடையும் பயனைத் தெளிவுபடுத்து கின்றன.

தான்பிறந்த குடியைக் குன்றாவிளக்கம் என்று முதற் குறட்பா கூறும். உலகநடை உள்ளளவும் இடையறாது தன் னுடன் பிறந்தாரை விளக்குதலால் 'குடி' குன்றாவிளக்கம் என்று குறிக்கப்பட்டது. தாமத குணத்தால் உண்டாவதால் 'மடி' மாசு என்று கூறப்பட்டது. மாசு ஊர மாய்ந்து கெடும்—குடிமடியும் தன்னினும் முந்து—குடிமடிந்து குற்றம் பெருகும்—கெடு நீரார் என்ற குறட்பாவும், "மக்களே போல்வர்'' என்ற குறட்பாவும் சிந்தனைக்குரியன. ஐந்தாம் பாடலில், மலர் என்றது, மலரின் தாளினையாகும் நீர் மிகுந்திருந்தால் மலரின் தாளும் நீண்டிருக்கும் என்பதாகும். எத்தகைய துன்பத்தினையும் தாங்கிப் பெருமையுடன் நிற்பது யானையின் குணமாகும். இதுவே ஏழாம் பாடல் கூறுவதாகும். புலி, யானையினை ஒப்பிடும் போது மிகச் சிறிய உருவம் உள்ளதாக இருந்தாலும் ஊக்கம் அதற்கு வலிமையினைத் தந்துவிட்டது என்று ஒன்பதாம் பாடல் கூறுகிறது. உள்ளத்தின் உறுதிப்பாட்டைக் கூறும்போது ஏழாம் பாடல் களிறு என்றும், உருவத்தினைக் காட்டும் போது ஒன்பதாம் பாடல் யானை என்றும் குறித்தன.

## 61. மடிஇன்மை

தொழிற் செய்யுங்கால் சோம்புதல்; காமக்கலன்—மாண்பயன் எய்தல் அரிது—இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர்—அடிமை புகுத்திவிடும்—என்று கூறப்பட்டன வெல்லாம், சோம்பல் என்னும் மடியினையும், அதனை உடையவனையும் விளக்கம் செய்கின்றன. மிகவும் கொடிய மடியென்பதாகும். அதனையுடையவன் மிகவும் இழிந்த நிலையினை அடைவான். 'குடிமை' 'குடிசெயல் வகை' ஆகிய அதிகாரங்களும் இங்கு சிந்திக்கத் தக்கன.

'நெருப்பை நெருப்பாகவே கருதுக' என்று கூறுவது போல, மடியினை விட தீயது வேறெதுவும் இல்லையாத லால், அப்பெயரையே வைத்து, 'மடியை மடியா ஒழுகல்" என்று இரண்டாம் பாடல் கூறுகின்றது. மடி என்பது அழிவினைத் தருவது. அதனை மனதில் வைத்து நடக்கின்றான் ஆனபடிதால் அவனை மூன்றாம் பாடல், பேதை என்று குறிப்பிட்டது. ஐந்தாம் பாடல் மரக்கலம் ஒன்றினைக் கூறுகிறது. இந்த மரக்கலம், காமக்கலன் என்று கூறப்பட்டது. ஐந்தாம் பாடல் கூறும் நான்கு தீய குணங் களுடையவன் அழிவான் என்பது உறுதியேயாகும். நண்பர் களும் ஏளனம் செய்து பேசுவர் என்று ஏழாம் பாடல் குறிக் கிறது. பிறர்க்கு அடிமையாக ஒருவன் வாழ்வதற்குக் காரணம் மடி என்னும் குணமேயாகும். இக்கருத்தினை எட்டாம் பாடல் உணர்த்தும். சோம்பலுள்ளவர்கள் நிறைந்த நாடு அடிமைப்பட்டுக் கிடக்கும் என்பது குறிப்பாகும்.

ஒருவன் மடிமைக் குணத்தினை மாற்றிவிட்டானே யானால் அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் உடனே கெட்டுவிடும் என்பதனை ஒன்பதாம் பாடல் விளக்கம் செய்கிறது. மடியென்பது இல்லாத மன்னனுடைய சிறப்பினைப் பத்தாம் குறட்பா மிகவும்

உயர்வாகத் தெளிவுபடுத்துகிறது. மன்னர்கள் எக்காலத்தி லும் விழிப்புணர்ச்சியுடனே இருக்க வேண்டும். அவர்களே குடிமக்களின் தலைவர்கள் ஆவார்கள். பத்தாம் குறட்பா வில் கூறிய கருத்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்றா கும். அடியால் அளந்தவன் கடந்த பரப்பு முழுவதையும் மடியிலா மன்னவன் அடைய முடியும் என்று கூறுகிறது. இக் குறட்பாவில், 'தாவியது' என்பது 'தாயது' என்று குறைந்து நின்றது. உலகவழக்கில் அமைத்து ஆசிரியர் இதனைக் கூறி, மடியிலாதவன் சிறப்பினை எடுத்துக் காட்டினார்.

உலக முழுதும் அடியால் அளந்தவன் தான் கடந்து சென்ற பரப்பு முழுதுமே மடியில்லாதவன் முயற்சியால் அடைவான். உலகத்தினை அடியால் அளந்தவன் என்பது உலகவழக்கில் காண்பதாகும்.

## 62. ஆள்வினையுடைமை

இடைவிடாத மெய்ம் முயற்சியுடையனாதல் என்பத னைக் கூறுவதாகும். அது ஆளும் தொழிலெனக் காரியத் தின் மேல் வைத்துக் கூறப்பட்டதாகும். முதன் மூன்று பாக்களும் முயற்சியினது சிறப்பினைக் கூறுகின்றன. நான்காம் பாடல் முயற்சி இல்லாதவனுடைய குற்றத் தினைக் கூறுகின்றது. முயற்சியுடையவனது நன்மையினை ஐந்தாம் பாடல் கூறும். ஆறாவது, ஏழாவது பாடல்கள் முயற்சி உடையவனைப் பற்றியும் அது இல்லாதவனைப் பற்றியும் தெளிவுப்படுத்துகின்றன. கடைசி மூன்று பாடல் களும் தெய்வத்தால் துன்பம் நேர்ந்தபோதும் முயற்சி விடப் படக் கூடியதன்று என்பதனைச் சிறப்பாக எடுத்து விளக்கு கின்றன.

தமது சிறுமை நோக்கி எக்காலத்திலும் மலைத்தல் கூடாது. விடாது முயல்வோர் பெரியராவார். ஆகவே அரிதானதும் எளிதாகவே முடியும். இதனை முதற்குறட்பா எடுத்துக்காட்டும். இரண்டாம் குறட்பா இந்த உலகம் யாரை கைவிட்டுவிடும் என்று கூறுகிறது. முயற்சியுடன் தொழில் செய்யாது விட்டவர்களை இந்த உலகம் கைவிட்டு விடும் என்பதாகும்.

முயற்சியினால் பொருள் கைகூடும். ஆதலால் பிறர்க்கு உதவிபுரிபவரும் அவர்களேயாவார்கள் என்பதனை மூன்றாம் குறட்பா கூறுகின்றது. நான்காம் குறட்பா பேடியானவள் கையில் வைத்திருக்கும் வாளினைக் குறித்துக் காட்டி உண்மையினை நிலை நிறுத்திக் காட்டும். முயற்சி யுடையவனே துன்பத்தினைத் துடைத்தூன்றும் தூண் என்று ஐந்தாம் பாடல் கூறும். செல்வத்தினைத் திருமகள் —தாமரையில் இருப்பவள் என்றும், வறுமையினை, கரிய சேட்டை, மூதேவி என்றும் கூறுவது உலகவழக்காகும். இவர்கள் முறையே முயற்சியுள்ளவனிடத்திலும், இல்லாத வனிடத்திலும் இருப்பர்களாவார்கள் என்பது, ஏழாம் பாடலின் கருத்தாக அமைந்துள்ளது. செல்வப் பெருக்கும் வறுமையும் உண்டாவதற்குக் காரணம் முயற்சியும், முயற்சி இன்மையுமே அடிப்படைக் காரணங்களாகும் என்பது தெளி வாக்கப்பட்டது.

உலகம் பழிக்காதபடி நடந்து கொள்ள வேண்டுமென்று எட்டாம் குறட்பா விளக்கம் செய்கிறது.

ஊழ்வினை உதவாவிட்டாலும் முயற்சியால் பலன டையலாம் என்பதனைக் கடைசி மூன்று பாடல்களும் குறித்துக் காட்டுகின்றன. எட்டாம் பாடலில் காணப்படும் 'பொறி' என்பது விதி என்பதனைக் குறிக்கும். ஊழ், தெய்வம், பால், விதி, பொறி, என்பன ஒரே பொருளினைக் குறிக்கும் சொற்களாகும். 'பொறிஇன்மை' என்று எட்டாம்

குறட்பா கூறுகின்றது. இயற்கை என்றும், தெய்வம் என்றும் குறிக்கப்படுகின்ற ஊழின் சார்பு இருந்தால்தான் செயல்கள் சிறந்து விளங்கும்—நல்ல பயன் உண்டாகும் என்றாலும், முயற்சி முயன்ற அளவு பயன்தரும் என்பது பேருண்மையாகும். 'ஒருவன் முயற்சி செய்கின்றானா இல்லையா' என்பதைத்தான் உலகம் கூர்ந்து கவனிக்குமே யல்லாமல் அவனுக்கு ஆதரவாக ஊழ் இருக்கின்றதா இல்லையா என்று உலகம் பார்த்துக் கொண்டிருக்காது. ஆள்வினையென்னும் முயற்சியில்லாதவனை உலகம் பழிக்கும் என்று எட்டாம் பாடல் கூறி ஆகவே பழிக்கு அஞ்சுதல் வேண்டும் என்று கூறி ஆள்வினையாளனாக இருத்தல் வேண்டும் என்று குறித்தது.

ஒன்பதாம் குறட்பா முயற்சியின் பலனை எடுத்துக் காட்டிச் சிறப்பிக்கின்றது. ஒரு செயலினைச் செய்கின்ற போது தெய்வத்தின் துணை இருந்து விடுமேயானால் அளவிற்கு மீறிய பயனைத் தரும். தெய்வம் என்பது, ஊழ்வினை இயற்கை என்பதனைக் குறிக்கும். 'ஊழ்' என்ற அதிகார விளக்கத்தினைக் காண்க.

ஊழ்வினை இல்லாவிட்டாலும், முயற்சி பலனளிக்காமல் போகாது, முயன்ற அளவு பயனைத் தந்தே தீரும். 'தெய்வத்தான் ஆகாது' என்பதனைச் சிந்தித்தல் வேண்டும். முயற்சி ஏற்ற அளவு கொடுக்கும் என்பதனை 'கூலி' என்ற சொல் விளக்குகின்றது. பத்தாம் குறட்பா 'ஊழ்' என்பதனைக் காட்டி, முயற்சியின் திறத்தினைக் கூறுவதாகும். 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்ற இந்தக் குறட்பா, 'நல்ஆறு எனினும் கொளல் தீது', 'ஞாலம் கருதினும் கைகூடும்', 'கூற்றம் குதித்தலும் கைகூடும்', 'கூற்றுடன்று மேல்வரினும் கூடி' என்று வருகின்ற குறட்பாக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தற்குரியதாகும்.

விடாது முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பது இக்குறட்பாவின் திரண்ட கருத்தாகும். 'ஊழ்'

மிகுந்த வலிமையுடையதேயாகும். அதனையும் புறங் காணுதல் முடியும் என்பது கூறப்பட்டது. 'ஊழ்' என்பதும் 'தெய்வம்' என்பதும் 'இயற்கை' என்பதும் 'விதி' என்பதும் ஒரே பொருளினைக் குறிப்பதாகும். இயற்கையின் செயல் எல்லா காலத்திலும் எல்லா இடத்திலும் ஒரே வலிமை யுடன் இருப்பதன்று. இயற்கையின் செயல் குன்றி முயற்சி யின் செயல் மேம்பட்டிருக்குமேயானால் முயற்சி வெல்லும். இயற்கையின் செயல் மிகுதிப்பட்டு முயற்சியின் வன்மை குறைந்திருக்குமேயானால் இயற்கைவெல்லும்.

மழைபெய்து ஆறுபோல் தண்ணீர் ஓடிக்கொண்டி ருக்குமேயானால் அதனைக்கடக்க முடியும். இயற்கையினை முயற்சி வென்றது. பெரும் வெள்ளமாகத் தண்ணீர் ஓடுமேயானால் கடக்க முடியாது. இயற்கை வென்றது. ஆதலால் மனிதஅமைப்பில்—வாழ்வில்—இயற்கையென்னும் 'ஊழ்' வன்மை மிக்கதாக இருக்கும் காலமும், முயற்சி அதிக வலிமையுடையதாக இருக்கும் காலமும் அறிந்தறிய முடியாததாகையால் விடாமல் முயற்சி செய்து கொண்டே இருத்தல் வேண்டும் என்பதனை பத்தாம் குறட்பா உணர்த்திற்று.

## 63. இடுக்கண் அழியாமை

தொழிலின் முயற்சியினை மேற்கொண்டிருக்கும்போது, இயற்கையினாலாவது, பொருளின்மை காரணமாகவாவது துன்பம் வந்தபோது அதற்கு மனம் கலங்காமல் இருக்க வேண்டும் என்பதாகும். 'இடுக்கண்' என்பது துன்பம் என்பதைக் குறிக்கும். மனங்கலங்குதல் கூடாது என்பதை 'அழியாமை' என்பது குறிக்கும். 'அழியாமை' என்று வேறு எந்த அதிகாரமும் முடியவில்லை. காமத்துப் பாலில், 'அழிதல்' என்று இரண்டு அதிகாரங்கள் முடிகின்றன. அவை 'நிறை அழிதல்' 'உறுப்பு நலன் அழிதல்' என்பன வாகும்.

'இடுக்கண் அழியாமை' என்ற இந்த அதிகாரத்தின் முதலிரண்டு குறட்பாக்களும், துன்பம் உண்டான போது மனங்கலங்கி அழியாதிருக்க வேண்டுமென்றும் அதற்கு வழியினையும் கூறுகின்றன. மூன்று நான்கு ஐந்து பாடல் களும் தொடர்ந்து துன்பங்கள் வரவும் கூடும் என்பதைக் குறிக்கின்றன.

ஆறாம் குறட்பா, பொருள் குறைந்தபோது துன்புறுதல் கூடாது என்று கூறுகின்றது. 'ஊழ்' என்ற அதிகாரத்தில் கூறப்படும் ஒன்பதாம் குறட்பாவினையும் இத்துடன் ஒப்பிட்டுக் காணலாம். கடைசி நான்கு குறட்பாக்களும் மெய்வருத்தத்தால் துன்பம் உண்டான போது, அதற்கு மனம் கலங்காதிருக்க வேண்டுமென்றும், அதற்கான வழி யினையும் எடுத்து விளக்குகின்றன. நான்காம் குறட்பா, சேற்று நிலத்தில் சுமையேற்றிய வண்டியினை இழுத்துச் செல்லும் எருதினைக் காட்டி முயன்று தொழில் செய்ய வேண்டும் என்பதனைத் தெளிவு படுத்துகிறது. 'இடுக்கண்' வந்தபோது மனம் கலக்கம் அடைந்துவிட்டால், அறிவும் இருளடைந்துவிடும். மேற்கொண்டு முயற்சி செய்ய முடியாமல் போய்விடும். ஆதலால் 'நகுக' என்று கூறிய முதற்குறட்பா, இடுக்கணை நீக்கும் வழியினைக் கூறிற்று என்பதாகும்.

அறிவுடையான் மிகவும் சிறந்தவனாவான். வெள்ளத் தினைப்போல் துன்பம் வந்தாலும் அது அறிவுடையவனை ஒன்றும் செய்துவிட முடியாது. அவன் மனதில் நினைத் தாலே இடும்பை கெட்டுவிடும். இரண்டாம் குறட்பா நன்கு விளக்கம் தருகிறது. மூன்றாம் குறட்பா இக்கருத்தினை நயம்பட எடுத்துக் காட்டுகிறது. நான்காம் குறட்பா உவமையுடன் இவ்வுண்மையினை மெய்ப்பிக்கின்றது. துன்பம் அடுக்கடுக்காக வருதல் உண்டு என்பதனைக் காட்டி அப்படியே வந்தாலும் மனங்கலங்காத அறிவுடையான் அவைகளை அழித்து விடுவான் என்று ஐந்தாம் குறட்பா

கூறுகின்றது. பொருள் குறைந்தபோது ஒருவன் நினைக்க வேண்டியதை ஆறாம் குறட்பா குறித்துக் காட்டுகிறது. ஏழாம் குறட்பா 'இந்த உடம்பு துன்பங்கள் தாக்குவதற்கு இலக்கான இடமாகும்' என்பதை உணர்ந்து, இடுக்கண் வந்தபோது கலங்கவே கூடாது. இடும்பையினை, இயல்பாக வருவதொன்று என்று அறியும் மனப்பண்பாட்டினைக் கொள்ளுமாறு எட்டாம் குறட்பா கூறுகின்றது. இன்பத்தினை மிகமிக அதிகமாக நுகருகின்ற மனம் படைத்தவனே துன்பம் வந்தபோது கலங்குவான் என்றும், அவ்வாறு கொள்ளாதவன் எந்தத் துன்பத்திற்கும் வருந்த மாட்டான் என்பதை ஒன்பதாம் குறட்பா கூறுகின்றது. பத்தாம் குறட்பா அரியதோர் கருத்தினை வெளியிடுகின்றது. நினைக்கின்ற மனம் படைத்துவிட்டால், பகைவர்களும் போற்றும் சிறப்பினைப்பெறுவான் என்று பத்தாம் குறட்பா குறிக்கிறது.

பொருட்பாலில்—'அரசியல்' இத்துடன் முடிகின்றது. அடுத்துக் கூறப்படுவது 'அங்கஇயல்' என்பதாகும்.

---

# அங்க இயல்

## 64. அமைச்சு

அமைச்சனாக இருப்பவனுடைய தன்மையினைக் கூறுவதாகும். அதாவது அவனிடத்தில் இருக்க வேண்டிய குணம், ஆற்றல், செயல் முதலியனவற்றை விளக்கிக் கூறுவதாகும். முதல் ஐந்து குறட்பாக்களும் அமைச்சரது குணத் தன்மையினை விளக்குகின்றன. ஆறாவது குறட்பா அமைச்சரது சிறப்பினைக் கூறுகிறது. ஏழு, எட்டு குறட்பாக்கள் அமைச்சரது செயலினைக் குறிக்கின்றன. ஒனபது, பத்து பாடல்கள் அமைச்சருள் விலக்கப்பட வேண்டியவர்களைக் காட்டுகின்றன.

காலமறிதல், கல்வி, அறிவுடைமை, ஆள்வினையுடைமை சொல்வன்மை, அறன்வலியுறுத்தல் முதலிய அதிகாரங்களின் திரண்ட கருத்துரைகள் இந்த அதிகாரத்துடன் வைத்து எண்ணப்பட வேண்டியவைகளாகும். முதற்குறட்பா நான்கு வகைகளை எடுத்துக்காட்டி அமைச்சர் கடமையினைக்கூறும். அதுவே போல இரண்டாம் குறட்பாவும் அமைச்சரின் ஐந்து கடமையினைக் கூறுகின்றன. மூன்றாம் குறட்பாவும் அவ்வாறே கடமையினையும் கூறுகின்றது. செயல்முறையினையும் நான்காம் குறட்பாவும் அவ்வாறே அறிவுறுத்துகிறது. சொல்வன்மை அறிவையும் உடன்இணைத்து ஐந்தாம் பாடல் கூறுகின்றது. நூலறிவினையும் மதிநுட்பத்தினையும் ஆறாம் பாடல் குறிக்கின்றது. மதிநுட்பம்—அதிநுட்பம் கல்லாதான் ஒட்பம் வினைத் திட்பம் என்பவைகளைச் சிந்தித்தறிந்து பொருள் வேறுபாடுகளை உணர்தல் சிறப்பாகும்.

நூல் நெறியேயானாலும், உலக நெறியோடு பொருந்தாதனவற்றைச் செய்யாதே; செய்தால் அது பழிப்புக்கு இடமாகும் என, இயற்கை அறிவால் பயனை ஏழாம் குறட்பா கூறிவைக்கின்றது. இத்துடன், 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" 'எவ்வது உறைவது உலகம்'—நுண்ணிய நூல் பல கற்பினும் என்று தொடங்கப் பெறுகின்ற குறட்பாக்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒன்பதாம் குறட்பா 'எழுபது கோடி' என்று உலக வழக்கில் வைத்துக் காட்டிற்று.

'மாண்டது அமைச்சு' என்று இரண்டு குறட்பாக்களும், 'வல்லது அமைச்சு' என்று இரண்டு குறட்பாக்களும் குறிப்பிடுகின்றன. சிறப்பினை அறிவித்தனவாகும். திறன் அறிந்தான், யாவுள முன்னிற்பவை—இயற்கை அறிந்து செயல்—கூறல் கடன்—என்பதெல்லாம் அமைச்சரின் மேலான அறிவினையும் கடமையினையும் உணர்த்துவனவாகும். எண்ணிறந்த பகைவர்களைவிட தீமையுண்டாக்கும் அமைச்சர்களும் இருத்தல் கூடும் என்பதனை ஒன்பதாம் பாடல் குறித்துக் காட்டுகிறது.

## 65. சொல்வன்மை

அமைச்சியல் நடப்பதற்குக் காரணமான சொற்களைக் கூறுவதாகும். 'ஒரு தலையாய் சொல்லும்வல்லது அமைச்சு' என்பது விரித்துரைக்கப்படுகிறது என்பதாகும். 'சொல் வன்மை' அமைச்சர்களுக்கு இன்றியமையாததாகும் என்ப தனை முதலிரண்டு குறட்பாக்களும் கூறுகின்றன. சொல்லி னது இலக்கணம் மூன்றாம்பாடலில் கூறப்படுகிறது. நான்கு ஐந்து, ஆறாம் பாடல்கள் சொல்ல வேண்டிய முறைகளை விளக்குகின்றன.

ஏழாம் பாடல் அருமையான மூன்று தன்மைகளைக் குறிப்பிடுகின்றது. இம் மூன்றினையும் உடையவனை மாற்றாரால் ஒன்றுமே செய்யமுடியாது என்பதாகும். அத்தகைய வல்லாரின் சிறப்பினையும் ஆற்றலினையும் எட்டாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. கடைசி இரண்டு பாடல்களும் சொல்வன்மை இல்லாதாரது இழிவினைக் கூறும். அமைச்சர்களுக்கு என்று மட்டுமின்றிப் பொதுப்பட அனைவர்க்கும் இவ்வதிகாரம் பொருந்துமெனக் கொள்ளு தல் வேண்டும்.

வேந்தன், மன்னன் என்பன போன்ற சொற்கள் சில அதிகாரங்களில் காணப்படும். சிலகுறட்பாக்களில் சொல்லப் படும் அவைகள் சிறப்பாகத் தலைமையான மன்னர்க்கும் பொதுவாக அனைவர்க்கும் என்று கொள்ளுதல் வேண்டும். அதுவே போன்று அமைச்சு—அமைச்சர், என்ற சொற்கள் சில அதிகாரங்களில் காணப்படும்.

அவைகளிலும் சிறப்பு—பொது என்று கொள்ளுதல் வேண்டும். சில அதிகாரங்களில் காணப்படும் குறட்பாக் களில் மன்னனைக் குறிப்பதோ, அமைச்சரைக் குறிப்பதோ இல்லாமல் இருக்கும். அவ்வாறு கூறுகின்றபோது அனைவர்க்குமே பொருந்தும் என்று கொண்டறிதல் வேண்டும்.

'உணரவிரித்துரையாதார்'—'சில சொல்ல தேற்றாதவர்" என்று குறித்துப் பேசும்—சொல்லும் வன்மையில்லாதவர் களை ஒன்பதாம்—பத்தாம் பாடல்கள் குறித்தன. 'நாறா மலர்' என்று உவமை காட்டிய பத்தாம் பாடல் நன்கு சிந்தித்து உணர வேண்டியதாகும். நாநலம்—ஓம்பல்—அபிணிக்கும், ஊங்குஇல், இன்மை அறிந்து, பயன் கோடல் அரிது, வல்லார்ப் பெறின்—என்பவைகளை நினைவில் நிறுத்தி அறிவிக்கப்பட்ட கருத்துக்களை நன்கு புரிந்து அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

## 66. வினைத்தூய்மை

செய்யப்படும் வினைகள் பொருள் மட்டும் தருவதென்று அல்லாமல் அறமும் புகழும் பயப்பனவாக இருக்க வேண்டும் என்பதாகும். சொல்லேயன்றி செயலும் தூய்மையாக இருக்கவேண்டும். முதல் ஐந்து பாடல்களும் பாவமும் பழியும் உண்டாக்கும் தொழில்களைச் செய்யக் கூடாது என்பதைக் கூறுகின்றன. ஆறாம் பாடல் தூய்மையானதாக இருத்தல் வேண்டும் என்பதற்கு ஈன்ற தாயின் பசியினைக் காட்டி உண்மை உணர்த்திற்று.

கடைசி நான்கு பாடல்களும் தூய்மையானதாக தொழில் புரிதல் வேண்டும் என்பதற்குக் காரணத்தைக் காட்டி விளக்கம் கூறுகின்றன. 'வேண்டிய எல்லாம் தரும்' என்று கூறி முதற் குறட்பா சிறப்பிக்கின்றது. 'புகழொடு நன்றிபயவாவினை'யை எப்போதும் செய்தலாகாது என்று இரண்டாம் பாடல் கூறும்.

'ஒளிமாழ்கும் செய்வினை'யை எப்போதுமே நீக்குதல் வேண்டும் என்று இரண்டாம் பாடல் கூறும். 'ஓவுதல்' என்பது குறைந்து 'ஓஒதல்' என்று ஆயிற்று. நீக்குதல் வேண்டும் என்பதாகும். நான்காம் குறட்பா நடுக்குற்ற

காட்சியவர் என்று காட்டி, அவர்கள் இழிவந்த வினைகளைச் செய்யமாட்டார் என்று பகர்கின்றது. இப்படிப் பட்ட செயலினைச் செய்திருக்கக் கூடாது' என்று, பின்னே வருந்துபவர்களுமுண்டு. அப்படிப்பட்ட செயல்களைச் செய்யவே கூடாது என்று ஐந்தாம் பாடல்கூறுகின்றது. அப்படிச் செய்துவிட்டாலும் மீண்டும் செய்யாதே என்று வற்புறுத்துகிறது.

தாய் பசித்திருப்பதை மகன் கண்டு பொறுத்திருக்க மாட்டான். தீயகாரியம் செய்தாலும் பொருள் சேர்த்து அவள் பசியினைப் போக்க நினைப்பான். அப்படிப்பட்ட நேரத்திலும் பழிக்கு ஆளாகும் தொழில்களைச் செய்யாதே என்று ஆறாம் பாடல் தெளிவுப்படுத்துகிறது. பொருளீட்ட வேண்டுமென்று தீயபல செய்து சேர்த்து வைத்திருப்பவனை விட, சான்றோன் என்று பெயர் தேடி வறுமையாளனாக இருப்பது மேலானதாகும்.

அவனைவிட-அவன் சேர்த்தபொருளைவிட சான்றோர் வறுமையே உயர்ந்ததென்று ஏழாம் பாடல் விளக்குகிறது. மற்றவர்களை அழும்படிவைத்துப் பொருள் சேர்த்தவன் பொருளெல்லாம் அவன் காலத்திலேயே அவனை அழும்படி செய்து விட்டுப் போய்விடும். நல்வழியில் ஈட்டியபொருள் அவனை விட்டு நீங்கினாலும் பிறகு அவனிடம் வந்தேதீரும்.

பத்தாம்பாடல் பசுமையான ஈரமான மண்பாத்திரத்தைக் காட்டி உண்மை உணர்த்துகின்றது. ஈரமண்பாத்திரம் நிலைத்திருக்காது. அப்படி இருக்க அந்தப் பாத்திரத்தில் நீரைவிட்டால் என்ன ஆகும்? நீரும் பாத்திரமும் அழியும் மறையும். அதுவே போல, தீயவழியில் பொருள்ஈட்டிய வரும் பொருளும் போகும் என்பதாகும்.

வினைநலம் - புகழொடு நன்றிபயவாவினை - ஒளிமாழ்கும் செய்வினை - இளிவந்த - எற்றென்று இரங்குவ - பழிக்கும் வினை - பழி மலைந்து - கடிந்த - அழக்கொண்ட-சலத்

தால் - என்பவைகள் எல்லாம் தூய்மையல்லாத வினைகளையும், அவைகளைச் செய்தல் கூடாது என்பதனையும், செய்வதால் வரும் குற்றங்களையும், செய்பவன் அடையும் பழியினையும் குறித்து உணர்த்துகின்றன.

## 67. வினைத் திட்பம்

தூய வினைகளைச் செய்வாருக்கு இருக்க வேண்டிய மனத் திட்பத்தினை - மனத் திண்மையினைக் கூறுவதாகும். 'வினைத் திட்பமாவது' இன்னது என்பதனை முதற்குறட்பா விளக்குகின்றது. இரண்டு மூன்று குறட்பாக்கள், திட்பத்தின் வகைகளைக் கூறுகின்றன. அத்திண்மையின் அருமையினை நான்காம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. ஐந்தாம் பாடல் அதன் சிறப்பினை விளக்கம் செய்கிறது.

வினைத்திட்பம் உடையவர்கள் அடையும் பயனை ஆறாம்பாடல் தெளிவாக்குகின்றது. ஏழாம் பாடல் அத்தகையவர்களை அறியும் வழியினை எடுத்துக் காட்டுகிறது. எட்டாம் பாடலும் ஒன்பதாம் பாடலும் அவர்கள் வினை செய்யும் தன்மையினைக் கூறுகின்றன. பத்தாம் பாடல் வினைத்திட்பம் இல்லாதாரது இழிவினைக் குறித்துக் காட்டுகின்றது.

எப்படிப்பட்ட திட்பங்களை உடையவர்களாக இருந்தாலும் இந்த உலகம், வினைத்திட்பம் இல்லாதவர்களை விரும்பாது என்று பத்தாம் குறட்பா அரிய உண்மையினை உணர்த்திவிட்டது. உழைப்பே இன்றியமையாதது என்பது குறிக்கப்பட்டது. உலக மக்கள்-உயர்ந்தோர், மதிக்கமாட்டார்கள் என்பதுமாகும். 'வேண்டாது உலகு' என்று குறட்பா தெளிவுகாட்டி முடிகின்றது.

ஏழாம் பாடல் பெரிய தேர் ஒன்றினைக் காட்டி வினை செய்பவர்களின் சிறப்பினை மெய்ப்பிக்கிறது. பெரிய தேரினைத் தாங்கிக் கொண்டிருப்பது அச்சு ஆணி என்ப

தாகும். அச்சு என்பது உருள்கோத்த மரமாகும். அந்த அச்சு 'இனி தப்பாது' என்று துணிந்தவுடன் வினையினைச் செய்துவிடல் வேண்டும். தயங்கி நீட்டித்தல் கூடாது. அது தீது; காலம் தாழ்த்துவதால் பகைவர்கள் அறிந்து கொள்ளவும் கூடும்.

ஆதலால் உடனே செய்க; இக்கருத்தினையெல்லாம் முதற்குறட்பா விளக்குகிறது. சில செயல்களை நீட்டித்தே செய்தல் வேண்டும்; சிலவற்றை நீட்டியாவது செய்தல் வேண்டும். அறிவு ஆற்றல்களினால் ஆராய்ந்து அறிதல் வேண்டும். இவ்வுண்மையினை இரண்டாம் பாடல் தெளிவாக்குகிறது.

வினை செய்யுங்கால் இயலுமிடமெல்லாம் போரால் செய்தல் நல்லதேயாகும். பகைவனைவிடத் தான் வலியராக இருக்கும்போதே இவ்வாறு செய்தல் சிறப்பானதாகும். அதற்கே அஞ்சுவார்கள். மற்ற காலங்களில் வேறு முறைகளில் செய்தல் வேண்டும், இதனை மூன்றாம் பாடல் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

தீயினை உவமை காட்டி நான்காம் பாடல் கூறுகிறது. குறை வைத்து செய்தல் கூடாது என்பதாகும். தொழிலில் மீதி வைப்பதும், பகையினை அறவே ஒழிக்காது வைப்பதும் தவறு. சிறிதேயாயினும் தீயினை விட்டு விட்டால் அது சிறுகச் சிறுகப் பெரிதாகித் தீங்கு செய்வது போலாகி விடும். 'இக்குறை என்செய்யும்' என்று இகழ்ந்திருக்கக் கூடாது.

ஐந்தாம் பாடல் மிகவும் நுணுக்கமாக ஆராய வேண்டியனவற்றைக் கூறுகின்றது. வினை செய்யுங்கால், அழியும் பொருள் எவ்வளவு; ஆகும் பொருள் எவ்வளவு, தன்சேனை மாற்றான் சேனை, தனக்கு ஆகும் காலம், அவர்க்கு ஆகும் காலம், தான் வன்மையாகச் செய்யும் வினையும் அவர்கள் செய்யும் வினையும், தான் வெல்லும் இடமும் அவர்கள் வெல்லும் இடமும்—ஆக இவையனைத்தையும் நன்கு

சிந்தித்து ஆராய்ந்து செய்தல் வேண்டும். இதனைத் தொடர்ந்தே ஆறாம் பாடலும் பயனை எண்ணிச் செய்ய வேண்டுமென்பதனைக் கூறுகின்றது.

தான் வினை செய்யப் புகுங்கால் - செய்யும் போது தனக்கு முன்னே அவ்வினையினைச் சிறியதாகச் இருப்பதைக் கண்டு இகழக் கூடாது. சிறிய அச்சாணி பெரிய தேரைத் தாங்கி நடத்துகிறது. அதுபோல் பல வினை செய்பவர்கள் உண்டு. அச்சுமரம் கண்ணிற்குக்கூட நன்றாகத் தெரிவதில்லை. அதுபோல் சிறந்த பல செயல்களைச் செய்பவர்கள் பலரறிய வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலே அரிய சாதனைகளைச் செய்து முடிப்பார்கள் என்பதாகும்.

ஆய்ந்தவர்கோள் - செய்தக்கது ஆண்மை - சொல்லிய வண்ணம் செயல் - ஊறு எய்தி உள்ளப்படும் - எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தூக்கம் கடிந்து செயல் - இன்பம் பயக்கும் வினை — என்பன போன்றவைகள் எல்லாம் நினைவில் நிறுத்தப்பட்டு அரிய உண்மைகளை அறிவதற்கு உதவுவனவாகும்.

## 68. வினை செயல்வகை

வினைகளைச் செய்யும் திறத்தினையும் வழி முறைகளையும் கூறுவதாகும். இந்த அதிகாரம், 'செயல் வகை' என்று முடிவது போல, தெரிந்து செயல் வகை, பொருள் செயல்வகை, குடி செயல்வகை என்ற அதிகாரங்களும் உண்டு. முதலிரண்டு குறட்பாக்களும் பொது வகையால் வினை செய்யும் திறத்தினைக் கூறுகின்றன.

வினை செய்யுங்கால் எப்படியெல்லாம் நிலைமைக்கேற்ப செய்தல் வேண்டும் என்பதனை மூன்றாம் குறட்பா கூறி விடுகின்றது. வலியான், ஒப்பான், மெலியான் என

நிலை மூன்றுவகையாகக் கூறப்படும். அவைகளுள் வலியான் சிறப்பினை மூன்றாம் குறட்பா காட்டுகிறது. வலியான் செய்யும் திறம் நான்காம் பாடலால் விளக்கப்பட்டது.

ஐந்து, ஆறு, ஏழு பாடல்கள் ஒப்பான் செய்யும் திறத்தினைக் கூறுகின்றன. மெலியான் செய்யும் திறத்தினைக் கடைசி மூன்று பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. பெரும்பாலும் போர் நடத்தும் முறைகளையே கூறுவதால் பகைவர்களைப் பற்றி விளக்கியும், வலியார், மெலியார், ஒப்பார் இவர்களையறிந்தும் செய்வன கூறப்பட்டன.

மேற் கொண்டு செய்வதன் முறைகளைக் கண்டறிந்து கொள்ள வேண்டும் என்று ஏழாம் பாடல் குறிக்கிறது. எட்டாம் பாடல் யானையைக் கொண்டு யானையைப் பிடிப்பது போன்று ஒரு தொழிலைக் கொண்டு மறு தொழிலினையும் முடித்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தும் கருத்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

இதன் அருமைநோக்கி, 'யானையால்' என்று மட்டும் கூறாமல், 'நனைகவுள்' யானை என்றார். மதம்பிடித்த யானை என்பதாகும். பகைவன் தன்னுடைய மெலிவைத் தெரிந்து கொள்வதற்கு முன்னமேயே, பகைவனுடைய பகைவனைத் தான் நட்பாக்கிக் கொள்ளல் வேண்டுமென்று ஒன்பதாம் பாடல் கூறும்.

தம்மைவிட வலியார் தாக்கிய போது, தனது சேனையும் மக்களும் அஞ்சுவது கண்டு முடியுமானால் வலிய பகைவனிடம் சமாதானம் செய்து கொள்ளுதல் நல்லதேயாகும். வாய்ப்பு இருக்குமானால் என்றும் கூறினார். தாழ்ந்து போதல்குற்றம் ஆகி விடாது. பத்தாம் பாடல் மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

## 69. தூது

வேற்று நாட்டிற்குச் செல்லுகின்ற தூதர்களைப்பற்றிக் கூறுவதாகும். இது முற்றிலும் அரசியல் பகுதியினையே சார்ந்ததாகும். தூது செல்லுபவர்களை, தான் வகுத்துக் கூறுவான். கூறியது கூறுவான் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். 'வகுத்துக் கூறுவான்' என்னும் தூதன் அமைச்சனோடு ஒப்பவனாவான். மற்றவன் தகுதியில் கொஞ்சம் குறைந்தவனாவான் என்பதாகும். அவன் கூறியதை மட்டும் போய் கூறிவருபவனாவான்.

முதலிரண்டு பாடல்களும், இருவகை தூதுவர்களுக்கும் பொதுவான இலக்கணத்தினைக் கூறுகின்றன. மூன்றுமுதல் ஏழு பாடல்கள் வரை முதல் வகைத் தூதுவனாகிய - தான் வகுத்துக் கூறுவான் - என்பவன் இலக்கணத்தை விளக்கிக் கூறுகின்றன. கடைசி மூன்று பாடல்களும் 'கூறியது கூறுவான்' இலக்கணத்தை விளக்குகின்றன. அன்புடைமை, குடிமை, பண்புடைமை, அறிவுடைமை, சொல்வன்மை, அவையறிதல், அவையஞ் சாமை, கல்வி, காலமறிதல், இடமறிதல், வாய்மை முதலியன போன்ற அதிகாரங்களில் காணப்படும் கருத்துரைகள், தூது உரைப்பவனுக்கு மிகுதியும் பயன்படுவனவாகும்.

மூதற் குறட்பாவில் இரண்டு அதிகாரங்களின் பெயர்கள் அப்படியே காணப்படுகின்றன. பரம்பரையாக அறிந்திருத்தல் கூடும் என்பதற்கு வேண்டி 'ஆன்ற குடிப்பிறத்தல்" என்றார். அவனுடைய முன்னோர்கள் அமைச்சர்களாகவோ தூதுவர்களாகவோ இருந்திருந்தால், வேற்றரசர்கள் இந்தத் தூதுவனையும் அறிந்து மிகுதியும் மதிப்பார்கள் என்பதாகும். இரண்டாம் குறட்பாவிலும் மூன்று அதிகாரங்கள் குறிப்பிடப்படுகின்றன. வேற்றரசனிடம் செல்லுபவனானபடியால் சிறந்த பல தன்மைகள் இருத்தல் வேண்டும் என்பதாகும்.

தூது உரைப்பான் - தூது உரைப்பார்க்கு – வினை உரைப்பான் - எண்ணி உரைப்பான் - வழி உரைப்பான் - வேந்தர்க்கு உரைப்பான் - என்று பற்பல குறட்பாக்களில் காணப்படுவதெல்லாம், தூது செல்லுபவன் சொல்வன்மையில் சிறந்தவனாக - மிக்க வனாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றன. அறிவு, ஆராய்ந்த கல்வியுடன் சிறந்த உருவம் அவனுக்கு இருத்தல் வேண்டுமென்று நான்காம் பாடல் தெளிவுபடுத்துகிறது. வேற்றரசர் மனங்கொள்ளச் சொல்லவேண்டும் என்பதற்காக 'நகச் சொல்லி" என்று ஐந்தாம் பாடல் கூறுகிறது.

தூதுவன் அஞ்சாத மனம் படைத்தவராக இருத்தல் வேண்டும் எதற்கும் ஏமாற்றப்படாமல் இருத்தல் வேண்டும் என்பதற்காக 'தூய்மை' 'வாய்மை' என்று எட்டாம் பாடல் உரைக்கின்றது. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான்' – இறுதி பயப்பினும் - என்று முறையே ஒன்பது, பத்துப் பாடல்கள் கூறுவது, தூதுவனின் பொறுப்பினையும் திறத்தினையும் எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அமைச்சர்கள் மன்னர்களைச் சேர்ந்து ஒழுகும் முறைகளைக் கூறுதலாகும். முந்திய அதிகாரத்தில் 'வேந்து அவாம் பண்பு உடைமை' என்று கூறிய விளக்கத்தினை இவ் அதிகாரம் கூறுவதாகும். பொதுப்படக் கூறுமிடத்து தலைமைதாங்குபவரிடம் பழகும் தன்மைகளைக் கூறுவது என்றும் கொள்ளலாம். வேற்று வேந்தர்களிடம் பழகும் தன்மைகளையும் விளக்குகின்றது.

முதல் மூன்று குறட்பாக்களும் பொதுவகையில் விளக்கம் தருகின்றன. நான்குமுதல் ஏழுபாடல்கள் வரை சிறப்புவகையால் விளக்கம் தருவனவாகும். கடைசி மூன்று பாக்களும் மன்னர்கள் பொறுத்துக் கொள்ளுவார்கள்

என்று, அவர்கள் வெறுப்பன செய்தல் கூடாது என்று தெளிவுபடுத்துகின்றன.

மாறுபடுதலையும் கொண்ட அரசர்கள் என்பதற்காக, முதற்குறட்பா 'இகல் வேந்தர்' என்று குறிப்பிட்டது. அதாவதுகடிதின் கோபம் கொள்ளும் தன்மையர் என்பதாம் குளிர்காய்வது போல அகலாமலும், மிக அணுகாமலும். அவர்களிடம் பழகிக் கொள்ளல் வேண்டும். மன்னர்கள் எப்பொருளின்மீது மிக விருப்பம் கொண்டுள்ளார்களோ அவைகள் மீது தாமும் விருப்பம் கொண்டிருக்கக் கூடாது என்பதனைக் குறிப்பாக இரண்டாம் குறட்பா காட்டுகிறது.

மன்னர் தம்மீது தவறுகண்டு ஐயப்படாதவாறு நடந்து கொள்ளவேண்டும். ஒரு முறை கண்டு விட்டால் பிறகு அவர் மனத்தினை அந்த எண்ணத்திலிருந்து மாற்றுதல் கடினமாகும். இதனை மூன்றாம் குறட்பா எடுத்துக்காட்டுகிறது. மன்னர் அருகில் இருந்தால் பிறருடன் காதோடு காது வைத்துப் பேசுதல் கூடாது என்று நான்காம் பாடல் கூறுகின்றது.

சில மறைபொருள்களை அரசர்கள் தாமே சொன்னால் தான் கேட்கவேண்டும். தாமே போய்க் கேட்டல் கூடாதென்று ஐந்தாம் பாடல் குறிக்கின்றது. சில கருத்துக்களை அரசர்கள் கேட்டாலும் பயனில்லாதவற்றைச் சொல்லக் கூடாது. இது ஏழாம் பாடலின் கருத்தாகும். தம்மைவிட இளைஞர் என்று எண்ணி இகழ்ந்து பேசுதல் தம்மைத்தாமே போக்கிக் கொள்ளுவதாகும் என்று எட்டாம் பாடல் விளக்குகின்றது.

"கொளப்பட்டேம் என்று எண்ணி" என்ற ஒன்பதாம் பாடலும் சிந்தனைக் குரியனவாகும். பத்தாம் பாடலில் காணப்படும், 'கெழுதகைமை' என்ற சொல், 'பழைமை' என்ற அதிகாரத்தில் காணப்படும் 'கெழுதகைமை' என்ற சொல்லோடு ஒப்பிடுதற்குரியது. அரிது, செவிச்சொல்,

மறை, சொலல், இளையர், இகழார், கொளப்பட்டேம், பழையம், பண்பு, ஒழுகல், கெழுதகைமை முதலிய சொற்கள் சிறந்த கருத்துக்களைக் குறிப்பனவாகும்.

## 71. குறிப்பு அறிதல்

அரசர் கருதிய கருத்துக்களை அவர் கூறாமலேயே அறிதல், பொதுவாகக் கூறுங்கால் பிறர் உள்ளத்தில் உள்ளதை அவர் கூறாமலேயே அறிந்து கொள்ளும் ஆற்றலாகும். காமத்துப் பாலில், 'குறிப்பறிதல்' என்றொரு அதிகாரமும், 'குறிப்பறிவுறுத்தல்' என்றொரு அதிகாரமும் இருக்கின்றன. முதன் மூன்று குறட்பாக்களும் குறிப்பறிபவரது சிறப்பினைக் கூறுகின்றன.

நான்கு, ஐந்து பாடல்கள் குறிப்பினை அறிய மாட்டாரது இழிவினைக் கூறுகின்றது. குறிப்பறிவதற்குக் கருவியாக இருப்பது முகம் என்று, ஆறு, ஏழு, எட்டு ஆகிய மூன்று பாடல்களும் விளக்கம் தருகின்றன. ஒன்பதாம், பத்தாம் பாடல்கள் குறிப்பறிவதற்கு நுண்கருவியாக இருப்பது, நோக்கு, என்று தெளிவுபடுத்துகின்றன.

குறிப்பறிதல் என்பது எல்லோராலும் முடிவதொன்றன்று. அதற்கென்று சிறந்த ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். ஆதலால்தான் அத்தகைய ஆற்றல் பெற்றவர்களை முதற்குறட்பா, 'மாறாநீர் வையக்கு அணி' என்று சிறப்பாக எடுத்துரைக்கின்றது. இரண்டாம் குறட்பா, குறிப்பறிவானைத் தெய்வத்திற்குச் சமமாக வைத்துக் கருதுமாறு கூறுகின்றது.

மனித ஆற்றலுக்கு மிகமிக மேம்பட்டவன் என்பது இயற்கையின் ஆற்றலுக்கு இணையானவன் என்பதாகும். இயற்கை ஆற்றலினை 'தெய்வீகசக்தி' என்று கூறுவது உலக வழக்காகும். குறிப்பறிபவர்கள் கிடைப்பார்களேயானால், அவர்கள் விரும்புவது யாதாக இருந்தாலும்

அதனைக் கொடுத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று மூன்றாம் குறட்பா அவர்களின் அருமையினைக் குறிக்கின்றது.

மாறாநீர்வையக்கு அணி - தெய்வத்தோடு ஒப்பக் கொளல் - உறுப்பு ஓரனையரால் வேறு - உற்றது உணர்வார்ப் பெறின் - வகைமை உணர்வார்ப் பெறின் - நுண்ணியம் என்பார் - என்று கூறப்பட்டன அனைத்தும் குறிப்பறிபவர்களின் ஆற்றலினையும் சிறப்பினையும் எடுத்துக் காட்டுவனவாகும். கண்களை உற்று நோக்கி உள்ளத்தில் உள்ளதைக் கண்டு கொள்ளும் திறமை தனிப்பட்ட மேலான ஆற்றலாகும். அது அத்துறையில் பயிற்சி பெற்றவர்களாலேயே முடியும். ஆதலால் தான், ஒன்பது, பத்துப் பாடல்கள் பார்வையால் அறியமுடியும், என்று உணர்த்துகின்றன. முகத்தினைப் பளிங்கு என்று கூறுகிறது, ஆறாம் குறட்பா; அகத்திற்குக் கண்ணாடி போன்றது முகம் என்று அறியக் கிடக்கின்றது.

வெளிநாட்டிலிருந்து வருபவர்களின் எண்ணத்தினை எளிதில் உணர்ந்து கொள்ளுதல் இயலாது. அவர்களை நன்கு உணர்ந்து அதனை மன்னர்க்கு எடுத்துரைத்து அதற்கேற்ப நடந்து கொள்ள அறிவுறுத்த வேண்டியது, குறிப்புணர்வார்களின் கடமையாகும்.

## 72. அவை அறிதல்

மக்கள் நிறைந்திருக்கும் அவையினது இயல்பினை-தன்மையினை அறிந்து கொள்ளுதலாகும். அரசியலில் கூறப்பட்டதாகக் கொண்டாலும், பொதுப்பட அனைவர்க்கும் பொருந்துவதாகும் என்று கொள்ளுதல் வேண்டும். முதலிரண்டு பாடல்களாலும் ஒன்று சொல்லும்போது அவையறிந்தே சொல்ல வேண்டும் என்று கூறுகிறது.

மூன்றாவது பாடல் அவையறியாவிட்டால் வரும் குற்றத்தினைக் கூறுகின்றது.

நான்கு ஐந்து பாடல்கள் நம்மைவிட மிக்கார் நிறைந்துள்ள அவைக்கண் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதனை எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட அவைக்கண் சொல்லிழுக்குப்படுவதால் வரும் குற்றத்தினை ஆறாம்பாடல் குறிக்கின்றது. ஏழு எட்டு பாடல்கள் ஒத்தார் மாட்டு எவ்வழியும் சொல்லுக என்று விளக்கம் செய்கிறது. கடைசி இரண்டு குறட்பாக்களும் தாழ்ந்தார் அவைக்கண் எவ்வழியும் சொல்லாதிருப்பாயாக என்று அறிவுறுத்துகிறது.

முதலிரண்டு குறட்பாக்களும் முறையே 'தொகை அறிந்த தூய்மையவர்'— நடை தெரிந்த நன்மையவர்— என்று கூறி அவையறியும் ஆற்றல் உள்ளவர்களைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

அறிவால் சிறந்தவர் அவைக்கண் தாமும் சிறந்த அறிஞராகக் காட்டிக் கொள்ள வேண்டும். அறிவில்லதுவர்கள் அவைக்கண் நாமும் அவர்கள் போலவே இருந்து கொள்ள வேண்டும். இவ்வுண்மையினை நான்காம்குறட்பா. அழகிய உவமையினைக் காட்டி எடுத்துரைக்கின்றது. தன்னைவிட மிக்கார் அவைக்கண் அடக்கத்துடன் இருக்க வேண்டும். அந்தப் பேரறிஞர்களைவிட, தான் முந்திக் கொண்டு ஒன்றினைச் சொல்லக் கூடாது. இதனை ஐந்தாம் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

எட்டாம் குறட்பா பயிர் வளரும் பாத்தியினைச் சொல்லி உயர்ந்த கருத்தினை நயம்படக் கூறுகின்றது. சிறுமதி படைத்த அறியாதார் அவையில் நற்கருத்துக்களைச் சொல்ல வேகூடாது. அவ்வாறு சொல்லுவது அமிழ்தத்தை தூய்மையில்லாத முற்றத்தின்கண் போட்டதை ஒக்கும் என்று பத்தாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது. அறியாதா

இருக்கும் அவையினை, 'புல்லவை' என்று ஒன்பதாம் பாடல் கூறுகிறது. அப்படிப்பட்ட அவையினையே, தம்கணத்தர் அல்லார் என்று பத்தாம் பாடல் குறித்துக் காட்டுகிறது.

## 73. அவை அஞ்சாமை

சொல்லுதற்குரிய அவையினை அறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சுதல் கூடாது என்பதனைக் கூறுவதாகும். முதல் மூன்று பாடல்களும் அவையினை அஞ்சாரது சிறப்பினைக் கூறுகின்றன. நான்காம் பாடல் அதனால் வரும் பயனைக் கூறுகின்றது. ஐந்தாம் பாடல் அதன் காரணத்தைக் கூறுகின்றது. அவையினைக் கண்டு அஞ்சுவாரது இழிவினைக் கடைசி ஐந்து குறட்பாக்களும் விளக்கிக் கூறுகின்றன.

ஆறாம் குறட்பா அருமையான உவமை முகத்தான் கருத்தினை விளக்கிக் காட்டுகிறது. வீரம் இல்லாதவர்களுக்கு வாளுடன் என்ன தொடர்பு உண்டு? அதுவே போல, அறிஞர்கள் நிறைந்திருக்கும் சபையினைக் கண்டு அஞ்சுபவர்களுக்கு கற்ற நூல்களோடு என்ன தொடர்பு உண்டு? அவையைக் கண்டு அஞ்சுபவன் கற்ற நூலானது, பகைவர்களின் மத்தியில் அஞ்சுகின்ற பேடிகையில் வைத்திருக்கும் கூர்மையான வாளினை ஒக்கும் என்று ஏழாம் பாடல் கூறி அவையஞ்சுவானுடைய இழிநிலையினைக் கூறுகின்றது.

பத்தாம் குறட்பா அவையினைக் கண்டு அஞ்சுபவர்களை இறந்து போனவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவது மிகவும் சிந்திக்கத்தக்கதாகும். 'உளர் எனினும் இல்லாரோடு ஒப்பர்' என்று குறட்பா அமைத்துக் காட்டுகிறது. கற்றவற்றைப் பிறர் அறிய அவையில் சொல்ல அஞ்சுபவன் உயிரோடு இருந்தும் பயனில்லை என்பதாகும். சொற்களின் தன்மையினைக் கண்டு, அளவு முறையினை அறிந்து, பேசும்

ஆற்றலினைக் கற்கவேண்டும் என்பதைக் குறித்து, ஐந்தாம் குறட்பா 'அளவறிந்து கற்க' என்று கூறுகின்றது.

வாளொடு என் வன் கண்ணர் அல்லார்க்கு - பகை அகத்து பேடிகை ஒள்வாள் - பல்லவை கற்றும் பயம் இலரே - கல்லாதவரினும் கடையென்ப - இல்லாரோடொப்பர் - என்று குறித்துக் காட்டியவை யெல்லாம் அவையைக் கண்டு அஞ்சிக் கொள்வோரின் இழிவான தன்மையினை எடுத்துக் காட்டியவைகளாகும்.

தொகையறிந்த தூய்மையவர் - கற்றாருள் கற்றார் எனப்படுவர் - மிக்காருள் மிக்க கொளல் - ஆற்றின் அளவறிந்து கற்க - என்று குறிப்பிட்டுக் காட்டுபவைகள் அவையஞ்சாமல் பேசும் ஆற்றல் மிக்கவர்களின் திறத்தினையும், சிறப்பினையும் நன்கு எடுத்துரைக்கின்றன.

வகை, தொகை, கற்றார், பகை, அவை, மிக்கார், மாற்றம், வாள், வன்கண்ணர், நூல், நுண், பேடிகை, இலரே, கடை, இல்லார், ஒப்பார், களன், முதலிய சொற்கள் சிறந்த உண்மைகளை நினைவில் நிறுத்தி உணர்ந்து கொள்ளுவதற்கு உதவியாக இருப்பனவாகும்.

## 74. நாடு

நாட்டின் சிறப்பினைக் கூறுவதாகும். அரசனுக்குரிய உறுப்புக்களில் தலையானது நாடாகும். நாடு என்றும், தேசம் என்றும், உலகம் என்றும் ஆசிரியர் கூறுகின்றார். 'எண்ணியதேயத்துச் சென்று' என்று கூறுகின்ற இடம் தேசத்தினைக் குறிக்கின்றது. முதல் ஆறுபாடல்களும், நாட்டின் இலக்கணத்தைக் கூறுகின்றன. ஏழாம் பாடல் நாட்டின் இயற்கைவளம் கூறுகின்றது. எட்டாம் பாடல் நாட்டின் அழகிற்கு உரிய ஐந்து தன்மைகளை விளக்கும்

செய்கிறது. ஒன்பதாம் பத்தாம் பாடல்கள், நாட்டிற்குக் குற்றம் என்று கூறப்பட்டவைகள் யாவை என்பனவற்றை எடுத்துக் காட்டுகின்றன.

தள்ளாவிளையுள், தக்கார், தாழ்வு இல்லாத செல்வர். அரும் பொருள், விளைவது, பொறை, இறை ஒருவற்கு நேர்வது, உறுபசி இல்லாமை, ஓவாப்பிணி இல்லாமை, செறுபகை அற்றது, பல் குழுவு இல்லாமை, பாழ் செய்யும் உட்பகை அற்றது, கொல் குறும்பர் இல்லாதது, கேடு அறியாதது, வளங்குன்றாதது, இருபுனல், வாய்ந்தமலை, அரண், ஆக இவையனைத்தும் குறட்பாக்களில் தெளிவு படுத்தப்பட்டு ஒரு சிறந்த நாட்டிற்கு விளக்கம் செய்கின்றன,

விளைச்சல் மிகமிக முக்கியமென்றும், தக்காராகிய சான்றோர்கள் இருக்க வேண்டும் என்றும், செல்வர்கள் இருக்க வேண்டும் என்றும் முதற் குறட்பா கூறுகின்றது. செல்வர் என்பது சிறந்த வணிகர்கள் என்பதைக் குறிப்ப தென்று கொள்ளுதல் வேண்டும். கேடின்மையினையும் விளைச்சலினையும் ஒன்று சேர இரண்டாம் பாடல் கூறு கின்றது.

முதற் குறட்பாவும், இரண்டாம் குறட்பாவும், ஆறாம் குறட்பாவும், எட்டாம் குறட்பாவும், ஒன்பதாம் குறட்பாவும் முறையே, தள்ளாவினையுளும், ஆற்ற விளைவது, வளங்குன்றா, விளைவு, நாடாவளத்தன என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத்தக்கதாகும். பூமியின் வளமும், நல்ல விளைச்சலுமே நாட்டிற்கு மிகமிக இன்றியமையாத தென்பதனைச் சுட்டிக் காட்டுகின்றன.

சாதிபற்றியும், கடவுள் பற்றியும் இன்னும் இவை போன்ற காரணங்களினால் மாறுபட்டிருக்கும் தனித்தனிக் கூட்டங்கள் நாட்டில் இருக்கக்கூடாது என்ற அரிய உண்மை யினை ஐந்தாம் பாடல் உணர்த்திவிடுகின்றது. மன்னனை 'இறைவன்' என்று சிறப்பித்துக் கூறுவது, அவன் மக்களைக்

காப்பாற்றும் கடமை கொண்டவன் என்பதைக் கருதியே யாகும்.

வான்சிறப்பு, உழவு, பொருள் செயல்வகை சான்றாண்மை, பொறையுடைமை, பகைபற்றியவை, உட்பகை, இறைமாட்சி, முதலிய அதிகாரங்களின் கருத்துரைகள் சிந்திக்கத்தக்கனவாகக் குறிப்புகள் காட்டப்பட்டன. வேந்தனும் மக்களும் ஒன்றோடொன்று இணைந்தவர்களாக மனம் ஒன்றுபட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தலைவனும் மக்களும் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும் என்பது குறிப்பு-வேந்தனும் மக்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று கூறியதால் 'அமைவு' என்று பத்தாம் பாடல் குறித்தது. வேந்தன் இல்லாத நாடு என்று கூறாமல் மக்களுடன் இணைந்து வாழாதவன் மன்னன் நிலையில் வைத்துக் கருதப்படமாட்டான் என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

## 75. அரண்

நாட்டிற்குச் சிறந்த உறுப்பாக அமைந்திருப்பது அரணாகும். பகைவரால் தாக்குதல் வந்த போது தனக்கும் அரசனுக்கும் பாதுகாப்பாக இருத்தற் பொருட்டு நாடு என்ற அதிகாரம் போலத் தனி அதிகாரமாகக் கூறப்பட்டது. அரணின் சிறப்பினை முதல் குறட்பா கூறுகின்றது. இரண்டு முதல் எட்டாம் பாடல் வரை அரணின் இலக்கணத்தினைச் சிறப்பாகக் கூறும் குறட்பாக்கள் குறிக்கப்பட்டுள்ளன. கடைசி இரண்டு பாடல்களும், அரணினைக் காப்பவர்கள் மிகவும் சிறந்தவர்களாக இருக்கவேண்டுமென்று கூறுகின்றன.

மூன்றாம் குறட்பாவில் காணப்படும் 'அருமை' என்பதும், ஆறாம் குறட்பாவில் கூறப்படும் 'எல்லாப்

பொருளும் உடைத்தாய்' என்பதும் எல்லாக் காலத்திற்கும் பொருந்துபவைகளை அவ்வப்போது அறிஞர்களைக் கொண்டு அமைக்கவேண்டும் என்பதனைக் குறிப்பால் உணர்த்துகின்றன.

படை எடுத்துச் செல்லுபவர்களுக்கும் பகைவர் வந்தால் தாக்குவதற்கும் ஏற்றதாக இருப்பது அரணேயாகும். இயற்கையும் செயற்கையும் ஆனவழிகளில் அமைக்கப்படும் அரண்களை இரண்டாம் குறட்பா விளக்கம் செய்கின்றது. பொறிகளால் அணுகுவதற்கும் அருமையாக இருத்தல் வேண்டும் என்பது மூன்றாம் குறட்பா கூறும் உண்மையாகும். எதிரியின் ஊக்கத்தினை அழிப்பதாக அரண் இருத்தல் வேண்டும் என்பதனை நான்காம் குறட்பா எடுத்துக் காட்டுகிறது,

புறத்தார் கொள்ளுதற்கு அரியதாக இருக்கவேண்டும் என்று ஐந்தாம் பாடல் கூறி, பொறிகளாலும் வேறு எம்முறையிலும் அணுகமுடியாத அமைப்புடன் அரண் இருக்கவேண்டும் என்று கூறுகின்றது. அரணின் சிறப்பு அங்குள்ள சிறந்த மறவர்களைக் கொண்டிருப்பதுதான் என்று ஆறாம் பாடல் குறிக்கின்றது.

ஏழாம் பாடல், பகைவர்களுக்கு உள்ளாள்களாக இருப்பவர்கள் அணுக முடியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. எப்படிப்பட்ட போர் நடந்தாலும், நிலைமை ஏற்பட்டாலும் அரணில் உள்ளவர்கள் அரணில் தம் இடத்தைவிட்டு நகரவே கூடாது என்ற உண்மையினை எட்டாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. 'பற்றியார் பற்றாற்றி வெல்வது அரண்!'— என்ற குறிப்பு இதனை வற்புறுத்திச் சொல்லுகிறது.

போர் தொடங்கியவுடனேயே பகைவர் கெட்டு ஓடும் வண்ணம் அரணில் இருப்போர் செய்யும் பற்பல செயல்களால் பெருமை பெற்றிருப்பதே அரணாகும் என்று

ஒன்பதாம் பாடல் கூறுகிறது. காலத்திற்கேற்றபடி மறவர்கள் போர்புரிந்து முறைப்படி பற்பலவும் செய்தல் வேண்டும் என்பதனை 'வினை முகத்து வீறு எய்தி' என்ற குறிப்பு உணர்த்தி விடுகின்றது. எல்லாக் காலத்திற்கும் பொருந்துவன கூறுவது ஆசிரியரின் கருத்தானபடியால் 'இச் செயல்தான்' என்று எதையும் குறித்துக் காட்ட வில்லை. எவ்வளவு சிறப்புடையதாக அரண் அமைக்கப் பட்டிருந்தாலும், மறத் தொழிலில் சிறப்பானவர்கள் இல்லை யென்றால் பயனில்லையென்று பத்தாம் பாடல் கூறுகிறது.

## 76. பொருள் செயல் வகை

அரசியலில் கூறப்படும் இன்றியமையாத ஒன்றான படியால் சிறப்பாக அரசனுக்கு உரியது என்றாலும் உலகில் வாழும் மக்கள் அனைவர்க்கும் பொதுப்படக் கொள்ளுதல் வேண்டும். பகைவனை வெல்லும் கூர்மையான கருவி பொருள் என்று கூறப்படுகிறது.

அரசனுக்கே பெரிதும் உரியது என்பதனைக் குறிக்க வேண்டி, 'வேந்தன்' என்று ஆறாம் குறட்பா குறித்துக் காட்டுகிறது. அறிவிலாதார், இழிதன்மையர், இன்னும் இன்னோரன்னவர்களையும் பொருளாக மதிக்கச் செய்வ தால் 'பொருளல்லதில்லை பொருள்' என்று முதற் குறட்பா கூறுகின்றது.

அறிவுள்ளவர்களும், சான்றோர்கள், இவர் போன்ற பெருந்தகையாளர்களும், இழிமகன் என்று இருந்தாலும் அவனிடம் சென்று பொருள் கேட்கும்படிச் செய்வதால் 'பொருள் அல்லது இல்லை பொருள்' என்று முதற்குறட்பா விளக்கமாகக் கூறுகின்றது. உலகத்தின் இயல்பினைக் குறிக்க வேண்டி 'எல்லாரும் எள்ளுவர்' என்று இரண்டாம்

குறட்பா எடுத்துரைக்கின்றது. பொருளற்றார் நிலையினைச் சுட்டிக்காட்டுகிறது.

உலகவாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாக இருப்பதால் 'பொய்யா விளக்கம்' என்று மூன்றாம் குறட்பா கூறுகின்றது. பிற விளக்குகளுக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டினைக் குறிக்கும் பொருட்டு 'எண்ணிய தேயத்துச் சென்று' என்று கூறினார். பொருளினது சிறப்பு முதல் மூன்று பாடல்களாலும் கூறப்பட்டது.

'திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' என்று கூறும் நான்காம் பாடலும், அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் என்று கூறும் ஐந்தாம் குறட்பாவும் பொருளீட்ட வேண்டிய தூயமுறைகளைக் கூறி மெய்ப்பிக்கின்றன. அறம் செய்பவர்களாகக் கருதப்படுபவர்களும் தீதின்றி வந்த பொருளால்தான் செய்தல் வேண்டும் என்றும், அவ்வாறு நன்னெறியால்வாராத பொருளால் செய்வது அறமாகாது என்றும் குறிப்பால் உணர்த்தப்பட்டதாகும்.

ஆறாம் பாடல் நாட்டிற்குக் கடமையாக வரவேண்டிய பொருள் வருவாய் முதலியவற்றைக் குறித்தன. 'செல்வச் செவிலி' என்ற ஏழாம் பாடல் ஆழ்ந்த பொருள் வைத்து, எடுத்துக் காட்டுகிறது. உலகில் கூறப்படும் 'செவிலியர்' போல் அல்லாமல், தானே எல்லாப் பொருளும் கொடுத்து உதவி வளர்த்தலால்,'செல்வச் செவிலி' என்று கூறினார்.

எட்டாம் குறட்பா அருமையான நிகழ்ச்சியொன்றினைக் காட்டுகிறது. அதுவே 'யானைப் போர்' ஆகும். குன்றின் மேல் ஏறிச் செல்பவனைக் கூறியது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அச்சமும் வருத்தமும் இல்லாதிருப்பான் ஆனபடியால், 'குன்றேறி' என்றார். ஒன்பதாம் பாடல், 'கூரிய எஃகு' என்று கூறுகிறது. சிறந்த படைக்கலம் ஆகும். நல்ல நெறியால் வரும் பொருளினைப் படைத்தவர்களுக்கு,

அறனும் இன்பமும் ஒருங்கே எளிமையாகவரும் என்பதனைப் பத்தாம் பாடல் கூறுகின்றது.

பொருளாகச் செய்யும் – எல்லாரும் செய்வர் சிறப்பு – பொய்யா விளக்கம் – அறம் ஈனும் இன்பமும் ஈனும் – வேந்தன் பொருள் – செல்வச் செவிலி – உண்டாகச் செய்வான் – செய்க பொருளை – ஏனை இரண்டும் ஒருங்கு – என்பதாகக் குறிப்பிட்டனவெல்லாம் என்றும் நினைவில் நிறுத்தப்பட வேண்டியனவாகும். பொருளின் சிறப்பினையும், ஈட்ட வேண்டிய முறையினையும், பயனையும் உணர்த்தினவாகும்.

## 77. படை மாட்சி

பொருளின் துணை கொண்டு வெல்வதாகிய படையின் சிறப்பினை 'படைமாட்சி' 'படைச் செருக்கு' என்று இரண்டு அதிகாரங்களால் கூறுகின்றார். 'படைமாட்சி" என்ற இவ் அதிகாரம் படையின் சிறப்பினைக் கூறுவதாகும் முதல் மூன்று பாடல்களும், அரசனுக்குரிய உறுப்புக்களுள் படைதலை சிறந்தது என்பதனையும், அவைகளுள்ளும் மூலப்படை சிறந்தது என்பதை, அதனுள்ளும் வீரன் சிறந்தவனாவான் என்பதனையும் கூறுகின்றன.

நான்கு முதல் ஏழாம் பாடல் வரை படையினது இலக்கணம் கூறப்படுகிறது. கடைசி மூன்று குறட்பாக்களும் படையின் சிறப்பு இன்மையானும், அரசன் கொடைத் தன்மை இன்மையாலும், தலைவர் இன்மையாலும் படை தாழ்வுற்று விடும் என்பதனைக் கூறுகின்றன.

துன்பத்திற்கு அஞ்சக் கூடாது என்பதனையும் செல்வத்துள் எல்லாம் அரசனுக்குத் தலையான செல்வம் படையேயாகும் என்பதனை முதற் குறட்பா குறித்துக் காட்டுகிறது. மூலப்படையொன்று சிறப்பு வாய்ந்தது என்பதனை இரண்டாம் பாடல் 'தொல்படை' என்று கூறுகிறது.

மூன்றாம் குறட்பா, நாகத்தினையும் எலிகளையும் காட்டி உண்மை உணர்த்துகின்றது. வீரர் அல்லாதார் பலர் கூடுவதில் பயனே இல்லை என்பதாகும். இவர்களை விட வீரனாக ஒருவனைக் கொள்ளுதலே சிறப்பாகும். உள்ளுக்குள் இருந்தே தீங்கு செய்பவரைக் கொள்ளாதிருக்க வேண்டும் என்பது நான்காம் பாடலின் கருத்தாகும். 'அறை போகாது ஆகி' என்று கூறுகின்றது.

ஐந்தாம் குறட்பா இறப்பதற்குக் கடுகளவும் அஞ்சாதவர்கள் இருப்பதே படையென்று கூறுகிறது. இறப்பது உறுதி என்று தெரிந்தாலும், நாடும் மக்களும் காப்பாற்றப் படுவர் என்று எண்ணி - இறப்பினை அஞ்சாதவர்களைக் கொண்டதே படையென்பது ஐந்தாம் பாடலின் குறிப்பாகும். கூற்றினை எதிர்ப்பது என்றால், 'இறப்பது உறுதி' என்றே பொருளாகும்.

படைக்குப் பாதுகாப்பாக உள்ள நான்கும் ஆறாம் பாடலில் கூறப்படுகிறது. போர் செய்வதற்குப் படைகளை எவ்வாறு வகுத்துக் கொள்ள வேண்டும் என்று குறித்துக் காட்டுகிறது, ஏழாவது குறட்பா. காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி செய்து கொள்ளவேண்டியபடியால் பொதுத் தன்மை மட்டும் கூறப்பட்டது.

உலக வழக்கில் 'கம்பீரம்' என்று சொல்லுவது போல், தோற்றம் பொலிவு சேனைக்கு இருக்க வேண்டும் என்பதனை, 'படைத்தகை' என்று கூறி எட்டாம் பாடல் விளக்கம் தருகிறது. சிறுமையும், வறுமையும் படையினைக் கொல்லும் என்பது ஒன்பதாம் பாடல்; வீரர்கள் நிறைந்திருந்தாலும் தளபதிகள் இன்றியமையாதவர்கள் என்ற உண்மை பத்தாம் பாடலால் கூறப்படுகின்றது.

வெல்படை - தொல்படை - நாகம் - வன்கணதுவே படை - ஆற்றலதுவே படை - ஏமம் படைக்கு - போர்தாங்கும் தன்மை - படைத்தகையால் - இல்லாயின் வெல்லும்

படை - தலைமக்கள் இவ்வழி இல் - என்பனவற்றையெல்லாம் நினைவில் நிறுத்தி அரிய உண்மைகளை அறிதல் வேண்டும்.

## 78. படைச் செருக்கு

படையின் மறமிகுதியினைக் கூறுவதாகும். மறம் செறிந்த வீரர்கள் நிறைந்திருப்பதே படைக்குச் சிறப்பாகும். மனோதிடத்தினை வற்புறுத்திக் கூறுகிறது. போர் வீரனொருவன் தனது வீரச் சிறப்பினை நேருக்கு நேர் நின்று கூறுவதாக முதற்குறட்பா விளக்கம் செய்கிறது

மறவனின் மனப் பண்பு யானையினையும் முயலினையும் காட்டி இரண்டாம் பாடலில் கூறப்படுகிறது. இக்குறட்பாவில் 'இனிது' என்பது சிந்திக்கத் தக்கதாகும். மறவர்களுக்குப் போராண்மையும், ஊராண்மையும் மிக உயர்ந்த பண்புகளாகும். இதனை மூன்றாம் குறட்பா எடுத்துக் காட்டுகிறது.

நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று குறட்பாக்களும் 'ஊறஞ்சாமை'யினைத் தெளிவுபடுத்துகின்றன. அதாவது எவ்விதத் துன்பம் நேர்ந்த போதிலும் பகைவரை எதிர்த்தே நின்று போரிடுவதைக் கூறுவதாகும். கடைசி நான்கு குறட்பாக்களும் வீரமறவன் உயிரினைப் பொருட்படுத்த மாட்டான் என்று விளக்கம் தருகிறது. நான்காம் பாடல் யானையினை முன் நிறுத்திக் கூறுகிறது என்பது எக்காலத்திலும் போரில் யானைகள் வந்து போரிடும் என்பதைக் குறிப்பதாகக் கொள்ளுவதன்று.

மறவனின் வீரப்பண்பு எத்தகையது என்பதே புரிந்து கொள்ள வேண்டியதாகும். உடம்பில் பாய்ந்திருக்கும் வல் என்பது சிந்திக்கத்தக்கது. அவன் ஊறு அஞ்சாதவன், ஐந்து ஆறு பாடல்கள் வீரனின் வீரத்திற்கு இழுக்கு யாது என்பதனைக் கூறி முறையே 'அழித்து இமைப்பின்'

வழுக்கினுள் வைக்கும் என்று எடுத்துக் காட்டி மெய்ம்மையினை வற்புறுத்துகின்றன.

ஏழாம் பாடல் உயிரை விரும்பாத வீரர் கழல் யாப்புக் காரிகை பெறுவர் என்று கூறுகிறது. வீரர்களுக்குப் பட்டம் அளித்தல் எக்காலத்திலும் உண்டு. போர் செய்யுங்கால் மறம் மிகுதிப்பட்டிருக்கும் போது மறவன் எவ்வாறு நடந்து கொள்ளுவான் என்பதனை எட்டாம் பாடல் எடுத்துரைக்கிறது. தனது வேந்தனுடைய கண்களில் நீர் பெருகுமாறு மிகவும் அரிய போரினைச் செய்து இறக்கின்ற நிலைமை ஏற்படுமேயானால் அப்படிப்பட்ட சாக்காடு யாசித்தாயினும் கொள்ளும் தகுதியினை உடைத்து என்று பத்தாம் பாடல் நுகர்கின்றது.

கல்நின்றவர் - பிழைத்தவேல் - பேராண்மை - ஊராண்மை - கைவேல் - மெய்வேல் - விழித்தகண் - விழுப்புண் - கழல்யாப்புக்காரிகை - இறைவன் - சாவாரை - புரந்தார் - சாக்காடு - தக்கது, என்பவை அனைத்தும், வீரத்தின் மாண்பு, வீரனின் அருமையான தன்மை, மன்னனின் நிலை, முதலியனவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து உண்மையினை உணர்த்துவனவாகும்.

## 79. நட்பு

தொழிற் செய்யுங்கால் உறுதுணையாக இருக்க வேண்டிய நட்பின் திறத்தினை விளக்குவதாகும். குறிப்பாகத் தலைமை தாங்குகிறவர்கட்கு என்று மட்டும் அல்லாமல் உலகில் வாழும் அனைவர்க்கும் பொதுப்படக் கூறியதாகக் கொள்ளுதல் வேண்டும்.

'நட்பு' முதல் ஐந்து அதிகாரங்கள் நண்பர்கள் வகைகளை விளக்கிக் கூறுகின்றனவாகும். நல்ல நண்பர்கள், தீய நட்பு என்பவைகளெல்லாவற்றையும் இந்தஐந்து அதிகாரங்

களும் கூறுகின்றன. நட்பு என்ற இவ்அதிகாரம் நட்பு என்பதன் சிறப்பினையும் நண்பர்களின் கடமையினையும் விளக்கிக் கூறுகின்றது.

நட்பு செய்தல் அருமையானதென்றும் தனக்குச் சிறந்த பாதுகாப்பு ஆகுமென்றும் முதற்குறட்பா கூறுகின்றது. பொழுது போக்குக்காக நட்பு என்று கூறுவார் உண்டென்றால் அது தவறாகும். நல்லவர்கள் நட்பும் பேதையார் நட்பும் இரண்டாவது குறட்பாவில் கூறப்படுகின்றன. மதி வளர்வதையும் குறைவதையும் எடுத்துக் காட்டாகக் காட்டி இரண்டாம் குறட்பா விளக்கம் தருகிறது.

பண்புடையாளர்களின் நட்பினை சிறந்த நூல்களைக் கற்பதற்கு ஒப்பிட்டு மூன்றாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது. நட்பின்சிறப்பு இரண்டுமூன்று பாடல்களால் கூறப்பட்டது. நட்பினுடைய பயனை நான்காம் குறட்பா கூறும். நட்பிற்கு மனத்தில் தோன்றும் உணர்ச்சியே போதும்என்று ஐந்தாம் குறட்பா தெளிவாக்குகிறது. கடைசி ஐந்து குறட்பாக்களும் நட்பினது இலக்கணத்தைக் கூறுகின்றன.

பேதைமை, கல்வி, பண்புடைமை, இடுக்கணழியாமை என்பன போன்ற அதிகாரங்களின் குறிப்புகள் குறட்பாக்களில் காணப்படுகின்றன. நண்பன் நகைத்து மகிழ்வதற்கு அல்ல; இடித்துரைத்து நல்வழியில் செலுத்துபவனாக இருக்க வேண்டும் என்று நான்காம் குறட்பா வலியுறுத்துகிறது. மனத்தோடு பொருந்திப் பழகுவதே நட்புக்கு இலக்கணமென்று ஆறாம் குறட்பா எடுத்துக் காட்டும்.

நண்பனுக்குற்ற துன்பத்தினைத் தானும் உடனிருந்து நுகர்தலே நட்பாகும் என்று ஏழாம் குறட்பா தெளிவு படுத்தும். நண்பன் துன்பத்தினை உடனே சென்று நீக்குதல் வேண்டும். அவன் தேடி வந்து கூப்பிடுவான் என்று காத்திருக்கக் கூடாது. ஆடை குலைந்தபோது அப்பொழுதே சென்று உதவுகின்ற கைபோல உதவவேண்டும். இக்

கருத்தினை எட்டாம் குறட்பா சிறப்பாக விளக்கம் செய்கிறது.

நண்பர்கள் ஒருவரையொருவர் பிறர்க்கு அறிமுகம் செய்து வைக்கும் போது 'இவர் எனக்கு இத்தன்மையர்' என்று பிரித்துப் பேசுதல் கூடாது. 'நட்பு' என்ற இலக்கணத்திற்கு அது குறையாகி விடுமாம். 'அவரே நான்-நானே அவர்' என்பது போலப் பேசுதல் வேண்டும் என்பது குறிப்பு.

செயற்கு அரிய - நிறைநீர - இடித்தற் பொருட்டு - உணர்ச்சிதான் - அகம்நக - உழப்பதாம் - களைவதாம் - ஊன்றும் நிலை - புனையினும், என்று கூறப்பட்டவைகள் எல்லாம், நட்பு என்பதன் அரிய உண்மையினையும், நண்பர்களின் பெருஞ்சிறப்பினையும் நினைவுபடுத்துவனவாகும்.

## 80. நட்பு ஆராய்தல்

நன்கு ஆராய்ந்த பிறகே ஒருவரை நண்பராக உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதும், அவரை ஆராயும் திறமையும் விளக்கிக் கூறுவதாகும். முதலிரண்டு பாடல்களும் ஆராயாமல் நட்பு கொள்ளுவதால் வரும் குற்றம் கூறப்பட்டது.

மூன்று முதல் ஆறு பாடல்கள் வரை ஆராயும் முறையும் ஆராய்ந்த பிறகு நட்பு செய்யக் கூடியவர்கள் இவர் என்பதனையும் கூறுகின்றன. ஏழு, எட்டு, ஒன்பது பாடல்கள் ஆராய்ந்த பிறகு நட்பு செய்யக் கூடாதவர்கள் யார் யார் என்று கூறுகின்றன. இரு வகையினரையும் தொகுத்துப் பத்தாம் பாடல் விளக்கம் செய்கிறது.

ஆராயாமல் நட்பு செய்வது பெரும் தீங்கு செய்துவிடும். ஒருவனை நண்பனாகக் கொண்ட பிறகு அவனை விட்டு நீங்க முடியாது. அது நட்புக்கு இழுக்காகும். ஆதலால்

ஆராயாமல் நட்பு செய்தல் போல கேடுபயப்பது பிறி தொன்றுமில்லையென்று முதல் குறட்பா தெள்ளத் தெளிய வற்புறுத்துகிறது.

இக்குறட்பாவில் 'கேடு இல்லை' 'வீடு இல்லை' என்பவைகள் சிந்திக்கத் தக்கவைகளாகும். நன்றாக ஆராயாமல் நட்பு செய்து விட்டால் சாகும் நிலைக்குத் துன்பம் உண்டாகிவிடும் என்று இரண்டாம் குறட்பா கூறுகின்றது. ஆராயாமல் தீயவனோடு நட்பு கொண்டு விட்டால், அவனுக்கு வருபவையெல்லாம் தனக்கும் ஆகும் என்பதாம். இரண்டாம் குறட்பாவில், 'ஆய்ந்து ஆய்ந்து' என்று இருமுறை சொல்லி இருப்பதும், 'தான்சாம் துயரம் தரும்' என்பதும் ஆழ்ந்த உண்மையினைப் புலப்படுத்தி விட்டனவாகும்.

மூன்றாம் குறட்பா நான்கு குறிப்புக்களைத் தருகின்றது. இந்த நான்கினையும் கண்ட பிறகே நட்பு செய்தல் வேண்டும். இப்பாடலில், 'அறிந்து யாக்க' என்று வற்புறுத்தினார். ஏதேனும் கொடுத்தாயினும் நட்பு செய்தல் வேண்டும் என்று நான்காம் பாடல் கூறுகின்றது. நல்ல அரிய நண்பர்கள் கிடைத்தால் எப்படியும் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பாடலில் 'கொடுத்தும் கொளல் வேண்டும்' என்று கூறியிருப்பது பன்முறையும் சிந்திக்கத் தக்கதாகும். எப்படிப் பட்டவர்களை மிகச் சிறந்த நண்பர்களாகக் கொள்ளுதல் வேண்டும் என்று, ஐந்தாம் பாடல் தெளிவுபடுத்துகிறது. அழும்படியாகக் கூட இடித்துச் சொல்லிநண்பனை நல்வழிப் படுத்துபவனே உயர்ந்த நண்பனாவான். 'அழச்சொல்லி' இடித்து' 'வழக்கறிய வல்லார்' என்பவைகளெல்லாம் இந்த ஐந்தாம் பாடலின் அருமையினை விளக்குகின்றன.

ஒருவனுக்குக் கெடுதி உண்டாவதும் ஒரு விதத்தில் நன்மையே யாகும் என்று ஆறாம் பாடல் குறிக்கின்றது. தன்னுடைய நண்பர்களை அளந்து பார்ப்பதற்கு அளவு

கோலாக ஒருவனுக்கு உண்டாகின்ற கேடு உதவுகின்றதாம் உண்மையான நண்பனையும், பொய்யான நண்பனையும் அப்போது தெரிந்து கொள்ள முடியும். இக்குறட்பா, 'நீட்டி அளப்பதோர் கோல்' என்று கூறி நன்கு அறிவு புகட்டுகிறது.

பேதைகளின் நட்பினை நீக்கி விடுவது ஒருவனுக்கு நல்ல ஊதியம் — இலாபம் - கிடைத்தது போன்றதாகும் என்பது ஏழாம் பாடலின் கருத்தாகும். 'ஊதியம் என்பது ஒருவற்கு' என்று தொடங்கும் இக்குறட்பாவின் கருத்து அரியதொன்றேயாகும். எட்டாம் குறட்பா மிகமிக அஞ்சத்தக்க நண்பர்களைப் பற்றி உண்மையினை எடுத்துக் காட்டுகிறது. நமக்குத் துன்பம் வந்த போது கை விட்டுப் போவார் நட்பினைக் கொள்ளாதே என்று கூறுகிறது. 'கொள்ளற்க' என்று தெளிவு படுத்துகிறது. அதுவே போன்று ஒன்பதாம் பாடலும், கெடுதி வந்தபோது கைவிட்டுப் போகின்றவர்களின் நட்பினை, தன்னைக் கூற்றுவன் வந்து பிடிக்கும்போது நினைத்தாலும் உள்ளத்தினைச் சுட்டுவிடும் என்று கூறுகிறது. அடுங்காலை உள்ளினும்' என்று காணப்படுவது தீயவர்களின் கொடுஞ்செயலைப் புலப்படுத்துகிறது. பத்தாம் குறட்பா நல்லோர் நட்பினையும் தீயோர் நட்பினையும் இணைத்துக் கூறி இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினைக் கூறுகிறது. நான்காம் குறட்பா, நல்லோர் நட்பினை ஒன்று கொடுத்தேனும் கொள்ளுதல் வேண்டும் என்றும், பத்தாம் பாடல் தீயோர் நட்பினை ஒன்று கொடுத்தேனும் விட்டு விடுக என்று உணர்த்தி இருப்பது மிகுதியும் சிந்தனைக்குரியதாகும்.

## 81. பழைமை

நண்பர்கள் மிகவும் பழைமை தொட்டு வருபவர்களாக இருப்பின் அவர்கள் தவறு செய்தாலும் பொறுத்துக்கொள்ளல் வேண்டும் என்பதனைக் கூறுவதாகும். ஆராய்ந்து நட்பு செய்து கொள்ளப்பட்டவர்கள் என்று இருந்தாலும்

பொறுக்கப்படும் குற்றம் செய்தவர்களானால் பழைமை கருதி பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

பழைமை என்பதற்கு முதற்குறட்பா நன்கு விளக்கம் தருகிறது. பழைமை என்று சொல்லப்படுவது யாது என்றால், அது பழைமையோர் உரிமையால் செய்வன வற்றைச் சிறிதும் தவறாகக் கருதாமல் அவற்றிற்கு உடன் படும் நட்பாகும்.

இரண்டாம் மூன்றாம் பாடல்கள் பழைமையான் வரும் உரிமையது சிறப்பினைக்கூறுகின்றன. 'நட்பிற்கு உறுப்பு' என்று இரண்டாம் பாடல் குறித்துக் காட்டுவதும் 'செய்தாங்கு அமையாக் கடை' என்று மூன்றாம் பாடல் கூறுவதும் பழைமை என்பதன் விளக்கத் தினைத் தெளிவுபடுத்துகின்றன. நான்காம் பாடல்' பிழைதகையான்வேண்டி இருப்பர்' என்று எடுத்துக் காட்டிப் கெழுநண்பர்களின் மன ஒற்றுமையினை மெய்ப்படுத்து கிறது. நண்பர்கள் சிலநேரங்களின் வெறுக்கத் தக்கனவற்றை செய்துவிட்டால் அதற்கு யாது காரணமாக இருக்கமுடியும் என்பதனை ஐந்தாம் பாடல் தெளிவுபடுத்துகிறது.

இக்குறட்பாவில், அப்படித் தவறு செய்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம் என்று குறிப்பிடுகிறது. ஒன்று, 'பேதைமை' அல்லது 'பெருங்கிழமை.' இந்த இரண்டு சொற்களும் ஐந்தாம் பாடல் கருத்தினைத் தெளிவுபடுத்து கின்றன.

ஆறு, ஏழாம் பாடல்கள், அவ்வாறு பழைய நண்பர்கள் கேடு செய்த போதும் விட்டுவிடக் கூடாது என்பதை விளக்கு கின்றன. நல்ல நட்புக்கு அதுவே அறிகுறியாகும். 'தொல்லைக் கண்நின்றார் தொடர்பு' என்று ஆறாம் பாடலும், 'கெழுதகைமை வல்லார்க்கு' என்று கூறும் ஏழாம் பாடலும் அரிய உண்மையினை வெளிப்படுத்துகின்றன.

'கெழுதகைமை' என்பது பழைய நண்பர்கள் செய்ததை உரிமையால் பொறுத்துக் கொள்ளுதலாகும். பண்பல்ல செய்யும் கெழுதகைமை கேடு தரும் என்ற கருத்து 'மன்னரைச் சேர்ந்தொழுதல்' என்ற அதிகாரத்தில் கூறி இருப்பது இங்கு சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

ஒன்பது பத்துப் பாடல்கள் பழைமையறிபவர்கள் அடையும் பயனை எடுத்துக் காட்டுகின்றன. பழைய நண்பர்களை விடாதவர்களை உலகம் விரும்பிப் பாராட்டும் என்று ஒன்பதாம் பாடல் சொல்லுகிறது. 'விடார் விழையும் உலகு' என்று குறிப்பிட்டுக் காட்டுவது சிந்திக்கத்தக்கதாகும்.

பத்தாம் பாடல், பழைய நண்பர்கள் பிழை செய்தாராயினும், அவரிடத்தில் தமது பண்பினால் நீங்காதவர்கள், பகைவராலும் பாராட்டுதற்குரியவர் என்று விளக்கம் செய்கிறது. 'விழையார் விழையப்படுப' என்பது அரிய உண்மையினை உணர்த்திவிட்டது.

## 82. தீ நட்பு

பொறுக்கப்படாத குற்றங்களுடையவர்கள் நட்பினை விட்டு விட வேண்டும் என்பதாகும். தீய குணங்களை உடையவர்களது நட்பு என்று கூறப்படும். தீயகுணம் உள்ளவர்கள் ஆனபடியால் தீயநட்பினர் என்று கூறப்பட்டனர். 'தீவினையச்சம்' என்ற அதிகாரம் போன்றதாகும். 'கூடா நட்பு' என்றொரு அதிகாரம் உண்டு. இதனை அடுத்து வருவது.

அது உள்ளத்தில் நட்பு எண்ணமே இல்லாமல் - மனத்தால் கூடாமல் - தீமை செய்வதற்காகவே, தகுந்த காலம் வரும்வரை, நண்பர்கள் போலப் பழகிவருபவர்களாவார்கள். தீய குணங்களை அறவே விட்டுவிட்ட பிறகு 'தீ நட்பு' என்று கூறப்பட்டவர்களும் நல்லவர்களாகலாம்.

ஆனால் 'கூடா நட்பு' அப்படிப்பட்டதல்ல. என்றுமே, மனத்தினால் கூடாத ஒரு வகையினரைக் கூறுவது, 'கூடா நட்பு' என்பதாகும்.

'தீ நட்பு' என்ற இவ் அதிகாரத்தில் பண்பு இல்லாதவர் களைப் பற்றி முதற் குறட்பா கூறுகின்றது. நீரைக் குடிப்பது போல, அன்பு அதிகப்பட்டவர்களைப் போல பழகுவார்கள். ஆனால் மனிதப் பண்பாடே இல்லாதவர்கள். இப்படிப்பட்டவர்களின் நட்பு பெருகுவதைவிட, குறைந்து தேய்வது நல்லது.

'பருகுவார்போலினும்' என்று முதற் குறட்பாவில் காணப்படுவது அத்தகையோர் எவ்வாறு பிறரை நம்ப வைக்கிறார்கள் என்று விளக்குகிறது. தீநட்பு ஆகாது என் பதனைப் பொது வகையால், முதற்குறட்பா கூறுகின்றது.

இரண்டு, மூன்று பாடல்கள் — எவ்வளவு பயன் கிடைக் கும் — என்று கருதி நண்பர்களாக இருக்கும் தீநட்பினை விளக்குகின்றன. நான்கு, ஐந்து பாடல்கள், தக்கநேரத்தில் ஏமாற்றிவிட்டுப் போகும் தீ நண்பர்களைக் குறிக்கின்றன. ஆறு, ஏழு, எட்டு ஆகிய மூன்று பாடல்களும், முறையே பேதையார், நகுவித்து செய்வார், முடிந்ததையும் செய்யா தார் ஆகிய மூன்று தீநட்பினரைக் குறித்துக் காட்டுகிறது. வஞ்சகரானவர்களின் தீமையினைப் பத்தாம் பாடல் குறிக்கின்றது.

சில தீய நண்பர்களை, அருகில் வருவதற்குக்கூட அனுமதிக்கக் கூடாது என்று பத்தாம் பாடல் கூறுவது பன் முறையும் சிந்திக்கத்தக்கதாகும். இவர்கள் வீட்டிலே நம்முடன் இருந்து நட்புச் செய்து மன்றத்தில் பழித்துப் பேசுவார்கள். 'எனைத்துக் குறுகுதல்' என்று பத்தாம் பாடல் அருமையாகக் குறித்துக் காட்டிவிட்டது. தீயநண்பர் களை இரண்டாம் பாடல் 'ஒப்பிலார் கேண்மை' என்று எடுத்துக் காட்டுகிறது, கள்வர்களோடு ஒப்பிட்டுக் காட்டு

கிறது மூன்றாம் குறட்பா. 'எளவரும் நேர்' என்று குறட்பாவில் அமைந்துள்ளது.

மற்ற நேரத்தில் எல்லாம் தாங்கிக் கொண்டிருந்த போர்க் குதிரை போர் வந்தபோது போர்க்களத்திலே கீழே தள்ளிவிட்டுப் போவது போன்ற தீநட்பினரும் உண்டு. இக் கருத்தினை, நான்காம் குறட்பா, 'அமரகத்து' 'தனிமை தலை' என்ற இரண்டு குறிப்புக்களாலும் உணர்த்துகின்றது. அறிவுடைமையார் பக்கமை கோடிமடங்கு நல்லது என்று கூறி ஆறாம் குறட்பா விளக்கம் செய்கின்றது.

'ஏதின்மை கோடிஉறும்' என்ற குறட்பாவின் குறிப்பு நன்கு எடுத்துக்காட்டுகிறது. சில தீய நண்பர்களைக் கனவிலும் கூட நினைக்கக் கூடாதென்று ஒன்பதாம் பாடல் புலப்படுத்தும். கனவில் நினைத்தாலும் துன்பத்தினைத் தரும். நகைத்துக்கொண்டே தீமை செய்கின்றவர்கள், முடிவதையும் முடியாது என்பவர்கள்—ஆக இத்தகைய தீய நண்பர்களைவிலக்குதல் நல்லது.

## 83. கூடா நட்பு

இவர்கள் பகைவர்களேயாவார்கள். மனதால் கூடாமல் இருந்து, தமக்குத் தீங்கு செய்வதற்கு வாய்க்கும் இடமும் நேரும் வரும்வரை புறத்தே நண்பர்கள் போலக் கூடிப் பழகுபவர்கள் ஆவார்கள். 'உட்பகையினர்' போன்றவர்களாவார்கள் என்றே சொல்லுதல் வேண்டும்.

முதலிரண்டு பாடல்களும் கூடாநட்பினது குற்றத்தினைக் கூறுகின்றன. மூன்றாம், நான்காம் பாடல்கள் அக்குற்றத்திற்குக் காரணமான அவர் கொடுமையினைக் கூறுவனவாகும். ஐந்து முதல் ஏழு பாடல்கள் அவர்களைப் பேசும் சொற்களினால் தெளிந்து கொள்ளக் கூடாது என்று குறிப்பிடுகின்றன.

அவர்களுடைய பணிவான செயல்களும் நம்புதற்குரியனவல்ல என்பதனை எட்டாம் பாடல் புலப்படுத்துகின்றது. ஒன்பதாம் பாடலும், பத்தாம் பாடலும் அத்தகைய கூடாநட்பினருடன் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்தி விளக்கம் செய்கின்றன. பொற்கொல்லர்கள் வைத்திருக்கும் பட்டடையினைக் காட்டி முதற் குறட்பா கூடாநட்பினரைக் குறிக்கின்றது.

தாங்குவது போல் இருக்கும் பட்டடை, பொன்னை, நசுக்குவதற்குத் துணையானது போல, நேரம் வந்த போது இத்தகையினர் கொடுமை செய்தே தீருவர் என்பதாகும். 'சீர் இடம் காணின்' என்று குறித்த குறளுண்மை சிந்திக்கத் தக்கதாகும்.

இவர்களை நம்மைச் சேர்ந்த இனத்தினர் என்றே கொள்ளுதல் கூடாது. விரைவில் மனமாற்றம் கொண்டு விடுவர் என்று இரண்டாம் பாடல் கூறுகிறது. இவர்கள் பழகுவதை, 'இனமல்லார் கேண்மை' என்று இரண்டாம் பாடல் தெளிவுபடுத்துகிறது.

இத்தகைய கூடாநட்பினர் நன்கு படித்தவர்களாகவும் இருப்பார்கள். பல நல்ல நூல்களையும் கற்றிருப்பார்கள். ஆனால் மனம் தீயதாகவே இருக்கும். பகைமைக் குணத்தினையே - எண்ணத்தினையே - மனதில் வைத்திருப்பார்கள். அது பிறவிக் குணமாகவும் இருக்கும். இவர்கள் மனம் நல்லதாகவே ஆகாது. 'மன நல்லர் ஆகுதல்' என்று மூன்றாம் பாடல் குறிப்பது சிந்தனைக்குரியது.

இந்தக் கூடாநட்பினர் முகத்தில் சிரிப்புக் காட்டிப் பேசுவர். ஆனால் மனமோ வஞ்சனையைக் கொண்டிருக்கும். 'வஞ்சரை அஞ்சப்படும்' என்றே குறட்பா கூறுகிறது. இவர்களைக் கண்டு நாம் அஞ்சுதல் வேண்டும். நான்காம் குறட்பா நன்கு புலப்படுத்திவிடுகிறது. ஐந்தாம்

பாடல் இவர்களின் பேச்சினால் ஏமாறுதல் கூடாது என்பதைக் குறிக்க வேண்டி, 'சொல்லினால் தேறற்பாற்று அன்று' என்று அமைத்துக் காட்டுகிறது. இவர்கள் 'ஒட்டார்' என்று ஆறாம்பாடல் கூறும். இந்த ஆறாம் பாடலுடன் 'மானம்' அதிகாரத்தில் வரும் ஏழாம்பாடலையும் கருதுக.

இவர்கள் வணக்கமான சொற்களைச் சொன்னால் அதுவும் நமக்குக் கெடுதியைக் கொடுப்பதற்கேயாகும். வில்வளைவது எதற்கு என்று நினைவுபடுத்தி ஏழாம்பாடல் விளக்குகின்றது. இவர்கள் அழுவதுபோல் காட்டுவார்கள்; கையால் தொழுவார்கள். எல்லாம் நமக்குத் தீமை செய்வதற்கே என்று எட்டாம் பாடல் எடுத்துக் காட்டும்.

இத்தகையவர்களிடம், நாமும் உண்மையாகப் பழகாமல், அவர்கள் போலவே பழகி காலம் வந்தபோது அவர்களின் நட்பினை அறவே அழித்தொழித்து விடவேண்டும் என்று ஒன்பதாம் பத்தாம் பாடல்கள் நன்கு தெளிவுபடுத்துகின்றன. இவர்களிடம் நாம் உள்ளன்புடன் பழகுவது நமக்கே கெடுதலாகுமாம்.

## 84. பேதைமை

இது ஒரு குற்றமான குணமாகும். அறிவற்றவர்களும் அறியாமை கொண்டவர்களுமாவார்கள். நல்லனவற்றை நீக்கித் தமக்குக் குற்றம் வருவதையே நாடி மேற் கொள்ளுபவர்கள் பேதைகளாவார்கள் என்று முதற் குறட்பா சுருக்கமாகவும் தெளிவுபடுத்தியும் கூறுகின்றது. முதலிரண்டு குறட்பாக்களும் பேதைமையது இலக்கணத்தைக் கூறுகின்றன.

பொது வகையான், பேதையது தொழிலினை மூன்றாம், நான்காம் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. ஐந்தாம் ஆறாம் பாடல்கள் பேதை தனது செல்வத்தினால்

என்ன செய்து கொள்ளுவான் என்பதனைக் கூறுகின்றன. அப்பேதை செல்வம் பெற்றிருந்தால் அது எவ்வாறு பயன் படும் என்பதை ஏழு, எட்டு பாடல்கள் விளக்குகின்றன. ஒன்பதாம், பத்தாம் பாடல் அவனுடைய நட்பின் குற்றத்தினையும், அவன் இருக்க வேண்டிய இடத்தினையும் முறையே கூறுகின்றன.

'ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்' என்பதுதான் பேதையானவன் செய்வதாகும் என்று முதற் குறட்பா காட்டுகிறது. நூலோர் செய்யத்தகாது என்று கூறியவற்றின் மேல் காதல் கொள்ளுவது பேதையின் வழக்கம் என்பதை, 'காதன்மை செயல்' என்று இரண்டாம் குறட்பா சொல்லுகிறது. பேதையின் தொழில், நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு மூன்றாம் குறட்பாவில் குறிக்கப்படுகின்றது.

'தான் அடங்காப் பேதை' என்பது நான்காம் குறட்பா எடுத்துக் காட்டுவதாகும். ஓதுவான், உணர்வான், பிறர்க்கும் உரைப்பான்—ஆனால் தான்மட்டும் அடங்க மாட்டான். இவனே பேதை என்கிறது நான்காம் குறட்பா. அவன் தனக்குத்தானே வரவழைத்துக் கொள்ளும் கொடிய தீமைகளை, 'அழுந்தும் அளறு' 'புனை பூணும்' என்று முறையே ஐந்து, ஆறு பால்டகள் புலப்படுத்துகின்றன. பேதையின் செல்வம் யார் யார்க்கோ பயன்படுவதாகும்.

உற்றார், உறவினார் நண்பர்களுக்கு உதவாது. அவனிடத்தில் செல்வம், இருப்பது, பித்துப்பிடித்தவன் கள் குடித்தது போன்றதாகும். இதனையெல்லாம் எட்டு-ஒன்பது குறட்பாக்கள் எடுத்துரைக்கின்றன. 'பேதை புகல்' என்று பத்தாம் குறட்பா எடுத்துக் காட்டி, சான்றோர் அவையில் பேதை செல்லுதலே கூடாது என்று விளக்கம் செய்கின்றது. பேதையின் இழிவு பத்தாம் பாடலில் தெளிவாக்கப் படுகிறது.

## 85. புல்லறிவாண்மை

இது புல்லிய அறிவினை ஆளுகின்ற தன்மை என விரியும். அதாவது தான் சிற்றறிவினனாக இருந்தே தன்னைப் பேரறிவினனாகக் கருதிக் கொண்டு உயர்ந்தோர் கூறும் உறுதியினைக் கொள்ளாதிருத்தலாகும். முதற் குறட்பா புல்லறிவினது குற்றத்தினைக் கூறுகின்றது. அப் புல்லறிவாளர்கள் தமக்கு நன்மை செய்து கொள்ளுவதை அறிய மாட்டார்கள் என்று இரண்டாம் பாடல் கூறுகின்றது.

மூன்றாம் பாடல் அவர்கள் தமக்குத் தீமை செய்து கொள்ளுவதை அறிவார்கள் என்று குறிக்கின்றது. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று பாடல்களும் அவர்கள் தம்மைத்தாமே வியந்து கொள்ளுவார் என்று எடுத்துக் காட்டுகின்றன. கடைசி நான்கு குறட்பாக்களும் அவர்கள் பிறர் கூறும் உறுதிச் சொற்களைக் கொள்ள மாட்டார்கள் என்பதை விளக்குகின்றன.

அறிவில்லாத்தன்மை மிகவும் இழிநிலையினைத் தருவது என்று கூறுகின்ற முதற் குறட்பா, 'பிறிது இன்மை இன்மையா வையாது உலகு;' என்று கூறி, அறிவின்மை உலகில் மிகவும் தாழ்வாகப்படும் என்று உணர்த்திற்று. 'பெறுவான் தவம்' என்று கூறுகின்ற இரண்டாம் குறட்பா, அறிவில்லாதவனுக்கு ஈகை என்பதே தெரியாதென்றும், அவன் அப்படி யாருக்காவது ஒன்று கொடுத்தால் அதன் காரணம் என்னவென்பதை அழகாகக் குறிப்பிடுகின்றது.

தனக்குத்தானே தீமையினை உண்டாக்கிக் கொள்ளுவதில் புல்லறிவாளர்களுக்கு இணை யாருமே இல்லை என்ற உண்மையினை மூன்றாம் பாடல் கூறுகிறது. இப்பாடலில், 'செறுவார்க்கும் செய்தல் அரிது' என்று குறித்துக் காட்டுவது நிறைந்த பொருள் பொதிந்ததாகும். தனக்குத் தானே எல்லாம் தெரியும் என்று புல்லறிவாளர்கள்

எப்போதும் செருக்குடனே இருப்பார்கள் என்பதனை 'என்னும் செருக்கு' என்பதாக முடியும் நான்காம் பாடல் தெளிவுபடுத்துகிறது.

தான் கற்றிராத நூல்களையும் கற்றவர்களாகப் பேச முன் வருவதும் புல்லறிவாளர்களின் பழக்கங்களில் ஒன்று. இதனை ஐந்தாம் பாடல் அறிய வைக்கின்றது. 'அருமறை' என்று தொடங்கப் பெறுகின்ற ஏழாம் குறட்பா எப் பொருளையும்—கருத்துகளையும்—போற்றாமல் போக்குகின்ற தன்மை புல்லறிவாளர்களிடம் உண்டு என்று கூறுகின்றது. புல்லறிவாளர்களிடம் இருக்கும் இழிய குணத்தினை 'ஒரு நோய்' என்று எட்டாம் பாடல் கூறும்.

இந்நோய் மிகமிகக் கொடிய நோய் என்பதாகும். அது சாகும்வரை அவர்களிடம் இருப்பதாகும். யாரேனும், புல்லறிவாளனுக்கு நல்லதைச் சொல்லச் சென்றால் அவன் எப்படி நடந்து கொள்ளுவான் என்பதனை ஒன்பதாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. இப் பாடலின் கருத்து மிகவும் சிந்தனைக்குரியதாகும்.

உயர்ந்தோர் பலரும்கூறுவதைப் புல்லறிவாளன் இல்லையென்று மறுப்பான். இது அவனுடைய இயல்பாகும். ஆதலால்தான் அவனுடைய தன்மையினை உலக வழக்கில் வைத்துக் கூறும் ஆசிரியர், அவன் ஒரு 'பேய்' என்று கூறுகிறார். 'வையத்து அலகையா வைக்கப்படும்' என்று பத்தாம் பாடல் கூறி, இக்கருத்தினை நன்கு விளக்கம் செய்கிறது.

## 86. இகல்

இகல் என்னும் இக்குணம் வெகுளியால், அதாவது கோபத்தினால் உண்டாவதாகும். இகல்தான் பகைமையினை வளர்த்து முற்றச் செய்வதாகும். அதாவது இருவர் தம்முள் சண்டையிட்டுக் கொள்வதற்காக மனதில் உண்டாக்கிக் கொள்ளும் மாறுபாடு.

இதனை உலகில் வழக்கமாகப் பேசும் பேச்சில் "க்ஷாத்திரம்" என்று கூறுவதுண்டு. மனதில் 'இகல்' குடி கொண்டு விட்டால் அது வளர்ந்து கொடிய பகைமையான எண்ணத்தினை உறுதி செய்து விடும் என்பதாகும். முளையிலேயே 'இகல்' வரக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

'இகல்' என்பதன் குற்றம் முதற் குறட்பாவில் கூறப்படுகிறது. இரண்டு முதல் நான்கு குறட்பாக்கள் வரை இகல் என்னும் தீய குணம் இல்லாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. ஆறாம் ஏழாம் குறட்பாக்கள் இகலினைக் கொண்டவர்களுக்குத் தீங்கு வரும் என்று குறிக்கின்றன. கடைசி மூன்று குறட்பாக்களும், இகல் நீங்குவதால் வரும் நன்மையினையும், இகல் உடைமையால் வரும் தீமையினையும் கூறுவனவாகும்.

ஒன்றுபடுவோம் என்பதற்குக் கொடிய பகைவனாக இருப்பது இகல் என்று முதற் குறட்பா கூறி 'பகல் என்னும் பண்பின்மை யாரிக்கும் நோய்' என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது. இரண்டு மூன்று குறட்பாக்கள் 'இகல்' ஒழிக்கப்பட வேண்டும் என்ற அரிய எண்ணத்திலை, 'இன்னா செய்யாமைதலை' — 'தாவில் விளக்கம் தரும்' — என்று முறையே குறிப்பிட்டுக் கூறுகின்றன.

இகல் நீங்குவதால் வரும் இன்பத்தினை, நான்காம் குறட்பா, 'இன்பத்துள் இன்பம் பயக்கும்' என்று அருமையாகக் குறித்துக் காட்டுகிறது. இகல் என்பதனை துன்பத்துள் துன்பம் என்றும் குறிக்கின்றது.

இகல் நீக்கப்பட்டுவிட்டால், அப்படிப்பட்டவர்களை வெல்வதற்கு யாரே இருக்கின்றனர் என்று ஐந்தாம் குறட்பா விளக்குகின்றது. 'வல்லாரையாரே' என்று ஐந்தாம் குறட்பாவில் காணப்படுவது சிந்தனைக்குரியதாகும்.

பிறரிடம் இகல் கொள்ளுவது—மாறுபட்ட மனம் கொள்ளுவதுதான் இனிது—என்று கூறுபவனின் வாழ்க்கை கெட்டே விடும் என்பதனை ஆறாம் பாடல் வற்புறுத்திக் கூறுகிறது. 'தவலும் கெடலும் நணித்து' என்று கூறியிருப்பது விளக்கம் தருவதாகும்.

வெற்றியறிதலை, அறிய முடியாதவர்கள்தான் இகலினைக் கொள்ளுவர் என்பது ஏழாம் பாடலின் கருத்தாகும். இக் குறட்பாவில், 'இன்னா அறிவினவர்' என்று கூறி இருப்பது உண்மையினை உணர்த்தி விடுகின்றது. 'இகல்' தோன்றினால் அதனை எதிர்த்தே ஒழிக்க வேண்டும் என்று சொல்லக் கருதி, 'எதிர்சாய்தல் ஆக்கம்' என்று எடுத்துக் காட்டுகிறது, எட்டாம் பாடல் என்பதாம்.

ஒருவனுக்கு ஆக்கம் வருகின்றபோது இகலினை நினைக்க மாட்டான், 'இகல் காணான்' என்று கூறுவது ஒன்பதாம் பாடலாகும். ஒருவனுக்கு மாறுபாடு—இகல்— ஒன்றினாலே, துன்பம் எல்லாம் உண்டாகும் என்பதாகும். நட்பு ஒன்றினாலே, நல்ல நீதி என்கின்ற பெருஞ் செல்வம் உண்டாகும். இதனை நன்கு வற்புறுத்திக் கூறுவது பத்தாம் குறட்பாவாகும்.

## 87. பகைமாட்சி

அதாவது அறிவின்மையினாலும், அது போன்ற குற்றங்களினாலும் பகைமையினை மாட்சிப்படுத்தலாகும். பகையினையே பெருமையாக நினைத்துக் கொள்ளுவதாகும். 'இகல்' போல இது மிகவும் கொடிய குற்றமேயாகும். 'இறைமாட்சி' 'படைமாட்சி' என்ற அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள 'மாட்சி' இந்த அதிகாரத்திலும் காணப்படுகின்றது.

முதற் குறட்பா 'பகைமாட்சி' என்பதனைப் பொது வகையால் விளக்கம் செய்கின்றது. இரண்டு முதல் ஏழு பாடல்கள், 'பகைமாட்சி' என்பதனைச் சிறப்பு வகையால் விளக்கிக் காட்டுகின்றன. கடைசி மூன்று குறட்பாக்களும் அதனாலான பயனைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. தம்மைவிட மிக்க பகையாய் வன்மையுடையவர்களாக இருப்பவர்களை எதிர்ப்பதை நீக்குதல் வேண்டும்.

ஏனை, மெலியவர்களுக்குப் பகையாய் இருப்பதை ஒழியாது விரும்ப வேண்டும். வெல்வதற்கு இது வழியாகும். அரச நீதி கூறுவதால் இவ்வாறு கூறினார். 'அருளுடைமையில்'—வலியார் முன் தன்னை நினைக்க—என்பது சிந்திக்கத் தக்கது. இவ்வாறே பிற இடங்களையும் கண்டு தெளிக.

'ஓம்புக, ஓம்பா' என்று கூறும் முதற் குறட்பா நன்கு அரச நீதியினைப் புலப்படுத்திவிடுகிறது. பகைவனை வெல்ல முடியாதவனிடத்தில் இருக்கும் மூன்று தீய தன்மைகளை இரண்டாம் குறட்பா எடுத்துக்காட்டி 'என்பரியும் ஏதிலான் துப்பு' என்று முடிகிறது. மெய்ம்மை நன்கு எடுத்துக் காட்டப்பட்டது. பகைக்கு மிகவும் எளியவனாகி, அவரிடம் தஞ்சம் புகுகின்றவனிடத்தில் காணப்படும் நான்கு தீய குணங்களை எடுத்துக் கூறிய மூன்றாம் குறட்பா, அப்படிப் பட்டவன் 'தஞ்சம் எளியன் பகைக்கு' என்று தெளிவு படுத்துகிறது.

எவ்விடத்திலும், எக்காலத்திலும் பகைவர்களுக்கு எளிதானவனிடம் காணப்படும் கொடுமையான இரண்டு குணங்களை நான்காம் குறட்பா வற்புறுத்திக் கூறி, 'யார்க்கும் எளிது' என்று முடிகிறது. பகைவன் எளிமையாக இவனைத் தோற்கடித்து விடுவான்.

மேலும், தீமைதரக்கூடிய நான்கு தன்மைகளை ஐந்தாம் குறட்பா எடுத்துக்காட்டி, இவைகள் இருக்கும் ஒருவன் பகைவர்களால், 'இனிய பகை' என்று கருதப்பட்டு வீழ்த்தப்

படுவான் என்று குறிக்கிறது. 'பற்றார்க்கு இனிது' என்று ஐந்தாம் பாடல் முடிவது சிந்தனைக்குரியதாகும்.

பகைவர்கள் எந்தப் பகைவனை விரும்பிக் கொள்ளு வார்கள் என்பதனை ஆறாம் குறட்பா எடுத்துக்காட்டி அவ னிடம் காணப்படும் இரண்டு தீமையான குணங்களைக் குறித்துக் காட்டுகிறது. சில பொருள் அழியக் கொடுத்தே னும் சில பகையினைக் கொள்ளுதல் வேண்டும் என்று ஏழாம் குறட்பா கூறும். 'கொடுத்தும் கொளல் வேண்டும்' என்கிறது குறட்பா.

எட்டாம் குறட்பா, பகைவர்க்குத் துணையாகும் தன்மையுடையவனைக் கூறிவிடுகின்றது. பகைவர்க்கு அவன் பாதுகாப்பானாவன் என்று கூறி 'ஏமாப்பு உடைத்து' என்று முடிப்பதாகும். பகைவர்க்கு உயர்ந்த இன்பத்தினைக் கொடுக்கும் பகைவனான மன்னனிடம் எத்தகைய குண மிருக்கும் என்பதனை ஒன்பதாம் குறட்பா கூறி, 'அஞ்சும் பகைவர்ப் பெறின்' என்று முடிகின்றது.

நீதி நூல்களைக் கல்லாத அரசனோடு பகைத்து போரிட்டு வென்று அவன் பொருள்களைக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யாத மன்னனைப் புகழ் எக்காலத் திலும் வந்து அடையாது என்று பத்தாம் பாடல் தெளிவுற உணர்த்துகின்றது. பகைவர்களினால் வெல்லப்படும் அரசனிடம் காணப்படும் தீய குணங்கள் பற்பலவாகும்.

அவைகளாவன: அன்பிலன்-ஆன்ற துணையிலன்-தான் துவ்வான் - அஞ்சும் அறியான் - அமைவு இல் - ஈகலான் - நீங்கான் - வெகுளி - நிறையிலன்-வழிநோக்கான்-வாய்ப்பன செய்யான் - பழி நோக்கான் - பண்பிலன் - காணாச்சினத் தான் - கழிபெரும் காமத்தான் - அடுத்திருந்துமாணாத செய்வான் - குணம் இலன் - குற்றம் பல - அறிவு இலான் - அஞ்சும் - கல்லான், இப்படிப்பட்ட தன்மைகள் உடைய வனை பகைவர்கள் எளிதில் வென்றுவிடுவார்கள்.

படைச் செருக்கு, படைமாட்சி, அறிவுடைமை, அன்புடைமை, பெரியாரைத் துணைக் கோடல், ஈகை, வெகுளாமை, பண்புடைமை, குற்றம் கடிதல், கல்வி, கல்லாமை, முதலிய அதிகாரங்களை நினைவுபடுத்தும் குறிப்புக்கள் பல இவ்வதிகாரத்தில் காணப்படுகின்றன. பத்தாம் பாடலில் காணப்படும் 'சிறு பொருள்' 'பொருள் செயல்வகை' அதிகாரத்தில் கூறப்படும் 'ஒன்னார்த்தெறு பொருள்' என்பதனோடு ஒப்பிடற்குரியது. பிறவும் அவை போல் காண்க.

## 88. பகைத்திறம் தெரிதல்

பற்பலவற்றையும் சிந்தித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவைகளைக் கூறுவதாகும். பகைவர்கள் பலவகைப் படுவார்கள் ஆனபடியால் 'திறம் தெரிதல்' என்று கூறினார். நம்மைவிட வலிமை மிக்க பகையை ஆக்குவதினால் வரும் குற்றமும் முன் ஆகிநின்ற பகைக்குள் நட்பாகக் கொள்ளுதற் குரியதும், நடுவுநிலையிற் வைக்கப்பட வேண்டியதும், அவற்றின்கண் நடந்து கொள்ளவேண்டிய முறையும், நீக்க வேண்டிய பகையின்கண் செய்ய வேண்டியனவும், நீக்க வேண்டிய காலமும், நீக்காவிட்டால் வரும் குற்றமும், என்று கூறப்படும் இத்தகைய திறங்களை ஆராய்ந்தறிதலாகும்.

விளையாட்டிற் கண்ணேயானாலும் பகை என்பதனை விரும்பவே கூடாதென்று முதற் குறட்பா கூறுகின்றது. 'நகையேயும் வேண்டற்பாற்று அன்று' என்று முதற் குறட்பா முடித்துக் கூறுகின்றது. முதல் மூன்று குறட்பாக்களும், பகை கொள்ளுவதினால் வரும் குற்றத்தினைப் பொது வகையாலும் சிறப்பு வகையாலும் கூறுகின்றன.

நான்கு, ஐந்து குறட்பாக்கள் பகையினையும் நட்பாக்கிக் கொள்ளுதல் பற்றி விளக்கம் செய்கின்றன.

ஆறாம் குறட்பா, நட்பு, பகை என இரண்டு வகையிலும் கொள்ளாமல், இடையே விட்டு வைக்க வேண்டியவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஏழாம் குறட்பா, நண்பர்களிடத்தும் பகைவர்களிடத்தும் எப்படி இருக்க வேண்டும் என்பதனைக் கூறுவதாகும்.

எட்டாம் குறட்பா, பகைவரை எவ்வாறு அழித்தல் வேண்டும் என்று காட்டுகிறது. ஒன்பதாம் குறட்பா, பகைவர்களை 'முள்மரம்' என்று கூறி தொடக்கத்திலேயே களைந்து எறிய வேண்டும் என்று வற்புறுத்துகிறது. அவ்வாறு களையாவிட்டால் வரும் தீமையினைப் பத்தாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது.

நகையேயும் வேண்டற்பாற்று அன்று - வில்லேர் உழவர் பகை, சொல்லேர் உழவர் பகை - ஏமுற்றவரினும் - ஏழை - பகை நட்பாகக்கொண்டொழுகும் பண்புடைமை — இன் துணையாக் கொள்க - தேறான்பகான் விடல் - நோவற்க, மேவற்க - பகைவர்கண்பட்ட செருக்கு - முள்மரம் கொல்க - செயிர்ப்பவர் செம்மல் - என்பதாக பத்துக் குறட்பாக்களிலும் முறையே கூறப்பட்டவைகள் எல்லாம் பகைவகைகளையும் கூறி அவைகளிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய பல்வகைநெறி முறைகளையும் எடுத்துக் காட்டி உணர்த்தியவைகளாகும்.

## 89. உட்பகை

அதாவது, புறத்தே இருக்கும் பகைக்கு, இடனாக்கிக் கொடுத்து, அது வெல்லும் வரையிலும் உள்ளாய் - உடனாகவே இருந்து - நிற்கும் பகை என்பதாகும். இத்தகைய பகையினை உடனே களைந்து நீக்குதல் வேண்டும் என்பதாகும்.

முதலிரண்டு பாடல்களும் உட்பகை ஆகாது என்று கூறுகின்றன. மூன்று முதல் ஆறு பாடல்கள் வரை, உட்பகை

யால் தனக்கு வரும் தீங்கினைக் கூறுகின்றன. ஏழு, எட்டு பாடல்கள் அவனுடைய குடிமக்களுக்கு வரும் தீமையினை எடுத்துக் கூறுகின்றன.

ஒன்பதாம் பாடல் உட்பகை, சிறிது தானே என்று இகழப்படாது என்பதனைக்கூறுகின்றது. மனப் பொருத்தம் இல்லாதாரோடு சிறிதளவும் கூடி வாழக்கூடாது என் பதனைப் பத்தாம் பாடல் குறிக்கின்றது. திருக்குறளில் வேறு எந்த அதிகாரத்திலும் காணப்படாத புதுமை இந்த அதிகாரத்தில் காணப்படுகிறது.

இந்த அதிகாரம் ஒன்றிலேயே, ஏழு குறட்பாக்கள் உவமை முகத்தான் உட்பகையின் கொடுமையினை விளக்கிக் கூறு மாறு அமைக்கப்பட்டுள்ளன. நிழல், நீர், வாள், கேள், மட்பகை, செப்பு, அரம், பொன், எள், பாம்பு முதலியவை களைக் காட்டி உட்பகையின் கொடும் தீமையினைக் கூறுகிறார்.

ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டியனவான நீரும் நிழலும் முதலில் இனியவேனும் பின் நோய் செய்வன வாகும். அது போல, 'தாயாதிகள்' என்று உலக வழக்கில் கூறப்படும் 'தமர்' என்ற வகையினரும் உட்பகையாதற் குரியவர்கள் என்பதனை முதற் குறட்பா சுட்டிக் காட்டு கிறது.

'இன்னாவாம்' என்பது குறட்பா கூறுவதாகும். 'வாள்' போன்ற பகைவர்களை அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் வெளிப்படையாகத் தெரிபவர்களாவார்கள். உறவினர் - நண்பர் - போலவே இருப்பவர்களைத்தான் அஞ்சுதல் வேண்டும். 'வாள்போல் - கேள்போல்' என்று இரண்டாம் குறட்பா குறிக்கின்றது.

குயவனார் மட்கலத்தினை அறுக்கும் கருவியினைக் காட்டுகிறது மூன்றாம் குறட்பா. அக்கருவி வெளிக்குத்

தோன்றாமல் உள்ளிருந்தே 'அறுப்பதாகும். 'மட்பகையின் மாணத் தெறும்' என்று மூன்றாம் குறட்பா கூறுகின்றது.

'ஏதம்பலவும் தரும்' என்று நான்காம் குறட்பா கூறி, உட்பகையின் தீமையினைக் காட்டுகிறது. உறவின் முறையால் உட்பகைத் தோன்றி விடுமாயின் அது இறக்கின்ற நிலைமையினையும் உண்டாக்கி விடும் என்று ஐந்தாம் குறட்பா கூறுகின்றது. நான்காம் குறட்பாவும், ஐந்தாம் குறட்பாவும் 'ஏதம்பலவும்தரும்' என்று முடிவது, சிந்தித்தறிய வேண்டிய உண்மையினைப் புலப்படுத்துகின்றன.

தனக்கு உள்ளாயினார் மாட்டுப் பகைமை உண்டாகி விட்டால் — அதாவது உட்பகை வளர்ந்து விட்டால், இறவாமை வாராதிருத்தல் முடியாததாகும். எப்படியும் உயிருக்கு ஆபத்து வந்தேவிடும்.

செப்பு என்கின்ற - மரத்தாலான பொருள் - மூடியுடன் பொருத்தப்பட்டு விட்டால் பொருந்திய இடம் தெரியவே தெரியாது. அப்படி இருக்கும் உட்பகை என்பது என்று, ஏழாம் குறட்பா கூறுகிறது.

அரமும் பொன்னும், எள்ளின்சிறுமை, குடிலும் பாம்பும்; ஆகிய இவைகள் முறையே, எட்டு, ஒன்பது, பத்து ஆகிய குறட்பாக்களில் கூறப்பட்டு உட்பகையின் தன்மை - கொடிய தன்மை விளக்கப்பட்டது. சிறிதேயாயினும் உட்பகை அஞ்சப்பட வேண்டியதே என்று குறிப்பால் உணர்த்தப்பட்டது.

## 90. பெரியாரைப் பிழையாமை

ஆற்றல் மிகுதியான பெரியார்களிடத்தில் நடந்து கொள்ள முறை கூறப்பட்டது. அவர்களை நன்குமதிக்காமல் நடந்து கொள்ளுதல் கூடாது. வலிமை மிக்க அரசர்களையும், ஆற்றல் நிறைந்த தவத்தோர்களையும், பெரியார்கள் என்று குறிப்பிட்டார். "பெரியாரைத் துணைக்கோடல்"

என்பது பிறிதொரு அதிகாரமாகும். 'ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும்' என்று, 'தவம்' என்ற அதிகாரத்தில் வரும் குறட்பா சிந்தனைக்குரியதாகும்.

பொதுவகையால் பெரியார்களுக்குக் குற்றம் செய்யாதிருக்க வேண்டும் என்பதனை முதற் குறட்பா எடுத்துக் கூறுகிறது. பெரியார்களைப் போற்றாமல் அவமதித்தால் வரும் குற்றம் இரண்டாம் பாடலால் அறியப்படுகிறது. மூன்று நான்கு குறட்பாக்கள் வேந்தரை நன்கு மதிக்காததால் வரும் குற்றங்களைக் கூறுகின்றன.

அப்படிப்பட்ட குற்றமுடையவர்கள் எப்படிப்பட்ட அரணைச் சேர்ந்தாலும் தப்பிக்க முடியாது என்பதை ஐந்தாம் பாடல் எடுத்துக்காட்டுகிறது. ஆறு முதல் ஒன்பது பாடல் வரை, முனிவர்களாகிய தவத்தோர்களுக்குக் குற்றம் செய்தால் வரும் தீங்கு குறிக்கப்பட்டது.

மிக்க தவத்தினையுடைவர்கள் கோபிப்பாராயின், பெரிய துணையினைக் கொண்டிருக்கும் வேந்தர்களும், தப்பித்தல் இயலாது என்ற உண்மையைப் பத்தாம் பாடல் தெளிவுப்படுத்துகிறது. 'கணமேயும் காத்தலரிது' என்று 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில் கூறப்படுவது சிந்திக்கத் தக்கதாகும்.

'போற்றலுள் எல்லாம் தலை' என்று முதற் குறட்பா பெரியார்களின் அருமையினைக் கூறுகிறது. இரண்டாம் பாடல் 'பேரா இடும்பைதரும்' என்று கூறி பெரியார்களுக்குத் தவறு செய்வதால் வரும் கேட்டினை விளக்கம் செய்கிறது. 'கெடல் வேண்டின் கேளாது செய்க' என்று மூன்றாம் பாடல் குறிப்பிட்டிருப்பது கெடுதிவருவது உறுதி என்பதைக் கூறுகின்றது.

நான்காம் பாடல் குறித்துக் காட்டும் நிகழ்ச்சி சிந்தனைக்குரியது. யமனைக் கையால் கூப்பிடுவது போன்றதாகும் என்று கூறுகிறது. 'கூற்றத்தைக் கையால் விளித்

தற்றால்' என்று நான்காம் பாடல் கூறி, அறிவுறுத்துகிறது. ஐந்தாம் பாடல், 'உளராகார்' ஆறாம் பாடல் 'உய்யார்' என்று கூறுவதும், பெரியார்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை வற்புறுத்தி நன்கு விளக்கம் தருகின்றது.

பெரியாராகிய தவத்தோர்களைப் பற்றிக் கூறு கின்ற ஏழு, எட்டு, ஒன்பது, பத்து ஆகிய பாடல்கள், தகை மாண்டதக்கார் செறின் - குன்றன்னார் குன்ற மதிப்பின் - ஏந்திய கொள்கையார் சீறின் - சிறந்தமைந்தசீரார் செறின் – என்று முறையே பெரியார்களின் அரிய பண்பு களை எடுத்து விளக்குகின்றன. 'குன்றன்னார் குன்ற மதிப்பின்' என்ற எட்டாம் பாடல், 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' என்று 'நீத்தார் பெருமையில்' வரும் அதிகாரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தற்குரியது.

## 91. பெண்வழிச் சேறல்

தன் வழி ஒழுகற்பாலனாகிய இல்லான் வழியே தான் அஞ்சி நடப்பதாகும். பெண்வழிச்சேறல் என்பது கழிபெரும் காமத்தால் இல்லாள் ஏவலுக்குத்தான் அடங்கி நடத்தல் ஆகும். இது தவறு. ஆண்பெண் இரு பாலரும் கணவன் மனைவியாக வாழும் இயல்புபற்றி கணவன் சொற்படி மனைவி நடத்தலாகும்.

கணவனுக்கேற்ற மனைவியாக—சிறந்த துணையாக இருத்தல் வேண்டும். 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற அதிகாரத்தில் இல்லாளின் பெருமை, கடமை அனைத்தும் கூறப்படுகின்றன. 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்று கூறப்பட்டிருப்பதும், 'ஒருமை மகளிரே போல' என்று கூறப்பட்டிருப்பதும் பெண்ணின் பெருமையினை எடுத்துக் கூறுவனவாகும். சிற்றின்பம் காரணமாக கழிபெருங்காமத் தால் பெண்ணிற்கு அஞ்சி, அடங்கி, குற்றேவல் செய்பவ னின் இழிநிலையினை இவ்வதிகாரம் கூறுகின்றது.

'பகைமாட்சி' என்ற அதிகாரத்தில் ஆறாம் குறளில் 'கழிபெரும் காமத்தான்' என்று கூறி இருப்பதும் சிந்திக்கத்தக்கதாகும். கணவன் தனக்கு அடங்கி அஞ்சி குற்றவேல்செய்வதை கற்புள்ள மனைவி விரும்பமாட்டாள். அத்தகைய இயல்பினைக் கண்டு மகிழவும் மாட்டாள். நாயகன் தவறாக இருக்கும்போது துணைவி அவனுக்கு ஏற்ற நல்லுரைபுகன்று சீரியதுணையாக இருத்தல் வேண்டும்.

மனைவியின் பேச்சினைக் கேட்கக் கூடாது என்பது இவ் அதிகாரத்தின் பொருளல்ல. காமமிக்கவனாகி அதன் பொருட்டுப் பெண்ணிற்கு அடிமையாவதையே கூறுகின்றது. கணவன் மனைவியை அடக்கி அடிமையாக வைக்க வேண்டும் என்று பொருள் கொள்ளுவது பொருந்தாக் கூற்றாம். பெண்ணுக்கு ஆண் அடிமையாக இருக்கக் கூடாது என்பதே இவ்வதிகாரத்தின கருத்தாகும்.

இன்பம் காரணமாகத் தம் மனையாளை விரும்பி அவள் தன்மையராய் ஒழுகுவார் சிறப்படைய மாட்டார். பொருள் செய்தலை முயல்வதற்கும் இடையூறாகும். இதனை முதற் குறட்பா கூறுகின்றது. தனது ஆண்மையை விட்டுப் பெண்மையை விழைவான் எய்திய செல்வம் பெரிய நாணத்தினையும் கொடுக்கும என்று இரண்டாம் குறட்பா கூறுகின்றது.

'மனைவிழைவார்' 'பெண் விழைவான்' என்று முறையே முதல் இரண்டு குறட்பாக்கள் ஆண் இயல்பு குன்றியவனைக் குறித்தனவாகும். ஆணுக்கும் பெண்ணுககும் இருக்கும் வேறுபாடுகள் பலப்பலவாகும். உடல் அமைப்பு முதற் கொண்டு உள்ளம், எண்ணம் முதலியனவற்றிலும் வேறுபாடுகள் பலவுண்டு.

இவை இயற்கையால் அமைக்கப்பட்டனவாகும். கற்பனையால் கூறப்படுபவையல்ல. எளிமையாகக் கூறுமிடத்து உடல்பலம் ஆண்களுக்கு இருப்பது போல் பெண்களுக்கு இருப்பதில்லை. இயற்கையின விதியாகும். விதிவிலக்குகள் காணப்படுதல் அரிதாகத்தான் இருக்கும்.

இல்லாளைத் தாழ்ந்து அஞ்சி நடப்பவனை நல்லோர் யாவரும் இழிவாகவே எண்ணுவர். அவரிடம் செல்லுங்கால் அவனுக்கு நாணமே உண்டாகும். இதனை 'தாழ்ந்த இயல்பு இன்மை' என்று மூன்றாம் பாடல் குறிக்கின்றது. மனைவியை அஞ்சி நடப்பவனுக்கு அறம் செய்யும் எண்ணமும் வாராது; வந்தாலும் செயல்படாது; அவனுக் குப் பேரின்பம் என்பதும் கிட்டாது. தொழில் செய்தலும் நடவாது என்றெல்லாம் நான்காம் பாடல் விளக்கம் தரு கிறது.

இல்லாளை அஞ்சி அஞ்சி நடப்பவன் எவ்வளவு இழி தன்மையனாகி விடுவான் என்பதனை ஐந்தாம் பாடல் கூறுகின்றது. அவன் தேவர்களைப் போல வாழ்ந்தாலும் ஆண்மையில்லாதவனாகவே கருதப்படுவான்.

பெரும் குற்றத்திற்கும் ஆளாவான் 'பெண் ஏவல்' செய்பவன் என்று ஏழாம் பாடல் குறித்துக் காட்டி அப்படிப் பட்டவனைவிட பெண்தன்மை நிறைந்த பெண்ணே பெருமையுடையவள் என்று கூறுகின்றது. பெண் விரும்பிய வாறே ஒழுகுபவன் நற்பணிகளையும் முடிக்கமாட்டான் என்று எட்டாம் பாடல் தெளிவுபடுத்துகிறது.

பெண் ஏவல் செய்பவன் இழிநிலையினை ஒன்பதாம் பாடலும் வற்புறுத்திக் காட்டுகிறது, 'செய்வார்கண் இல்' என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத்தக்கதாகும். உயர்ந்த எண்ணங்களையும், செயலாற்றும் சிந்தனையும் கொண்ட வர்கள் எக்காலத்திலும் இன்பம் காரணமாக பெண்ணடிமை என்பது போன்ற தன்மையராக இருக்கமாட்டார்கள்.

மனைவிழைவார் — பேணாது பெண் விழைவான் தாழ்ந்த இயல்பின்மை—மனையாளை அஞ்சும் இல்லாளை அஞ்சுவான்—தோள் அஞ்சுபவர் பெண் ஏவல் செய் தொழுகும் — பெட்டாங்கு ஒழுகுபவர் — என்று கூறப்

பட்டனவெல்லாம் ஆண் அடிமையாக இருக்கும் தன்மை மிக்க தவறாகும் என்று விளக்கப்பட்டது. கணவன் மனைவி இருவரும் ஒத்த அன்பும் உள்ளமும் பெற்று வாழ்தல் வேண்டும் என்ற உண்மை தெளிவாக்கப்பட்டது அஞ்சுதல் ஏவல் என்ற இரண்டும் பன்முறை கூறப்பட்டுள்ளன.

## 92. வரைவின் மகளிர்

பொருளுக்காக இன்பத்தினைக் கொடுக்கும் பெண்களைப் பற்றிக் கூறுவதாகும். இன்பத்தினை விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பவர்கள் ஆவார், ஆகாதார், என்ற அளவு - எல்லை - வரைவு - இல்லாத மகளிரது இயல்பினைக் கூறுவதாகும். இவர்களால் வரும் குற்றத்தினைக் கூறுவதாகும் முதன்மூன்று பாக்களும் அத்தகைய பெண்களின் சொல்லும், செயலும் பொய் என்று கூறுகின்றன. நான்கு முதல் ஆறு பாடல்கள் அப்பெண்களை உயர்ந்த பண்பாளர்கள் தீண்ட மாட்டார்கள் என்று கூறி தெளிவு; தருகின்றனவாகும். கடைசி நான்கு பாக்களும் அப்பெண்களைச் சேருவோர் இழிந்தோர் என்று கூறுகின்றன.

ஆய்தொடியார் - பண்பு இல்மகளிர் - பொருட் பெண்டிர் - பொருட் பொருளார் — பொது நலத்தார் புன்னலம் பாரிப்பார் - மாயமகளிர் — வரைவு இலா மாணிழையார் - இருமனப் பெண்டிர் என்று கூறப்பட்ட பத்தும் வரைவின் மகளிரின் இழி குணங்களையும் தன்மையினையும் கூறுகின்றனவாகும். அவர்கள் அன்பினால் நேசிப்பதே இல்லை; பொருள் ஒன்றினையே விரும்புவர். அவர்கள் பேசும் இனிய சொல் குற்றம் தரும் இவைகளை முதற் குறட்பா எடுத்துரைக்கின்றது. ஒருவன் பொருளை அளந்தறிந்து அதை அடையும் வரை அவனுடன் பழகுபவள்

என்பதை இரண்டாம் குறள் 'பயன் தூக்கி' என்று தொடங்கி விளக்கம் தருகிறது. அவர்களைத் தழுவி இன்புறுதல் இருட்டறையில் முன் அறியாத பிணத்தினைத் தழுவுவது போன்றதாகும் என்று மூன்றாம் குறட்பா குறித்துக் காட்டு கிறது. இக்குறட்பா பொய்ம்மை முயக்கம்' என்று குறித் திருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். சிறந்த அறிவும் அருளும் கொண்ட சிறந்தோர் இத்தகைய பெண்களை விழையமாட்டார் என்று நான்காம் குறட்பா விளக்கம் செய்கிறது.

அருட்பொருள் ஆயும் அறிவினவர்—மதி நலத்தின் மாண்ட அறிவினவர்—தந்நலம் பாரிப்பார்—முதலியன வெல்லாம் நல்ல மேலோர்களைக் குறித்து அப்படிப்பட்ட வர்கள் இத்தகைய மகளிரை நாடமாட்டார்கள் என்று கூறுகின்றன. இத்தகைய மகளிரை நாடுபவர்கள், நிறை நெஞ்சம் இல்லவர்—ஆயும் அறிவினர் அல்லார் புரையிலாப் பூரியர்கள் - திரு நீக்கப்பட்டார் - என்று குறித்து அவர்களை இழிவு படுத்திக் கூறுகின்றன. அப்பெண்களை 'அணங்கு' என்று கூறுதல் மயக்கம் கொண்டவர்கள் கூற்றாகும். அப் பெண்களை, அளறு என்று கூறியது சிந்தனைக்குரியது. உலக வழக்கில் நரகம் என்று கூறுவர்.

## 93. கள் உண்ணாமை

ஒழுக்கத்தினையும், உணர்வினையும், மனிதத்தன்மை யினையும் அழிப்பதாகும். அதனை உண்ணாமையினது சிறப்பு கூறப்பட்டது. கள் குடித்தல் என்பது இயல்பாகக் கூறப்படும்வழக்கமாகும். கள்'உண்ணாமை' என்று கூறினார். 'பருகாமை' என்பதாக இல்லை. உண்ணாமை என்றதால், தனது மதியினையும், அறிவினையும், உள்ளத்தினையும் ஆக அனைத்தையும் கெடுத்து - கள்ளுதல் - செய்கின்ற பொருள் அனைத்தையும் குறித்தார் என்று கொள்ளுதல்

வேண்டும். கள்வார் என்பது கள் வினைப்பயில்வார் என்று கூறுவது போன்றதாகும்.

பகைவரால் அஞ்சப்படாமை - புகழினை இழத்தல் ஆகிய இரண்டும் கள்ளின் மேல் காதல் கொண்டு நடப்பவருக்கு உண்டு என்று முதற்குறட்பா தெளிவாகக் கூறுகின்றது. சான்றோர்கள் ஒருபோதும் இவர்களை மனிதர்களாகவே கருதமாட்டார்கள் என்று இரண்டாம் பாடல் கூறுகின்றது. 'எண்ணப்பட வேண்டாதார்' என்று குறட்பா குறித்துக் காட்டுகிறது. தன்மகன் செய்யும் குற்றம் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளுகின்ற தாயும் மிகுந்த துன்பமடைவார் என்று, 'ஈன்றாள் முகத்தேயும்இன்னாதால்' என்பதாக மூன்றாம் குறட்பா குறித்துக் காட்டுகிறது.

நாண் என்கின்ற பெண் கள்ளுண்பார்களை விட்டு நீங்கி விடுவாள் என்று நான்காம் குறட்பா விளக்கம் தருகிறது. நாணமில்லாதவன் மனிதனேயல்ல என்பதாகும். 'நாணுடைமை' என்ற அதிகாரம் கருதற்பாலதாகும். ஒருவன் விலை கொடுத்துக் கள் குடித்து தனது மதியினையும் மெய்யினையும் மறக்கின்ற நிலை அடைகின்றானே என்று ஐந்தாம் குறட்பா விளக்கம் தருகின்றது. குடிப்பவர்களும் நஞ்சுண்பவர்களும் ஒன்றுதான் என்று ஆறாம் குறட்பா தெளிவு படுத்துகிறது.

'செய்தாரின் வேறல்லார்' என்று கூறும் கருத்து ஆழ்ந்த பொருளினைக் கொண்டதாகும். ஊரார் எக்காலத்திலும் இழிவாகப் பேசி நகுவர் என்று ஏழாம் பாடல் குறிக்கின்றது. மனதில் மறைவாக இருந்த தெல்லாம் வெளிப்பட்டு விடுவதாகும் என்று எட்டாம் குறள் கூறுகிறது. அவனுக்குப் புத்தி மதி கூறுவதும் முடியாததாகும் 'கீழ்நீர்க்குளித்தானை' என்று கூறும் ஒன்பதாம் குறட்பா சிறப்பாக கருத்தினை உணர்த்துகின்றது. கள்ளுண்ணாத போது, கள் உண்டவன் அடை

இன்ற நிலையினைக் காண மாட்டானா என்று பத்தாம் பாடல் அறிவுறுத்துகின்றது. கள்ளுண்ணாத போது கண்டால் உண்மை உணரும் அறிவு தெளிவுபடுத்தும் என்பது புலப்படுத்தப்பட்டது.

## 94. சூது

அறம் பொருள் இன்பங்கட்குப் புறம்பானதும் வாழ்வினைக் கெடுப்பதுமாகியசூதின் இயல்பினைக் கூறுதலாகும். முதல் ஐந்து பாடல்களும் வறுமை உண்டாக்குவதற்குக் காரணமாக இருப்பது சூது என்று விளக்குகின்றன ஆறு முதல் ஒன்பது பாடல்கள் சிறுமைபல செய்து சீரழிப்பது சூதுதான் என்று கூறுகின்றன. சூதினை ஒழிப்பது எளிதானதல்ல வென்பதும், ஒழிந்தாரது பெருமையும் பத்தாம் பாடலால் கூறப்படுகின்றன.

மீன் பிடிக்கும் தொழிலினைக் காட்டி சூதாட்டத்தின் தீமையினை முதற் குறட்பா தெளிவுபடுத்துகிறது. வெற்றி வருவது போலிருந்து அழிவினைத் தருவது சூதாட்டமாகும் என்றும் குறித்துக் காட்டுகிறது முதற்குறட்பா. இரையால் மறைந்த தூண்டிலிருந்த இரும்பினை மீன் விழுங்கியது போல சூதாட்டமும் ஆகும். இரண்டாம் குறட்பா சூதாடுபவர்களுக்கு நல்ல வாழ்வே இருக்காது என்று கூறுகிறது. 'நன்று எய்தி வாழ்வதோர் ஆறு' என்று இரண்டாம் பாடல் முடிவது குறிப்பிடத்தக்கதாகும்.

சூதாட்டமே வேலையாக இருப்போரும் உண்டு. அப்படிப்பட்டவர்கள் ஈட்டிய பொருளும், பொருள் வருவாயும், அவனை விட்டுப் போவது உறுதி என்பதனை மூன்றாம் பாடல் தெளிவுபடுத்துகிறது. சூதினைவிட வறுமை தருவது வேறு எதுவுமே இல்லையாகும் என்று நான்காம் பாடல் எடுத்துக்காட்டி, 'வறுமை தருவது ஒன்றுஇல்' என்று முடி

கிறது. இக்குறட்பா ‘சிறுமை பல செய்து சீரழிக்கும்’ என்று குறிப்பிட்டிருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். முன்பெல்லாம் சூதாட்டத்தினையே இடமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் ஒன்றுமே இல்லாதவராகிப் போனார்கள் என்று ஐந்தாம் பாடல் கூறுகின்றது.

சூது என்னும் முகடியால், மூடப்பட்டவர்கள் எப்போதும் துன்பத்திலேயே இருப்பார்கள்; வயிறார உண்ணவும் மாட்டார்; இதனை ஆறாம் குறட்பா எடுத்துக் காட்டுகிறது. ‘முகடி’ என்பது உலக வழக்கில் மூதேவி என்று கூறப்படுவதாகும். சூதாடும் களத்திற்குச் செல்லுகின்ற பழக்கம் கொண்டவனுடைய செல்வமும் போகும். அவனுடைய பண்பும் கெட்டுவிடும் என்று ஏழாம் குறட்பா எடுத்துரைக்கின்றது. ‘கழகத்துக் காலை புகின்’ என்று கூறி ஆறாம் குறட்பா கெடுதியினைச் சுட்டிக் காட்டுகிறது.

பொருளையும் கெடுத்து, பொய்ம்மையினையும் மேற்கொள்ளச் செய்து மனதில் அருளையும் கெடுத்து, துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்குவது சூது என்று எட்டாம் பாடல் விளக்குகின்றது. சூதாடுகிறவனை விட்டு நீங்குகின்ற ஐந்தினையும் ஒன்பதாம் பாடல் கூறுகின்றது. உடுக்கும் உடைக்குக்கூட அல்லல்படும் நிலைமை அவனுக்கு வந்தே தீரும், உணவுக்கும் துன்பப்படுவான். ஒன்பதாம் பாடல் கூறும் ஐந்தும் இன்றியமையாதனவாகும்.

## 95. மருந்து

பழவினை யென்னும் இயற்கையினாலும், வேறு காரணங்களினாலும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வருவதுண்டு. பழவினையால் வருவன தீராத நோயாக இருத்தலும் உண்டு. எனவே தீர்க்கப்படும் நோயனைத்திற்கும் வழிவகையினைப் பொதுப்படக் கூறுகின்றனர்,

உணவு, முதலியவற்றால் நோய்கள் வருவன உண்டு என்பதாகும்.

உணவும் செயல்களும் அவனவன் அளவுக்கு மீறி இருந்தால் நோயுண்டாகும். 'வளிமுதலா எண்ணிய மூன்று' என்று முதற் குறட்பா முடிகிறது. வாதப்பகுதி பித்தப் பகுதி, ஐப்பகுதி (சிலேத்துமம்) என்று மூன்று வகைகளாகக் கூறப்படுவதை மருத்துவ நூல்களில் காணுதல் வேண்டும். அளவுடன் இருத்தல் வேண்டும் என்பது முதற் குறட்பா குறித்துக் காட்டுவதாகும்.

இரண்டு முதல் ஐந்து பாடல்கள்வரை, உண்ணப்படுவன வும், அவற்றது அளவும், காலமும், பயனும் கூறப்பட்டன, ஆறு, ஏழு பாடல்களால் அவ்வாறு உண்ணாவழி உண்டா கும் குற்றம் கூறப்பட்டது. எட்டு, ஒன்பது பாடல்கள் குற்றம் உண்டானபோது மருத்துவன் தீர்க்கும் வழி கூறப் பட்டது.

பத்தாம் பாடல் நோய் தீர்த்தற்கு வேண்டுவன எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகின்றன. எல்லா நாட்டிற்கும், எல்லாக் காலத்திற்கும் பொருந்துவனவற்றைக் கூறுகின்றாரானபடியால், பொதுவான முறைகளை மட்டும் கூறினார். மருந்துகளும் தீர்க்கும் முறைகளும் காலத்திற் கேற்ப அறிவின் முதிர்ச்சியால் மாறி மாறி வருதல் கூடும் ஆனபடியால் காலத்திற்கெல்லாம் பொதுவாக நின்று நிலைத்திருக்கும் மருத்துவ முறைகளை மட்டும் கூறி விளக்கம் செய்தார்.

முன்பு உண்டது நல்லபடியாக அற்றுவிட்டது—சீரணித்தது—என்பதைஅறிந்து உண்ணுபவனானால் அவன் உடம்புக்கு நோய் வருவது இல்லையென்று இரண்டாம் குறட்பா கூறுகின்றது.

உணவும் செயலும் மிகுந்தாலும் நோய் செய்யும் - முன்பு உண்டது அற்றபிறகே உண்ணுதல் வேண்டும் - அளவறிந்து உண்ண வேண்டும் - அதனால் நீண்ட நாள் உடம்பு இருக்கும் - நன்றாகப் பசித்த பிறகே உண்ண வேண்டும் - உணவுக்கு உணவு மாறுபாடில்லாத குண முள்ளதை உண்ண வேண்டும் - குறைந்த அளவு உண்ண வேண்டும் - அதிகம் உண்ணுவதால் நோய் வரும்.

எவ்வளவு சீரணிக்க முடியுமோ அவ்வளவே உண்ண வேண்டும்-என்பனவெல்லாம் நமக்கு நாமே உடம்பைக் காத்துக்கொள்ளும் பொது முறைகளாகக் கூறப்பட்டன. இனி மருத்துவனாருக்கும்கூறுகின்றார். மருத்துவம் பார்ப்ப வர் எவைகளை முறையாகக் கண்டு கொள்ள வேண்டும் என்னும் உண்மைகளை எட்டு, ஒன்பது பாடல்கள் கூறு கின்றன. நோய் நாடுதல், நோய் முதல் நாடுதல், அது தணிக்கும் வாய் நாடுதல், அதற்கேற்ப செயல் படுதல், நோயுற்றான் அளவினை அறிதல், பிணியளவு அறிதல், காலம் அறிதல்—ஆன இவையனைத்தையும் மருத்துவன் தெரிந்து கொள்ளுதல் வேண்டும் என்று முறையே எட்டாம் பாடலும், ஒன்பதாம் பாடலும் கூறுகின்றன.

மருந்து நான்கு வகைப்படும் என்று பத்தாம் குறட்பா கூறுகின்றது. நோயுற்றவன், அதனைத்தீர்க்கும் மருத்துவன் அவனுக்குக் கருவியாகிய மருந்து, மருந்தினைப் பிழை படாமல் செய்து கொடுப்பவன் என்று நான்கு வகைப்படும். 'வாய்ப்பச் செயல்' என்று எட்டாம் பாடல் கூறுவதும், 'கற்றான் கருதிச் செயல் என்று ஒன்பதாம் பாடல் கூறுவ தும் மருத்துவன் காலத்திற்கேற்றபடி மருந்தினை அறிந்து கொடுக்க வேண்டும் என்றான். 'கற்றான்' என்றதால் அந்தந்தக் காலத்தில் கற்ற மருந்து முறைகளை என்றும் கூறுவதாகும்,

## 96. குடிமை

அதாவது உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மைகளைக் கூறுவதாகும். உயர்ந்த குடிப்பிறப்பு என்பது கல்வியறிவிலும், செல்வாக்கிலும், ஒழுக்க முறைகளிலும் மேலானவர்களின் குடும்பம் என்று பொருள்படுவதாகும்.

நாணுடைமை - ஒழுக்கமுடைமை - வாய்மை - ஈகை - இனியவை கூறல் - பண்புடைமை முதலிய அதிகாரங்களைக் குறிப்பனவெல்லாம் இவ் அதிகாரத்தில் காணப்படுகின்றன. முதல் மூன்று குறட்பாக்களும், உயர்ந்த குடியில் பிறந்தாரது இயல்பினைக் கூறுகின்றன. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று பாடல்களும் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் வறுமையுற்ற காலத்திலும் தம்முடைய தன்மையில் வேறுபட மாட்டார்கள் என்பதனைக் கூறுகின்றன.

நற்குடியில் பிறந்தவர்களிடம் குற்றம் காணப்பட்டால் அதனால் உண்டாவதை ஏழு எட்டு ஆகிய இரண்டு பாடல்களும் கூறுகின்றன. கடைசி இரண்டு பாடல்களும் குடிமைக்கும், நற்குடியில் பிறந்தவர்களிடம் காணப்படும் குண நலங்களையும் கூறுகின்றனவாகும். நற்குடியில் பிறந்தவர்களுக்கு இயல்பாகவே இருக்கும் குணங்களை முதற்குறட்பா கூறுகின்றது.

செம்மை, நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, ஈகை இன்சொல், இகழாமை ஆகிய நற்பண்புகளெல்லாம் நற்குடியில் பிறந்தார் மாட்டு இருக்கும் என்று முதல் மூன்று குறட்பாக்களும் குறித்துக் காட்டுகின்றன. 'குன்றுவ செய்தல் இலர்' என்று முடிகின்ற நான்காம் குறட்பா நற்குடியில் பிறந்தவர்கள் பொருளுக்காக வேண்டி இழி செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்று கூறுகின்றது.

''பழங்குடிபண்பில் தலைப்பிரிதல் இன்று' என்று கூறும் ஐந்தாம் பாடலும், 'மாசற்ற குலம் பற்றி வாழ்தும்என்பார்'

என்ற ஆறாம் பாடலும் நற்குடிப்பிறந்தார்களுக்கு விளக்கம் கூறுகின்றது. 'மதிக்கண் மறுப்போல் உயர்ந்து' என்று குறிப்பிடுகின்ற ஏழாம் குறட்பா சிறிய குற்றம்கூட நற்குடிப் பிறந்தாரிடம் உண்டாகி விட்டால் அது பலரும் அறியும்படி ஆகிவிடும் என்று ஏழாம் குறட்பா குறிக்கின்றது.

அன்பு என்பது நற்குடிப் பிறந்தாரிடம் இயல்பாக இருந்தாக வேண்டும் என்று எட்டாம் குறட்பா உணர்த்து கிறது. நிலத்தில் முளைத்த முளையினைக் கொண்டு நற்குடிப்பிறந்தார் தன்மையினை மிகமிக அழகுற எடுத்துக் காட்டுவது ஒன்பதாம் குறட்பாவாகும். அவர்கள் எப்போதும் இனியசொற்களே பேசுவார்கள். நாணுடைமை யும்,பணிவும் எப்போதும் உயர்ந்த குடிமக்களிடம் இருக்கும் என்பது பத்தாம் பாடல் குறிப்பதாகும்.

## 97. மானம்

நற்குடியில் பிறந்தவர்களிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளில் மானம் என்பதும் ஒன்றாகும். அதாவது எக் காலத்திலும் தனது நிலையில் தாழாமையும், ஊழ்வினை யால்—அதாவது இயற்கையால் தாழ்வு வந்தபோது உயிர் வாழாமையும் ஆகும். 'மானம்' என்பதற்கு, அளவு என்று கூறுதல் உண்டு 'தீர்மானம்' 'கட்டுமானம்' என்பன உலகியல் வழக்குச் சொற்களாகும்.

மனிதன் எதையும் செய்து வாழலாம் என்று வாழ்தல் கூடாது. மனிதப் பிறப்பு இன்ன செயல்களைச் செய்துதான் வாழவேண்டும் என்று அளவு உண்டு ஆதலால்தான் மனிதத் தன்மைக்கு மீறி குறைவு, இழிவு ஏற்பட்டு விடுமானால் உயிர் வாழாமை உண்டு எனக் குறிக்கப்பட்டது. தன் குடிப்பிறப்புக்குத் தாழ்வான செயல்களைச் செய்தால் உயர்ந்த நிலை உண்டாகும் என்றாலும், நற்குடியிற் பிறந்தார்கள் அதனைச் செய்ய மாட்டார்கள்.

'குன்றவருபவிடல்' என்று முடியும் முதற்குறட்பா இக்கருத்தினைப் புலப்படுத்துகிறது. முதன்மூன்று பாடல் களும் தாழ்வதற்குக்காரணமான செயல்களைச் செய்யாமை யினது சிறப்பினைக் கூறுவதாகும். நான்கு, ஐந்து, ஆறு பாடல்கள் அவ்வாறுசெய்தால் வருகின்ற குற்றம் இன்ன தென்பதனைத் தெளிவுபடுத்துகின்றன.

கடைசி நான்கு பாடல்களும், மானத்தின் பொருட்டால் இறப்புண்டானால் அதுசிறப்பேயாகும் என்று கூறுகின்றன. 'சீரோடு பேராண்மை வேண்டுபவர்' என்று மானமுள்ள வர்களை, இரண்டாம் பாடல் குறித்துக் காட்டி அப்படிப் பட்டவர்கள் புகழ் தேடும் பொருட்டும் தம்முடைய உயர்ந்த குடிப்பிறப்பிற்கு ஒவ்வாத செயல்களைச் செய்யமாட்டார் கள் என்று கூறுகின்றது.

நற்குடியில் பிறந்தவர்கள் செல்வப்பெருக்கத்தில் பணிவு கொண்டிருத்தல் வேண்டும் என்றும், செல்வம் சுருங்கிய போது பணியாது பெருமையுடன் இருக்கவேண்டுமென்றும் குறிப்பிடுகிறது. பணியாமை என்பது தாழ்வு வாராமை யினைக் குறித்ததாகும்.

மக்கள் தங்கள் மக்கட்பிறப்புக்கு ஒவ்வாத செயலினைச் செய்து விடுவார்களானால் மிகவும் இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர் என்னும் கருத்தினைத் தலையி னிழிந்த மயிருக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்ற நான்காம் குறட்பா பன்முறையும் சிந்திக்கத் தக்கதாகும்.

ஐந்தாம் குறட்பா, மிகவும் பெரியமனிதராக இருப்பவர் களும் மிகச் சிறிதேயானாலும், இழியசெயலைப் புரிந்தாரா யின் குன்றிவிடுவர் என்று கூறுகிறது. மலைக்குன்றினையும், குன்றிமணியினையும் கூறும் இக் குறட்பா நன்கு அமைந் துள்ளது.

மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் செல்லுவது மிகவும் இழிவான செயலாகும். அவனுக்

குத் தேவலோகம் என்று சொல்லப்படுகிறதே அதுவும் கிடைக்காது.

அப்படியானால் ஏன் அவ்வாறு தன்னை இழிவாகப் பேசுபவர் பின்னே செல்லுகின்றான் என்று ஆறாம் குறட்பா கேள்வி கேட்டு அறிவுரை கூறுகின்றது. தன்னை இகழ்பவர் பின்னே சென்று ஒருவன் வாழ்வதை விட 'இறந்தான்' என்று கூறுவதே மேலானதாகும் என்று ஏழாம் பாடல் விளக்கம் செய்கிறது.

இந்த ஏழாம் குறட்பாவுடன், 'கூடாநட்பில்' கூறப்படும் ஆறாம் குறட்பா ஒருவகையில் சிந்திக்கத் தக்கதாக அமைந்துள்ளது. 'ஊனை வளர்க்கும் வாழ்க்கை' என்று, மானம் விட்டு வாழ்பவர்களை எட்டாம் பாடல் குறித்துக் காட்டுகிறது.

'கவரிமான்' சிறப்புற எடுத்துக் காட்டுப்பட்டு, மானமுள்ளவரின் செயலினை ஒன்பதாம் பாடல் விளக்குகின்றது. 'ஒளிதொழுது ஏத்தும் உலகு' என்று கூறும் பத்தாம் பாடல் உயிர்நீத்த மானம் உடையவர்களின் பெருஞ் சிறப்பினைச் சுட்டிக் காட்டுகிறது.

## 98. பெருமை

செயற்கு அரிய செய்து பெருமை கொள்ளுவதாகும் இத்துடன், செருக்கு இன்மை, பிறர் குற்றம் கூறாமை முதலியனவும் அடங்கும். நற்குணங்கள் நிறைந்த பெரியார்களது தன்மை எனப்படும் இப்பண்புகள் கொண்டவர்கள் மேன்மேல் உயர்ந்தே செல்லுவார்கள்,

முதற் குறட்பா பெருமையின் சிறப்பினைக் கூறுகின்றது. இரண்டு மூன்று ஆகிய பாடல்கள், பெருமை என்பது குடிமை மாத்திரத்தால் மட்டும் அல்லது செல்வம் உடைமையால் மாத்திரம் அது உண்டாகிவிடாது என்று கூறுகிறது.

நான்காம் பாடல் அப்பெருமை உண்டாகும் வழியினைச் சுட்டிக் காட்டுகிறது.

அப்பெருமையினை உடையார் செய்யும் செயல் ஐந்தாம் பாடலால் குறிக்கப்பட்டது. ஆறு ஏழு பாடல்கள் பெருமையில்லாதவர்களைப் பற்றிக் கூறுகின்றன. கடைசி மூன்று பாடல்களும் பெருமையுடையவர்களைப் பற்றியும் அது இல்லாதவர்களைப் பற்றியும் கூறுகின்றன.

ஒருவனுக்குப் பெருமை என்பது என்னவென்றால் செயற்கரிய செய்வோம் என்கின்ற ஊக்கமிகுதியேயாகும். ஒருவனுக்கு மாசு என்கின்ற குற்றம் யாதென்றால், அப்படிப் பட்ட செயலை நீக்கி வாழ்வோம் என்று கருதுதலாகும். இதனை முதற் குறட்பா விளக்குகின்றது. 'வெறுக்கை' யென்பது பெருமையினைக் குறித்ததாகும்.

மக்களுயிர்க்கெல்லாம், பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்கும் என்றுஇரண்டாம் குறட்பா கூறுகின்றது. அவ்வாறு ஒத்திருக்கும் என்றாலும், சிறப்பியல்புகள் ஒத்திராது. ஏனெனில் அவைகள் செய்யும் தொழில்களால் வேறுபட்டன வாகும். வேறுபாடு, நல்லன தீயன செய்பவைகளால் உண்டாவதாகும்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்' என்று தொடங்கப் பெறுகின்ற குறட்பாவும் பிறவும் சிந்திக்கத் தக்கனவாகும். கற்பு நிறைந்த பெண்ணின் மன உறுதிப்பாடு எத்தகைமையானதோ அதுபோல் ஒருவன் தன்னை ஒழுக்கத்தினின்றும் வழுவாமல் காத்துக் கொள்ளுவானே யானால் அவனுக்குப் பெருமையுண்டு என்று நான்காம் பாடல் தெளிவுபடுத்துகிறது.

ஏழாம் பாடல் சிறப்பு யாரிடம் அமைந்திருத்தல் வேண்டும் என்று கூறுகிறது. பெருமையுடையவர்களிடத்தில், உயர்வு உயர்ச்சி என்கின்ற சிறப்பு அமைந்திருந்தால் அது பலருக்கும் நன்மையாக முடியும். அப்படி இல்லாமல்

அச்சிறப்பு சிறியவர்களிடத்தில் இருந்து விட்டால் அவர்கள் செருக்கு மிகுந்து செயல்படுவார்கள் என்பது ஏழாம் பாடலின் கருத்தாகும்.

பத்தாம் பாடல் உயர்ந்த தன்மையினை உணர்த்தி விடுகின்றது. பெருமையுடையவர்கள் பிறருடைய உயர்ச்சியினையே பேசுவார்கள். குற்றங்களை மறைப்பார்கள். சிறியவர்கள் பிறருடைய குறையினையே பேசுவார்கள். அவர்களின் உயர்ச்சியினை மறைப்பார்கள். உயர்ந்த நிலை அல்லது பதவிகளில் இருந்தாலும், செல்வப் பெருக்கில் இருந்தாலும், அரிய செயல்களைச் செய்யாத சிறியவர்கள் மேலானவர்கள் ஆகிவிடமாட்டார்கள்.

வறுமையிலிருந்தாலும் அல்லது உயர்ந்த பதவி முதலிடத்தில் இல்லாவிட்டாலும் செயற்கரிய செய்பவர்கள் பெரியவர்களேயாவார்கள். ஒப்புரவு, ஈகை முதலியன செய்வதே அரிய செயல்கள் என்று கூறப்பட்டனவாகும். 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில், செயற்கரிய என்று கூறப்பட்ட செயல்கள் தவ ஆற்றல் மிக்கவர்களுடைய செயல்களாகும்.

## 99. சான்றாண்மை

அதாவது பல நல்ல குணங்களாலும் நிறையப் பெற்று அதனை ஆளும் தன்மையாகும். பல குணங்களாலும் நிறையப் பெற்றதென்பது 'சாலும்' 'சால்பு' என்பதால் அறியப்படுவதாகும். 'பெருமை' என்ற அதிகாரத்தில் பற்பல நற்குணங்கள் எடுத்துக் காட்டப்பட்டன வென்றாலும், அவைகளும் மற்றுமுள்ள அரிய குணங்களும் நிறைந்திருக்கின்ற தன்மையினை இந்த அதிகாரம் கூறும்.

முதல் இரண்டு பாடல்களும், சால்பிற்கு ஏற்ற குணங்கள் யாவை என்பதைப் பொதுவகையால் கூறுகின்றன. மூன்று முதல் ஏழு பாடல்கள் வரை, சால்பின் தன்மையினை சிறப்பு

வகையால் கூறுகின்றன. கடைசி மூன்று குறட்பாக்களும் அவற்றால் நிறைந்தவரது சிறப்பினை எடுத்துக் காட்டு கின்றனவாகும்.

ஒப்புரவறிதல், ஈகை, அன்புடைமை, நாணுடைமை, கண்ணோட்டம், வாய்மை, கொல்லாமை, படை, இன்னா செய்யாமை, முதலிய அதிகாரங்களைப் பற்றிய கருத்துக் குறிப்புகள் இவ்வதிகாரக் குறட்பாக்களில் காணப்படு கின்றன. நமக்குத் தகுவது இது என்று சான்றாண்மையினை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு நல்லனவாய குணங்கள் எல்லாம் இயல்பாக இருக்குமென்று முதல் குறட்பா கூறு கின்றது.

'கடன்என்ப நல்லவையெல்லாம்' என்று தொடங்கப் பெறுகின்ற முதற் குறட்பா சிறப்புற அமைந்துள்ளதாகும். 'குண நலம் சான்றோர் நலனே' என்று இரண்டாம் குறட்பா குறித்துக்காட்டி, எல்லா நற்குணங்களும் நிறைந்தவர்களே சான்றோர்கள் என்று குறிப்பிடுகின்றது. மூன்றாம் குறட்பா, 'ஐந்து சால்பு ஊன்றியதூண்' என்று முடி கின்றது. இந்த ஐந்து பண்புகளுக்கும் தனித்தனி அதிகாரங்கள் இருக்கின்றன என்று அறிதல் வேண்டும்.

'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு' என்று முடி கின்ற நான்காம் குறட்பா, சான்றோர்களின் அரிய தன்மை களில் ஒன்றினைக் காட்டுகிறது. சான்றோர்கள் பகைமை யினையும் ஒறுப்பார் என்று ஐந்தாம் குறட்பா எடுத்துக் காட்டுகிறது. தமக்கு உயர்ந்தார் மாட்டுக் கொள்ளும் தோல்வியினை இழிந்தார் மாட்டும் கொள்ளத் தயங்காத வர்கள் சான்றோர்கள் ஆவார்கள், என்று ஆறாம் பாடல் விளக்கம் தருகின்றது.

இன்னா செய்தார்க்கும் இனியவைகளையே செய்தல், சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெற்றிருத்தல், ஊழி பெயரினும் தான் பெயராதிருத்தல்—ஆன குணங்களெல்

லாம்; சால்புடையவர்களிடத்தில் உள்ளனவென்று முறையே, ஏழு, எட்டு, ஒன்பதாம் பாடல்கள் கூறுவன வாகும். சான்றோர்கள் பல குணங்களையும் தாங்கும் தன்மையிலிருந்து குறைந்து விடுவார்களாயின், இந்தப் பூமி யும் தனது பாரத்தினைத் தாங்காததாய் முடியும்.

சான்றோர்கள் பல குணங்களையும் தாங்கிக் கொண்டிருப்பது அவர்களுக்கு இயல்பேயாகும் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது. பூமி அனைத்தையும் தாங்குவது இயல்பு என்பது குறிப்பாகும். ‘வாழ்க்கைத் துணை நலம்’ என்ற அதிகாரத்தில், ‘கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்’ என்று கூறியது போலவே, இந்த அதிகாரத்தில், எட்டாம் குறட்பாவிலும் அவ்வாறே கூறினார். ‘சால்பு’-‘கற்பு’ என்பன ஒரே தன்மையனவாம்.

## 100. பண்பு உடைமை

பெருமை, சான்றாண்மை முதலிய அதிகாரங்களில் கூறப்பட்டவைகளை உணர்ந்து அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதலாகும். யாவரும் காணுதற்கு எளிய வராகிப் பழகுதல், அரிதான பண்புடைமை என்னும் நன்னெறியினை அடைவதற்கு எளிதான வழியாகும் என்று முதற் குறட்பா விளக்கமும் தெளிவும் தருகின்றது. ‘எண்பதத் தால் எய்தல் எளிது’ என்று முதற் குறட்பா அரிய குறிப்பினைத் தருவது சிந்திக்கத் தக்கதாகும்.

உலகத்தோடு அமைந்த நற்குடியில் பிறந்திருப்பதும் யாவரிடத்தும் அன்புடையவர்ளைாக இருப்பதும் பண்புடைமை என்னும் நன்னெறியாகுமென்று இரண்டாம் குறட்பா விளக்குகிறது. முதலிரண்டு குறட்பாக்களும் பண்பு உடையார் ஆவதற்குக் காரணங்களைக் கூறுகின்றன. மூன்று முதல் ஆறாம்பாடல் வரை பண்புடையாரது உயர்ச்சி கூறப் பட்டது

கடைசி நான்கு பாடல்களாலும் பண்புடைமை இல்லாதாரது இழிவு கூறப்பட்டது. உறுப்புக்களால் ஒத்திருத்தல் மக்களோடு ஒத்திருத்தல் என்பதற்குக் காரண மாகிவிடாது என்றும், மனிதப் பண்பினால் ஒத்திருத்தலே மக்களோடு ஒத்திருப்பதற்குக் காரணமாகுமென்றும் மூன்றாம் குறட்பா எடுத்துக் காட்டுகின்றது.

முதலிரண்டு குறட்பாக்களும், 'பண்புடைமை என்னும் வழக்கு' என்று முடிவதும், பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு-பண்பு பாராட்டும் . உலகு-பண்புஉள பாடறிவார் மாட்டு-பண்பு உடையார் பட்டுண்டு உலகம்-என்று முறையே மூன்று, நான்கு, ஐந்து, ஆறு பாடல்கள் குறிப்பிட்டிருப்பதும் பண் பாளர்களின் உயர்ச்சியினை எடுத்துக் காட்டுவனவாகும்.

பிறரை இகழ்ந்து பேசுதல் விளையாட்டின் கண்ணும் துன்பத்தினைத் தரும் என்று ஐந்தாம் பாடல் குறித்துக் காட்டுகிறது. பண்பாளர்கள் இதனைச் செய்யமாட்டார்கள். இந்த உலகம் நன்முறையில் நடைபெற்று வருவதற்குக் காரணம் பண்புடையவர்கள் இருப்பதினால்தான் என்று ஆறாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் பண்பு இல்லாதவனை மரம் என்றே ஏழாம் குறட்பா கூறுகின்றது. மக்களுடன் எவ்வாறு பழகுதல் வேண்டும் என்றும் மக்கட்பண்பு இல்லாதவன் அரத்தினைப் போன்று கூர்மையான மதி படைத்தவனாக இருந்தாலும், 'மரம் போல்வர்' என்றும் ஏழாம் பாடல் குறிக்கின்றது. உயர்ந்த பண்பாளர்களின் தன்மையினை எட்டாம் பாடல் எடுத்துரைக்கின்றது.

'பண்பு ஆற்றாராதல் கடை' என்று கூறி பண்புடைமை யின் கடமையினை எட்டாம் பாடல் குறித்ததாகும். ஒன்பதாம் பாடல் அரிய உண்மையினை எடுத்துக்' காட்டு

கிறது. பண்பு இல்லாததால், ஒருவரோடும் கலந்து உள்ளம் மகிழமாட்டாதவர்களுக்கு, மிகவும் பெரிய இந்த உலகம், இருளில்லாத பகற்பொழுதிலும், இருளிலேயே கிடந்ததா கும் என்பதனை ஒன்பதாம் பாடல் நன்கு உணர்த்துகிறது.

நல்ல பசும்பால் அது வைக்கப்பட்ட பாத்திரத்தினால் கெட்டது போன்றதாகும் என்ற உவமையினைக் காட்டி அரிய கருத்தினைப் பத்தாம் பாடல் அறிவுறுத்துகிறது. பண்பில்லாதவனிடத்தில் உள்ள செல்வம் அந்த ஆவின் பால் போலாயிற்று என்று கூறப்பட்டது.

## 101. நன்றியில் செல்வம்

ஈட்டியவர்க்கும், பிறர்க்கும் பயன்படாத செல்வத்தினது இயல்பினைக் கூறுவதாகும். செல்வத்தினையுடையவனது குற்றம், செல்வத்தின் மேல் ஏற்றப்பட்டது அப்படிப்பட்டவனிடம் இருக்கின்ற செல்வம் பயன்படாமல் போவதோடு தீமையினையும் உண்டாக்குவதாகும்.

முதற்குறட்பா, அத்தகைய செல்வம், ஈட்டியவனுக்கும் பயன்படாது என்பதனைக் கூறுகின்றது. இரண்டு, மூன்று, நான்கு பாடல்கள் அச்செல்வம் பிறர்க்குப் பயன்படாது என்பதனைக் கூறுகின்றது. ஐந்து, ஆறு ஆகிய இருபாடல் களும் மேற்கூறிய இரண்டு வகையிலும் பயன்படாத தன்மை யினைக் குறிக்கின்றன. கடைசி நான்கு பாக்களும் நன்றியில் செல்வத்தினுடைய குற்றத்தினை விளக்கம் செய்கின்றது.

'வாய்சான்ற பெரும் பொருள்' என்று முதற்குறட்பா குறித்துக் காட்டுகிறது. நிறைய செல்வம் இருக்கின்றது என்பதாகும். அவனோ, கஞ்சத்தனம் கொண்ட உலோபி, அவனும் உண்ணான் அனுபவிக்கவில்லை. பிறகுசெத்தான். அந்தச் செல்வத்தினைப் பயன்படுத்தும் உரிமையின்றியே செத்தான்.

இதனை முதல் குறட்பா நன்கு தெளிவுபடுத்துகிறது. 'பொருள் செயல் வகை' என்ற அதிகாரத்தின் கருத்துகளையும் ஒப்பிட்டுப் பார்த்தல் நல்லதாகும். 'எல்லாம் பணத்தினாலேதான் பொருளாலேதான் கூடும்' என்று சொல்லிக் கொண்டே செய்யவேண்டியவைகளையும் செய்யாமல் இருப்பவனை 'மாணாப் பிறப்பு' என்று இரண்டாம் குறட்பா கூறுகிறது.

உலக வழக்கில் பேய்ப்பிறப்பு என்றும் கூறலாம். ஈகை என்பதே அறியாத இப்படிப்பட்டவனை, இரண்டாம் குறட்பா 'மருளான்' என்றும் சுட்டிக்காட்டிற்று. செல்வத்தினை மட்டும் மற்றவர்களைவிட அதிகமாக சேர்ப்போம் என்று எண்ணி அதனையே மிகமிக அதிகமாகச் சேர்த்து, அதன் பயனான புகழினை விரும்பாத ஆடவர்கள் உலகில் வாழ்வது இப்பூமிக்குப் பாரமேயாகும் என்பதனை நன்கு மூன்றாம் குறட்பா உணர்த்துகின்றது.

'ஈதல் இசைபட வாழ்தல்' என்று பிற அதிகாரத்தில் வரும் குறட்பாவினையும் பிறவற்றையும் சிந்தித்தறிதல் வேண்டும். ஒரு பொருளும் ஈகை செய்து அறியாதவன் யாராலும் விரும்பும் தன்மையில்லாதவனே ஆவான். அப்படிப்பட்டவன், தான் இறந்த பிறகு எச்சமாக நிற்பது எது என்று எண்ணமாட்டானோ என்ற குறிப்பினை நான்காம் பாடல் விளக்குகின்றது.

'கோடி உண்டாயினும் இல்' என்று கூறும் ஐந்தாம் பாடலும், 'ஏதம் பெருஞ் செல்வம்' என்று கூறும் ஆறாம் பாடலும் அப்படிப்பட்டவனிடத்தில் இருக்கின்ற செல்வத்தின் தன்மையினை எடுத்துக் கூறுகின்றனவாகும். கொடுமையான செயலினைச் செய்பவன் என்று ஏழாம் பாடல் அரிய கருத்தினை எடுத்துக்காட்டி விளக்கம் தருகிறது.

'தமியள் மூத்தற்று' என்று குறிப்பிடுவது பன்முறையும் சிந்திக்கத்தக்கதாகும். 'மிகு நலம் பெற்றாள்' என்று செல்வத்

தின் அருமையினை உணர்த்துகிறது. இக்குறட்பா அச்செல்வமும் பயனிழந்து போகும் என்று உணர்த்திற்று. எட்டாம் குறட்பா அவனுடைய செல்வத்தினை, 'நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று' என்று அறிவுறுத்தும் கருத்து நன்கு சிந்திக்கத் தக்கதாகும்.

'ஒப்புரவறிதல்' என்ற அதிகாரத்தில், ஐந்து, ஆறு ஏழு பாடல்களில் கூறப்பட்டுள்ள கருத்துண்மைகள் உடன் வைத்து எண்ணத்தக்கனவாகும். அப்படிப்பட்டவன் ஈட்டிய பொருளை யாரேனும் பிறர் கொண்டு செல்வர் என்று ஒன்பதாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. புகழ் தருவதாகிய செல்வத்தினையுடையவரிடம் சிறிது காலம் காணப்படும் வறுமையானது மழை பொழியும் மேகம் வறுமை மிக்கதாயிற்று என்று சொல்வது போன்றதாகும் என்று பத்தாம் குறட்பா பகர்கின்றது.

மாணாப்பிறப்பு-நிலக்குப் பொறை-நச்சப்படாதவன்-உண்டாயினும் இல் - ஏதம்-நச்சுமரம்-என்பனவெல்லாம், நன்றியில் செல்வத்தின் குற்றத்தினையும் அதனைப்பெற்றவனுடைய இழிதன்மையினையும் கூறி மெய்ப்பித்தனவாகும்.

## 102. நாண் உடைமை

முன் அதிகாரங்களில் கூறிய நல்லியல்புகள் கொண்ட மக்கள் உயர்ந்தோரானபடியால், தமக்கு ஒவ்வாத செயல்களைச் செய்வதற்கு நாணுவார்கள் என்பதனைத் தெளிவு படுத்திக் கூறுவதாகும். நன்மக்களுக்கு நாணம் என்பது யாது என்றால், செய்யும் செயல்கள் காரணமாக நாணமுறுதல் என்பதேயாகும்.

அப்படி இல்லாமல், மனம், மொழி, மெய்களது ஒடுக்கத்தால் வரும் நாணமோ என்றால், அது நல்ல குலமகளிர்பால் காணப்படும் நாணம் என்பதேயாகும்.

இதனை முதற்பாடல் தெள்ளத் தெளிய எடுத்துரைக்கின்றது.

நாணம் என்பதனுடைய இலக்கணம் முதற்பாடலால் எடுத்துக்காட்டப்பட்டது. நாணத்தினது சிறப்பினை, இரண்டுமுதல் நான்காம் பாடல்கள் வரை கூறுகின்றன. ஐந்தாம் பாடல் அவர்களுடைய சிறப்பினைக் கூறுகின்றது.

ஆறு, ஏழு பாடல்கள் நாணம் உடையவர்களுடைய செயல் எப்படி இருக்கும் என்று விளக்குகின்றன. எட்டு முதல் பத்தாம் பாடல் வரை, நாணம் இல்லாதாரது இழிநிலை எடுத்துக்காட்டப்பட்டதாகும்.

மாந்தர்க்கு அமைந்துள்ள தனிச்சிறப்பு என்னவென்பதை இரண்டாம் பாடல் குறிக்கின்றது. இக்கருத்தினை; 'நாண் உடைமை மாந்தர் சிறப்பு' என்று குறித்துக் காட்டுகிறது. ஊன், உடை என்பன போன்றவைகள் எல்லாம் எல்லா உயிர்களுக்கும் வெவ்வேறாக இல்லை என்பதையும் இக் குறட்பா உணர்த்துகின்றது.

பிற உயிர்கள் உடம்பினை நிலைக்களனாகக் கொண்டிருக்கும். ஆனால் மக்களுக்கோ, சான்றாண்மை என்னும் நன்மை, நாணம் என்பதனை நிலைக்களனாகக் கொண்டிருப்பதாகும் என்று மூன்றாம் குறட்பா விளக்கம் செய்கிறது.

கருமத்தால் நாணுதல்-நாணுடைமை மாந்தர் சிறப்பு-நன்மை குறித்தது சால்பு உறைபதி என்னும் உலகு-அணியன்றோ நாணுடைமை-நாண் வேலி-நாணால் உயிரைத் துறப்பர்-என்று குறிப்பிட்டனவெல்லாம் நாணுடைமையின் சிறப்பினையும் அதனைக் கொண்ட மக்களின் பெருமையினையும் எடுத்துக் காட்டுவனவாகும். நாணம் இல்லாதவர்கள் உலகில் வாழ்வது, மரப்பாவை ஆடுவது போன்றதாகும் என்று பத்தாம் பாடல் கூறி நாணம் இல்லாதாரது இழிதன்மையினை எடுத்துக் கூறுகிறது.

நாணம் இல்லாதவர்களை, அறமே தண்டிக்கும் என்று எட்டாம் பாடல் கூறுவதும், 'நலம் சுடும் நாணின்மை நின்றக்கடை' என்று ஒன்பதாம் பாடல் கூறுவதும் நாணம் அற்றவர்களின் தாழ்ந்த இயல்பினை எடுத்துரைத்தன வாகும்.

நாணத்தினையே வேலியாகக் கொண்டு உயர்ந்தோர் வாழ்வார்கள் என்று ஆறாம் பாடல் மிகவும் சிறப்பாகக் கூறுகின்றது. ஒன்பதாம் பாடல் 'நலம்' என்று கூறியது, பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம் என்ற அனைத்தையும் குறித்தவையாகும். பத்தாம் பாடலில், 'இயக்கம்' என்று குறிப்பிட்டது பன்முறையும் சிந்திக்கத் தக்க உண்மையினைக் கொண்டதாகும்.

## 103. குடி செயல்வகை

ஒருவன் தான் பிறந்த குடியினை உயரச் செய்தல் என்தபனைக் கூறுவதாகும். குடி என்பது தனது குடும்பத்தினை மட்டும் குறிப்பதாகும் என்பதல்ல. தன்னைச் சார்ந்த வகையினர் என்ற பரந்த எண்ணத்தில் கூறப்பட்டதாகக் கொள்ளுதல் வேண்டும். குறிப்பிட்ட சிறு எண்ணிக்கையுள்ளவர்களை உயர்த்துதல் என்று மட்டும் 'குடி செயல் வகை' கூறவில்லை. குடிமக்கள் என்று குறிப்பிட்டதால் பலருக்கும் பயன்படுபவனாக இருக்கவேண்டும் என்பதனையே குறித்தார். அவனுக்குப் புகழ் உண்டாவதும் அதனாலேயே வரும் என்றறிதல் வேண்டும்.

முதலிரண்டு பாடல்களும் அதனைச் செய்வதற்குக் காரணத்தினைக் கூறுகின்றன. மூன்று நான்கு பாடல்கள் அவனுக்குத் தெய்வம் துணையாகவரும் என்று கூறுகின்றது. தெய்வம் என்று கூறியதால் இயற்கையும் அவனுக்குத் துணை செய்யும் என்பதாயிற்று.

ஐந்து, ஆறு, ஏழு பாடல்கள் குடியை உயரச் செய்பவன் அடையும் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றன. குடி உயரச் செய்பவனுடைய இயல்பினை எட்டு, ஒன்பதாம் பாடல்கள் கூறுகின்றன. பத்தாம் பாடல் ,குடி உயரச் செய்யும் நல்லாள் இல்லாத குடிக்கு வருகின்ற குற்றத்தினை விளக்குகின்றது.

பெருமையின் பீடுடையதுஇல்—நீள்வினையால் நீளும் குடி-தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும் - சூழாமல்தானே முடிவெய்தும்-என்று குறிக்கப்பட்டனவெல்லாம் குடி உயரக் கூடிய சிறப்பினையும் குடி செய்வானின் உயர்ச்சினையும் கூறுகின்றனவாகும். முதற் குறட்பா 'கைதூவேன்' என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத் தக்கதாகும். 'கைவிடேன்' என்பது பொருளாகும்.

'பீடுடையது இல்' என்று கூறிப் பெருமை கூறப்பட்டது. குடிமக்களுக்கு உழைப்பதே பெருமையும் புகழும் தருவ தாகும் என்று முதல் குறட்பா விளக்கம் தருகின்றது. இரண்டாம் குறட்பா அவனுக்கு இருக்க வேண்டிய இரண்டு பண்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. மூன்றாம் குறட்பா ஆழ்ந்த பொருளினை எடுத்துரைக்கின்றது.

குடி உயரச் செய்பவனுக்குத் தெய்வமும் தானே வந்து பேருதவி புரியும் என்று வற்புறுத்திக் காட்டுகிறது. 'தெய்வம்' என்ற சொல்லின் விளக்கங்களைப் பிற இடங்களில் கண்டு தெளிக. தெய்வத்தினை உருவகப் படுத்தி மடிதட்டிக் கொண்டு வரும் என்று கூறியது குடி மக்களுக்கு உழைத்தல் வேண்டும் என்ற சிறப்பினை மேம் படுத்தியதேயாகும்.

நாண் என்னும் நல்லாள்-நிலம் என்னும் நல்லாள் என்பன போன்றவைகளைச் சிந்திக்கவும். தம் குடி குடிக்கான செயல்களை விரைந்து முயன்று செய்பவர் களுக்கு அச் செயல்களை முடிக்கும் திறம் அவர் தேட

வேண்டாமல் தானே வரும் என்று நான்காம் பாடல் தெளிவுபடுத்துகின்றது. உலகோர் தானே வந்து ஒத்துழைப் பார்கள் என்பது குறிப்பாகும். 'தானே முடிவு எய்தும்' என்று குறட்பா கூறுகின்றது.

உலகமே அவனைச் சுற்றிக் கொண்டிருக்கும் என்று ஐந்தாம் பாடல் எடுத்துரைக்கின்றது. 'சுற்றமாச் சுற்றும் உலகு' என்று குறட்பா கூறி அவனுடைய பெருமையினைக் கூறுகின்றது. அவன் பிறர் குற்றம் கூறும்படி வைத்துக் கொள்ளக் கூடாது என்பதை, 'குற்றம் இலனாய்' என்று தொடங்கும் இக் குறட்பா வலியுறுத்துகிறது.

குடி மக்களுக்குத் தொண்டாற்றுவதே ஆண்மைக்கு அடையாளமாகும் என்று ஆறாம் குறட்பா விளக்குகின்றது. குடி மக்களுக்குச் செய்வதைத் தனக்குச் சொந்தமான செயலாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பதற்காக, 'இல்லாண்மை ஆக்கிக் கொளல்' என்று கூறினார். குடி மக்களுக்குத் தொண்டாற்றும் அரிய பண்புகள் பலரிடமும் காணமுடியாது. சிலரிடமே தலைமைப் பண்பு காணப்படும். இதனை ஏழாம் பாடல் கூறுகிறது.

'ஆற்றுவார் மேற்றே பொறை' என்று குறிப்பிட்டு இக் கருத்து விளக்கம் செய்யப்படுகிறது. குடிமக்களுக்காகப் பாடுபடுபவனுக்கு நேரம் காலம் என்பது இல்லையென்று கூறப்பட்டது. பருவத்தினை அவன் பார்த்துக் கொண் டிருக்கத் தேவையில்லை. மக்களுக்குப் பாடுபடுபவன் எந்த நேரமும் தொண்டு செய்து கொண்டே இருப்பான்.

'இல்லை பருவம்' என்று எட்டாம் குறட்பா குறித்துக் காட்டி உண்மையினைப் புலப்படுத்துகிறது. 'காலமறிதல்' என்ற அதிகாரத்தில், 'வேண்டும் பொழுது' என்பதனைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். குடிமக்களுக்குத் தொண் டாற்றுபவனுக்குத் துன்பங்கள் நிறைய வரும். எப்போதும் துன்பத்திலேயே இருக்க நேரிட்டாலும் நேரிடும் என்ற

கருத்தினை ஒன்பதாம் பாடல் நயமாக எடுத்துரைக் கின்றது; சிந்தனைக்குரியதாகும்.

நல்ல ஆள் இருந்து தாங்கி ஆவன செய்யாவிட்டால் குடி வீழ்ந்து விடும் என்று கூறுகின்றார். 'நல்லாள் இல்லாத குடி' என்று முடிகின்ற பத்தாம் குறட்பா இக் கருத்தினைக் கூறுகின்றது. குடிமக்களுக்கு வாழ்கின்றவன் சிறப்பும் கடமையும் உணர்த்தப்பட்டன. 'செயல் வகை' என்று, தெரிந்து செயல் வகை, வினை செயல் வகை, பொருள் செயல் வகை முதலிய அதிகாரங்களும் முடிகின்றன.

## 104. உழவு

சிறுபான்மை வாணிபம் செய்பவர்களுக்கும் பெரும் பான்மை வேளாண்மைத் தொழில் செய்பவர்களுக்கும் உரியதாகும். தொழில் செய்யும் அனைவர்க்குமே உரித்தான தாகக் கொள்ளுதல் வேண்டும். உழவினது சிறப்பினை முதற்குறட்பா கூறுகின்றது. இரண்டு முதல் ஆறாவது குறட்பா வரை உழவுத் தொழில் செய்வாரது சிறப்புக் கூறப் பட்டது. ஏழு முதல் ஒன்பதாம் பாடல் வரை உழவுத் தொழில் செய்யும் முறைகள் கூறப்பட்டன. பத்தாம் குறட்பா உழவுத் தொழில் செய்யாமையின் குற்றத்தினைக் கூறுகின்றது.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றும், 'உழந்தும் உழவே தலை' என்றும் கூறப்பட்டதால், தலையான தொழில் உழவேயாகும் என்று முதற் குறட்பா தெளிவு படுத்துகிறது. பிற தொழில்களால் பொருள் எய்திய வழியும் உணவுக்காக உழவுத் தொழிலுக்கே செல்ல வேண்டி யிருப்பதால் அவ்வாறு சிறப்பிக்கப்பட்டது.

இரண்டாம் குறட்பா, 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்று கூறுகிறது. உலகத்தாரை நிலைத்து நிற்க வைப்பதால்

ஆணி' என்று கூறினார். அதுவே அடிப்படையானதாகும். மூன்றாம் குறட்பா, 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றும், மற்றையோர், 'தொழுதுண்டு பின் செல்பவர்' எனவும் கூறி உழவர்களின் பெருஞ் சிறப்பினை விளக்கிக் காட்டுகிறது.

நான்காம் குறட்பா உழவர்களை, 'அலகு உடைய நீழலவர்' என்று குறிப்பிடுகிறது. 'பல குடை நீழலும் தங்குடைக் கீழ்காண்பர்' என்றும் கூறுகிறது. அனை வரிக்குமே - அனைவரையுமே, காப்பாற்றுவது உழவுத் தொழில் என்பதும் அதனைச் செய்வோரையும் சிறப்பித்துக் கூறியது.

தம்கையால் உழுது உண்ணும் இயல்பினை உடைய உழவர்களை, ஐந்தாம் குறட்பா, 'கைசெய்தூண் மாலையவர்' என்று குறிப்பிடுகிறது. அவர்கள் பிறரிடம் சென்று யாசிக்கமாட்டார்கள் என்றும், யாசிப்பவர்களுக்கு மறைக்காமல் கொடுப்பார்கள் என்றும் பெருமையாக ஐந்தாம் குறட்பா குறிக்கிறது.

ஆறாம் குறட்பா, உழவர்கள் தமது தொழிலைச் செய்யாவிட்டால், யாவரும் விரும்பும் உணவும் இல்லை. துறந்தோம் என்பவர் அந்த அறத்தின் கண் நிற்றலும் முடியாது என்று எடுத்துரைக்கின்றது.

நிலத்தினை உழுகின்ற முறையின் பொதுத் தன்மை யினை ஏழாம் பாடல் குறித்துக் காட்டுகிறது. இப்பாடலில், 'தொடிப் புழுதி கஃசா உணக்கின்' என்று கூறப்பட்டிருப்பது இன்றியமையாததாகும். உழவர்கள் அறிய வேண்டிய ஐந்து உண்மைகளை எட்டாம் பாடல் உணர்த்துகின்றது. இந்த ஐந்தும் மிகவும் சிறப்பான செயல்களாகும். 'செல்லான் கிழவன் இருப்பின்' என்று தொடங்குகின்ற ஒன்பதாம் பாடல், உழவன் தன்னுடைய நிலத்தினைத் தானே நேரில் சென்று பார்க்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் நிலம் கெட்டுவிடும் என்றும் விளக்குகின்றது.

நிலத்தினை மனைவிக்கு ஒப்பிட்டுக் கூறுவது பன்முறையும் சிந்திக்கத்தக்கதாகும். உழவனைக் கணவன் என்று கூறினார். பத்தாம் பாடல், 'நிலம் என்னும் நல்லாள் நகும்' என்று குறட்பா முடிகிறது. உழவுத் தொழில் இருக்கும் போது வறுமையென்பதே இருப்பதற்கு இடமில்லை என்ற இக் குறட்பா, குறிப்பாக உணர்த்தி உண்மையினை உணர வைக்கிறது.

## 105. நல்குரவு

வறுமை என்பதனைக் குறிப்பதாகும். நுகரப்படுவன எதுவுமே இல்லாமையாகும். முதல் ஐந்து பாடல்களும் நல்குரவு என்பதன் கொடுமையினை உணர்த்துகின்றன. ஆறுமுதல் ஒன்பது பாடல் வரை நல்கூர்ந்தார்க்கு-வறுமையாளருக்கு உண்டான குற்றங்கள் கூறப்படுகின்றன. அவ்வறுமை உளதாய வழி செய்வது இன்னதென்பதனைக் கூறுவது பத்தாம் குறட்பாவாகும். 'இன்மையே இன்னாதது' என்று முதற் குறட்பா எடுத்துக் காட்டி, நல்குரவின் கொடுமையினைச் சுட்டிக் காட்டிற்று.

இரண்டாம் பாடல், 'இன்மை என ஒருபாவி' என்று நல்குரவினைக் குறிக்கின்றது. இம்மை மறுமையாகிய இன்பம் எதுவுமே இல்லையாக அத்துன்பம் வரும் என்பதாகும். 'இன்மை என ஒருபாவி' என்பது, 'அழுக்காறு என ஒருபாவி' என்பதுபோல் கூறப்பட்டது.

நல்குரவு என்பது 'தொல் வரவும் தோலும் கெடுக்கும்' என்று மூன்றாம் குறட்பா கூறுகின்றது. பழங்குடிக்குண்டான பெருமையினையும் கெடுக்கும் - சொல்லின் தன்மையினையும் கெடுக்கும். இரண்டினையும் ஒருங்கே கெடுக்கும் என்பதாகும். நற்குடியில் பிறந்தோர்க்கும், 'நல்குரவு' வந்துவிட்டால் இழிவான சொற்களுக்கு இடமாக்கிவிடும்.

'சோர்வு தரும்' என்று நான்காம் பாடல் முடிந்து உணர்த்து கிறது.

'பல் குறைத் துன்பங்கள் சென்றுபடும்' என்று கூறும் ஐந்தாம் குறட்பா, நல்குரவின் கொடிய தன்மையினைக் கூறுகின்றது. வறுமையுற்றவர்கள் நற்பொருள்களை எடுத் துரைத்தாலும் பிறர் கேட்க மாட்டார்கள். கேட்டால் பின்னர் பணத்திற்கு வருவாரோ என்று அஞ்சி கேட்க மாட்டார்களாம். இதனை ஆறாம் குறட்பா குறிப்பாக உணர்த்துகிறது.

ஈன்றதாயும், அந்நியனைப் பார்ப்பது போல் பார்க்க வும் நினைக்கவும் செய்து விடுவது இந்த நல்குரவென்று ஏழாம் பாடல் எடுத்துரைக்கின்றது. நெருப்பின் மேல் தூங்குவதும் முடியும் - இந்த நல்குரவு வந்துவிட்டால் கண்ணுறக்கம் இல்லையென்று ஒன்பதாம் குறட்பா அறிவுறுத்துகிறது.

நுகரப்படும் பொருள்கள் யாவுமே இல்லாதவர்கள் 'முற்றத்துறத்தலே' நல்லது என்று குறிப்பிட்டுக் காட்டு கிறது பத்தாம் குறட்பா. ஒருவழியில் இவர்களும் துறந்தாராயினராக ஆதல் வேண்டும் என்பதாகும்.

## 106. இரவு

இரவு, என்பது யாசித்தல் என்பதாகும். உலகு வழக்கில் 'பிச்சை எடுத்தல்' என்று கூறப்படுவதாகும். நுகரப்படுவன யாவுமே இல்லாதார் இரவினை-யாசித்தலை-மேற்கொள்ளு வார்கள் என்பதாம். வறுமையாளர்கள், இரத்தற்குப் பொருத்தமானவர்களிடம் சென்றுதான் இரத்தல் வேண்டும். அவர் இல்லையென்று மறைத்தாராயின், அது அவர் பழியே யல்லாமல் இரப்பவர்களின் பழியாகாது. இதனை முதற் குறட்பா எடுத்துரைக்கின்றது.

முதலிரண்டு பாக்களும், நல்குரவால் உயிர் நீங்கும் எல்லைக்கண் இழிவல்லாத இரவு-யாசித்தல்-விலக்கப்படாது என்பதனைக் கூறுகின்றன. மூன்று முதல் ஏழுபாடல் வரை இரத்தலுக்குத் தக்கவரிடம் சென்று இரத்தல் வேண்டும் என்பதனைக் கூறுகின்றன. எட்டு, ஒன்பதாம் பாடல்கள் உலகிற்கு இரப்பார் வேண்டும் என்பதனைக் குறிக்கிறது. இரப்பவர்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாததோர் இயல்பினைப் பத்தாம்பாடல் குறிக்கின்றது.

இரத்தல் என்பது இன்பமாக முடியும்; எப்போது என்றால், யாசித்த பொருள்கள் துன்பம் இல்லாமல் கிடைத்தால் என்பதாகும். மறைத்தல் என்பதனை அறியாதவர்கள் முன்னே நின்று யாசிப்பதும் ஓர் அழகாகும் என்று மூன்றாம் குறட்பா உரைக்கின்றது. 'கனவிலும் தேற்றாதார் மாட்டு' என்று குறிக்கின்ற நான்காம் பாடல் அரிய உண்மையினை உணர்த்தி விடுகின்றது.

மறைக்காமல் கொடுப்பவர்களின் சிறப்பினை ஐந்தாம் பாடல் காட்டுகிறது. 'வையகத்தின் உண்மை யான்' என்பது இதனை உணர்த்துகின்றது. உள்ளதை மறைக்காதவர்களை 'கரப்பு இடும்பை இல்லாரைக்காணின்' என்று ஆறாம் குறட்பா, வறுமையாளர் தீமை நீங்கும் வழியினைக் கூறுகிறது. இகழாமல் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவர் மனம் மகிழும். இதனை, 'மகிழ்ந்துள்ளம்' என்று ஏழாம் பாடல் விளக்குகின்றது.

இரப்பவர்கள் யாசிப்பவர்கள் - இல்லையென்றால் உலக வாழ்க்கை, மரப்பாவை இயங்கியது போலாகும் என்று எட்டாம் பாடல் உணர்த்துகின்றது. கொடுப்பார்க்குப் புகழ் உண்டாவதே இரப்பவர்களால்தான் என்று கூறுகின்ற ஒன்பதாம் குறட்பா, 'ஈவாரிகண் என்னுண்டாம் தோற்றம்' என்று அமைந்துள்ளது. இரப்பவன்-யாசிப்பவன் என்றுமே கோபம் கொள்ளக் கூடாது என்று பத்தாம் குறட்பா கூறுகின்றது.

ஏனெனில் அவன் இந்த நிலைமைக்குவந்ததற்கே முதற்காரணம் கோபம்தான் என்று அறிவுறுத்துகிறது. 'இரவு' என்ற இவ்அதிகாரத்தில், யாசித்தல், என்பதை அதிகம் வலியுறுத்தாமல், யாசிப்பவர்களுக்கு மறைக்காமல் கொடுத்தல் வேண்டும் என்பதே அனேகமாக குறட்பாக்கள் அனைத்திலும் கூறப்பட்டதாகும். மறைத்தால் பெரும்பழி என்பதனைக் குறட்பாக்கள் மிகுதியும் வலியுறுத்துகின்றன.

## 107. இரவு அச்சம்

மானத்தினை அழிக்கும் இரவுக்கு-யாசிக்கும் பழக்கத்திற்கு – அஞ்சவேண்டும் என்பதனைக் கூறுவதாகும். 'தீவினை அச்சம்' என்பது போல 'இரவு அச்சம்' அமைக்கப் பட்டுள்ளதாகும். முதலிரண்டு பாடல்களாலும், இரத்தலின் கொடுமை கூறப்பட்டதாகும். மூன்றாம் பாடல் வறுமை தீர்வதற்கு வழி இரவன்று என்று குறித்துக்காட்டுகிறது.

நான்கு, ஐந்து, ஆறு பாடல்கள் முயற்சி செய்து ஈட்ட வேண்டுமேயல்லாது 'யாசித்தல்' கூடாதென்று கூறுகின்றன. ஏழாம் குறட்பாவினால், மானத்தினை அழிக்கவரும், இரவு-யாசித்தல் கூடாதென்று கூறப்பட்டது. எட்டு, ஒன்பது, பத்து ஆகிய மூன்று பாடல்களால், இரவின் (யாசிப்பதின்) குற்றமும், யாசிப்பவர்க்குக் கொடுக்காமல் மறைப்பதின் குற்றமும் ஒருங்கு சேர விளக்கமாகக் கூறப்பட்டன.

'இரவாமை கோடியுறும்' என்று முதற் குறட்பா எடுத்துக்காட்டி கொடுக்க மறைக்காதவர்களிடமும் யாசிக்காமல் இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. இந்த உலகத்தினைப் படைத்தவனான ஒருவன், யாசித்துத்தான் உயிர் வாழவேண்டும் என்று விதித்திருப்பானானால் அவன் அழியக்கடவன் என்று இரண்டாம் குறட்பா கூறுகின்றது.

'வகுத்தான் வகுத்த' என்ற குறட்பாவும் சிந்தனைக்குரியதாகும். முதல் அதிகாரத்தில் கூறப்படும் இறைவனுக்கும்

இக்குறட்பா குறித்துக் காட்டுவதற்கும் யாதொரு ஒற்றுமையும் இல்லையென்பதனை அறிதல் வேண்டும். 'இரந்து தீர்வாம்' என்று மூன்றாம் குறட்பா எடுத்துக் காட்டி வறுமையினை யாசித்துத் தீர்வது பெருங்குற்றம் என்று உணர்த்துகிறது.

எப்படிப்பட்ட வறுமையுண்டான போதும் இரத்தல் இல்லாதிருப்பது சான்றாண்மையாகும் என்று நான்காம் பாடல் கூறும். கூழாக இருந்தாலும் முயற்சியினால் உண்ணுவதே பெருஞ்சிறப்பாகும் என்று ஐந்தாம் குறட்பா சொல்லுகிறது. 'தாள்தந்தது' என்று குறிப்பிட்டுக் காட்டுவது சிறப்புடையதாகும். ஆவிற்குக் கூட யாசிக்காதே என்று ஆறாம் பாடல் கூறுகின்றது.

மறைப்பவர்களிடம் யாசிக்காதே என்று வற்புறுத்திக் கூறுகிறது ஏழாம் குறட்பா. 'ஏமாப்பு இல் தோணி' என்று பாதுகாப்பில்லாத தோணிக்கு 'இரவு' என்பதை ஒப்பிட்டுக் காட்டுவது எட்டாம் குறட்பாவாகும். 'இரவு' 'கரவு' இந்த இரண்டினையும் நன்கு ஒன்பதாம் குறட்பா விளக்கிக் காட்டுகிறது. இரப்பவர்-கரப்பவர் (மறைப்பவர்) ஆகிய இருவரையும் பத்தாம் பாடல் கூறி, கரப்பவரின் கொடும் தன்மையினை எடுத்துக்காட்டி விடுகிறது.

## 108. கயமை

மக்களுக்கு இருக்கவேண்டிய தன்மைகள் எதுவுமே இல்லாத கீழோரது இயல்பினைக் கூறுதலாகும். கயவர் என்பது கீழ்மக்களைக் குறிப்பதாகும் முதற்குறட்பா கயவரது குற்றம் மிகுதியினைக் கூறுகிறது. இரண்டாம் குறட்பா பழி முதலியவற்றிற்கு அவர்கள் அஞ்சா மாட்டார்கள் என்பதனைக் கூறுகிறது.

மூன்றாம் குறட்பச கயவர்கள் விலக்குவது என்று இல்லாமல் வேண்டியனவெல்லாம் செய்வர் என்று குறித்துக்

காட்டுகிறது. நான்காம் குறட்பா, அவர்கள் மேம்பட்டுக் காட்டிக்கொள்ளும் தன்மையினை உரைக்கின்றது. ஐந்தாம் குறட்பா, அவர்கள் ஆசாரம் என்பதை அறியமாட்டார்கள் என்கிறது.

அப்படி ஆசாரம் செய்தாலும் அதுவும் கீழான எண்ணத்தினாலேயேயாகும் என்று எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் பறை போல அடித்துக் கொண்டிருப்பவர்—பேசுபவர் என்று ஆறாம் குறட்பா சொல்லுகிறது. கயவர்கள் மெலிந்தவர்களுக்கு யாதும் கொடார்; நலிய அடிப்பவர்களுக்கே கொடுப்பார்கள் என்று ஏழாம் குறட்பா காட்டுகிறது. எட்டாம் குறட்பாவும் கசக்கிப் பிழிபவர்களுக்கே கயவர்கள் பயன் படுவார்கள் என்று உணர்த்துகிறது.

பிறர் நன்றாக உணவும் உடுத்தியும் இருந்தால் அவர்மீது பொய்யாகப் பேசி குற்றம் காட்டும் இயல்பினர் என்று ஒன்பதாம் பாடல் உணர்த்துகிறது. பத்தாம் பாடல் மானத்திற்கு அஞ்சமாட்டார்கள் என்றும் யாதேனும் துன்பம் வந்தால் அந்தக் காரணத்தை வைத்தே தம்மை விற்றுக் கொள்ளவும் தயங்கமாட்டார்கள் என்றும் விளக்கம் தருகின்றது. இக்குறட்பாவில் 'விரைந்து' என்று கூறி இருப்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

கயவர்களைப் போல—அவருக்கு ஒப்பாக எங்குமே காணமுடியாதென்று முதற்குறட்பா குறிக்கின்றது. 'ஒப்பாரி யாம் கண்டதில்' என்று குறட்பா அமைந்துள்ளது. மக்களே போல்வர் கயவர்—நெஞ்சத்து அவலம் இலர் தேவர் அனையர் கயவர்—செம்மாக்கும் கீழ்—கீழ்களது ஆசாரம்—அறைபறை அன்னகயவர்—சர்ங்கை விதிரார் கொல்லப் பயன் படும்கீழ் வடுக்காணவற்றாகும் கீழ்——விற்றற்கு உரியர் விரைந்து என்று குறித்துக் காட்டியவைகள் எல்லாம் கயவர்களின், இழி தன்மையினையும் கூறுகின்றனவாகும்.

எதைப்பற்றியும் கவலையே கொள்ளாதவர்கள் என்று இரண்டாம் பாடல் கூறுகிறது. தேவர்களைப் போல் விரும்பியவற்றையெல்லாம் செய்பவர்கள் கயவர்களாவார்கள். தேவர்கள் என்று சொல்லப்படுவர்களின் மனோ நிலை கூறப்பட்டதுமல்லாமல், தேவருலகத்தின் தன்மையும் விளக்கிக் காட்டப்பட்டது.

பட்டித்தனமாகப் பேசும் இயல்பினரே கயவர்கள் என்று நான்காம் பாடல் குறிக்கின்றது. ஏதேனும் ஊதியம் கிடைக்கும் என்றால் கயவர்கள் ஆசாரமாகக் காட்டுவார்கள் என்று ஐந்தாம் பாடல் உணர்த்துகிறது.

ஆறாம் பாடல் கயவரை 'அறைபறை' என்று குறிப்பிட்டு சிந்திக்க வைக்கிறது. ஈரங்கையினைக் கூட—நாம் உணவு உண்ட கையினைக்கூட தெரிக்கமாட்டார்கள் என்று கூறி எப்படிப்பட்டவர்களுக்குக் கொடுப்பார்கள் என்றும் ஏழாம் குறட்பா அறிவுறுத்துகிறது.

'கயமை' என்ற இந்த அதிகாரத்தோடு பொருட்பாலில்—ஒழிபியல் என்ற பகுதி முடிவடைகிறது.

## 109. தகைஅணங்குஉறுத்தல்

தனியளாய் நின்ற மாதினைப் பார்த்த ஆடவன் அவளுடைய அழகு தன்னை வருத்துவதைப் பற்றிக் கூறுகின்றான். முதற் குறட்பா தலைமகனுக்கு உண்டான ஐயப்பாட்டினைக் கூறுகின்றது. அவள் தோற்றம் அப்படி இருந்த தென்பதாகும்.

இரண்டாம் பாடல், அப்பெண் அவனை நோக்கிய இன்பத்தினால் தனக்குண்டானவருத்தத்தினைத் தலைமகன் சொல்லுவதைக் குறிக்கின்றது. மூன்றாம் பாடல், அப்

பெண்ணின் கண்கள் உயிரை உண்ணும் கூற்றுவனாகவே இருந்தன என்று அவன் கூறுவதை சொல்லுகிறது. இப் பெண்ணின் கண்கள் கண்டவரின் உயிரை உண்ணும் தோற்றத்துடன் இருந்தன என்று அவன் கூறுவதை நான்காம் பாடல் உணர்த்துகிறது.

ஐந்தாம் பாடலும் அவளுடைய பார்வையின் தன்மையினை மேலும் பற்பலவாக எடுத்துக்காட்டுகிறது. புருவங்கள் கண்களை மறைக்கவில்லையே என்று அவன் கூறுவதை ஆறாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

அவள் உறுப்பின் தன்மையினை ஏழாம்பாடல் கூறுவதாகும். அவளுடைய நெற்றியின்- நுதலின் - அருமை எட்டாம் பாடலில் காணப்படுகிறது. ஒன்பதாம் பாடல் அவள் அணிகலன்கள் எதற்கு என்று கேட்கின்றது. பத்தாம் பாடல், கண்டாலே களிப்பினை ஊட்டும் காமத்தின் சிறப்பினை விளக்கம் செய்கிறது.

அணங்கு, மயில், கனங்குழை, தானை, கூற்று, பிணை, புருவம், களிறு, மாதர், நுதல், அணி, நறா என்பவைகள் எல்லாம் பெண்ணின் அழகினைக் குறிப்பதோடு ஆடவனை எவ்வாறு வருத்துகின்றன என்பதையும் குறித்துக் காட்டுகின்றன. 'உறுத்தல்' என்று இவ்வதிகாரம் முடிவது போன்று அறன்வலி உறுத்தல், அலரறிவுறுத்தல், குறிப்பறிவுறுத்தல் முதலிய அதிகாரங்களும் முடிகின்றன.

அவனுடைய நிலைமையினை, மாலும் என் நெஞ்சு - அன்னது உடைத்து - இனி அறிந்தேன் - அணி எவனோ ஏதில தந்து - என்று குறிப்பிட்டவைகள் எல்லாம் விளக்குகின்றன. ஆடவனின் மனம் அழகினால் வருத்தமுற்றது என்பதனைப் பத்துப்பாடல்களும் தெளிவாகக் கூறுகின்றன.

# 110. குறிப்பு அறிதல்

தலைமகன், தலைமகள் குறிப்பினை அறிதலும், தோழி குறிப்பினை அறிதலும், அவள்தான் அவ் இருவர் குறிப்பினையும் அறிதலுமாகும். தலைமகன் தலைமகள் உள்ளத்தில் தோன்றிய குறிப்பினை அவளுடைய நோக்கினால்அறிந்தான் என்று முதற்குறட்பா கூறுகின்றது. இரண்டாம் குறட்பாவும் அக்கருத்தினையே மேலும் விளக்கமாகக் கூறுகின்றது.

கண்கள் களவு கொள்ளும் பார்வையின் இன்ப அளவு இரண்டாம் பாடலில் காணப்படுகிறது. அப்பெண்ணின் பால் காணப்பட்ட நோக்கும், நாணமும் அவனால் அறியப் பட்டதை மூன்றாம் பாடல் தெரிவிக்கின்றது. அவளுடைய நாணயத்தினாலும், மகிழ்ச்சியினாலும் அவன் அறிந்து கொண்டதை நான்காம் பாடல் குறிக்கின்றது.

அவள் குறிக்கொண்டு நோக்கியதை ஐந்தாம் பாடல் விளக்குகின்றது. இப்பாடல் 'சிறக்கணித்தாள்' என்று குறிப்பிட்டு உணர்த்துகின்றது. ஆறாம் பாடல் காதலன் தன்னுள்ளே சொல்லிக் கொள்ளுவதை உணர்த்துகிறது. கடுமையான சொற்கள் சொன்னாள் என்றாலும் அதன் உட்கருத்தினை அவன் புரிந்து கொண்டான் என்பதாகும்.

அதே கருத்தினை மேலும் விளக்கமாக ஏழாம் குறட்பா தெரிவிக்கின்றது. 'உறாஅர் போன்று உற்றார்'என்று குறட்பா உணர்த்துகிறது. பசையினன பைய நகும், என்று எட்டாம் பாடல் எடுத்துக் காட்டி, அக்காதலனைக் காதலி நோக்கி மகிழ்ந்ததைக் கூறுகின்றது. அக்குறிப்பு இனி பழுதாகாது என்று அவன் புரிந்துகொண்டான்.

'பொது நோக்கு' என்பதனைப் பத்தாம் பாடல் குறிக்கின்றது. காதலர்களிடத்தில் இவ்வாறு காணப்படுதல் இயல்பு என்றும் அறிவுறுத்துகின்றது. இணைந்து நோக்கிய

பிறகு அவர்கள் பேசுகின்ற சொற்களில் அர்த்தமில்லை யென்றுபத்தாம் பாடல் எடுத்துரைக்கிறது.

இரு நோக்கு - ஒரு நோக்கு - சிறுநோக்கம் - நோக்கி னாள் நோக்கி - நிலன் நோக்கும் - தான் நோக்கி குறிக் கொண்டு - செறாார் சொல் - சிறு சொல் - யான் நோக்க - இணை நோக்கு — வாய்ச் சொற்கள் என்று காணப் படுகின்றன வெல்லாம் காதலர்களின் நோக்குகளைப் பற்பல வாகக் கூறி அவர்களின் சொற்கள் எத்தன்மையன என்ப தனையும் கூறுகின்றன.

'தகைஅணங்கு உறுத்தல்' முதலாக வரும் ஏழு அதிகாரங் களும்'களவியல்' என்று கூறப்படும்காதல் வாழ்க்கையினைக் கூறுவதாகும். அதற்கேற்ப, இரண்டாம் குறட்பாவில் 'களவு' என்று கூறப்படுவதும் சிந்தனைக் குரியதாகும். பொருட் பாலில் குறிப்பறிதல் என்ற தலைப்புடன் அதிகாரமொன்று காணப்படுகின்றது.

## 111. புணர்ச்சி மகிழ்தல்

குறிப்பறிந்து இன்பம் நுகர்ந்த தலைமகன் மகிழ்ந்து சொல்லுவனவற்றைக் கூறுதலாகும். முதற்குறட்பா இன்பம் நுகர்ந்தவன் எடுத்துக் கூறியதை விளக்கம் செய்கின்றது. 'ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள என்று குறட்பா முடிந்து உண்மையினை உணர்த்துகின்றது.

பிரிந்திருந்த போது தலைமகள் சொல்லுவதை இரண்டாம் குறட்பா தெரிவிக்கின்றது. 'தன் நோய்க்குத் தானே மருந்து, என்று நயம்படக் கூறுகின்றதாகும். அளவு கடந்த இன்பத்தின் நிலையினைக் கூறும் முறையினை மூன்றாம் பாடல்தெளிவாக்குகிறது.

'இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு' என்று அவன் கூறி தனது உள்ளத்தினைப் புலப்படுத்துகின்றான்

என்பதாகும். நான்காம் பாடல் அப்பெண்ணிடம் அவன் கண்ட புது மாதிரியான தீயினைக்கண்டான் என்று குறிப்பிடுகிறது. 'தீயாண்டுப் பெற்றான்' என்று அவன் கூறுவது, அவனுடைய மனோநிலையினைப் புரிந்து கொள்ளச் செய்கின்றது.

தோள்களின் சிறப்பினை அவன் கூறுகின்ற போது, 'வேட்ட பொழுதின் அவை அவை போலுமே' என்று குறிப்பிடுகின்றான் என்பதனை ஐந்தாம்பாடல் காட்டு கிறது. விரும்பிய அனைத்தும் அவன் பெற்று விடுவதாகக் கூறுகின்றான்.

ஆறாம் பாடலும் தோள்களின் சிறப்பினை, 'அமிழ்தம்' என்று கூறுகின்றது. இல்லறத்திலிருந்து பகுத்துண்டு வாழும் வாழ்க்கையினைப் போலவே இக்காதல் வாழ்க்கை யும் அவனுக்கு இருக்கின்றதென்பதனை ஏழாம் பாடல் தெளிவு படுத்துகிறது.

'தம் இல் இருந்து' என்று தொடங்கும் இப் பாடல் சிந்தனைக் குரியதாகும். ஒன்பதாம் பாடலும் நுகர்ந்த இன்பத்தினையே விளக்கம் செய்கிறது. 'வளியிடை போழப் படாமுயக்கு' என்று கூறி இருப்பது சிந்தனைக்குரியதாகும்.

மறைந்தொழுகும் காதலர்களின் இயல்பினையும் மனோ நிலையினையும், 'கூடியார் பெற்ற பயன்' என்று குறிப்பிட்டு ஒன்பதாம் பாடல் கூறுகின்றது. 'அறிதோறும் அறியாமை' என்று பத்தாம் பாடல் குறிப்பிட்டு ஆழ்ந்த பொருளினை விளக்கிக் காட்டுகின்றது.

## 112. நலம் புனைந்து உரைத்தல்

தலைமகன் தலைமகளுடைய அழகினைப் புனைந்து கூறுதலாகும். அதாவது கற்பனையில் பேசுதல் என்பதாகும். முதற்பாடல், இன்பம் நுகர்ந்த பிறகு தன்னுடைய காதலி அனிச்சப்பூவினை விட மென்மையானவள் என்று அவன்

கூறுவதை எடுத்துக் காட்டுகிறது. 'நின்னினும் மென்னிரள் யாம் வீழ்பவள்' என்று அவனுடைய சொற்கள் அமைந் துள்ளன.

தலைவியைப் பிரிந்திருந்தபோது மலர்களைப் பார்த்து, தலைவன், தனது நெஞ்சம் மயங்குவதைக் கூறுகின்றான். இதனை 'மலர்காணின் மையாத்தி நெஞ்சே' என்று இரண்டாம் பாடல் குறித்துக் காண்பிக்கின்றது. தலைமகளது இயல்பினை மூன்றாம் பாடல் குறிப்பதாகும். உறுப்புக்களுக்கு அருமையான உவமைகள் சொல்லப்படு கின்றன.

இன்பம் நுகர்தல் இல்லாமல் இருந்த நேரத்தில் குவளை மலர்களை இழித்துப் பேசிய கருத்தினை நான்காம் பாடல் விளக்குகிறது. 'கவிழ்ந்து நிலம் நோக்கு' என்று அவன் குறிப்பிடுவது சிந்தனைக் குரியதாகும்.

நலம் புனைந்துரைத்தல் என்று கூறப்படுகின்ற கற்பனை மிகவும் சிறப்பாக ஐந்தாம் பாடலில் அமைந்துள்ளது. அவளுடைய நுசுப்பு (இடை) முரிந்துவிடும் என்று கூறு கின்றான். ''நுசுப்பிற்கு நல்ல படா பறை" என்று அமைக்கப் பட்ட கருத்து புனைந்துரைத்தலை மிகுதியாக்குகின்றது. இரவுக் குறிக் கண் மதியினைக் கண்ட தலைவன் கூறுவதை, ஆறாம் பாடல் எடுத்துரைக்கின்றது.

'கலங்கியமீன்' என்று குறித்துக்காட்டி விண்மீன்கள் கலக்கமாகத் தோன்றுவதற்குக் காரணம் கூறப்பட்டது. அக் கருத்தினைத் தொடர்ந்து, ஏழாம் பாடல் விளக்கம் தருகிறது. குறைந்த இடம் பின்பு நிறையும் தன்மை மதியிடம் உண்டு. அந்தக் குறை காதலியிடம் இல்லையென் கின்றான்.

எட்டாம் பாடல் காதலியின் முகம் போல் ஒளிவிடும் ஆற்றல் மதிக்கு இல்லையென்று அவன் கூறுவதை எடுத்துக் காட்டுகிறது. மேலும், மதியினைப் பார்த்து அக்காதலன்

கூறுவதை ஒன்பதாம் பாடல் விளக்கம் செய்கின்றது. அனிச்சமலரும், அன்னப்பறவையின் சிறகும் அப்பெண்ணின் பாதங்களுக்கு நெருஞ்சிப்பழம் போல் வருத்தத்தினைக் கொடுக்கும் என்று பத்தாம் பாடலில் கூறுகின்றான்.

அனிச்சம், பற்பல மலர்கள், மூங்கில், தளிர்நிறம், முத்து, நறுமணம், குவளைமலர், அனிச்சமலர் காம்பு, மதி, விண் மீன், மதியில் உள்ள மறு, அன்னப்பறவையின் சிறகு-ஆகிய இவையனைத்தையும் பிறவற்றையும் கொண்டு தலைவன் தனது காதலியின் அழகினைச் சிறப்பித்துக் கூறும் சிறந்த தன்மைகள் சிந்திக்கத் தக்கதாகும்.

## 113. காதற் சிறப்பு உரைத்தல்

தலைமகனும் தலைமகளும் தங்கள் தங்கள் காதல் மிகுதியினைக் கூறுதலாகும். 'பாலொடுதேன் கலந்தற்றே' என்று தொடங்கும் முதற் பாடல் தலைவன் இன்னதென்று அறியமுடியாத சுவையினைக் கூறுகின்றான் என்று குறிப்பிடு கிறது. 'பணி மொழி' என்று சொல்லினைக் கூறிய குறிப்பு உணரத்தக்கதாகும். மொழி பிறக்கும் இடத்தின் சுவை யினைக் கூறுகின்றான் என்பது உய்த்துணரவேண்டிய தாகும்.

'உடம்பும் உயிரும் போல்' இருவரும் வாழ்கின் றோம் என்று குறிப்பிடுவதை இரண்டாம் பாடல் குறிக் கின்றது. பிரிந்து தனித்தனியாக இயங்க முடியாதவைகள் என்று குறிப்பிட்ட தனிக் குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்க தாகும். மூன்றாம் பாடல், தலைவன் தன்னுடைய தலைவி கண்களிலேயே இருக்கத்தக்கவள் என்று கூறுவதைத் தெளிவுபடுத்துகிறது.

ஆதலால் அவன், கண்களில் இடம் வேண்டும் என்பதற் காக அங்கிருக்கும் கருமணிகளைப் போகச் சொல்லு கின்றான். 'நீ போதாய்' என்று தலைவன் கூறும் சொற்கள் நயம்பட அமைந்துள்ளன,

நான்காம் பாடல், அவன் பிரிந்திருத்தல் என்பது இறந்து விடுவதுபோல் உள்ளது என்ற அவன் கூற்றினைக் குறித்துக் காட்டுகிறது. தனது காதலியை மறப்பதும் இல்லை. அதனால் நினைக்க வேண்டியதுமில்லை என்று கூறுவதை, 'மறப்பறியேன்' என்று அமைந்த ஐந்தாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது. இப்பாடல் 'கண்ணாள் குணம்' என்று முடிந் திருப்பது தலைமகனின் உள்ளப்பாங்கினைச் சுட்டுவதாகும்.

காதலி, தனது காதலரை 'நுண்ணியர்' என்று கூறு கின்றாள். இதனை ஆறாம் பாடல் கூறுகின்றது. நுண்ணியர் என்பதற்கு அருமையான காரணங்களைக் காட்டுகிறாள். ஏழாம் பாடல் அவள் கண்ணுக்கு மை எழுதாத காரணத்தைக் கூறுகிறது. 'எழுதேம்' என்று குறட்பா குறித்துக் காட்டுவதாகும்.

எட்டாம் பாடல், அவள் உணவினை சூடாக உண்ணா மல் இருக்கும் காரணத்தைக் கூறுவதாகும். 'வேபாக்கு அறிந்து' என்று குறிப்பிட்ட கருத்து பன்முறையும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். அவள் கண்களை இமைக்காமல் இருப்பதற்குக் காரணத்தினைக் கூறுகின்றாள்.

இதனை ஒன்பதாம் பாடல் விளக்குகின்றது. ஊரார் தவறாகப் பேசுவதையும் அவள் எடுத்துக் கூறுகின்றாள். பத்தாம் பாடல், தலைவி, தனது தலைவன் எப்போதும் இருக்கக் கூடிய இடம் எதுவென்பதை 'உவந்து உறைவர்' என்பதால் கூறுவதை உணர்த்துகிறது.

## 114. நாணுத்துறவு உரைத்தல்

தலைமகளைக் காண முடியாமல் புறத்திலேயே இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டதால் தலை மகன் தனது நாணுடைமையும் நீங்கி விட்டதென்பதைக் கூறும் பகுதியாகும். தனது துன்பத்தினை நாணமின்றி

பலரும் அறியும்படிச் செய்கின்ற நிலைமை அவனுக்கு உண்டாகி விட்டதென்பதாகும்.

தலைவியைப் பிரிந்திருப்பதால் வருந்துகிறவர்களுக்கு 'மடல்' அல்லாமல் வேறு பாதுகாப்பு இல்லையென்று கூறுவதை முதற் குறட்பா எடுத்துக் காட்டுகிறது. 'மடல்' பிற இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. 'ஏமம் மடல் அல்லது இல்லை' என்று குறட்பா அமைத்துக் காட்டுவதாகும்.

இரண்டாம் குறட்பா, நாணம் புறத்தே செல்லும் நிலை உண்டாகி விட்டதென்பதைக் குறிக்கின்றது. 'நோனா உடம்பும் உயிரும்' என்று தொடங்குகின்ற இக்குறட்பா அவன் உயிரும் உடம்பும் எத்தகைய நிலைக்கு வந்துவிட்டன வென்பதை உணர்த்துகின்றது. மூன்றாம் பாடல், முன்பு அவனிடம் இருந்தவை யாவை என்பதனையும் இப்போது இருப்பவை யாவை என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

'பண்டு உடையேன், இன்று உடையேன்' என்பவை அவனுடைய சொற்களாக அமைந்துள்ளன. 'காமுற்றார் ஏறும் மடல்' என்று மூன்றாம் குறட்பா எடுத்துரைக்கின்றது. பனை ஓலையினால் குதிரை போல் அமைத்து அதன்மீது காதலியை விட்டுப் பிரிக்கப்பட்டிருக்கும் காதலன் தனது வருத்தத்தினைப் பலரும் அறியச் செய்வதை 'மடன்மா ஏறல்' 'மடல் ஊர்தல்' என்று கூறப்படும்.

## 115. அலர் அறிவுறுத்தல்

களவொழுக்கத்தில் வாழும் காதலர்களைப்பற்றி ஊரார் அறிந்து கொள்ளும் நிலைமை உண்டாகிவிட்டது. பலர் பலவாறாகத் தூற்றிப் பேசுகின்றனர். தூற்றிப் பேசுவது 'அலர்' என்று குறிப்பிடப்பட்டது. இப்படித் தூற்றிப் பேசுகிற பேச்சு காதலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

தலைமகன் தோழிக்கு அறிவுறுத்தலும், தோழியும் காதலியும் காதலனுக்கு அறிவுறுத்தலுமாகும்.

இந்த நேரத்தில் பிறர் அறியாமல் காதலர் வெளியூருக்குச் சென்றுவிடுவதுமுண்டு. இதனை உடன்போக்கு என்றும் கூறுவர். இதற்குப்பின் நடைபெறுவது திருமணமாகும். ஆதலால் இவ்வதிகாரத்திற்கு அடுத்து வருவது கற்பியல் என்பதாகும். இல்லறம் நடத்தும்போது நடைபெறுவதாகும்.

'அலர்' உண்டானதால் தன்னுடைய உயிரே நிற்கின்றது என்று கூறுகின்ற காதலன் பேச்சு முதற் குறட்பாவிலேயே காணப்படுகின்றது. தானும் அவளும் காதலர்களாக இருப்பதை ஊரார் அறிந்து கொண்ட செய்தி அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்து விட்டது. இந்த உண்மையை பலர் அறியார் என்றும் கூறுகின்றான்.

'அலர்' இல்லாவிட்டால் இவர்களின் தொடர்பு பிறர் அறியாமல் போய்விடும். தெரிந்ததால் தான் மணந்து கொள்வது உறுதியாகிவிட்டது என்று எண்ணுகிறான். தன்னுடைய காதலியின் அருமை தெரியாமல் மனம் போன போக்கில் தூற்றிப் பேசுகிறார்களே என்று வருந்துகின்றான். இதனை இரண்டாம் குறட்பா உரைக்கின்றது.

'அலர் எமக்குஈந்தது இவ்வூர்' என்று கூறுகின்றான். பிரிந்திருக்கும் காதலனுக்கு ஊரார் அலர் தூற்றிப் பேசுவதைக் கேட்கும்போது காதலியைக் கூடி மகிழ்ந்தது போலவே இருக்கின்றது என்று கூறுவதை மூன்றாம் பாடல் தெளிவுபடுத்துகிறது. 'பெற்றன்ன நீர்த்து' என்று குறட்பா விளக்கம் செய்கின்றது. காமம் என்பது அலரினால் கவ்வையினால் மலர்வதாகின்றது என்று நான்காம் பாடல் காட்டுகிறது.

கவ்வை அவர் இல்லையென்றால் காமம்கூட தனது தன்மை இழந்து போய்விடும் என்று அவன் கருத்தாகும்,

அவனுடைய காமம் அலரினால் வெளிப்படும் போதெல்லாம் அவனுக்கும் இன்பமாக இருக்கின்றதென்ற கருத்து ஐந்தாம் பாடலால் தெரிவிக்கப்படுகிறது.

'வெளிப்படும் தோறும் இனிது' என்று குறட்பா விளக்கம் செய்கிறது. திங்களை பாம்பு கொண்டது போல, அலர், ஊராரெல்லாம் விரைவாக தெரிந்து கொள்ளும்படிச் செய்து விட்டதென்று ஆறாம் பாடல் தெளிவுபடுத்துகிறது. 'திங்களை பாம்புகொண்டற்று' என்று குறட்பா முடிகிறது.

அன்னையின் சொல்லும், ஊரார் எடுக்கும் கவ்வையும் எப்படி இருக்கின்றன வென்பதை ஏழாம் பாடல் எடுத்துக் காட்டுகின்றது. 'நீளும் இந்நோய்' என்று குறட்பா முடிகின்றது. மிகவும் சிந்தனைக்குரியதாகும்.

ஊரார் எடுக்கின்ற அலரினால் அவர்களின் காதல் பிணைப்பினை நிறுத்தவோ தடுக்கவோ முடியாதென்று எட்டாம் பாடல் உணர்த்துகிறது. அப்படித் தடுத்து விடுவோம் என்று நினைப்பது, நெய்யினால் நெருப்பினை அணைத்து விடுவோம் என்று கூறுவது போன்றதே யாகும்.

'நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால்' என்று அழகுற குறட்பா அமைந்துள்ளதாகும்.

தனித்திருக்கும் காதலி காதலன் வராது இருந்தமை குறித்து வருந்தி கூறுவதை ஒன்பதாம் பாடல் விளக்கப் படுத்துகிறது. அலர் தூற்றியது நன்மைக்கென்றே காதலி கூறுவதைப் பத்தாம் பாடல் தெரிவிக்கின்றது. ஊரார் அலர் எடுத்து விட்டனர். பலரும் அறிந்து விட்டனர்.

இனி காதலனுடன்தான் புறப்பட்டுப் போய் விடுவது தான் நல்லதென்றாள், அதற்குகாதலரும் இசைவார் என்ற அவள் எண்ணத்தினை பத்தாம் பாடல் குறித்துணர்த்துகிறது. 'தாம் வேண்டின் நல்குவர்' என்ற குறட்பா காதலியின் உள்ளத்தினை உணர்த்திவிட்டது. அடுத்து வருவது கற்பியலாகும்.

# கற்பியல்

## 116. பிரிவு ஆற்றாமை

இல் வாழ்க்கையில் நாயகனும் நாயகியுமாக வாழ்ந்து வருகின்றார்கள். அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு நாயகியை விட்டு நாயகன் பிரிந்து செல்ல வேண்டியவனா கின்றான். கற்புள்ளம் செறிந்த இன்ப நாயகி பிரிவினைத் தாங்க முடியாதவளாகின்றாள்.

பிரிந்து சென்று விரைவில் திரும்பி வந்து விடுவேன் என்றுகூறிய நாயகனுக்கு நாயகி எடுத்துரைப்பதை முதற் குறட்பா தெளிவாகப் புலப்படுத்துகின்றது. 'நாயகன் திரும்பி வரும்வரை நாயகி உயிருடன் இருப்பாள் என்று நினைப்பதற்கில்லை என்ற குறிப்பினைமுதற் குறட்பா விளக்கிக் காட்டுகிறது. 'செல்லாமை உண்டேல் எனக்குரை' என்று தொடங்குகின்ற குறட்பா சிந்தனைக்குரியது.

இரண்டாம் குறட்பா நாயகன் பிரிந்து சென்றுவிடு வான் என்ற குறிப்பினைத் தலைவி தெரிந்து கொண்டாள் என்பதனைக் காட்டுகிறது. ''பிரிவஞ்சம் புன்கண் உடைத் தால்'' என்று குறட்பாவில் காணப்படுவது இவ்வுண் மையினை புலப்படுத்துவதாகும். பிரியமாட்டேன் என்றவர் பிரிந்து செல்லும் அளவுக்கு வந்து விட்டாரே என்று தலைவி சொல்வதை மூன்றாம் குறட்பா எடுத்துக்காட்டுகிறது.

தொடர்ந்து அவள் வருத்தத்தினை நான்காம் பாடலும் கூறுகிறது. 'தெளிந்த சொல்' என்று குறித்து நாயகனின் அன்பு மொழியினை அவள் நினைவுபடுத்துகிறாள். நாயகன் பிரியாது இருக்குமாறு செய்வாயாக என்று தோழிக்கு நாயகி கூறுவதை ஐந்தாம் பாடல் உணர்த்துகிறது. 'பிரிவு ஓம்பல்' என்று குறிப்பிடுகிறாள்.

தனது நாயகனை அவள் வன்கண்ணர் என்று கூறிவிடுகின்றாள். ஆறாம் பாடல் இதனைக் கூறுவதாகும். திரும்பி வந்து அன்பு காட்டுதல் அரிது என்று கூறுகின்றாள். நழுவி வருகின்ற கை வளையல்கள் நாயகன் பிரிந்து விடுவதைப் புலப்படுத்துகின்றன என்று ஏழாம் பாடல் உணர்த்துகிறது. 'இறை இறவா நின்றவளை' என்பது சிந்திக்கத் தக்கதாகும்.

பிரிவுத்துன்பத்தினை 'இனியார்ப் பிரிவு' என்று குறித்து எட்டாம் பாடல் உணர்த்துகின்றது. விட்ட உடன் சுடுகின்ற காமத்தீ என்று ஒன்பதாம் பாடல் குறிக்கின்றது. மற்ற தீ தொட்டால்தான் சுடும். தன்னால் பிரிந்து வாழ்வது மற்றவர்களால் முடிவதைப் போல், முடியாது என்று நாயகி கூறுவதைப் பத்தாம் பாடல் காட்டுகிறது.

## 117. படர் மெலிந்து இரங்கல்

படரால் மெலிந்து வருந்துதல் என்பதாகும். படர் என்பது துன்பம் என்று பொருள்படும். 'பொழுது கண்டு இரங்கல்' என்ற அதிகாரமும் 'இரங்கல்' என்று முடிகிறது. காம நோயாகிய நோயினை என்னால் மறக்க முடியவில்லை என்று நாயகி கூறுகின்றாள். இறைப்பவர்க்கு ஊற்று நீர் போல் வருகின்றதென்று குறிக்கின்றாள்.

இதனை முதற் குறட்பா எடுத்துக் காட்டுகிறது. 'ஊற்று நீர்' என்று குறிப்பிட்டுக் காட்டுவது சிந்தனைக்குரியதாகும். இரண்டாம் பாடல் அவளால் மறைக்கமுடியாத நிலைமையினைக் கூறுகின்றது. நாயகருக்குஉரைப்பதற்கும் நாணமாக இருக்கின்றது என்று தெளிவுபடுத்துகிறாள். மூன்றாம் பாடல் காவடித்தண்டினைக் காட்டி அவள் நிலையினைப் புலப்படுத்துகின்றது.

'உயிர் காவாத்தூங்கும்' என்றுகுறட்பா அமைத்துக் காட்டுகின்றது. காமக்கடலே அவளுக்கு உண்டாகி இருக்கிறதென்றும் அதனைக் கடக்கக்கூடிய புணை இல்லையென்று வருந்துவதை நான்காம் பாடல் எடுத்துரைக்கின்றது. 'நீந்தும் ஏமப்புணை' என்று குறட்பா குறிக்கின்றது. காதலியாகிய நட்புக்கொண்ட தன்னிடத்திலேயே இவ்வாறு நடந்து கொள்ளுகின்ற அவர் பகைமைக்கள் எப்படி இருப்பாரோ என்று அவள் வியப்புறுவதை ஐந்தாம் பாடல் விளக்கம் செய்கின்றது.

'எவன் ஆவர்' என்று அவள் கேட்கின்றாள். இன்பம் கடல் போல் இருக்கின்றதென்றும், பிரிவுத் துன்பம் அதனைவிடப் பெரிதாக இருக்கின்றதென்றும் ஆறாம்பாடல் எடுத்துரைக்கின்றது. காமக் கடும் புனலைநீந்திக் கரைகாண முடியவில்லை என்பதனை ஏழாம்பாடல் உணர்த்துகின்றது. இரவெல்லாம் தூக்கமின்றி அவள் இருப்பவளாகி விட்டபடியால் இரவுக்கும் அவளைவிடத் துணை யாரும் இல்லையென்று எட்டாம் பாடல் உணர்த்துகின்றது. 'எனையல்லது இல்லை துணை' என்று குறட்பா முடிகின்றது.

நாயகனை விடக் கொடுமையானது இந்த இரவுப் பொழுது என்று ஒன்பதாம் பாடல் குறிக்கின்றது. இரவுகள் அதிக நேரமாய் செல்லுகின்றனவாம். கண்கள் வெள்ளம் போன்ற நீரைக் கொண்டுள்ளனவென்று பத்தாம் பாடல் கூறுகின்றது. அந்த நீரைக் கண்களால் நீந்த முடியவில்லையாம்.

## 118. கண்விதுப்பு அழிதல்

விதும்பல் என்பது விருப்பத்தால் விரைதலாகும். கண்கள் தலைவனைக் காணும் விருப்பம் மேலிட்டு விரைவதைக் குறிப்பதாகும். கண்கள் அழுவது எதற்கு - என்ற கேள்வியினை அவள் கேட்கின்றாள். ஏனெனில் முதலில் அவைகள் காட்டியதால்தான் அவள் நாயகனைக் காண முடிந்தது. அப்படிச் செய்தவை இப்போது அழுவது அவளுக்கு வியப்பாக இருக்கின்றது. இதனை முதற் குறட்பா எடுத்துரைக்கின்றது.

இரண்டாம் படால் மேற்கூறிய கருத்தினையே மேலும் விளக்கமாகக் கூறுகின்றது. 'பைதல் உழப்பது எவன்' என்று முடிகின்ற இரண்டாம் பாடல் முதலில் நோக்கிய கண்கள் இப்போது அழுவது ஏனோ என்ற விளக்கத்தினைத் தருகின்றது. கண்கள் தாமே முதலில் காதலரைக் கண்டு மகிழ்ந்து இப்போது பிரிந்தபோது அழுவது நகைப்புக்கு இடமாக இருக்கின்றதென்று மூன்றாம் பாடல் கூறுகின்றது. இது 'நகத்தக்கது உடைத்து' என்று குறட்பா முடிவாகக் கூறியது சிந்தனைக்குரியது.

நான்காம் பாடல் இக்கண்களினால் வந்த காம நோயினைக் கூறுகின்றது. ஒழிவில்லாத நோயினை 'உய்வில் நோய்' என்று அவள் கூறுன்றாள். கண்கள் தூங்காமல் துன்புறுகின்றனவென்று ஐந்தாம் பாடல் குறிக்கின்றது. ஆறாம் பாடல் வியப்பான கருத்தினைக் கூறுகின்றது.

தனக்கு துன்பத்தினை உண்டாக்கிய கண்கள் துன்பம் அடைவது இன்பமானதுதான் என்று அவள் குறிப்பிடுகின்றாள். அவ்வாறே ஏழாம் பாடலும் அந்த நாயகி தனது கண்களைப் பார்த்துப் பேசுவதையே குறித்துக் காட்டுகின்றது. நாயகர் உள்ளத்திலேயே இருந்தாலும் காணாதிருப்பது துன்பம் என்று கருதுகின்றாள். நாயகர் வராதிருந்

தால் அவர் வரவு பார்த்துக் கொண்டே கண்கள் உறங்குவது இல்லை.

வந்து விட்டால் திரும்பவும் போய் விடுவாரோ என்று எண்ணி உறங்குவது இல்லையாம். இதனை ஒன்பதாம் பாடல் விளக்குகிறது. அவளுடைய கண்களே பறை அறைவித்துத் தனது காம நோயினைப் பலரறியச் சொல்லு கின்றன என்று பத்தாம் பாடல் உணர்த்துகிறது.

## 119. பசப்புறு பருவரல்

பசப்பு நிறம் அடைந்து துன்புறுவதனைக் கூறுவதாகும். பருவரல் என்பது துன்பம் என்று பொருள் படுவதாகும். பசப்பு என்பது பிரிவுத் துன்பத்தினால் வரும் நிற வேறுபாடு. தலைவனைக் காணாதபோது அவளிடத்தில் நிகழ்வதாகும்.

'நயந்தவாக்கு நல்காமை நேர்ந்தேன்' என்று தொடங்கப் பெறுகின்ற முதற் குறட்பா, அவர் பிரிவுக்கு உடன்பட்டு இந்த நிலையினை அடைந்தேன் என்று அவள் கூறுவதைக் குறிக்கின்றது. 'மேனி மேல் ஊரும் பசப்பு' என்று இரண்டாம் பாடல் தொடங்குகிறது. பசப்பு நிறம் மிகவும் வேகமாக அவள் மேனிமீது படர்ந்து விட்டதாம்.

காம நோயினையும் பசலையும் அவர் கொடுத்துவிட்டுப் போனார் என்பதனைக் குறித்து, மூன்றாம் பாடல் 'நோயும் பசலையும் தந்து' என்று முடிகிறது. 'சாயலும் நாணும்' அவர் கொண்டு போய் விட்டார் என்றும் கூறுகிறது. நான்காம் பாடல், 'கள்ளம் பிறவோ பசப்பு' என்று கூறி கள்ளத்தனமாக இந்தப் பசப்பு வந்து விட்டது என்று அறிவிக்கின்றது.

நாயகன் பிரிந்ததால் பசப்பு வந்ததே என்பதைக் காட்டுவது ஐந்தாம் குறட்பாவாகும். விளக்கு அணைகின்ற நேரத்தில் இருட்டு வந்து சூழ்ந்து கொள்வதைப்போல, நாயகனுடைய முயக்கம் நீங்கும் நேரம் பார்த்து நெருங்கி வந்துவிட்டது இந்தப் பசப்பு என்று கூறுகின்றாள்.

## 120. தனிப்படர் மிகுதி

தனியாகிய படர் மிகுதி என விரியும். அதாவது படர் மிகுதி - துன்பம் மிகுதி - தலைவன்கண் இல்லாமல் தன்னிடம் மட்டும் இருப்பதைக் கூறுவதாகும். அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தான் ஆனபடியால் அவனிடம் இல்லை என்பதாயிற்று. 'படர் மிகுதி' என்று குறிப்பிட்டதால் மிகுந்த துன்பத்தில் இருக்கின்றாள் என்பது உணர்த்தப் பட்டதாகும்.

தம்மால் காதலிக்கப்படும் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர் காம நுகர்ச்சி என்னும் பரலில்லாத கனியைப் பெற்றவராவர் என்று முதற் குறட்பா கூறுகின்றது. 'காழில் கனி' என்று சிறப்பித்துக் கூறினார். தடையின்றி நுகரப் படுவதால் காழில்கனி - என்று குறிப்பிட்டார். 'வாழுநம் என்னும் செருக்கு என்று இரண்டாம் குறட்பா முடிகிறது.

தமது கணவரால் விழைப்படும் மகளிர் இந்தப் பெருமையுடன்-செருக்குடன் - வாழ்வார்கள் என்பதாகும். நான்காம் பாடல், 'கெழீஇயிலர்' என்று குறிப்பிடுகின்றது. ஆறாம் பாடல் அழகிய உவமையினைக் கூறுகின்றது. 'விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல்' என்பது பன்முறையும் சிந்திக்க வேண்டியதொன்றாகும். இதனை மேலும் விளக்குவது ஏழாம் பாடலாகும்.

'அள்ளிக் கொள்வற்றே பசப்பு' என்று கூறி முன்பு ஒரு நாள் நடந்ததை நினைவுபடுத்திக் கூறுகின்றாள். பசப்பு நிறம் அடைந்துவிட்டாள் என்று நாயகியை குறை சொல்கிறார்களேயல்லாமல், நாயகர் பிரிந்து போய்விட்டாரே என்று அவரைக் குறைகூறுபவர்கள் இல்லையென்று எட்டாம் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

நாயகியின் அன்பு உள்ளத்தினை ஒன்பதாம் பாடல் குறிக்கின்றது. பிரிந்து சென்ற நாயகர் நல்லபடியாக இருந்தால், பசப்பு வந்தது என்பதும் நல்லதுதான் என்று ஒன்பதாம் பாடல் கூறுகிறது. பிரிந்த நாயகரை ஊரார் தூற்றாமல் இருப்பாராக, அப்படியாயின் 'பசப்பெனப் பேர் பெறுதல் நன்றே' என்று பத்தாம் பாடல் விளக்கம் செய்கிறது.

கணவரால் விரும்பப்படாத மகளிர் தீவினையுடையாராகும் என்பதாகும். அப்போதுதான் கற்புடைய மகளிரும் நன்கு மதிப்பார்கள். 'நமக்கு எவன் செய்பவோ' என்று ஐந்தாம் பாடல் குறித்துக் காட்டுகிறது. தான் மாத்திரம் அவர்பால் காதல் கொண்டு பயனடைய முடியாதே என்பாள். அவரும் காதல் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

காவடித்தண்டினை உவமையாகக் காட்டித் தனது துன்பத்தினை வெளிப்படுத்துகிறாள். இக்குறட்பாவில், 'ஒரு தலையான்' என்பதும், 'காப் போல' என்பதும் சிந்தனைக்குரியவைகளாகும். 'இருதலையானும் இனிது' என்று தெளிவாகக் காட்டுகிறது. ஏழாம் பாடல் காமன் என்று கூறுகின்றது. அவன் ஒரு ப்பக்கமாக மாத்திரம் இருந்து துன்புறுத்துகிறான் என்று குறிக்கின்றாள். எட்டாம் பாடல், 'வாழ்வாரின் வன்கணார் இல்' என்று கூறுகிறது. நாயகனின் இனிய வார்த்தைகளைப் பெறாமல் வாழும் அவள் வன்கண்மையுடையவளாகி விட்டாள் என்பதாகும்.

'நல்காா் எனினும்' என்று ஒன்பதாம் பாடல் உணர்த்து கிறது. நாயகர் அன்பில்லாதவரேயானாலும், அவர் சொல்லும் ஓர் சொல் தன் செவிக்கு இனிமையாகவே இருக்கும் என்று கூறுகின்றாள். நெஞ்சத்தினைப் பார்த்து அவள் நொந்து கொள்ளுகின்றாள் என்று பத்தாம் பாடல் உணர்த்துகிறது. 'பெரிய கடலைக் கடக்க முயற்சிப்பாயாக' என்று கூறுகின்ற தன்மை ஆழ்ந்த பொருளினைக் கொண்டுள்ளதாகும்.

## 121. நினைந்தவர் புலம்பல்

முன்பு நுகர்ந்த இன்பத்தினை நினைத்து தலைமகள் தனிமையாக இருந்து பேசுதலும், தலைமகன் தனியாக இருந்து சிந்தித்தலுமாகும். இருவருடைய மனோவருத்தமும் கூறப்படுகின்றது. 'கள்ளினும் காமம் இனிது' என்று அவன் கூறுகின்றான். ஏனெனில் நினைத்தபோதே காமம் அவனுக்கு இன்பத்தினைக் கொடுக்கின்றதாம். இதனை முதற் குறட்பா நன்கு தெளிவுபடுத்துகிறது.

'தீராப் பெருமகிழ்' என்று குறித்துக் காட்டுகிறது. இரண்டாம் பாடல் அக்கருத்தினையே, 'நினைப்ப வருவது ஒன்று இல்' நாயகன் அவளைத் தன்நெஞ்சிற்கு வராமல் தடுத்து விட்டானாம். தன்னுடைய நெஞ்சுக்கு அடிக்கடி நாணம் இல்லாமல் வருவதேனோ என்கிறாள். ஆறாம் பாடல் அவள் உயிருடன் இருப்பதற்குக் காரணத்தினைக் கூறுகின்றது.

உற்றநாள் உள்ளேன் என்று குறட்பா முடிகின்றது. அவரோடுயான் என்பது அவளுடைய இனிய உள்ளத்தினைப் புலப்படுத்துகிறது. அவளால் மறந்திருக்கவே முடியாது என்பது ஏழாம் பாடலின் கருத்தாகும். மறந்தால் உயிரே போய்விடும் என்கிறாள்.

மறப்பின் எவனாவன் - மறப்பு அறியேன் - உள்ளினும் உள்ளம் சுடும் - என்று குறிப்பிட்டவை சிந்தனைக்குரியவை களேயாகும். எட்டாம் பாடல் 'காதலர் செய்யும் சிறப்பு, என்று முடிகிறது! எப்படியெல்லாம் நினைத்தாலும் அவளுடைய காதலர் கோபிக்க மாட்டாராம்.

'எனைத்து நினைப்பினும் காயார், என்று குறட்பா கூறுகிறது. தன்னுடைய என்று குறிப்பிட்டு சிறப்பிக்கின்றது. தமது காதலியை நினைப்பதால் இன்பம் வருவதேயல் லாமல் துன்பம் வருவது இல்லையாம். 'இனிதேகாண்' என்று இரண்டாம் பாடல் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

தும்மல் வருவதை அவள் கூறுகின்றாள். 'தும்மல் சினைப்பது போன்று கெடும்' என்று குறிக்கின்றாள். நினைப்பது போன்று நினைக்காமல் இருக்கின்றாரோ என்பது மூன்றாம் பாடலின் கருத்தாகும். 'அவர் நெஞ்சத்து' 'எம் நெஞ்சத்து' - என்று குறிப்பிடுகின்ற நான்காம் குறட்பா எப்போதும் என் நெஞ்சத்தில் அவர் இருக்க, அவர் நெஞ்சத்தில் நான் இருக்க மாட்டேனோ என்று கூறுவதைக் குறிக்கின்றது.

'கடிகொண்டார் - நாணார்கொல் - ஓவாவரல்' - என்று குறித்துக்காட்டுகின்ற ஐந்தாம் குறட்பா அவள் மனப்போக்கினை நன்கு தெளிவு படுத்துகிறது. காலம் எப்படிச் சென்று கொண்டிருக்கின்றதென்பதை ஒன்பதாம் பாடலில் கூறுகின்றாள். அளவுகடந்த அன்புடன் அவர் 'நாம் வேறல்ல' என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவ்வார்த்தைகளை நினைத்தே வாழ்கின்றாளாம். 'வேறல்லம் என்பார்' - 'ஆற்ற நினைத்து' - என்று குறட்பா குறித்துக்காட்டி உணர்த்துகிறது.

பத்தாம் பாடலில், மதியைப் பார்த்து 'நீ வாராதிருப் பாயாக' என்று கூறுவதைக் காண முடிகிறது. மதி

இருவராலும் பார்க்கப் படுவதால் ஒன்றுபடுத்தும் தன்மை யுடையதாகும். ஆனால் இப்போது அவர் இல்லை. ஆதவால் "படாதி வாழி மதி" என்று கூறிக்கின்றாள். 'சென்றாரை" என்று குறிப்பிடும் குறிப்பு அவள் நெஞ்சோடு கொண்டுள்ள நினைப்பினை உணர்த்தி விடுகின்றது.

## 122. கனவு நிலை உரைத்தல்

தலைமகள் தான் கண்ட கனவு நினைவு மிகுதியால் உண்டாவதாகும் என்பதாம். கணவனைத் தூது என்று கூறுகின்றாள். கணவனிடம் வந்து தூது என்பாள். அதனால் மகிழ்ச்சியடைகின்றாள் அதற்கு விருந்திடவேண்டு மென்று சொல்லுகின்றாள்.

முதற்குறட்பா குறிக்கின்றது, 'யாது செய்வேன் கொல் விருந்து, என்பது அவளுடைய சொற்களாகும்.

'கலந்தாக்கு உயலுண்மை சாற்றுவேன்' என்று இரண்டாம் குறட்பா கூறுகின்றது. கண்கள் தூங்கினால் கனவில் வரும் நாயகருக்குத் தனது துன்பத்தினை எடுத்துச் சொல்லுவாளாம்.

மூன்றாம் குறட்பா'உண்டு என் உயிர்'என்று முடிகிறது. கனவினால் அவர் வருவதால்தான் உயிரே அவளுக்கு இருந்து வருகின்றதென்பதாம்.

'கனவினால் உண்டாகும் காமம்' என்று நான்காம் குறட்பா தொடங்கப் பெறுகிறது. கனவினால் இன்பம் உண்டாகின்றது என்று குறிப்பிடுகின்றாள். 'கனவும் தான் கண்டபொழுதே இனிது என்று ஐந்தாம் பாடல் கூறி நனவினால் காணுகின்ற இன்பம் போலவே கனவும் அளிக் கின்றது என்பதை விளக்கம் செய்கிறது.

கனவு எப்போதும் இருக்க வேண்டும் என்கின்ற அவள் நினைப்பினை ஆறாம் பாடல் உணர்த்துகிறது. நனவு இருக்கக்கூடாது என்பவள், 'நனவு என ஒன்று இல்லை யாயின்' என்பதாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறாள். நனவு வர வில்லையென்றால், 'காதலர் நீங்கலர்' என்பது அவள் கருத்தாகும். அவள் வருத்தத்தினை ஏழாம் பாடல் கூறுகிறது.

நேரில் வாராதவர் கனவில் வந்து வருத்துவது ஏனோ என்று கேட்கின்றாள். 'கொடியார்,என்றும், 'என் எம்மைப் பீழிப்பது என்றும் அறிவுறுத்துகின்றாள். நேரில்வாராததால் 'கொடியார் என்று குறிப்பிட்டாள். தூங்கும் போதும் விழிக்கும்போதும் அவளுடைய நிலையினை எட்டாம்பாடல் எடுத்துக் காட்டுகிறது. இக்குறட்பா, 'விரைந்து' என்று முடிவது, மிகவும் சிந்தனைக் குரியதாகும்.

ஊரார், காதலரைப்பற்றித் தவறாகக் கூறுவதைக் குறித்து, 'காதலர்க் காணாதவர்' என்று பேசுவதை ஒன்பதாம் பாடல் உணர்த்துகிறது. தனது காதலரைப்பற்றி குறை கூறி ஊரார் பேசுவதை அவளால் தாங்க முடியாமல், 'கனவினான் காணார்கொல் இவ்வூரவர் ,என்று அவள் அறிவுறுத்துவதைப் பத்தாம் பாடல் குறிப்பிடுகிறது.

## 123. பொழுதுகண்டு இரங்கல்

மாலைப்பொழுது வந்தபோது அதனைக் கண்டு தலை மகள் வருந்துவதைக் கூறுவதாகும். 'படர் மெலிந்து இரங்கல்' என்பதைப் போன்றதாகும். 'உயிர் உண்ணும் வேலை நீ' என்று முதற் குறட்பா கூறுகிறது. காதலர் பிரிந்திருக்கும் போது வருகின்ற மாலைப்பொழுது, அவளுடைய உயிரைக் குடிக்கும் இறுதிக்காலமாக இருக் கிறதாம்.

'மணந்தார்' என்று மணங்கொண்ட மகளிரை அழகுறக் குறித்தது. 'புன்கண்ணை'-'மருள்மாலை' என்று இரண்டாம் பாடல் குறிக்கின்றது. மாலைப் பொழுது மயங்கியதாகக் காணப்படுகிறதாம். ஆதலால் அதனுடைய துணைவரும் வன்கண்மையுடையவரோ என்று கூறுகின்றாள். 'எம் கேள் போல்; வன்கண்ணதோ, நின் துணை' என்பது அவள் உள்ளத்தின் கருத்தாகும். 'துன்பம் வளர வரும்' என்று மாலைப் பொழுது வருகின்ற தன்மையினை மூன்றாம் பாடல் குறிக்கின்றது.

மாலைப் பொழுதினை 'பைதல் கொள் மாலை', என்றும் குறிப்பிட்டார். நான்காம் பாடல், மாலைப் பொழுதின் வருகையினை கொலைக்களத்து ஏதிலர் போல வரும்' என்று குறித்துக் காட்டுகிறது. அவ்வாறு எப்போது வருகின்றதென்றால், 'காதலர் இல்வழி' என்றும் சொல்லுகின்றாள். காதலர் இல்லாத காலத்தில்தான் அவ்வாறு வருகின்றதாம்.

காலை நேரம் அவளுக்குத் துன்பத்தினை தருவதில்லை என்பதனை ஐந்தாம் பாடல் கூறுகிறது. 'காலைக்குச் செய்த நன்று'—'மாலைக்கு செய்த பகை'—என்பன சிந்தனைக் குரியவைகளாகும். மாலைப்பொழுது இவ்வாறு துன்புறுத்தும் என்பதை அவள் முன்பு அறிந்ததில்லையாம். 'மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன்' என்று ஆறாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

ஏழாம் பாடல், காலை, பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களையும் காட்டி, காம நோயின் தன்மையினை ஏழாம் பாடல் விளக்கம் செய்கிறது. அழல், ஆயன் குழல், கொல்லும் படை—என்பதாகக் குறித்து, எட்டாம் பாடல் தெளிவுப்படுத்துகிறது.

அவளுடைய வேதனை அளவு கடந்ததாகிவிட்டது என்று குறிக்கின்றாள். மாலையின் கொடுமையினை

கூறுகிறது ஒன்பதாம் குறட்பாவாகும். உயிர் நீங்கும் நிலையில் இருக்கின்றாள் என்பதைப் பத்தாம் பாடல் கூறுகின்றது. பொருள் தேடி நாயகன் சென்றுள்ளான் என்றும் குறிப்பிடுகின்றான்.

## 124. உறுப்பு நலன் அழிதல்

தலைவி வருத்தம் மிகுதியும் கொண்டவளாகி விட்ட படியால் அவளுடைய உறுப்புகள் அழகினை இழந்துவிட்டன என்பதனைக் கூறுவதாகும். 'நறுமலர் நாணினகண்' என்று குறித்து மலர்களைக் கண்டு கண்கள் நாணம் கொண்டன வென்பதைக் கூறுகிறாள். முன்பெல்லாம், மலர்கள் அவர்களுடைய கண்களைக் கண்டு நாணமுற்றது என்பது குறிப்பிட வேண்டியதாகும்.

அதற்குக் காரணம் 'சேண் சென்றார்' என்றும் குறித்துக்காட்டப்பட்டது. கண்களின் தன்மையினை இரண்டாம் பாடலும் விளக்குகின்றது. 'பசந்து பனிவாரும் கண்' என்று உணர்த்தப்பட்டது. அவைகள் 'தயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்' என்று கூறியது சிந்தனைக் குரியதாகும்.

தோள்களின் நிலைமையினை மூன்றாம் குறட்பா எடுத்துக்காட்டுகிறது. 'தணந்தமை சால அறிவிப்ப', என்று தோள்கள் கூறுவதைக் குறிப்பிடுகிறாள்.

நான்காம் பாடல் வளையல்களும் கழலுகின்றன என்பதனைக் கூறுகிறது. 'பைந்தொடி சோரும்' என்று குறித்துக்காட்டப்படுகிறது. இயற்கையழகும் என்பதை தொல்கவின் என்பதால் அறியமுடிகிறது. செயற்கையழகும் நீங்கியதென்பதாகும்.

தோள் வளையல்கள் எனப்படுகின்ற தொடியும், தோள் களும் மெலிகின்றன வென்று ஆறாம் பாடல் எடுத்துக்காட்டு

கிறது. 'தொடியோடு தோள் நெகிழ' என்று குறித்துக் காட்டப்படுகிறது.

ஏழாம் பாடலில், தனது நெஞ்சத்தினைப் பார்த்து அவள் வேண்டிக்கொள்வது கூறப்படுகிறது. 'நெஞ்சே' என்று அவள் அழைக்கின்றாள். நாயகரை 'கொடியார்' என்று குறிக்கிறாள்.

முன்பொருநாள் அவளுடைய 'நுதல்' பசப்பு நிறம் கொண்டதைக் குறித்து எட்டாம் பாடல் விளக்குகிறது. இக்குறட்பா மிகவும் சிந்தனைக்குரியதாகும். கண்கள் பசப்புற்ற நிலையினை ஒன்பதாம் பாடல் தெளிவு படுத்துகிறது.

'தண்வளி' - பசப்புற்ற - பேதை - பெருமழைக்கண் - ஆகிய இவைகள் சிந்தித்தறிய வேண்டுவனவாகும். ஒளி பொருத்திய அவளுடைய நுதல் - நெற்றி - பசப்புற்றதைக் கண்டு துன்பமுற்றன என்பதைப் பத்தாம் பாடல் குறித்துக் காட்டுகிறது.

'ஒண்ணுதல் செய்ததுகண்டு' என்று குறட்பா குறித்து உண்மையினைத் தெளிவு படுத்துகின்றதாம்.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

வருத்தம் மிகுதியால் தனக்கு ஒரு பற்றுக் கோடும் இல்லாமல் செய்வதறியாது தன்னுடைய நெஞ்சொடு சொல்லுதலாகும்.

'நினைத்தொன்று சொல்லாயோ' என்று முதற்குறட்பா தொடங்குகிறது. ஒன்றிலும் தீராத நோயினைத் தீர்க்கும் மருந்தினை அறிந்து சொல்வாயாக என்று தனது நெஞ்சினைக் கேட்கின்றாள். சொல்லாயோ—நெஞ்சே—எவ்வ நோய்—மருந்து, என்பன மிகுதியும் சிந்திக்கத்தக்கனவாகும்.

இரண்டாவது குறட்பா பெண்களுக்கே என்று அமைந்துள்ள முறையில் பேசுகின்ற பேச்சாகும். அவருக்கு நம்மிடம் காதலில்லாதபோது நீ ஏன் நொந்துகொள்ளுகிறாய். என்று கேட்பதாகும். 'நீ நோவது பேதைமை' என்று கூறுகின்றாள்.

மூன்றாம் குறட்பாவும் மேலே சொன்ன கருத்தினையே வற்புறுத்துகிறது. 'பைதல் நோய் செய்தார் கண் இல்' என்று நாயகருக்கு இரக்கமில்லை என்று கூறுகின்றாள். தன்னுடைய கண்களையும் அவரிடம் கொண்டு போவாயாக என்று நான்காம் குறட்பாவில் கூறுகின்றாள். 'கண்ணும் கொளச்சேறி நெஞ்சே' என்ற நயம்பட குறட்பா அமைந்துள்ளதாகும்.

ஐந்தாம் குறட்பாவில், நாயகர் அன்பு இரக்கமில்லாதவராக இருந்தாலும் அவரை கைவிட்டிருக்கும் வலிமை தனக்கு இல்லை என்று கூறுகின்றாள்.

ஆறாம் குறட்பா ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்தினைக் கூறுகின்றது. காதலரைக் கண்டால்—கண்டு விட்டால்—கோபிக்கத் தெரியாத நெஞ்சம், இப்போது பொய்யாகக் கோபிப்பது ஏன் என்று கூறுகின்றாள். ஆறாம் குறட்பாவில், 'பொய்க்காய்வு காய்தி என் நெஞ்சு' என்று குறிப்பிட்டிருப்பது நன்கு விளக்கம் தருகிறது.

காமத்தினையும் நாணத்தினையும் ஒன்றுசேர வைக்காமல் இரண்டில் ஒன்றினை விட்டுவிடு என்கின்றாள். ஏழாம் பாடல் இக்கருத்தினை, 'யானோ பொறேன் இவ் இரண்டு' என்று குறிக்கின்றது. எட்டாம் பாடலில் நம்மை விட்டுப் பிரிந்து போனவர்பின் போவதற்கு நினைக்கின்றாயே என்று கூறுகின்றாள். 'பேதை என் நெஞ்சு' என்று குறிப்பிடுகின்றாள்.

ஒன்பதாம் பாடல், காதலர் உள்ளத்திலேயே இருப்பதால் அவரைத் தேடி எங்கே போகின்றாய், என்று வினவுகின்றாள். 'உள்ளத்தார் காதலவராக' என்று குறட்பா

குறிக்கின்றது. பிரிந்த காதலரை மனதில் நினைத்து இன்றும் அழகினை இழந்து கொண்டே இருக்கின்றாள் என்று பத்தாம் குறட்பா கூறுகிறது. "இன்னும் இழத்தும் கவின்" என்று குறட்பா முடிகிறது.

## 126. நிறை அழிதல்

மனத்துள் அடக்கி வைத்திருக்க வேண்டியனவற்றை வேட்கை மிகுதியான் அடக்க முடியாமல் வாய்விட்டுக் கூறி விடுவதாகும். நிறைகுணம் பிறர் அறியாமல் வைத்திருக்கும். அதுவே அழிகின்றது என்று கூறுகின்றாள்.

முதற் குறட்பாவில், காமக்கணிச்சி—நிறைகதவு—நாணுத்தாள்—ஆகிய மூன்றும் கூறப்படுகின்றன. உடைப்பதும், உடைபடுவது எது என்பதும் தெளிவாக்கப்பட்டது.

'நெஞ்சத்தை யாமத்தும் ஆளும் தொழில்' என்று இரண்டாம் பாடல் குறிப்பிடுகிறது. காமம் என்பது இரக்கமில்லாமல் கொடுமை செய்கிறதென்பதைக் கூறுகிறது. காமத்தினை எப்படியேனும் மறைத்தாலும் வெளிப்பட்டு விடுகிறதாம்.

மூன்றாம் குறட்பாவில், 'தும்மல் போல் தோன்றிவிடும்' என்று குறிக்கப்பட்டுள்ளது. 'மறைப்பேன்' என்று அவள் செய்வதையும் குறிப்பிட்டாள்.

நான்காம் பாடலில், 'நிறையுடையேன் என்பேன்' என்று அவள் குணத்தினையும், 'மறை இறந்து மன்றுபடும்' என்று காமத்தின் தன்மையினையும் உணர்த்துகிறாள்.

ஐந்தாம் பாடல், பெருந்தகைமை என்ற குணம் காம நோய் உற்றாருக்கு இல்லை என்று தெளிவுபடுத்துகிறது. "பெருந்தகைமை"—"காமநோய்"—அறிவதொன்று அன்று என்பன உண்மையினை நன்கு உணர்த்தி விடுகின்றன.

தனக்கு வந்த நோயினை இகழ்ந்து பேசுவதை ஆறாம் பாடல் கூறுகின்றது. 'என்னை உற்றதுயர்' என்று குறட்பா

முடிகிறது. நாணத்தினையும் அறியாமல் இருந்தேன் என்று கூறி, அது எப்போது என்பதனையும் ஏழாம் பாடல் நன்கு விளக்கம் செய்கின்றது. பெண்மை என்னும் நிறையாகிய குணத்தினை பல பொய்களைச் சொல்லும் கள்வனின் தாழ்ந்த சொற்கள் உடைக்கின்றனவென்று எட்டாம் பாடல் குறிக்கின்றது.

இக் குறட்பாவில், மாயக் கள்வன்—பணிமொழி—பெண்மை—படை, என்பன மிகுதியும் சிந்திக்கத்தக்கன வாகும். அவர் வந்தபோது கோபித்துக் கொள்ள முடியாமல் கலந்து விட்டதை ஒன்பதாம் பாடல் காட்டுகிறது.

'கலத்தல் உறுவது கண்டு' என்று குறட்பா முடிகிறது. பத்தாம் பாடலில் அவளால் புலந்து இருக்க முடியாது என்பதைக் காட்டும் கருத்து அமைந்துள்ளது.

அவள் நெஞ்சுக்கு நெருப்பிலிட்ட நிணத்தினை—கொழுப்பினை—உவமையாகக் கூறுகின்றாள். 'நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு' என்று குறட்பா அழகான கருத்தினை உணர வைக்கின்றது.

## 127. அவர்வயின்விதும்பல்

பிரிந்திருக்கின்ற தலைவனும் தலைமகளும் வேட்கை மிகுதியால் ஒருவரையொருவர் காணுவதற்கு விரைத லாகும். இருவருக்கும் பொதுவான அதிகாரமாகும். விருப்பத்தால் விரைதலை விதும்பல் என்பதாம்.

தலைமகள் விரும்புவதை முதற்குறட்பா குறிக்கின்றது. அவள் கண்கள் நிலையும், விரல் தேய்ந்ததையும் கூறுகின் றாள். 'நாள் ஒற்றித் தேய்ந்த விரல்' என்று முடிகின்ற குறட்பா சிந்தனைக்குரியதாகும். கண்களும் ஒளி இழந்து விட்டன.

இரண்டாம் குறட்பா நாயகியின் மனோநிலையினை உணர்த்துகிறது. நாயகரை மறந்தால் அழகு இழந்து

விடப்படும் என்பதனை 'மறப்பின்' என்பதும் 'கலங்கழியும்' என்பதும் 'காரிகை' என்பதும் உணர்த்துவனவாகும். 'இன்றும் உளேன்' என்று முடிகின்ற மூன்றாம் குறட்பா, நாயகர் திரும்பி வந்து விடுவார் என்ற நினைப்பால் உயிர் வாழ்கின்றேன் என்று அவள் கூறுவதை விளக்குகின்றது.

அவளுடைய நெஞ்சம் மிகவும் பணைத்து பெருமிதம் கொண்டு எழுச்சி கொள்கிறது என்று கூறுகின்றாள். அதற்குக் காரணத்தைக் கூறும் நான்காம் குறட்பா, 'வரல் நசைஇ' என்று கூறுகின்றது. அவர் வருவார் என்ற விருப்பமே என்பதாம்.

'கோடு கொடு ஏறும் என் நெஞ்சு' என்று கூறியது சிந்தனைக்குரியதாகும். அவளுடைய தோளின் மேல் உள்ள பசப்பு நிறம் நீங்கிவிடும், என்று ஐந்தாம் குறட்பா கூறுகின்றது. ஏனெனில், நாயகன் வந்ததும், அவரைக் கண்டவுடன் போய்விடுமாம்.

காண்க—கொண்கன்—கண்ணாரக் கண்டபின்—பசப்பு என்பன சிந்தனைக்குரியவைகளாகும். அந்த நாயகியின் வேட்கை மிகுதியினைப் 'பருகுவன்' என்று கூறும், ஆறாம் குறட்பா தெளிவுபடுத்துகிறது. 'ஒருநாள்'—நோய்—வருக—எல்லாம் கெட—என்று காணப்படுபவைகள் இன்பம் நிறைந்த உள்ளத்தாள் பேசும் இனிய சொற்களைக் குறித்தவைகளாகும்.

நாயகனை, 'கண்ணன்ன கேளிர்' என்று அவள் குறிக்கும் ஏழாம் பாடல் அவள் இன்னதுதான் செய்வேன் என்று கூற முடியாத இன்பத் திகைப்பில் இருக்கின்றாள் என்பதைக் காட்டுகிறது. புலப்பேனோ—புல்லுவேனோ—கலப்பேனோ என்றெல்லாம் நினைக்கின்றாள்.

எட்டாம் பாடல் தலைமகன் வீட்டிற்குச் சென்று மனைவியுடன் மகிழ்ந்திருப்பேன் என்று நினைப்பதைக் கூறுகிறது. வேந்தன் தொழில் புரிந்து வெல்வானாக என்று கூறுகின்றான். பிறகு அவன் வீட்டிற்குச் சென்று மனைவி

யோடு கூடி மாலைப் பொழுதிற்கு விருந்து வைப்பேன் என்று கூறுகின்றான்.

பிரிந்து சென்ற கணவனை நினைத்து வருந்துகின்ற மகளிர்க்கு ஒருநாள் பல நாட்கள் போல இருக்கும் என்று ஒன்பதாம் பாடல் புலப்படுத்துகிறது.

நெருநற்றுச் சென்றார்—என்ற குறட்பா ஒப்பிடத் தக்கது. நாயகி பிரிவுத்துயரால் உள்ளம் உடைந்து இறந்து விட்ட பிறகுதான் யாது செய்வேன் என்று கலக்கமுறுகின்ற நாயகன் கூறுவதைப் பத்தாம் பாடல் உணர்த்துகிறது. பெறின் என் - பெற்றக்கால் என் - உறின் என் என்பவைகள் அவன் மனவேதனையினை நன்கு விளக்கம் செய்து விடுகின்றன.

## 128. குறிப்பு அறிவுறுத்தல்

தலைமகன், தலைமகள் ஆகிய இருவரும் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தலாகும். இது பிரிந்து போய் திரும்பி வந்த தலைமகன் கூடியபோது நிகழ்வதாகும். 'நாயகியே! நீ சொல்ல மறைத்தாலும், உள்ளத்தில் சொல்ல வேண்டுவதொன்றுண்டு" என்று நாயகன் குறிக்கின்றான். அவளுடைய கண்கள் மூலம் தெரிந்து கொண்டான். இதனை முதற்குறட்பா வலியுறுத்துகிறது.

இரண்டாம் பாடல் அப்பெண்ணிடம் பெண்களுக்குரிய குணத்திலும் அதிகமாக இருக்கின்றதென்பதனைக் கூறுவதாகும். 'பெண் நிறைந்த நீர்மை பெரிது' என்று குறட்பா கூறுகின்றது.

அருமையான உவமையொன்றினை மூன்றாம் பாடல் சொல்லுகிறது. கோர்த்த மணிக்குள் நூல் தெரிகிறது. அவளுடைய அழகினுள் ஒரு குறிப்புத் தெரிகின்றது. 'திகழ்தருநூல்' என்பதும் 'திகழ்வதொன்றுண்டு' என்பதும்

விளக்கம் தருவனவாகும். அதுவே போன்றதொரு அழகிய உவமை நான்காம் பாடலிலும் காணப்படுகிறது. இக் குறட்பாவில், 'முகைமொக்குள்' 'நகைமொக்குள்' என்பன சிந்திக்கத் தக்கனவாகும்.

மூன்றாம் குறட்பா போலவே நான்காம் குறட்பாவும் 'ஒன்று உண்டு' என்று முடிகிறது.

இப்பெண்ணானவள் மறைத்து வைக்கின்ற குறிப்பு தனது வருத்தத்தினைத் தீர்க்கும் மருந்தினைக் கொண்டிருக்கிறது—என்று கூறுவதை நான்காம் குறட்பா புலப்படுத்துகிறது.

நாயகன் தன்னிடம் அன்புடன் சேர்ந்து நுகரும் இன்ப மகிழ்ச்சி மீண்டும் அவன் பிரிவானோ என்ற அச்சத்தினைத் தருவதாக இருக்கின்றதென்று ஆறாம் பாடல் கூறுகிறது.

ஏழாம் பாடல், 'துறைவன்' 'தணந்தமை' 'உணர்ந்தவளை'—என்பவற்றால், நாயகன் பிரியும் குறிப்பினைக் குறிப்பதாகும்.

நாயகன் பிரிந்திருப்பதை பல நாட்கள் போல எண்ணுகிற உள்ளம் கொண்டு பசப்பு நிறமடைந்ததை எட்டாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

'எழு நாளேம் மேனி பசந்து' என்று கூறுகின்றாள். பிரிவினையறிந்த நாயகி, தோள் வளைகளைப் பார்த்தாள், தோளைப் பார்த்தாள். பின் அடிகளைப் பார்த்தாள் என்று ஒன்பதாம் பாடல் உணர்த்துகிறது.

உடம்புபிரிவால் மெலிந்துவிடும் என்றும் அது நிகழாமல் உடன் செல்லுமாறு அடிகளை நோக்கினாள் என்பதாம், கண்களினால் காமநோயினைத் தெரிவிக்கும் பெண்ணுக்கு பெண்மை என்னும் பண்பு மேலும் ஒரு பெண்மை பெற்றது போல் இருக்கிறது என்பது பத்தாம் பாடல் கூறுவதாகும்.

## 129. புணர்ச்சி விதும்பல்

தலைமகளும் தலைமகனும் இன்பம் நுகர்தற்கு விரைதலாகும். குறிப்பு அறிவுறுத்தப்பட்டபின் இஃது நிகழ்வதாகும். களவியற் பகுதியில் 'புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரம் கூறப்படுகிறது. முன்பு, 'அவர் வயின் விதும்பல்' என்று கூறப்பட்டது. இப்போது 'புணர்ச்சி விதும்பல்' கூறப்படுகிறது.

முதற் குறட்பா, 'காமத்திற்கு உண்டு' என்று முடிந்து, நினைத்தாலே களிப்பும், கண்டாலே மகிழ்ச்சியும் காமத்திற்குத்தான் உண்டு என்று கூறப்படுகிறது.

மகளிர்க்குக் காமம் மிகுதியாக இருந்தபோது தினையளவும் ஊடாமை வேண்டும் என்று இரண்டாம் பாடல் குறித்துக் காட்டுகிறது. ஊடல் உவகை—அதிகாரம் சிந்திக்கத் தக்கது.

நாயகன் தனக்கு வருத்தம் தருவதையே செய்தாலும் அவனைக் காணாமலிருக்க முடியவில்லையென்று மூன்றாம் குறட்பா கூறுகின்றது.

சிறுபிணக்காகிய ஊடல் செய்யலாம் என்று நினைத்திருந்தாலும் அது கூடவில்லை என்பதனை நான்காம் குறட்பா குறிக்கின்றது.

மையெழுதும் கோலைக் காட்டி ஐந்தாம் குறட்பா அறிவுறுத்துகிறது. நாயகனைக் கண்டபோது அவர்மீது குற்றத்தினையே காண முடியவில்லையென்று ஐந்தாம் பாடல் தெரிவிக்கின்றது. அவ்வாறே, ஆறாம் குறட்பாவும் தெரிவிக்கின்றது.

'காணுங்கால் – காணாக்கால்' என்று குறிப்பிட்டிருப்பவைகள் சிந்தனைக்குரியனவாகும். 'நீரில்பாய்பவரை' ஏழாம் பாடல் காட்டுவது சிறப்பாக அமைந்துள்ளதாகும். புலந்துநிற்பது—சிறுபிணக்கு செய்து கொண்டிருப்பது முடிய

வில்லை என்று ஏழாம் பாடல் தெளிவுபடுத்துகிறது. புலவியினை 'பொய்த்தல்' என்று குறட்பா கூறுகின்றது.

எட்டாம் பாடல் நாயகியின் இன்ப உள்ளத்தினை நுணுக்கமாக எடுத்துக்காட்டுகிறது. நாயகன் துன்பம் தருவனவற்றைச் செய்தாலும் நாயகிக்கு அவன்மீது இன்ப எழுச்சி இருந்துகொண்டே இருக்கின்றதாகும்.

ஒன்பதாம் பாடல், காமத்தின் மென்மைத் தன்மையினை எடுத்துக் கூறுகிறது. இக் குறட்பாவில், மலர் - சிலர் - காமம் - செவ்வி முதலியன கருத்தினை நயம்பட எடுத்து விளக்குகின்றன.

பத்தாம் பாடல், அப்பெண் முன்பு ஒருமுறை கண்ணினால் ஊடல் செய்து, புல்லுதலில் முந்தினாள் என்ற உண்மையினை விளக்கம் செய்கிறது. 'கலங்கினாள்' 'புல்லுதல்' விதுப்பு உற்று—என்பன ஆழ்ந்த பொருட்செறிவினைக் கொண்டவைகளாகும்.

## 130. நெஞ்சொடு புலத்தல்

காரணம் இருந்தபோதும் புலக்கக் கருதாமல் புணர்ச்சி விரும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலந்து கொள்ளுதலாகும். புலத்தல் என்பது சிறுபிணக்காகும். அவருடைய நெஞ்சு அவருக்காக இருப்பதைக் கண்டும், தன்னுடைய நெஞ்சு தனக்கு ஆகாதிருக்கின்றதென்பதை 'நீ எமக்கு ஆகாதது' என்று முதற்குறட்பா கூறுகின்றது.

இரண்டாம் குறட்பாவும் அவள் நெஞ்சுடனே புலத்திற்குக் காரணத்தைக் கூறுகின்றது. அவரிடம் சென்றால் அவர் கோபிக்க மாட்டார் என்று செல்லுகிறாயோ என்று கேட்கின்றாள். "செறாஅர் எனச் சேறி என் நெஞ்சு' என்று குறட்பா முடிகிறது.

மூன்றாம் குறட்பா, 'கெட்டவர்க்கு நண்பர்கள் இல்லையென்று சொல்லுவார்களே, அதனால் என்னைவிட்டு

அவரிடம் போகிறாயோ என்று தெளிவுபடுத்துகிறது. 'நட்டார் இல் என்பதோ' என்று குறட்பா கூறுகிறது.

'உன்னோடு கலந்து எண்ணுபவர் யாருண்டு' என்று நான்காம் குறட்பா விளக்குகிறது. ஏனெனில் அவரைக் கண்டபோது புலக்கக் கருதாமல் சேர்ந்து கொள்ள நெஞ்சம் கருதிவிட்டதாம்.

ஐந்தாம் பாடல் நெஞ்சினுடைய நிலையினை நன்கு தெளிவுபடுத்துகிறது. தலைவரைப் பெறாதபோதும் அஞ்சுகிறது, பெற்றபிறகும் அஞ்சுகிறதாம்—மறுபடியும் பிரிந்து விடுவாரோ என்று நினைத்து அஞ்சுகிறதாம். தனியே இருந்து நினைத்தால் தன்னைத் தின்னுவது போல் நெஞ்சம் துன்பம் கொடுக்கிறதென்று ஆறாம் குறட்பா கூறுகிறது.

'நாணும் மறந்தேன்'—அதாவது நாணத்தையும் மறந்து விட்டேன் என்று கூறுவதை ஏழாம் பாடல் குறிக்கிறது. அவரைமட்டும் மறக்கவில்லை என்கின்றாள். 'எள்ளின் இளிவாம்' என்று தொடங்குகிற எட்டாம் பாடல், தானே தனது கணவரை இகழ்ந்து பேசுதல் தனக்கே குறைவானபடியால் பெருமையாகவே பேசுகிறேன் என்று சொல்லுவதைக் கூறுகின்றது.

'துன்பத்திற்கு யார் துணையாக இருப்பார்—தன்னுடைய நெஞ்சமே துணையாக இல்லாவிட்டால் என்பதை, 'யாரே துணையாவார்' என்ற ஒன்பதாம் பாடல் விளக்கம் செய்கிறது.

பத்தாம் பாடல், தன்னுடைய நெஞ்சமே சுற்றத்தாராக ஆகாதபோது, அயலார் அயலாராக இருப்பதைச் சொல்லவும் வேண்டுமோ என்று உணர்த்துகிறது. நெஞ்சொடு கிளத்தல்—என்ற அதிகாரமும் உண்டு.

# 131. புலவி

புலவி என்பது சிறுபிணக்கு என்று சொல்லப்படும். இருவர் நெஞ்சமும் புணர்ச்சி வரும்போது புலக்கக் கருதிய போது ஒருவரோடு ஒருவர் புலத்தலாகும். நாயகனுடைய துன்பத்தினைக் காணுவோம்—என்று கூறி, தோழி தலைவியைப் பார்த்து நாயகரை புல்லாதிருப்பாயாக என்று கூறுவதை முதற்குறட்பா கூறுகிறது.

'அல்லல் நோய் காண்கம் சிறிது' என்று குறட்பா சொல்லுகிறது. புலவி என்பது உப்பு போடுவது போல அளவோடு இருத்தல் வேண்டும். அது மிகுந்து விடக்கூடாது. இதனை இரண்டாம் குறட்பா காட்டுகிறது. 'உப்பு அமைந்தற்றால்'—என்பது சிந்திக்கத் தக்கதாகும்.

மூன்றாம் குறட்பா, 'புலந்தாரை புல்லாவிடல்' என்று முடிந்து, புலத்தல் செய்த தலைவியைக் கூடுதல் வேண்டும்—புலவியை நீக்குதல் வேண்டும் என்று கூறுகிறது.

நான்காம் பாடல் அருமையாகக் கூறி விளக்கம் தருகிறது. நீர் பெறாமல் வாடிய வள்ளிக் கொடியை அடியில் அறுத்ததைப் போன்றதாகும் என்று கூறுவது நான்காம் பாடலாகும்.

நாயகிபால் நிகழும் நிறைந்த புலவிதான் நாயகருக்கும் அழகு என்று ஐந்தாம் பாடல் குறிக்கிறது. 'நலத்தகை நல்லவர்க்கு ஏர்' என்று குறட்பா எடுத்துக் காட்டுகிறது.

ஆறாம் பாடல், 'கனியும் கருக்காயும் அற்று' என்று கூறி, காமம் எப்போது அதிகம் முதிர்ந்த பழமாகவும், கருக்காயாகவும் ஆகும் என்பதனைக் கூறி தெளிவுபடுத்துகிறது.

ஊடலிலும் ஒரு துன்பம் உண்டு என்றும் அதன் காரணம் யாது என்றும் ஏழாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

'ஆங்கு ஓர் துன்பம்' என்று குறட்பா கூறுகிறது. புலவி யின் தன்மையினைப் புரிந்து கொள்ளாதவரிடம் புலத்தலி னால் பயனில்லை என்று எட்டாம் பாடல் உணர்த்துகிறது. 'நோதல் எவன் மற்று' என்று குறட்பா குறிக்கின்றது.

ஒன்பதாம் பாடல், நீர், நிழல், புலவி, வீழுநர்— இப்படியாகக் குறித்துக்காட்டி அன்புடைய நாயகரிடம்தான் புலவியும் இனிமைதரும் என்பதைக் குறிக்கின்றது.

'நீரும் நிழலது இனிதே' என்பதே சிந்தனைக்குரிய தாகும். ஊடலில் மெலிவுபெற்றும், அதனை விட்டிருக்கக் கூடியவரோடு கூடக்கடவேம் என்பது அவளுடைய ஆசையே யாகும் என்று பத்தாம் பாடல் தெளிவுற விளக்கம் செய்கிறது.

## 132. புலவி நுணுக்கம்

இது புலவியது நுணுக்கம் என விரியும். அதாவது நாயகனும் நாயகியும் ஓர் அமளிக்கண் கூடி இருந்த போது நாயகனிடம்—புலத்தற்கு—பிணங்கிக் கொள்ளுவதற்குக் காரணம் இல்லாத போதும், காதல் மிகுதியால் நுண்ணிய தாக ஒரு காரணம் உள்ளதாக மனதில் நினைத்து அதனை அவன்மேல் ஏற்றி நாயகி பிணங்கிக் கொள்ளுதலாகும். நாயகியின் கூர்மையான மதிநுட்பத்தினை இந்த அதிகாரம் எடுத்துக் கூறுகின்றது.

நாயகன் மிகவும் அழகு நிறைந்தவனாதலால், பெண் தன்மை கொண்டவர்கள் எல்லோரும் பொதுவாக கண் களால் உண்ணுவார்களாம். ஆதலால் எச்சில்பட்ட அவன் மார்பினைப் பொருந்தமாட்டாளாம். இவ்வாறு கூறி புலந்து கொள்ளுவதை முதற் குறட்பா விளக்கம் செய்கிறது.

இயல்பாக இருப்பதில் கற்பனையை ஏற்றிக் கூறுவதால் நுணுக்கம் என்று கூறப்பட்டதாகும். ஊடல் நேரத்தில்

நாயகன் தும்மினான். 'வாழ்க' என்று மரபு வழக்கத்தை யொட்டி சொல்லுவாள் என்று நினைத்தான். அவளோ, வேறு காதலி நினைக்கின்றாள்- அதனால் தான் தும்மல் வந்தது என்று ஊடிக்கொண்டாள். இதனை இரண்டாம் பாடல் கூறுகிறது.

ஆண்கள் இன்பநேரத்தில் மாலை அணிவித்துக் கொள்வதும் உண்டு. பூ சூடியதைக் கண்டு, 'எந்தக் காதலிக்கு இதனைச் சூட்டுவதற்காக வேண்டி சூடினார்" என்று கூறி ஊடிக் கொண்டாள். 'ஒருத்தியைக் காட்டிய சூடினீர்' என்று குறள் குறிக்கிறது.

உலகில் யாரையும் விட "நாம் காதலில் சிறந்தவரா னோம்" என்று கூறினான். இது நான்காம் பாடலாகும். 'யாரினும் யாரினும் என்று' என்பதாக அவள் சொல்லி, பலருடன் காதல் கொண்ட அவன் ஒப்பிட்டுப் பேசு கின்றான் என்று ஊடிக் கொண்டாள்.

ஐந்தாம் பாடல், அவன் இப்பிறவியில் பிரியமாட்டோம் என்று கூறினான் என்பதைக் கூறுகிறது. அதைக் கேட்ட அவள், 'பிரியமாட்டோம் என்கிறீர்களே, பிரியலாம் என்று கூட நினைத்திருப்பீர்கள் போலிருக்கிறது' என்று கூறி ஊடிக் கொண்டாள்.

நினைத்துக் கொண்டே இருந்தேன் 'அப்போது மறந்தும் இருந்தீர்களோ' என்று கூறி ஊடிக்கொண்டாள். இது ஆறாம் பாடலாகும். ஏழாம் பாடல், வழுத்தினாள் - தும்மினேன் - அழித்து - அழுதாள் — என்று குறிப்பிட்டு அரிய நுணுக்கத்தினை உணர்த்தி வருகிறது. தும்மல் வந்த போது மறைத்தானாம். அப்போதும் ஊடிக்கொண்டாள் என்று எட்டாம் பாடல் காரணம் கூறி விளக்கம் தருகின்றது.

ஊடிக் கொள்ளுகின்ற நாயகியிடம் பணிவாகப் பேசிப் பார்த்தான். அப்போதும் கோபித்துக் கொண்டாள்.

பிறரிடமும் இப்படித்தானே என்றாளாம். 'தன்னை உணர்த்தினும் காயும்' என்று தொடங்கும் ஒன்பதாம் பாடல் இதனை எடுத்துரைக்கின்றது.

கடைசியாக நாயகன் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டு பேசாமலேயே இருந்தான். அப்பொழுதும் ஊடிக் கொண்டாள். ஏனென்றால், 'என்னுடைய உறுப்புக்களை உற்றுப்பார்த்து நீங்கள் நேசிக்கும் காதலியுடன் ஒப்பிடு கிறீர்களோ' என்றாளாம்.

'நினைத்திருந்து நோக்கினும் காயும்' என்று தொடங்கு கின்ற பத்தாம் பாடல் இந்த உண்மையினைப் புலப்படுத்தி விடுகிறது. 'அனைத்து நீர்' என்று குறிப்பிட்டது மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்,

## 133. ஊடல் உவகை

இன்றியமையாச் சிறப்புடைய ஊடலால் தங்களுக்குக் கூடல் இன்பம் சிறந்திருந்த போது அச்சிறப்பிற்குக் காரண மான ஊடலைத் தலைமகள் உவத்தலையும், தலைமகன் உவத்தலையும் கூறுவதாகும்.

ஊடல் செய்து கொள்ளுவதற்கான தவறு அவர்மீது இல்லையென்றாலும், அவ்வாறு ஊடுதலால் அவரது அன்பினை மிக அதிகமாகப் பெறுகின்ற வாய்ப்பாக இருக்கின்றதென்று முதற்குறட்பா கூறுகிறது.

'இல்லை தவறு அவர்க்கு' என்று குறட்பா தொடங்கி உண்மை உணர்த்துகிறது. 'நல்லளி வாடினும் பாடுபெறும்' என்று முடிகின்ற இரண்டாம் குறட்பா, ஊடலினால் தலைவன் அளிக்கின்ற அன்பு சிறிது வாடுவது போன்று தோன்றினாலும், அது பெருமையுடையதேயாகும்.

புலவி என்பது சிறு பிணக்கினையும், துனி என்பது கொஞ்சம் பெரிய பிணக்கினையும் குறிப்பனவாகும்,

'புத்தேள் நாடு உண்டோ' என்று கேட்பது மூன்றாம் பாடலாகும். 'நிலமும் நீரும், ஒன்றானது போல நாயகன் - நாயகி உள்ள ஒற்றுமை இருக்கின்றதென்று கூறுகின்றாள். புலத்தலின் இன்பத்திற்குப் புத்தேள் நாடு இணையில்லை என்று கூறிவிடுகின்றான்.

நான்காம் பாடல் அப்புலவி நீங்கும் தன்மையினையும் அதன் அளவினையும் கூறுவதாகும். ஊடுதலைச் செய்கின்ற தலைவியினிடம் ஊடல் நீங்கிய பிறகு உண்டாகும் கூடல் நிகழ்ச்சியில் இன்பம் சிறந்த இன்பம் என்று ஐந்தாம் குறட்பா கூறி, 'ஆங்கு ஒன்று உடைத்து' என்று முடிகிறது.

ஆறாம் பாடல், உண்ணுகின்றபோது உண்டாகின்ற இன்பத்தினைவிட உண்டபொருள் சீரணிக்கின்றபோது உண்டாகும் இன்பமே தலைசிறந்ததென்று கூறுகிறது. இதனை வைத்தே, 'புணர்தலின் ஊடல் இனிது' என்று விளக்கம் தருகிறது,

ஊடலில் தோற்றவர் வென்றாரென்றும், அது கூடலில் காணப்படும் என்கின்ற ஏழாம் குறட்பா ஆழ்ந்த சிந்தனைக் குரியதாகும். காதலியின் நெற்றி வியர்த்ததை எட்டாம் குறட்பா விளக்கம் செய்கிறது. ஊடலை மேன்மேலும் விரும்புகின்றான். 'நுதல் வெயர்ப்ப' என்பது சிந்தனைக் குரியதாகும்.

'ஊடுக' - 'ஒளி இழை' - 'இரப்ப - நீடுக - இரா' என்ற அரிய முறையினால், நாயகன் இரவுப் பொழுது நீட்டித்துக் கொண்டே போக வேண்டுமென்று, நாயகியிடத்தில் அவன் ஊடலைத் தீர்க்க இரந்து கொண்டிருத்தலும் வேண்டும் என்றும் கூறுவதை ஒன்பதாம் பாடல் மிகத் தெளிவாக விளக்கம் செய்கிறது.

காமநுகர்ச்சிக்கு இன்பமாவது ஊடலேயாகும். அந்த ஊடலுக்கு இன்பமாவது யாதென்றால், நேரமறிந்து அதனை நீக்கிக் கூடுதலாகும் என்று உணர்த்துவது பத்தாம் குறட்பா வாகும்.

ஊடுதல், காமம், இன்பம், கூடுதல் ஆகிய இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து பத்தாம் குறட்பா அமைந்துள்ளதாகும்.

'அ' என்ற எழுத்தில் தொடங்கப் பெற்ற திருக்குறள் 'ன்' என்ற எழுத்தில் முடிந்தது சிறப்புடைய சிந்தனைக்குரியதாகும்.

